இளநங்கை - II

மானிப்பாய் மகளிர் கல்லூரி
மானிப்பாய்

கார்த்திகை - 2003


MANIPAY LADIES COLLEGE
LIBRARY
MANIPAY

THE YOUNG LADIES

2003

MANIPAY LADIES' COLLEGE

உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்

MANIPAY LADIES' COLLEGE

MANIPAY

NOVEMBER . 2003

VOL:- FOUR

எமது பாடசாலை

இளநங்கை II

2003

MANIPAY LADIES' COLLEGE

உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்

மானிப்பாய் மகளிர் கல்லூரி

மானிப்பாய்

கார்த்திகை - 2003

இதழ் - 4

முருகன் ஆலயம்



விநாயகர் துதி

வானுலகும் மண்ணுலகும் வாழ மறை வாழ
யான்மை தரு செய்ய தமிழ் பார் மிசை விளங்க
ஞானமத ஐந்துகர மூன்று விழி நால்வாய்
ஆனை முகனைப்பரவி அஞ்சலி செய்வாம்.

கந்தரலங்காரம்

சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு
வெற்பனைச்சுடர் வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல் விரித்தோனை
விளங்கு வள்ளி
காந்தனைக் கந்தக்கடம்பனைக்
கார்மயில் வாகனனைச்
சாந்துணைப் போதும் மறவாதவர்க்கு
ஒரு தாழ்வில்லையே.

நாளென் செயும் வினை தானென்செயும்
எனை நாடிவந்த
கோளென் செயும் கொடுங்கூற்றென்
செயும் குமரேசரிரு
தாளும் சிலம்பும் சதங்கையும்
தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்கு முன்னே
வந்து தோன்றிடினே.

கல்லூரி வாழ்த்து

வாழ்க வென்று வாழ்த்துவோம்
வணங்கிச் சென்னி தாழ்த்துவோம்.

மானிமகளிர் கழகமென்னும் மங்கலத்து நங்கையைத்
தேனலம்பு கமல மேவுஞ் செய்ய கலையின் தேவியை

(வாழ்க)

மகளிர் உள்ளத் தகழி மீது வளரும் ஞான சோதியை
தகவி னோடு கலை வளங்கள் தந்து காக்கும் அன்னையை

(வாழ்க)

உள்ளக் கலையும் உண்மைக் கலையும் உரிய தொழிலின் கலைகளும்
அள்ளி அள்ளி வள்ளல் போல அருளுகின்ற அன்னையை

(வாழ்க)

தேனும் பாலும் போல நாளும் செவியில் நாவில் இனிக்குமோர்
மானத் தமிழின் அமுதம் அள்ளி மாந்த நல்குஞ் செல்வியை

(வாழ்க)

உடலி னுறுதி உள்ளத் துறுதி உயிரி னுறுதி யென்பரால்
திடமி குந்த உடலமைந்து திகழ வைக்கு மம்மையை

(வாழ்க)

மும்மைப் பொருளி னுண்மை கண்டு முழுதுஞ் சொன்ன சைவமாம்
அம்மை எம்மைச் செம்மை யாக்கும் அழகு காட்டும் அழகியை

(வாழ்க)

உள்ளும் பொருள்கள் உயர்ந்த வாக உள்ளல் வேண்டுமென்ற சொற்
கள்ளமின்றி நெஞ்சி லூறக் கல்வி தந்த நங்கையை (வாழ்க)

அழகு நன்மை உண்மை யென்னும் அவைகள் சைவ நீதியிற்
பழகி வாழ்வு பண்பி லேறப் பரம வர ளிப்பவள் (வாழ்க)

வானிற் றிங்கள் போலத் தங்கி வாழ்வி லின்பந் தந்திடும்
மானி மகளிர் கழக மங்கை வாழியூழி வாழியே. (வாழ்க)

-- பண்டிதர் சோ. இளமுருகனார்

இளநங்கை II

யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி
மானிப்பாய்.
2003

காப்பாளர்

திருமதி வி.பசுபதிப்பிள்ளை – அதிபர்

மலர் ஆசிரியர்

திருமதி பா.விஜயகாந்தன்

மலர்க்குழு

திருமதி. வே. சண்முகரட்ணம் - பிரதி அதிபர்
திரு. த. சுப்பிரமணியம்
திருமதி. ம. திருஞானசம்பந்தர்
திருமதி. பு. கதிர்காமநாதன்
திருமதி. கௌ. சிவராஜசுந்தரம்
திருமதி. வி. சற்குணரட்ணம்
திரு. வி. கலைநேசன்
திருமதி. ச. அமிர்தலிங்கம்
செல்வி. லி. மகாலிங்கம்





மலரின் பெயர் :- இளநங்கை - II

வெளியீடு :- மானிப்பாய் மகளிர் கல்லூரி

பதிப்பு :- 2003 கார்த்திகை

அச்சுப்பதிப்பு :- கணனியியல் கல்லூரி

நவாலி தெற்கு,

மானிப்பாய்

சமர்ப்பணம்

மானி மகளிரின் மங்காப் புகழ்
பரவி நிற்க
மகத்தான சேவை செய்தே
மலரடியான் பாதம் புகுந்த
மங்கையர் திலகம்
முன்னாள் அதிபர்
அமரர் திருமதி. ப. இராஜநாயகம்
அவர்களுக்கும்

போஷகராய் கல்லூரியின் பாது
காவலராய் நாளும் பொழுதும்
நன்மையே நாடி நின்ற
சட்டத்தரணி அமரர்
சிவா இராஜேந்திரன்
அவர்களுக்கும்
மானி மங்கையின்
இளநங்கை சமர்ப்பணம்.



உதிர்ந்த மலர்களுக்கு உருக்கமான அஞ்சலிகள்

எமது கல்லூரியின் வளர்ச்சியிலும் உயர்ச்சியிலும் தமது உடலாலும் உள்ளத்தாலும் சேவை நல்கிய கல்லூரியின் அமரதீபங்களை நெஞ்சினில் ஒரு நிமிடம் ஏற்றி அஞ்சிலிப்போம்.

- 1994 ம் ஆண்டு இறைபதம் அடைந்த எமது முன்னாள் ஆசிரியர் **அமரர் அமிர்தலிங்கம்**
- 1994 ம் ஆண்டு இறைபதம் எய்திய எமது பழைய மாணவிகள் சங்க போசகரும் கல்லூரி வளர்ச்சிக்கு உழைத்தவரும் பிரபல சட்டத்தரணியுமான **அமரர் சிவா.இராஜேந்திரன்**
- 1997ம் ஆண்டு இறைபதம் அடைந்த எமது முன்னாள் கணிதபாட ஆசிரியை **அமரர் அமுதா இரவீந்திரன்**
- 1998ம் ஆண்டு இறைபதம் எய்திய எமது முன்னாள் அதிபர் **அமரர் ப. இராஜநாயகம்**
- 2001 ம் ஆண்டு இறைபதம் எய்திய எமது முன்னாள் நடன, சமஸ்கிருத ஆசிரியை **அமரர். விமலலோஜினி தர்மகுலசிங்கம்**
- 2001ம் ஆண்டு இறைபதம் எய்திய எமது கல்லூரி முன்னாள் விஞ்ஞான ஆசிரியை **அமரர் மனோரஞ்சிதம் செல்வராஜா**
- 2002ம் ஆண்டு இறைபதம் எய்திய எமது கல்லூரியின் முன்னாள் ஆங்கில ஆசிரியையும், உப அதிபருமான அமரர் **எம். வை. ஜெயசிங்கம்**
- 2002ம் ஆண்டு இறைபதம் எய்திய எமது முன்னாள் ஆங்கில ஆசிரியை அமரர் **ஜெ. இரட்ணம்**
- 2003ம் ஆண்டு இறைபதம் எய்திய எமது முன்னாள் நடன ஆசிரியர் அமரர் **பிரம்மஸ்ரீ வீரமணிஐயர்**

ஓம் சாந்தி!

ஓம் சாந்தி!

ஓம் சாந்தி!

மனதுக்குள்ளே .....

வரவேற்புப்பா
ஆசிச் செய்திகள் 01
வாழ்த்துச் செய்திகள்
மலர் ஆசிரியர் இதயத்திலிருந்து 23
அதிபர் அறிக்கை 24
Our School Staff - 2003
எனது பார்வையிலே 37
கல்லூரி வளர்ச்சியில் அதிபர்கள் 58
கல்வியியலாளர் அரங்கம்
கலைத்திட்டமும் அதிபரின் தலைமைத்துவப்பண்பும் 63
முன்னர் தீதென மொழிந்த மூவாசைகளுடன் பின்னரும் பல
பேராசைகள் முளைக்கின்றன 68
பணிக்குழுவும் அபிவிருத்தியும் 70
கொழுப்புடல் விஞ்ஞானத்தோற்றம் 73
தந்திரோபாய உருவாக்கற் செயன்முறையில்
வெளிச்சூழல் ஆய்வின் பங்கு 76
பாடசாலை அதிபர் ஒரு சமூகத்தலைவர் 87
இந்துக்களின் வாழ்வில் பக்தி 90
Trees 93
மரங்கள் 94
பண்டைத் தமிழர் இலக்கியங்களும் நவீன
இவக்கிய கல்விச் சிந்தனையும் 95
Choosing a healthy diat 102
பண்ணிசையின் சிறப்பும் பெருமையும் 104
பச்சைத் தாவரத்தின் பெறுமதி 106
கணக்குப் பதிதலுக்கான முதன்மை ஏட்டுத்
தொகுதியும் பேரேடும் 109
உலகை உலுக்கும் உக்கிர நோய் - சார்ஸ் 114
Z - புள்ளி ஓர் கண்ணோட்டம் 118
கணனி பற்றி ஓர் நோக்கு 124
மாணவர் அரங்கம்
அம்மா 129
நான் யார் 129
ஒட்டுவோம் 129
மல்லிகை 129
எனது செல்லப்பிராணி 130
மாலைக்காட்சி 130
உயிர் எழுத்துக்களை உணர்ந்திடு 130
அன்பு உயிர்கள் 130
அம்மா 131
My Pet 131
எங்கள் அதிபர் கௌதமி 6A 132
எங்கள் அதிபர் பிரமிலா 6A 132
நாளை மலரும் பூக்கள் 133
மூடனின் சாதனை 133
நான் விழும்பும் புலவர் சுப்பிரமணியபாரதியார் 134

வியப்புமிகு உலகச் செய்திகள் 135
உங்கள் பொது அறிவு எப்படி 135
நூலகம் தோன்றிய வரலாறு 136
தாய்மையைப் பேணுவோம் 137
Some facts about our life 138
Appropirate words indicating comparisons 139
Mother 139
My Mother 139
விந்தையே விஞ்ஞானம் 139
பள்ளி வாழ்க்கையிலே 140
பா(வே)ஷம் 141
வாழ்க்கை 142
நட்பு 142
எம் கல்லூரித்தாயே ஏற்றம் அளித்தாய் எழிலே எம் தாயே 144
Some good things we must follow 145
Education Tour 146
யாழ்ப்பாண குடிசைக் கைத்தொழிலின் இன்றைய நிலை 147
சமூக சேவையில் பெண்களின் பங்கு 148
இசையின் வாழ்வு 150
பற்றுதலும் பொறுப்பும் ஏன் உருவாகின்றன 151
பொறுமையின் பெருமை 151
The Computer 151
Education 151
கல்வி தந்த சாலை 152
The importance of Television 152
அறிவு 154
கணித புதிர் 155
Science and Technology 157
ஆல கசநைனெ 158
Some interesting sea animals 158
இந்துக்களின் வாழ்வியலில் அறம் பற்றிய சிந்தனை 159
கணனி ஓர் அறிமுகம் (குறுகிய நோக்கு) 161
வள்ளுவன் வழியில் எமது கல்லூரி 164
சூழல் தொடர்பான அபிவிருத்தி 165
ஈழத்து இலக்கிய வரலாற்றில் யாழ்ப்பாண வேந்தர் காலம் பற்றி 167
நன்றியுடன் சில நிமிடங்கள் உங்கள் கல்லூரி அன்னைக்கு 169
அடியேனின் பிறந்த நாள் பரிசு 172
Leadership at School 174
கர்நாடக ஹிந்துஸ்தானி சங்கீதங்களுக்கிடையிலான ஒற்றுமை 175
கல்விச் சுற்றுலா 178
கடற்கரையில் ஒரு நிமிடம் 182
ஸ்பத ஜால வயலின் சிறப்பம்சம் 183
தமிழ் இலக்கிய வரலாறும் மொழியும் 184
புவிநடுக்கம் 186
சிகிரியா 187
ஐரோப்பிய சங்கீதமும் கர்நாடக சங்கீதமும் ஓர் ஒப்புநோக்கு 189
புவியியல் இடவிளக்கப்படத்தின் முக்கியத்துவம் 192

வர்த்தகர் அரங்கம்

நன்றி நவில்கின்றோம்

வரவேற்புப்பா

இராகம்:- பெஹாக்
தாளம்:- ஆதி

பல்லவி

வருக வருக வருகவென்று வாழ்த்துகின்றோம் - ஆசி
தருக தருக தருகவென்று அனைவரையும் வேண்டுகின்றோம்
(வருக)

அனுபல்லவி

தேசமிகு புகழ்பரப்பி சிறந்தநல் ஞானம் ஓங்க
காசினியில் கலங்கரையாய் மானிமகளிர் மிளிர்ந்திடவே
(வருக)

சரணம்

1. மாறிவரும் கல்வியுலகில் வாண்மை பெற்று உயர்ந்து நிற்க
கடமைதனைக் கருத்திற் கொண்ட அதிபதியே கைகுவித்தோம்
சிந்தையாலும் செயலாலும் கல்விப் பணியில் தமையிணைத்த
பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரே வணங்குகின்றோம்
(வருக)

2. கொழுநன்சேவை புகழ் பரவ வழியமைக்கும் மனைவியுமே
குருசேவை மனதிற் கொண்டு நாளும் உழைத்த ஆசானே
மக்கட் செல்வங்கள் பயன்பெறவே பேணும் நல்ல அன்னையுமே
இல்லறம்போல் கலை உலகில் இன்பம் காணும் இரசிகையுமே
(வருக)

3. உண்மை உழைப்பில் உயர்வு பெற்ற உதவி அரச அதிபரே
நுண்ணறிவால் உலகளந்த கல்வியாழம் கண்டவரே
பங்கமில்லா சேவைதனில் பார்புகழ்ந்த பல பதவிகள்
தங்கள் பெயரில் பெருமை கொள்ள தமையழைக்கின்றோம்

(வருக)

4. ஏற்றமிகு கல்வியுலகில் நாட்டம் கொண்டு உழைப்பவரே
கோட்டம் என்ற கொள்கைதனில் உரிமைகாக்கும் அலுவலரே
சிந்தையாலும் செயலாலும் மாணவ ஆளுமை வளர்ந்துவரும்
மானி. இந்து வாழவந்த நாயகனை வணங்குகின்றோம்

(வருக)

5. போர்க்கால சூழலிலும் புத்தூக்கம் அளித்தெம்மை
சீர்கல்வி பெற்று உயர் சிறந்தோங்கி நாமுயர
ஆளுமையும் அரவணைப்பும் நாளும் நல்கும் நம்மதிபர்
மேதினியில் புகழ்பரவ மகிழ்ந்துதலை வணங்குகின்றோம்

(வருக)

6. பற்று உயர் பாசத்துடன் பலகலையில் நாம் சிறக்க
பெற்ற பிள்ளை போல் எம்மை அறிவூட்டும் ஆசான்கள்
கற்ற வித்தை கண்டு போற்றி கழிப்படையும் நம் பெற்றோர்
சுற்றமதாய் நாமும் உமை சூழ வந்து வரவேற்கின்றோம்

(வருக)

ஆக்கம்

திருமதி. பா. விஜயகாந்தன்

அனைவருக்கும் கல்வியினை வழங்கும் சாலை

அருளாசிச் செய்தி



அன்புசால் பெருந்தகையீர்,

யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி சமூகத்தினால் கல்லூரியின் பணிகளை நிலை நிறுத்தும் பொருட்டு "இளநங்கை" மலர் வெளிவருவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். கல்வி வளர்ச்சிக்காக உழைத்துவரும் பாடசாலைகளில் மானிப்பாய் மகளிர் கல்லூரியும் ஒன்றாகும். மனிதவாழ்வு உயர்நிலையடைவதற்கு கல்வியறிவு அவசியமானது இதனைப் பெற பாடசாலைகள் வழிகாட்டுகின்றன. அறிவும் தொழில்நுட்பமும் வளர்ச்சியடைந்துள்ள இக்காலத்தில் மனதை நல்வழிப் படுத்திக் கொள்வதற்கு பாடசாலைகள் பெரிதும் துணை நிற்கின்றன. இதனை ஒவ்வொரு மாணவமாணவியும் உணர்வது அவசியமாகும். கல்வியில்லாதவனுடைய வாழ்க்கை இருட்டறையில் வாழ்வதைப் போன்றது இதனையே வள்ளுவரும

"கண்உடையார் என்பவர் கற்றோர் முகத்திரண்டு புண்உடையார் கல்லாதவர்" எனக் கூறியுள்ளார்

இந்நிலையை மானிப்பாய் மகளிர் கல்லூரி உணர்வு பூர்வமாக உணர்ந்து அனைவருக்கும் கல்வியினை வழங்குவதன் மூலம் நீக்கிவருவது எல்லோரையும் மகிழ்வித்துள்ளது "இளநங்கை" யில் வரும் ஆக்கங்கள் பாடசாலைச் சமூகத்திற்கு மட்டு மன்றி அனைவருக்கும் பயன் அமைய வாழ்த்துகின்றோம் கல்லூரி கல்வியிலும் எனயை துறைகளிலும் வளர்ச்சியடைந்து சிறந்த முறையில் செயல்பட இறைவன் ஆசீர்வதிப்பானாக.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஸ்ரீலஸ்ரீ. சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாச்சார்ய ஸ்வாமிகள்
2வது குருமஹா சந்நிதானம்

கல்விச் செல்வத்தை மானிப்பாய் பங்கில் வேறுபாடின்றி வாரி வழங்கிவரும் கல்லூரி

ஆசிச் செய்தி



யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி இளநங்கை (II) என்னும் தனது கல்லூரி மலரை வெளியிடுவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். காலத்தால் அழியாத செல்வம் கல்விச் செல்வம். "கொடைகளுக்குள் சிறந்த கொடை கல்விக் கொடை"

"அறம் பொருள் இன்பமும் வீடும் பயக்கும்
புங்கடை நல்லிகையும் நாட்டும் - உறுங்கவலொந்(று)
உற்றுழியும் கைகொடுக்கும் கல்வியினூங்சில்லை
சிற்றுயிர்க்கு உற்றதுணை" என கல்வியின் சிறப்பை புலவர் குமர குருபரர் எடுத்தியம்பியுள்ளார். இத்தகு கல்விச் செல்வத்தை மானிப்பாய் பங்கில் வேறுபாடுகளின்றி வாரி வழங்கி வரும் மானிப்பாய் மகளிர் கல்லூரியின் பணி பாராட்டத்தக்கது. அறிவு, ஆற்றல், ஆன்மீகம் நிறைந்த ஓர் மாணவர் சமுதாயத்தை உருவாக்கும் இச்சீரிய பணியில் உயர்ந்து நிற்கிறது மானிப்பாய் மகளிர் கல்லூரி என்றால் மிகையில்லை.

கல்விசார் பணிகளின் ஓரங்கமாக இன்று வெளியிடப்படும் கல்லூரி மலர், அதன் கண் அமைந்துள்ள ஆக்கங்கள் மாணவர்களுக்கு மட்டுமல்ல யாவருக்குமே பயனுள்ளதொன்றாக அமைய ஆசிகள் கூறுகின்றேன். இவ்வெளியீட்டின் பின்னணியில் உழைத்த யாவரையும் பாராட்டுகிறேன்.

தமிழர்களின் அழியாச் சொத்துக்கள் கல்வியும், தமிழர்களுக்கென தனித்துவம் வாய்ந்த பண்பாடுமேயாகும். இவை அழிந்து போகா வண்ணம் நமது மாணவர்கள் மத்தியில் கட்டிக் காத்து, வளர்க்க வேண்டிய பொறுப்பு ஆசிரியர்கள் கரங்களிலேயே உள்ளது. இப்பணியை தொடர்ந்தும் வழுவாது செய்ய இக்கல்லூரி அதிபருக்கும், ஆசிரியர்களுக்கும் ஆண்டவர் கிறிஸ்து பெருமான் எல்லா ஆசிகளையும் அருள வேண்டுமெனப் பிரார்த்தித்து என்சார்பாகவும், எனது திருச்சபை மக்கள் சார்பாகவும் நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் கூறுகிறேன்.

குரு இல்லம்,
மானிப்பாய்
30.07.2003

அருள்திரு.V.இராஜ்குமார்
சபைக்குரு
தென்னிந்திய திருச்சபை
மானிப்பாய்.

கல்லூரி பெருமையையும் பாரம்பரியத்தையும் பேசும் வரலாற்று ஆவணம்

ஆசிச் செய்தி

வளரும் குழந்தைகளை எதிர்கால உலகிற்குப் பொருத்தமானவர்களாகவும் நாட்டுக்கும் சமூகத்திற்கும் பயனுடையவர்களாகவும் உருவாக்கும் பொறுப்பைச் சுமந்துள்ள பாடசாலைகள் இன்று பல சவால்களுக்கு முகம்கொடுக்கவேண்டிய நிலையில் உள்ளன.

கடந்த காலங்களில் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட இடம்பெயர்வுகள் பொருளாதார நெருக்கடிகள் என்பவற்றின் மத்தியிலும் கல்விச் செயற்பாடுகள் சீர்குலைந்து போகாதவகையில் யாழ்ப்பாணக் கல்விச் சமூகம் உறுதியுடன் உழைத்து வந்தமையினாலேயே இன்னும் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கல்வி, கலை, பண்பாட்டு விழுமியங்களில் முன்னணி வகித்து வருகின்றது.

கடந்த கால இடம்பெயர்வுகளின்போது பல நெருக்கடிகளைச் சந்தித்து வந்த மானிப்பாய் மகளிர் கல்லூரி இன்று படிப்படியாகப் பழைய நிலைக்குத் திரும்பி கல்வி உலகில் தனது முத்திரையை மீண்டும் பதிக்கத் தொடங்கியுள்ளது.

அந்தவகையில் மாணவர்களின் வாசிப்புத்திறன் விருத்தியும் ஆக்க இலக்கியத்திறன் விருத்தியும் வளர்த்தெடுக்கப்படும்பொழுது அவர்களது கல்வி, கலை, பண்பாட்டு விழுமியங்களும் வளர்த்தெடுக்கப்படும் என்பதற்கிணங்க மானிப்பாய் மகளீர் கல்லூரியினர் இளநங்கை மலரை வெளியிட்டு வருவது சிறப்பான ஒரு செயற்பாடாகும்.

இளநங்கை மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் கலை இலக்கியத் திறனை வெளிக்காட்டும் சஞ்சிகையாக மட்டுமன்றி கல்லூரியின் பெருமைகளையும் பாரம்பரியத்தையும் பேசும் வரலாற்று ஆவணமாகவும் விளங்கவேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

இந்த முயற்சியில் சிறப்பாகச் செயற்பட்டு வரும் அதிபர் ஆசிரியர்கள் மாணவர்களை வாழ்த்துவதுடன் இளநங்கை மலர் சிறப்பாக வெளிவரவேண்டும் என்றும் ஆசி கூறுகின்றேன்.

ஆர். தியாகலிங்கம்
செயலாளர்.
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு
வடக்கு - கிழக்கு மாகாணம்,
திருகோணமலை

புகழ்பூத்த பெண்கள் கல்லூரி

ஆசிச் செய்தி

யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரியினால் 1988 இலிருந்து வெளியிடப்படும் "இளநங்கை" மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். கல்லூரியின் திறன் வாய்ந்த செயற்பாடுகளுக்கு முன் உதாரணமாக "இளநங்கை" என்ற பெயர் சூட்டுவதை நான் உணர்கிறேன். இம்முறை இளநங்கை மலருடன் கல்லூரியில் நீண்டகாலம் அதிபராக கடமையாற்றி இளைப்பாறும் திருமதி ஏ.பசுபதிப்பிள்ளை அவர்களின் மணிவிழா மலருடன் வெளிவருவது இரட்டிப்பான மகிழ்ச்சியைத் தருகிறது.

யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரியானது யாழ் மாவட்டத்தில் புகழ்பூத்த பெண்கள் கல்லூரிகளில் ஒன்றாகும். இக்கல்லூரி திறன் வாய்ந்த அதிபர்களையும் ஆசிரிய குழாத்தையும் கொண்டிருப்பதினாலேயே அதன் பெயர் இலங்கையில் மட்டுமல்லாது உலகிலும் பேசப்படுவதாக உள்ளது. இக் கல்லூரியின் பழைய மாணவிகள் புகழ்பூத்த மருத்துவர்களாக, பொறியியலாளராக, கணக்காளராக, ஆசிரியர்களாக, முகாமையாளராக, நிர்வாக உத்தியோகத்தராக, எனப் பல நிலைகளில் பணியாற்றுவதை காணமுடியும். இத்தகைய கல்லூரி இளநங்கை ஏவது மலரை வெளியிடுவது பெருமைக்குரிய செயலாகும்.

யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரியின் இளநங்கை மலர் வெளியீடு தொடரவேண்டுமென நான் வாழ்த்த விரும்புகிறேன். தரமான கட்டுரைகளையும் கல்லூரியின் செயற்பாடுகளையும், தாங்கி வரும் இந்த மலர் கல்வியுலகிற்கு ஒரு வரப்பிரசாதமாகும். இதிலுள்ள தரமான ஆக்கங்கள் மாணவர் கல்விக்கும், அவர்களது பரீட்சைக்கும் பேருதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. அவர்களது இந்த நன்முயற்சி தொடரவேண்டும். என்றும் இளைப்பாறும் அதிபர் நலமுடன் வாழ்ந்து தொடர்ந்தும் கல்வியுலகிற்கு சேவையாற்ற வேண்டும் என்றும் எனது வாழ்த்தினையும் நல்லாசிகளையும் கூறுகிறேன்.

பேராசிரியர் சு. மோகனதாஸ்
துணைவேந்தர்
யாழ். பல்கலைக்கழகம்.

மானிப்பாய் மகளிர் கல்லூரியின் இளநங்கை II மலர் வெளியீட்டுக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் உளம் மிக மகிழ்கின்றேன்.

ஆசிச் செய்தி

நாங்கள் வாழ்கின்ற இம்மண்ணை கல்வியினாலும், செல்வத்தினாலும், பண்பாட்டினாலும் உயர்த்துகின்ற கடமை மக்களாய்ப் பிறந்த ஒவ்வொருவருக்கும் உண்டு. இந்த வகையில் மானிப்பாய் கல்விச் சமூகம் கடந்த நூறு ஆண்டுகளுக்கு மேலாக கல்வியை கண்ணாக போற்றி வந்துள்ளது. மானிப்பாய் இந்துக் கல்லூரியும், மானிப்பாய் மகளிர் கல்லூரியும் வலிகாமம் மேற்கில் முன்னணி வகிப்பன. பெண்கள் கல்வி, கலாச்சாரம், மேம்பாட்டுக்காக ஏற்படுத்தப்பட்டதே மானிப்பாய் மகளிர் கல்லூரியாகும். "பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினிற் பெண்கள் நடாத்த வந்தோம்" என்ற பாரதியாரின் கூற்றை மெய்ப்பித்து வந்தவர்கள் இவர்கள். ஆண்டுதோறும் நடைபெறுகின்ற பரிசளிப்பு விழாவை நான் உன்னிப்பாக அவதானித்துள்ளேன். இளைப்பாறவிருக்கும் அதிபர் திருமதி. வி. பசுபதிப்பிள்ளை அவர்களின் சேவைக்காலத்திலே பல தடைகள் அங்கு சென்று உரையாற்றியுள்ளேன். அமைதியும் ஒழுங்கும் கட்டுப்பாடும் என்னால் அவதானிக்க முடிந்தது. இவற்றுக்கெல்லாம் காரணமாய் அமைந்த அதிபர், ஆசிரியர்கள், பழையமாணவர்கள், பெற்றோர்கள் ஆகியோரை நான் பாராட்டுகின்றேன். அதுமட்டுமன்றி கல்விச்சமூகத்தினதும், மாணவர்களினதும் ஆக்கபூர்வமான இம்மலர் வெளியீட்டினை கல்வியுலகம் மகிழ்வுடன் வரவேற்கும். இதுபோன்ற நிகழ்வுகள் சிறந்த மாணவச் சமுதாயத்தையும், அறிவியல் உலகத்தையும் உருவாக்க உதவும் எனக்கூறி மேலும் மேலும் இக்கல்லூரியின் வளர்ச்சி ஓங்கி வளர வேண்டுமென்று திருவருளைப் பிரார்த்திக்கின்றேன்.

கலாநிதி. தங்கம்மா அப்பாக்குட்டி
சமாதான நீதவான்,
தலைவர்
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்.

வாழ்த்துச் செய்தி

கலைமகள் வியந்து போற்ற
கவின் கலை அனைத்தும் காத்து
நிலைத்த எம் கல்வி ஞானம்
நீள் புகழ் பரவிமேவ
அலை கடற்கப்பால் எல்லாம்
அறிஞர்கள் வியந்து போற்ற
மலை விளக்கென நின்று
மாண்புறும் கல்லூரி வாழ்க

சந்திரன் கிரகணத்தோடு
சூரியன் ஒளி சேர்ந்ததென்ன
அத்தமில் இருளைப் போர்க்கும்
அரும் பெரும் கலைக் கல்லூரி
அந்தர தமிழ் அணங்கு ஒன்றாய்
சுவைபட இணைந்து கற்கும்
நற்றமிழ் மானிப்பாயில் நின்று
நலம் பெற நிலைத்து வாழ்க

கலைகளின் வழியே தெய்வ
கருணையைக் காட்டி நிற்பர்
நிலைகுலையா ஒழுக்கம் பேணி
நீள் தமிழ் புகழைக் காப்பர்
பலவித பாடம் சொல்லி
பாங்குற வரலாறு கற்பர்
நலமுறு உடற்பயிற்சி செய்து
நாநிலம் வியக்க நின்றார்

கருணையின் உருவம் காட்டும்
கல்லூரி அதிபர் அம்மா
அரும் பெரும் சேவையாற்றி
அறுபது அகவை எய்தி
பெருமைசேர் புகழை நாட்டி
பெரும் தொண்டு ஆற்றி பின்னே
இருப்பிடம் தனை விடுத்து
ஏகினாள் இல்லம் என்று
உருகியே கல்லூரித் தாயாள்
உதிர்த்தனள் கண்ணீர் என்ற
ஒரு பெரும் செய்தி கேட்டேன்
உள்ளந்தனில் கவலை கொண்டேன்
திரு நிறை அதிபர் அம்மா
செகத்தினில் வாழ்க நீடு

தாய்மொழிப் பற்று மிக்கோர்
தமிழ் கலைகளைத் தாங்கி நிற்பர்
தூய நல் ஆங்கிலத்தை
துரிதமாய்ப் புகட்டி நிற்பர்
ஆய்வுகள் பலவும் செய்வர்
அற்புத விஞ்ஞானம் கற்போர்
தூய்மையாம் சைவம் தன்னை
துலங்கிடக் காக்கக் கண்டேன்.

கலைமகள் கண்ணீர் மல்க
கவிமகள் கலங்கி சோர
நிலமகள் மானிப்பாயாள்
நெடும் பெருமூச்சு ஓங்க
கலங்கியே ஆசிரியர் எல்லாம்
கண்ணீர் சொரிந்து நிற்க
நலம் பெறு நங்கை நல்லாள்
நாணியே விலகிச் சென்றாள்.

திரு. மு. திருநாவுக்கரசு
ஓய்வு பெற்ற
மாவட்ட நீதிபதி

இக்கலைக் கூடம் என்றும் இளநங்கையாக வாழ்ந்து வழிகாட்ட என் வாழ்த்துக்கள்

வாழ்த்துச் செய்தி

மானிப்பாய் மகளிர் கல்லூரியின் "இளநங்கை" மலர் வெளியீட்டுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்வடைகிறேன். மானிப்பாயில் வதியும் மகளிருக்கு மட்டுமின்றி அதன் சுற்றுப்புறக் கிராமங்களில் வதியும் மகளிரினதும் ஈடேற்றத்துக்கான கல்வி வழங்கும் ஒரு நிறுவனமாக இது மிளிர்கிறது. மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இருந்து பிரிந்து 1950 ஆம் ஆண்டு காலங்களில் பிற்பகுதியில் இணைபிரியாத சகோதரக் கல்லூரியாக இயங்கத் தொடங்கியது. படிப்படியாக வளர்ச்சியுற்ற இக்கல்லூரி இன்று ஆரம்ப வகுப்புக்களில் இருந்து பல்கலைக் கழக புதுமுக வகுப்பு வரை சகல பாடங்களையும் போதிக்கும் ஒரு கல்லூரியாக வளர்ந்து வந்தமை போற்றுதற்குரியது. அதற்கு அன்றிலிருந்து இன்றுவரை அங்கே கல்வி புகட்டக் கூடிய ஆசான்கள் , அதிபர்கள், ஆசிரியர்கள், ஊழியர்கள் பழைய மாணவிகள் யாவரினதும் சேவை மனப்பாங்கே காரணமாகும்.

ஆன்ம ஈடேற்றத்திற்கான தலமாகிய ஆலயம் இப்பாடசாலை வளவினுள் அமைந்திருப்பது மாணவர் மத்தியிலே சமயப்பற்றினை, சமயக் கிரியைகளை மாணவிகள் முழுமையாக உணர்ந்து செயற்படக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது. புனருத்தாரண வேலைகள் பல, பல்வேறு நிறுவனங்களின் முயற்சியால் மேற்கொள்ளப்பட்டு இன்று தலை நிமிர்ந்து நிற்கும் இக்கலைக்கூடம் என்றும் "இளநங்கை" யாக வாழ்ந்து, வழிகாட்ட என் மனம் நிறைந்து வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி. எஸ். மகாலிங்கம்
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்.
யாழ்ப்பாணம்.

ஒழுங்குடன் ஒழுக்கம் பேணி வளர்க்கும் கல்லூரி

வாழ்த்துச் செய்தி

மானி மகளிரில் வெளிவரும் இளநங்கை பற்றி.....

பெருமை மிகு மானிப்பாயின் பண்டைப் பெருமைகளைச் சற்றும் குறைக்காமல் உயர்ந்து நிற்கும் மானி மகளிர் கல்லூரியின் பெருமைகட்குக் கருத்தூட்டும் வகையில் வெளிவரும் இளநங்கையை வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றேன். ஒரு கல்லூரியின் பெருமைகளைக் காலாகாலமாக எடுத்துச் செல்லும் சான்றாதாரங்களில் உன்னதமானது இத்தகைய வெளியீடுகளே ஆசிரியர்களின் நெறிப்படுத்தல்கள் மாணவரின் ஆற்றல்கள் - பழம் பெருமைகள் இனிக்காணப்போகும் உயர்வுகளின் எதிர்வு கூறல்கள் அனைத்தையும் இளநங்கை தன்னகத்தே கொண்டு வெளிவருவதால் இங்கு உருவாகிவரும் சின்னஞ்சிறுசுகள் தலைநிமிர்ந்து தடம்பதிக்க முடியும். ஒழுங்குடன் ஒழுக்கமும் பேணி வளர்க்கும் கல்லூரி முதல்வர் திருமதி.விஜயராணி பசுபதிப்பிள்ளை அறிவையும் அன்பையும் கொண்டு நிர்வாகத்திற்கு உறுதுணையாக மிளிரும் உபஅதிபர் திருமதி.வேணுகா சண்முகரத்தினம் மாணவர் உயர்விற்காய், தம்மை முழுமையாய் அர்ப்பணிக்கும் ஆசிரியர் கூட்டம் இவர்கள் அத்தனை பேரின் வழிகாட்டலில் கோடு தவறாத மாணவச் செல்வங்கள் அனைவரதும் பெருமை மிகு வெளியீடான இளநங்கையை வாழ்த்துவதில் வலிகாம வலயம் பெருமை அடைகின்றது. மானி மகளிரின் எண்ணங்கள் யாவும் நிறைவு பெற வாழ்த்தும்.

திருமதி.றெஜினா இருதயநாதன்
வலயக் கல்விப்பணிப்பாளர்
வலிகாமம்.

மானிப்பாய் கிராமத்துக்கே பேரொளியாக விளங்கி நிற்கும் பாடசாலை

வாழ்த்துச் செய்தி

மானிப்பாய் மகளிர் கல்லூரியின் நாற்பதாண்டுகள் மகளிருக்காக சேவையாற்றி உயர்ந்து நிற்பதைக் காண முடிகிறது. பல்துறையிலும், பெருமை தேடிக் கொண்டிருக்கும் மகளிரை உருவாக்கிய பெருமை இக்கல்லூரிக்குண்டு. அறிவியல் துறை, ஆன்மீகத்துறை, போன்ற துறைகளெல்லாம் புகழ் சேர்த்து மானிப்பாய் கிராமத்துக்கே பேரொளியாய் விளங்கி நிற்கும் இப்பாடசாலையின் செயற்பாடுகள் மதிக்கப்பட வேண்டியவை.

புதிய கல்விச் சிந்தனைகளையும், கல்விச் சீர்திருத்தங்களையும் ஒருங்கிணைத்துச் செல்லும் இன்றைய நிலையில் அதனை இயலுமானவரை உள்வாங்கி உயர்ந்த குறிக்கோள் ஒன்றின் அடிப்படையில் நிலையானதும் உறுதியானதுமான செயற்பாடுகளை முன்னெடுக்கும் இவ்விருட்ஷம் மேலும் மேலும் மாணவர்களின் உடல் உள சமூக ஆன்மீக விருத்திக்குப் பயனுள்ள கல்வியை வழங்குவதன் மூலம் மனித குல மேம்பாட்டுக்குப் பூரண பங்களிப்பினை நல்க வேண்டும்.

அதேவேளை இப்பாடசாலைக்குப் பெருமை தேடிக் கொண்டிருக்கும் தலைமைத்தும் மிக்க அதிபர் அவரோடிணைந்து பாடசாலைக்குக் தூண்களாக வலுசேர்த்து நிற்கும் ஆசிரியர் குழாம் என்றென்றும் சிறப்புடன் மிளிர மானிப்பாய் விநாயகரை வேண்டி வாழ்த்துகிறேன்.

திருமதி. ச. நாகராசா
உதவிக்கல்விப் பணிப்பாளர்
கல்வி அபிவிருத்தி

தன் இலக்குகள் நோக்கங்களை கட்டிக் காத்த கல்லூரி

வாழ்த்துச் செய்தி

ஒரு கல்லூரியின் நீண்ட காலப்பாரம்பரியங்களும் அதன் சாதனைகளும் எதிர்காலச் சந்ததியினருக்குக் கையளிப்பதற்கும் மாணவர் ஆக்கங்களைப் பிரசுரித்து அவர்களை ஊக்குவிப்பதற்கும் பாடசாலைகள் பொருத்தமான காலங்களில் சஞ்சிகைகளை வெளியிடுவது ஒரு அவசியமான தேவையாகும். இத்தேவையை நிறைவு செய்யும் பொருட்டு யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி வெளியிடும் "இளநங்கை" என்னும் இரண்டாவது மலருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் மிகுந்த மனமகிழ்ச்சி அடைகின்றேன்.

கல்வியும், செல்வமும் ஒருங்கே அமையப்பெற்ற மானிப்பாய்ப் பிரதேசத்தில் கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக மகளிர் கல்வியை மேம்படுத்தும் நோக்கோடு தாபிக்கப்பட்ட இக்கல்லூரி தன் இலக்குகள் நோக்கங்கள் என்பவற்றை நிறைவு செய்த பெருமையில் பண்பாட்டு வளர்ச்சியைக் கட்டிக்காப்பதில் கடந்த கால அதிபர்களும் ஆசிரியர்களும் அரும்பணியாற்றி அதில் வெற்றி கண்டுள்ளனர்.

சண்டிலிப்பாய்க் கோட்டத்தில் பல ஆண்டுகளாகக் கல்விப் பெறுபேறுகளில் சீரான வளர்ச்சிப் போக்கையும் இணைபாடவிதானச் செயற்பாடுகளில் உச்ச வளர்ச்சியையும் காட்டி நிற்கும் இப்பாடசாலை, வலய, மாகாண, தேசிய மட்டம் வரை தம் மாணவர்களின் திறமைகளை நிலைநிறுத்தி வருகின்றது. ஆங்கில தினப்போட்டி, தமிழ்த்தினப்போட்டி, மெய்வல்லுநர்ப் போட்டி என்பவற்றில் கோட்ட மட்டத்தில் அதி உன்னத நிலையைப் பல ஆண்டுகளாகப் பெற்று வருவது மிகுந்த பாராட்டுக்குரிய அம்சமாகும்.

இக்கல்லூரியின் தற்போதைய அதிபர் திருமதி.வி.பசுபதிப்பிள்ளை அவர்களின் தளராத ஊக்கமும் அவரோடு முழுமையான ஒத்துழைப்பு வழங்கி வரும் கல்லூரிப் பற்றுள்ள ஆசிரியர் குழாமும் கல்லூரிச் சமூகத்தின் ஒத்துழைப்பும் இக்கல்லூரியின் அண்மைக்கால வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக விளங்கி வருகின்றன. அதிபராக, உபஅதிபராக, ஆசிரியராக இரு தசாப்தங்களுக்கு மேலாகத் தொடர்ந்து பணியாற்றி வரும் தற்போதைய அதிபர் மிகுந்த மதிப்பிற்கும் பாராட்டுக்கும் உரியவராக விளங்கி வருகின்றார்.

மானிப்பாய் மகளிர் கல்லூரி தன் வளர்ச்சிப் பாதையில் தங்கு தடையின்றி தொடர்ந்து முன்னேறி அறிவொளி மிக்க மகளிர் சமுதாயமொன்றை உருவாக்கும் இலக்கில் முழுமையாக வெற்றி பெற இறை ஆசியை வேண்டி எனது இதய பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்து "இளநங்கை" தொடர்ந்து வெளிவர வேண்டும் எனும் பெரு விருப்பையும் முன் வைக்கின்றேன்.

திரு.க.தனபாலசிங்கம்
கோட்டக்கல்விப் பணிப்பாளர்
சண்டிலிப்பாய்.

வாழ்த்துச் செய்தி

மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி "இளநங்கை" என்னும் சிறப் பிதழை வெளியிடுகின்றனர். க.பொ.த (உ.த) மாணவர்களுக்குப் பயன்படத்தக்க கட்டுரைகள் இவ்விதழிலே வெளிவருகின்றன.

கல்லூரி வெளியீடுகள், மாணவர்களுக்கு ஏதோ ஒரு வகையிலே பயனளிப்பனவாய் இருக்க வேண்டும். மாணவர்களுடைய எழுத்தாற்றலை வளர்க்க அவர்களுடைய கட்டுரைகள் பல பிரசுரிக்கப்படலாம். அந்த வகையில் இவ்விதழ் சகலபிரிவு மாணவர்களுக்குப் பயன்படத்தக்க வகையிலே அமைகின்றது.

மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களுடைய முயற்சியினாலே வெளிவரும் இவ்விதழ் சிறப்புற வெளிவரவேண்டுமென வாழ்த்துகிறேன். அதனை உருவாக்கி வெளியிடும் ஆசிரிய குழுவினர்க்கு என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவிக்கிறேன்.

பேராசிரியர் அ.சண்முகதாஸ்
தலைவர் தமிழ்த்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

Long life the Manipay Ladies' College

Message

It gives me great pleasure to send this message to the school magazine to be published shortly by the Ladies College, Manipay. I must in the instance express my sincere thanks and gratitude to the principal and members of the magazine committee for the privilege and honour. This magazine is perhaps the 2nd issue since the inauguration of the school in 1963. Forty years is a microscopic period in the life of a community, but it is very significant and important in the life of an educational institution as healthy traditions and ideas are formulated and fostered during this period in order that the generations of students to come will follow this without fear or favour.

At this time of completion of 40 years of useful service, above all our greatful thanks and sincere prayer are due to the giver of all gifts – All mighty for having showered his blessings on the selfless efforts to those public spirited and well meaning brothern of Manipay in developing the college to what it is today. The residents of Manipay will ever remember all those who contributed towards the development of this college. In this connection it is not out of place to mention the name of few persons who worked indefatigucably for the establishment of this institution, namely late Messrs V.Veerasingam J.P, MBE and member of parliament, C.Navaratnam, K.Muthuvelpillai the Architects and the members of the OBA of M.H.C.

Many changes had taken place in the sphere of education during the last quarter, century as far as form and contents are concerned, but the main aim of education is to produce good and useful citizens remains same. Even though the world is in a turmoil education has not helped much to find a way for salvation. Hence it becomes very necessary to know and act according to the aims of education.

Let us pray that Manipay Ladies College grows from strength to strength to become a leading institution with these ideas in view.

Mr.S.Pathmanathan
Rtd Regional Engineer (L.G.D)
Wellwisher member,
Manipay Ladies College School Development Society.

Let all your thoughts be noble thoughts

Message

At the entrance to Manipay Ladies College is the temple of lord Muruga. He welcomes everybody and also guides everybody who has faith in him. They have his blessings too.

When we look back into the history of this school, we should remember with deep gratitude those great educationists who had a hand in the establishment and development of the school. First Mr.Veerasingam the much respected principal of Manipay Hindu College made this boys school a mixed school. Then came Mr.Muthuvelpillai who was farsighted and created a girls section for Manipay Hindu College.After sometime he converted the girls section of Manipay Hindu College into the Manipay Ladies College, and Manipay Hindu College which was one school became two schools, one for boys and one for girls.

Under the guidance of dedicated principals and teachers Manipay Ladies College developed quickly into a Grade I school. This school is rendering good service to the girls who are admitted there. It not only gives good academic education, but also gives good physical education to the girls. It includes physical training classes and sports as well. The girls are doing well at exams and also at sports and games. The principal and teachers should be congratulated.

The principal, staff, and students are blessed and guided by Lord Muruga, They are truthful in their activities and are therefore encouraged to have noble thoughts which guide them to do what is right.

The motto of the school is உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் That is - Let all your thoughts be noble thoughts. This motto inspires everybody at Manipay Ladies College to be service minded. That attitude will make them to develop spiritually. It will make them to remember that service to man is service to God. Swamy Vivekananda has said that, the human body is the Taj Mahal of temples for there is divinity in each one of us and that has to be developed. We can then go nearer to God.
May I close with best wishes to the principal, staff and students. Also may God bless and guide you to have success in all that you undertake.

Pathmasany Arumugam
Former Principal
Manipay Ladies' College

I deem to have the honour to issue the message of felicitation to my beloved school

Message

Manipay Ladies College has always been of foremost interest in my heart, and I look forward to meeting students, parents and teachers from there. I have spent eight and a half golden years form 1971 to 1979 at Manipay Ladies and I remember and recollect with pride, love and gratitude the effort we all jointly made to maintain and upgrade the standards of education as well as to develop the interest in sports and aesthetic activities. You made every function every day and every year a success. I relish those days and thank Lord Muruga for the good days I had over there.

I am happy to know that you have made a real impressionable effort to improve this college admist all the recent disturbances we had in our part of the country. I am sure you too have the support of the able staff and the learned vibrant community of Manipay to back you in all the good efforts you take to put M.L.C on the map.

In Canada, I'm thrilled to see most of the doves + swans of that M.L.C brood flying here bringing pride to their Alma Mater and peace to their respective communities. Wherever they are they shine on all walks of life & have brought special flavour in keeping to their traditions, fashions and adhering to good customs & manners.

"Men may come & men may go. But I go in for ever" says the post Rupert in the poem Brook"

Though many have flown to spread culture here and to other European countries, yet a devoted few stay there to continue to guard the gates of Manipay Ladies to carry the torch of this College, Long life M.L.C,Hold the flag high, Good Luck, Murugan will guard & guide

Mrs.P.Pubaneswary Satchithananthan
(Retd.Principal)
Manipay Ladies' College.

A message to Manipay Hindu Ladies College

I started teaching at Manipay Ladies College in January 1963 when she was only an appendage of Manipay Hindu College and continued to serve her till 1981 – almost 28 years. I am therefore very happy to send a message of felicitation to my old school.

I remember vividly the day Manipay Ladies College was declared open – 1st February 1963. It was the crowning moment for the land of dedicated men who has overcome so many obstacles to achieve this goal. It was indeed a Herculian task.

But the speed with which she developed was even more incredible. நாள் ஒரு மேனியும் பொழுது ஒரு வண்ணமுமாக வளர்ந்தாள் within 20 years she was taking her place established schools in the peninsula. From then on it was a steady growth. This was due to the dedicated principals and staff who served the school. But Miss.P.Arumugam merits special mention as she gave us all the trimmings of a good school – college song, Motto, Shield uniform and our own Murugan temple. Due credit must also be given to the parents and people of Manipay parish, who stood solidly behing the principals in all their projects to improve the school. A very BIG THANK YOU to every one of them.

May Lord Murugan continue to bliss and guide the principals staff and students I thank the principal Mrs.V.Pasipathipillai for giving me the opportunity to send this message.

Mrs.A.Rajaratnam
Rtd Principal
Manipay Ladies College
(Canada)

தன்னம்பிக்கை மிக்க சமுதாயத்தை உருவாக்க உதவுவது

வாழ்த்துச் செய்தி

யாழ் மண்ணிற்கு மகிமை சேர்க்கும் கல்விப் பாரம்பரியத்தை கட்டியெழுப்பும் நிறுவனங்கள் வரிசையில் மானிப்பாய் பிரதேச மகளிருக்கென தனித்துவமாக திகழ்ந்து அறிவூட்டும் ஆலயமாக விளங்கிவரும் மானிப்பாய் மகளிர் கல்லூரியின் மலர் இளநங்கை || பூத்துப் புதுயுகம் படைக்க நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்வெய்துகின்றேன். அத்தோடு நான் இக்கல்லூரியின் முன்னாள் அதிபர் என்ற வகையில் உண்மையிலே இரட்டிப்பு மகிழ்வெய்துகின்றேன்.

அறிவு புகட்டும் கல்வி நிறுவனங்கள் இதுபோன்ற மலர் வெளியீட்டினை வெளியிடுவது ஓர் ஆக்கபூர்வமான நிகழ்வென்றே கூறவேண்டும். தன்னம்பிக்கை மிக்க சமுதாயத்தை உருவாக்க, ஆற்றல் நிறைந்த அறிவாளிகளை வெளிக்கொணர, பழமையிற் புதுமை காணும் உயிரோவியங்களை உருவாக்க இது கைகொடுக்கும்.

எத்தனையோ இன்னல்களுக்கு மத்தியிலும் சளைக்காது நின்று சாதனை படைத்து வரும் இக்கல்லூரி எதிர்காலத்திலும் நிலைத்து நின்று போதனை புகட்டும் நல்லதொரு நிறுவனமாக வாழ்வாங்கு வாழ வாழ்த்துவதோடு, கல்வி விழுமியத்தை கட்டிக்காக்கும் 'ஆன்று அவிந்த கொள்கைச் சான்றோர்களை உருவாக்கி 'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்' என்ற கல்லூரி வாசகம் நாலா பக்கமும் ஒளிகொடுக்க நல்வாழ்த்துக்கள் கூறி மனதார வாழ்த்துகின்றேன்.

திருமதி. ய. தியாகராசா
முன்னாள் அதிபர்,
மானிப்பாய் மகளிர் கல்லூரி

யாழ்ப்பாணத்தில் சிறந்த மகளிர் கல்லூரிகளில் ஒன்று

வாழ்த்துச் செய்தி

மானிப்பாய் மகளிர் கல்லூரி வெளியிடும் **"The young Lady"** சஞ்சிகைக்கு எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

மா.ம.கல்லூரி எனது கணவர் திரு. முத்துவேற்பிள்ளை அவர்களின் மனதில் கரு கொண்ட குழந்தை இன்னும் இரு வருடங்களில் நாற்பது வயதை எட்ட இருக்கின்றாள் என்பதை நினைக்க ஆச்சரியமாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கிறது.

1954 ம் ஆண்டு உப அதிபராக பதவி ஏற்கும் படி கொழும்பிலுள்ள முகாமையாளரிடமிருந்து தந்தி வந்த அன்று மதியமே புறப்பட்டவர் மானிப்பாயிலுள்ள பெரியார் பலரையும் சந்தித்து மா.இ.கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த மாணவிகளுக்கு வேறாக ஒரு பாடசாலை அமைக்கத் திட்டங்கள் போட்டு விட்டு அன்று இரவு 1 மணிக்குத் தான் வீடு திரும்பினார். அதன் பின் கல்லூரிக்கான காணியை Senator நடேசனுடைய உதவியோடு வாங்கினார். இலங்கை முழுவதும் சென்று அதிஷ்ட லாபச் சீட்டுக்கள் (sweep tickets) விற்றும் பழைய மாணவ சங்க உறுப்பினர்களின் உதவியோடு இரண்டு carnivals (பொருட்காட்சி, விளையாட்டுகள்) வைத்தும் பணம் சேர்த்து கல்லூரியை தொடக்கினார்.

இப்பொழுது மா.மகளிர் கல்லூரி வளர்ச்சியடைந்து யாழ்ப்பாணத்திலுள்ள சிறந்த மகளிர் கல்லூரிகளில் ஒன்றாக விளங்குவதைக் கண்டு மிகுந்த ஆனந்தம் அடைகிறேன்.

இக்கல்லூரி மேலும் மேலும் வளர்ந்து மானிப்பாயிலும் அயற் கிராமங்களிலும் பெண் பிள்ளைகளை நல்ல கலைகள் விஞ்ஞானம், கணனி, சமயம் முதலானவற்றின் சிறந்த அறிவும் திறமையும் உடையவர்களாக வளர்த்தெடுக்க எல்லாம் வல்ல இறைவன் அருள பிரார்த்திக்கிறேன்.

1957ம் ஆண்டு தை மாதம் தான் இந்த புது கட்டிடத்திற்குள் மாணவிகள் கல்வி கற்கத் தொடங்கினார்கள். அப்பொழுது தான் மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையில் ஆசிரியையாக இருந்த என்னை இப்பெண் கல்லூரிக்கு கொண்டுவரப்பட்டேன். ஆகவே இக்கல்லூரியின் முதல் ஆசிரியைகளுள் நானும் ஒருவர் என்று பெருமைப்படுகிறேன். அப்பொழுது செல்வி ஆறுமுகம் அவர்கள் உப அதிபராக கடமை புரிந்தார். அங்கு கழித்த நாட்கள் இன்னும் என் மனதில் பசுமையாக இருக்கின்றது.

திருமதி.வி.முத்துவேற்பிள்ளை

இருமாடிக் கட்டிடத்தில் மலர்ந்தவள்

ஆசிச் செய்தி



இளநங்கை மலர் வெளியீட்டிற்கு ஆசி வழங்குவதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். மானிப்பாய் மகளிர் கல்லூரி விஞ்ஞான மாணவர் மன்றம் ஒழுங்காக மலர் வெளியிட்டு வந்தது. பாடசாலைகளின் செயற்பாடுகளை பிறர் அறிய செய்வதற்கு மலர் வெளியீடு மிகவும் முக்கியம். பாடசாலை செயற்பாடுகள் பத்திரிகை மூலம் வெளிவந்தாலும், அதனை ஒருவரும் ஆவணப்படுத்த மாட்டார்கள். பத்திரிகை மறுநாள் குப்பைத் தொட்டிக்குள் சென்று விடும்.

மானிப்பாய் இந்து கல்லூரி 1910 ஆண்டு ஆடி மாதம் 4ம் திகதி ஆரம்பமானது. இந்த நாள் மானிப்பாய் கோவில்பற்றில் உள்ள சகல மக்களுக்கும் ஒரு முக்கியமான நாள். ஆங்கில கல்வி இந்து சமய சூழலில் கற்பிக்க வேண்டும் என்னும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. அன்று தொடக்கம் 1944ம் ஆண்டு வரை ஆண்பிள்ளைகள் மட்டும் கல்வி பயின்று வந்தனர். அமரர் வீரசிங்கம் அதிபராக இருந்த காலத்தில் 1944ம் ஆண்டு பெண் பிள்ளைகளும் அனுமதிக்கப்பட்டனர். படிப்படியாக மானிப்பாய் இந்து கல்லூரியிலம் பெண் பிள்ளைகளின் தொகை அதிகரித்து வந்தது. 1956ம் ஆண்டு தொடக்கம் ஒவ்வொரு வகுப்பிலும் ஒரு பிரிவு பெண் பிள்ளைகளுக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. மானிப்பாய் இந்து கல்லூரி பழைய மாணவர்கள் ஒரு களியாட்டு விழா நடாத்தி நிதி சேகரித்து பெண்கள் பாடசாலை அமைப்பதற்கு இரு மாடிக்கட்டிடம் அமைக்கப்பட்டது. அமரர் முத்துவேற்பிள்ளை அதிபராக இருந்த காலத்தில் பெண்பிள்ளைகளுக்கு தனியான பாடசாலை அமைய வேண்டும் என அரும்பாடுபட்டு, 1963ம் ஆண்டில் அக்கல்லூரி உருவானது.

மானிப்பாய் மகளிர் கல்லூரி ஆரம்பமான காலம் தொட்டே மிளிர தொடங்கியது. திருமதி வி.பசுபதிப்பிள்ளை அதிபராக இருந்த காலத்தில் கல்லூரியின் செயற்பாடுகள் உச்ச நிலையை அடைந்தது என கூறினால் மிகையாகாது.

இக்கல்லூரி தொடர்ந்தும் மானிப்பாய் மகளிர் கல்லூரியாக இயங்கி கல்லூரி சஞ்சிகை வெளியீடுகளை தொடர்ந்து நடத்த இறைவன் ஆசீர்வதிப்பாராக.

செ.கேசவராஜன்
முன்னாள் அதிபர்
மானிப்பாய் இந்து கல்லூரி,
மானிப்பாய்.

மாணவர் திறணை வெளிக்கொணரும் சிறந்த ஆவணம்

வாழ்த்துச் செய்தி

இளநங்கை II மலர் வெளிவருவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். முயற்சி எடுத்த அனைவரையும் பாராட்டுகின்றேன். இத்தகைய வெளியீடுகள் மாணவிகளிடையே பொதிந்து காணப்படும் திறமைகளை வெளிக்கொணர்வதற்கு மிகவும் உறுதுணையாக அமைகின்றது. மாணவிகள், கவிதைகள், கட்டுரைகள், கதைகள் என்பவற்றுடன் இன்று உலகியல் வழக்கிலுள்ள நவீனமயமாக்கப்பட்ட பல நிகழ்வுகளை இத்தகைய இதழ்களில் எழுத வேண்டும். பல விடயங்கள் பரீட்சையில் சித்தியடைவதற்கென மாணவர்களால் கற்கப்படுகின்றன. ஆனால் அவற்றை நடைமுறை வாழ்க்கையில் பின்பற்றுவது என்பது முக்கியமானதும் இன்றியமையாததும் என்பதை பலர் அறிந்து கொள்வதில்லை. ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது என்பது பழமொழி. ஆனால் படிக்கும், வாசிக்கும், கேட்கும் பல விடயங்கள் நமது நாளாந்த வாழ்வுக்கு அவசியம் என்பதை கருத்தில் கொள்ள வேண்டும். இன்று பல விடயங்கள் வாழ்க்கைக்கு ஏற்ற வகையில் நடைமுறைப்படுத்தும் நோக்கில் கற்கை நெறியில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவற்றைக் கருத்திற் கொண்ட எதிர்காலத்தில் வரும் மலர்கள் மேலும் மேலும் நவீனமயமாக்கப்பட்டு நடைமுறை வாழ்க்கைக்கு உகந்ததாக அமைக்கப்பட வேண்டும் என்பது எனது விருப்பமாகும். மேலும் பல இளநங்கை மலர்கள் வெளிவர வாழ்த்துகிறேன்.

பேராசிரியர் வசந்தி அரசரத்தினம்
உயிரிரசாயண பேராசிரியர்.
உயிரிரசாயணத்துறை,
மருத்துவபீடம்,
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.

உன்மலர்வால் கலைக்கூடம் அறிவுப் பட்டொழி வீசி திக்கெட்டும் திகழ்பரப்பும்

வாழ்த்துரை

மானிப்பாய் மகளிர் கல்லூரி இரண்டாவது முறையாக "இளநங்கை" மலரினை வெளியிடுவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

பல ஆண்டுகளுக்குப் பின் மலரும் இளநங்கையே உன்னைக் குறிஞ்சி மலராகக் காண்கிறேன். குறிஞ்சிப் பூ உருவத்தால் சிறியது ஆனால் அழகியது. சபை மிக்க தேனை உடையது. இலக்கியப் புகழ் வாய்ந்தது.

மானி மகளிர் கலைக்கூடத்தின் ஒளிவிளக்காக விளங்கும் இளநங்கையே நுண்மாண் நுழைபுலம் மிக்கோரின் கட்டுரைகளையும் மாணவர்களின் ஆக்கங்களையும் தாங்கி சான்றோர் மனந்திறந்து வாழ்த்தி நீ மலர்கின்றாய். உன் மலர்வால் கலைக்கூடம் அறிவுப் பட்டொழி வீசி திக்கெட்டும் புகழ் பரவ எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் பாதம் பணிந்து வாழத்துகிறேன்.

வே. தம்பாபிள்ளை
பிரதி அதிபர்
மானிப்பாய் இந்துக் கல்லூரி
மானிப்பாய்

பல சவால்களுக்கு மத்தியிலும் பிரகாசிக்கும் கல்லூரி

வாழ்த்துச் செய்தி

மானிப்பாய் மகளிர் கல்லூரி ஏறக்குறைய கடந்த நாற்பது ஆண்டுகளாக மானிப்பாய் கோவிற்பற்று மகளிரின் நலன் கருதி இயங்கி வருவது பாராட்டுக்குரியது. மகளாக, நங்கையாக வந்த சிறுமி அக்காவாக மலர்ந்து சமூகத்தில் அன்னையாக பொலிந்து நல்லதொரு சமுதாயத்தை உருவாக்க உந்துசக்கியாக மிளிர்கின்ற போது தான் அவள் பெற்ற கல்வி, ஒழுக்கம் ஊடாக சமூகத்துக்கு நல்ல ஒரு பண்பாடு அவனால் கையளிக்கப்படுகிறது. இவ்வாறான நல்ல ஒரு பண்பாடான சமூகம் தோன்ற மானிப்பாய் மகளிர் கல்லூரி பல சவால்களுக்கு மத்தியிலும் அரும்பாடு பட்டு இயங்கி வருவதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

இவ்வாறான வெற்றிநடை போடும் மகளிர் கல்லூரியை முன்னின்று வழிகாட்டி, திறம்பட நடாத்தும் சாதனையில் வெற்றி கண்டவர் எமது பாராட்டுக்குரிய அதிபர் திருமதி. வி. பசுபதிப்பிள்ளை அவர்கள். அவர்கள் இக்கல்லூரியின் ஆசிரியராக கடமையாற்றி, உபஅதிபராக இறுதியில் கல்லூரியின் அதிபராக உயர்ந்து பல சவால்களுக்கு முகம் கொடுத்து கல்லூரியின் வளர்ச்சிக்கு வித்திட்ட பெண்மணி ஆவார்.

குறிப்பாக எமது பிரதேசத்தில் ஏற்பட்ட போரினால் நமது சமூகம் சின்னா பின்னப்பட்டு இருந்த வேளையிலும் கூட நமது மகளிரின் கல்வி, கலை, கலாசாரம், மதம் ஆகியவற்றை அழியவிடாது பேணிக்காத்த பெருமைக்குரியவர். தற்போது அவர் இளைப்பாறுகின்ற செய்தி எமக்கு மனவருத்தத்தை தருகின்ற போதிலும் எம்மத்தியில் இருந்து எமது மகளிர் கல்லூரியின் வளர்ச்சிக்கு ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வழங்கியும், முன்னின்று செயற்படுவார் என நம்புகிறோம்.

இக்கல்லூரி மேன்மேலும் வளர்ந்து எமது கல்லூரியின் பெருமைமிக்க, போற்றுதற்குரிய, கற்புமிக்க மகளிரை உருவாக்கி அதன் மூலம் நல்ல பண்புள்ள, ஆற்றலுள்ள சமூகத்தை உருவாக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

இ.வசந்தசேனன்
சட்டத்தரணி
மானிப்பாய்

இளநங்கையே வாழ்க நீ

வாழ்த்துச் செய்தி

1944ம் ஆண்டு தை மாதம் மானிப்பாய் இந்துக்கல்லூரியில் பெண்கள் சேர்க்கப்பட்ட நாள் தொடக்கம் இன்றுவரை இக்கல்லூரியுடன் தொடர்பு வைத்துள்ள ஒருவர் என்ற முறையில் மானிப்பாய் மகளிர் கல்லூரியின் இதழுக்கு வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.

1963ம் ஆண்டு இக்கல்லூரி தனி நிறுவனமாகி தமிழர் தம் கலை, கலாச்சாரம், பண்பாடு எல்லாவற்றிலும் தன் தனித்துவத்தை நிலைநாட்டி வருவது நாம் நன்கறிந்ததே.

ஏங்கிய தீயமதைத் தன் சின்னமாகவும் "உள்ளவதெல்லாம் உயர்வுள்ளல்" எனும் வள்ளுவரின் திருவாக்கை மகுட வாக்கியமாகவும் கொண்டு உயர்ந்து நிற்பது எமது கல்லூரி.

இவை எமக்கு எடுத்து இயம்புவது என்ன? 'பெண்ணே! நீ உன் கல்லூரிக்கு மட்டும் அன்றி உன் குடும்பத்துக்கு, நாட்டிற்கு, ஏன் உலகம், முழுவதற்குமே நின் நடவடிக்கையாக ஜீவ ஒளியாய் விளங்குவாயாக' உன் சிந்தனைகள், உணர்வுகள் எல்லாம் உயர்வானவாக அமையட்டும். உன் உணர்வுகள் சிந்தனைகள் உயர்வாக அமைந்தால் உள் வார்த்தைகள் உயர்வானவாகவிருக்கும். உன் வார்த்தைகள் மாத்திரமா? உன் செயல்களும் உயர்வடையும். இவற்றால் இக்கல்லூரியை உருவாக்கியவர்களின் நோக்கங்களை, அபிலாசைகளை நீ நிறைவேற்றியவளாவாய்.

எனவே இக்கல்லூரியில் கல்வி கற்கும் இளநங்கையே!

"உள்ளக்கலையும் உண்மைக்கலையும் உரிய மொழியின் கலைக்கும் அள்ளி அள்ளி வள்ளல் போல அருளுகின்ற மகளிர் கல்லூரி அன்னையை" நன்றியுடன் போற்றி

"வாழ்கவென்று வாழத்தி
வணங்கிச் சென்னி வாழ்த்தி"

எல்லோருக்கும் வழிகாட்டியாக வாழ்வாயாக!

செல்வி இ.சுப்பையாபிள்ளை
போஷகர்,
மா.ம.கல்லூரி பழைய மாணவியர் சங்கம்

Message of felicitation to Manipay Ladies' College

It is my joy and my previlage to convey my message of felicitation on an important occasion like this in releasing the 2nd magazine of our college.

It was truely a landmark achievement when Manipay Ladies' College was inaugurated on 01.02.1963. It is with great pleasure and pride to say that Emeritus principals. Mr.V. Veerasingam Mr.K.Muthuvetpillai and old boys like Sive Muthucumarasamy, Mr.S.Rajendram and many well wishers indepatigably worked hard to give a best education to girls in the Manipay parish. It is indeed happy to note that Mrs.H.Paramasamy was first installed as the Principal at Manipay Ladies College followed by Miss.P.Arumugam, Mrs.A.Rajaratnam, Mrs. Satchithanantham, Mrs.P.Rajanayagam, Mrs.P.Kalyanasundaresan and Mrs.Y.Thiyagarajah, They all dedicated themselves and took great deal of interest for the upliftment of the college in many ways.

The incumbent principal is not second to any one. She has a winsome face and flamboyant personality to maintain good education and discipline like her predecessors. It is during her tenure of service, she faced many difficulties and she overcome them with courage and without fear.

In conclusion I pray the Lord Murugan in the College compound will bless all of you and bring happiness and prosperity to all in the direction of better and everlasting future.

I thank you all for giving the opportunity to send this message of felicitation.

Dr.S.Suntharajan
Secretary
School Development Society
M.L.C

சங்க வளர்ச்சிக்கு அரும்பணியாற்றியவர்

வாழ்த்துச் செய்தி

1988ம் ஆண்டிலிருந்து பழைய மாணவிகள் சங்கத்தின் தலைவிகளாக திருமதி. எஸ். கல்யாணசுந்தரேசன், திருமதி. வை. தியாகராசா, திருமதி. வி. பசுபதிப்பிள்ளை இருந்தமையும், மானிப்பாயின் மூத்த உறுப்பினரும் சட்டத்தரணியுமான அமரர் சிவா இராஜேந்திரன் காப்பாளராக இருந்த காலத்தில் பெரும் பங்களிப்புச் செய்தமையும், இச்சங்கம் சிறப்பாக நடத்த வழி நடத்தினார் என்பதும் எம்மால் மறக்க முடியாத ஓர் காரியமாகும்.

இன்றைய தலைவியும், அதிபருமான திருமதி. வி. பசுபதிப்பிள்ளை அவர்களின் விடா முயற்சியால் கட்டி முடிக்கப்பட்ட பழைய மாணவிகள் சங்கத்தின் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டமை பெரும் பாராட்டத்தக்க விடயமாகும்.

திருமதி. முத்துவேற்பிள்ளை அவர்களும் இச்சங்கத்தில் உறுப்பினராக இருந்து நிதி உதவிகள் செய்வதோடு மட்டுமல்ல தள்ளாடும் வயதில் கூட சங்கத்தின் கூட்டங்களுக்கு பங்கு பற்றி ஒத்துழைத்தமை பெருந்தன்மையானது.

தற்போது போஷகராக இருக்கும் செல்வி. இராஜேஸ்வரி சுப்பையாப்பிள்ளை அவர்களும் இச்சங்கம் வளர்ச்சியடைய பெரும் பங்காற்றி வருவது பாராட்டத்தக்க விடயமாகும்.

இச்சங்கம் வளர்ச்சியடையவும் காரணமாக அமைந்த பழைய மாணவிகளின் பங்களிப்பு அவசியம் என்பதை எடுத்துக்காட்டி நிங்கிறது. மேலும் சகல செயற்பாடுகளுடனும் கல்லூரி வளர்ச்சிக்கு உழைத்து இச்சங்கமானது கல்லூரியில் இளநங்கைக்கு வாழ்த்துக் கூறியும் அகம் மிக மகிழ்கின்றது.

க. தவமணி
செயலாளர்

மலராசிரியர் இதயத்திலிருந்து .....

இளநங்கை கல்லூரியின் நான்காவது மலராக இன்று வெளிவருவதையிட்டு உளம் மிக மகிழ்கின்றேன்.

முதற்கண் இம்மலரானது ஒவ்வொரு இதழாக விரிந்து இன்று மணம் வீசும் மலராக ஒளிவீச என்னை ஊக்குவித்த எல்லாம் வல்ல முருகப் பெருமானின் பாதார விந்தங்களை ஒரு கணம் வணங்கி

எண்ணிய எண்ணியாங்கு எய்துவர்
எண்ணியர்
திண்ணியராகப் பெறின்

எனும் அமுதவாக்கை, ஆழமான கருத்தை நாளும் பொழுதும் எண்ணிக்கருமமாற்ற எனைத்தூண்டிய வள்ளுவன் பாதங்களைப் போற்றித் தொடர்கின்றேன்.

இம்மலருக்கு ஆசிரியராகப் பணியாற்றும் நற்பணியை நல்கிய எமது அன்புக்குரிய அதிபர் திருமதி.வி.பசுபதிப்பிள்ளை அவர்களுக்கு எனது மனம் நிறைந்த நன்றி.

இம்மலரானது கண்நுகர் கனிமங்களாக கண்டு களிப்புற்று மாந்தும் மனநிறைவைத் தரும் நல்லறிஞர் ஆக்கங்களோடு, பெருமளவு மாணவர்களது ஆக்கங்களையும் தன் அகத்தே கொண்டிலங்குகின்றது. அவற்றோடு காலாகாலமாகப் போற்றிப் பாதுகாக்க வேண்டிய அரும்பெரும் வரலாற்றுக் குறிப்புகளையும் கொண்ட அரிய சாதனமாக அமைகின்றதெனலாம். கல்லூரிச் சாதனைகள், கல்விச் செயற்பாடுகள், நெஞ்சில் நின்றும் நீங்கா நினைவுகள் யாவற்றை தாங்கி வருகின்றது.

இம்மலரைச் சிறந்த முறையில் ஒழுங்கமைத்து வெளியிடுவதற்கு ஆசி வழங்கி, வாழ்த்துக்கூறி, ஆக்கங்கள் தந்துதவிய ஆன்றவிந்த கொள்கைச் சான்றோர் அனைவர்க்கும், எனது பணி சிறப்புற உதவிய மலர்க்குழுவிற்கும், ஆசிரிய சமூகத்திற்கும், மலர் நூலுருவாகி முழுமை பெற்று வெளியிடுவதற்கு தனது முழுமையான பங்களிப்பை நல்கிய கணனியியல் கல்லூரி, சின்னப்பா வீதி, நவாலி தெற்கு, மானிப்பாய் அச்சகத்திற்கும் மலராசிரியர் என்ற வகையில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி. பா.விஜயகாந்தன்
மலராசிரியர்

கல்லூரி அதிபரின் அறிக்கை



அறிவும் ஆற்றலும் வளர போதனைகளைச் சாதனைகளாய் நிலை நாட்டிய எமது கல்லூரி தனது 40 வருட சேவையை நானிலம் போற்ற நல்கிய இவ்வேளைதனில்

காசினிதனில் கலையோடு கல்வியும் வளமும் பெற கருணையின் வடிவாக கல்லூரி முன்றலில் காவலனாகக் காத்து நிற்கும் கந்தன் கருணை வேண்டி,

திடசிந்தையும் தளராமுயற்சியும் தன்னம்பிக்கையும் எனக்களித்து கடந்த 10 வருடகாலம் அதிபர் பதவியைச் செம்மையாய் சிறப்பாய் நிர்வகிக்க ஆதரவாக வழிநடத்தும் என் குலதெய்வத்தை மானசீகமாக வேண்டுவதோடு

இம்மலரை வெளியிடும் எண்ணம் என்மனதில் என் தசாப்தகால ஆரம்பத்திலேயே தோன்றியது. அவ்வெண்ணக்கரு எனும் விதையை இன்று மலராக வெளியிட உதவிய உபஅதிபர், ஆசிரியர்களையும், அனைத்து அன்புள்ளங்களையும் அன்போடு நினைவு கூர்ந்து

கடந்த தசாப்தத்தில் கல்லூரியின் வளர்ச்சி பற்றி இச் சந்தர்ப்பத்தில் எடுத்துரைக்கலாம் என விளைகின்றேன்.

இன்றைய நிகழ்வின் பிரதம விருந்தினர் அவர்களே!
சிறப்பு விருந்தினர் அவர்களே!
கௌரவ விருந்தினர்களே!
கல்லூரி மலரின் சிறப்பினை ஆய்வு செய்ய
வந்திருக்கும் ஆய்வாளர் அவர்களே!
முன்னாள் அதிபர்களே!
அயற்பாடசாலை அதிபர்களே!
ஆசிரியர்களே!
பெற்றோர்களே!
அபிவிருத்திசங்க உறுப்பினர்களே!
பழைய மாணவிகளே!
நலன் விரும்பிகளே!
மாணவர்களே!

Our Principal

Mrs. V.Pasupathipillai

B.A.Special (Geo)

P.G.D.E.(MERIT)

S.L.P.S. I

உங்கள் அனைவரையும் வரவேற்பதில் மட்டற்ற மகிழ்வெய்துகின்றேன் தங்கள் அனைவரதும் வருகை மானி மகளிரின் தனித்துவமான தன்னிகரில்லாத வளர்ச்சிப் பாதையின் உறுதிப்பாடென்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

இன்றைய மலர் வெளியீட்டினை முதன்மை விருந்தினராக வருகை தந்திருக்கும் முன்னாள் யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை அவர்களே உங்களை வரவேற்பதில் கல்லூரிச் சமூகம் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறது.

அனுபவ முதுமை, அறிவில் ஆழம், முகத்திலே எளிமையான புன்னகையோடு கூடிய சாந்தம், பேச்சில் ஆளுமை இவை எல்லாவற்றையும் விஞ்சும் சுறுசுறுப்பான சுபாவம், அண்மையில் மணிவிழாக் கண்ட நாயகன். மாற்றோரும், உற்றாரும் புகழும் வண்ணம் கல்வித் தேடலில் சளைக்காதவர். எமது பரிசுத்தினத்தில் விருந்தினராக வந்த தாங்கள் இன்று எமது கல்லூரி மலரினை வெளியிட்டு வைப்பதற்கு முழு மனத்தோடு சம்மதித்து வருகை தந்துள்ளமை எமக்கு இரட்டிப்பு மகிழ்வைத் தருகின்றது. இத்தருணத்தில் தங்களுக்கு மீண்டும் என் நன்றியுந் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

கணவரின் கல்வி உயர்ச்சிக்கு பெருங்காவலனாக நின்று உயர்கல்வியின் துணைவேந்தராக்கி அகமிக மகிழ்ந்தவர் அவரது இல்லாள். இல்லாள் அகத்திருக்க இல்லாததொன்றில்லை என்று கூறுமளவுக்கு நல்லதொரு மனைவியாக தாயாக ஆசானாக விளங்கிவரும் அவர்தம் பாரியார் திருமதி. பாலசுந்தரம்பிள்ளை அவர்களே தங்களையும் வருக வருக என வரவேற்பதில் மகிழ்வடைகின்றேன்.

மற்றும் இந்நிகழ்வின் சிறப்பு விருந்தினராக வருகை தந்திருக்கும் எமது வலய கல்விப்பணிப்பாளரும், எனது நண்பியுமான திருமதி. றெஜினா இருதயநாதன் அவர்கள் கல்விப் பணிக்கு தன்னை அர்ப்பணித்தவர். எத்தனையோ தடைகளையும் தனது உடல் நலம் பாதிக்கப்பட்டபோதும் சளைக்காது தீரத்துடன் செயற்பட்டு வருபவர். இன்று என்னுடன் கூட இருப்பது மட்டற்ற மகிழ்வை தருகின்றது இவ்வேளையில் அவர்களையும் வருக வருக வென வரவேற்கின்றேன்.

கௌரவ விருந்தினர்களாக வருகை தந்திருக்கும் எமது சண்டிலிப்பாய் கோட்ட கல்வி அலுவலர் திரு. க. தனபாலசிங்கம் அவர்களே கல்வி வளர்ச்சியே தன் வளர்ச்சி என்னும் மனப்பாங்கு கொண்டு அயராது உழைத்து வரும் தங்களது வருகையால் கல்லூரி சிறப்படைகின்றது.

எமது சகோதர பாடசாலை அதிபர் திரு. கு. சண்முகநாதன் அவர்களே தங்களது ஆளுமையும் அறிவு அனுபவமும் துடிப்பான செயற்பாடும் மானி மண்ணிற்கு கிடைத்த மிகப்பெரும் கொடை என்பதனை இவ்விடத்தில் நினைவு படுத்த விரும்புகின்றேன்.

முன்னாள் பல்கலைக்கழக பதிவாளரும் தெல்லிப்பழை அரசாங்க அதிபரும் செங்கையாழியன் எனும் புனைபெயர் கொண்ட ஈழத்து பெரும் எழுத்தாளர்களில் ஒருவரும் எனது அன்புக்குரிய ஆசானும் ஆகிய கலாநிதி. க. குணராஜா அவர்களே

தங்களை வரவேற்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைவதுடன் எமது கல்லூரி மலரின் மதிப்பாளராக இங்கு வந்துள்ளமை இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தருகின்றது. சிறந்த எழுத்தாளர் என்ற வகையில் தங்களது ஆய்வு தரமிக்க தொன்றாக அமைவதோடு மலரின் தரம், அறிவியல் சார்ந்த நுட்பம், ஒருங்கமைப்பு என்பவற்றில் சிறப்புக்களை இனம்காண தங்களது மதிப்பீட்டுமுறை தகுந்த பலனை அளிக்கும் என்பது திண்ணம். இவ்வேளையில் வேலைப்பழுவுக்கு மத்தியில் இங்கு வருகை தந்துள்ளமை பேரானந்தத்தை தருகிறது.

மற்றும் இக்கல்லூரி வளர்ச்சிக்கு மறைமுகமாக நின்று உதவி புரிந்து வரும் அயற்பாடசாலை அதிபர்களே தங்களது வருகை மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகின்றது.

ஒரு கல்லூரியின் வளர்ச்சியிலே முக்கிய பங்கு அக்கல்லூரியின் தேவையை அறிந்து சேவைசெய்பவர்கள் பாடசாலை அபிவிருத்திச் சங்கமும், பழைய மாணவிகள் சங்கமுமாகும் கல்லூரி அனைத்து நிகழ்விலும் முன்னின்று செயற்பட்டு கல்லூரி வளர்ச்சிக்கு உறு துணையாக இயங்கி வருகின்றனர். குறிப்பாக அமரர் சட்டத்தரணி சிவா இராஜேந்திரன் ஒய்வுபெற்ற பொறியியலாளர் திரு சி. பத்மநாதன்,திரு. இ. வசந்தசேனன் (பதில் நீதவான்), Dr. சுந்தர்ராஜன் போன்றோரின் சேவை கல்லூரிக்கு இவ்வளவு தானென்ற கட்டுப்பாடுகிடையாது என்பதையும் இச்சந்தர்ப்பத்தில் எடுத்துக் கூற விரும்புகின்றேன் சகல நிகழ்வுகளிலும் கடமையுணர்வுடன் செயற்பட்டுவடும் இது போன்றே செல்வி. சுப்பையாபிள்ளை, செல்வி த. கணபதிப்பிள்ளை, திருமதி ப. கமலாம்பிகை, திருமதி ஜமுனா, திருமதி சு. ஞானந்தேரா, திரு. றிச்சாட்மோகன், திரு. மனோகர், திரு. ச. பரமேஸ்வரன் திரு. க. கணேசலிங்கம் (கட்டடத் திணைக்களம்), பேரா சண்முகநாதன் போன்ற ஏனைய உறுப்பினர்களது பணியும் போற்றப்பட வேண்டியதாகும் தேவையறிந்து சேவை செய்யும் அன்பிற்குரிய பெற்றோர்களுக்கும் எனது சேவைக்கால இறுதி நிகழ்வில் இவ்விடத்தில் நன்றி கூறுவதில் மகிழ்வெய்துகின்றேன்.

இத்தருணத்தில் கல்லூரியின் உயர்வினை நாலாதிசையும் பறைசாற்றும் உன்னத உணர்வோடு கல்விகற்க இங்கு வந்திருக்கும் அன்பான மாணவச் செல்வங்களே, வாழ்க்கையின் இளமைக்காலம் மீண்டும் பெற முடியாத உன்னதகாலம் இவ்வுயிரோட்டமான காலத்தில் உணர்வினை நற்பாதைக்கு இட்டு செல்லும் அறிவினைப் பெருக்குவதே உங்கள் சித்தமாக அமைய வேண்டும். இதுவே பணிக்கால விளைவில் எதிர்பார்க்கும் ஆசையுமாகும். உங்கள் கைகளில் தான் கல்லூரியின் வெற்றி முரசு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது நாலாதிசையும் சென்று ஒலித்திட வேண்டும். அவ்வொலி செவிப்பறைகளில் இன்பம் சொரிந்திட அன்பான ஆசிரியப் பெருந்தகைகளே ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகின்றீர்கள் உங்கள் புனித சேவையைப் போற்றிட வேண்டும்.

இவ்வேளையில் இன்றைய நிகழ்வு சிறப்படைய கல்லூரியின் வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்துவந்து கல்லூரி வரலாற்றின் பின்புலத்தையும் சற்று ஞாபகப்படுத்திச் செல்லலாம் என்பது என் எண்ணம்.

கல்லூரி வரலாறு

1944ஆம் ஆண்டிற்கு முன்னர் மானிப்பாய் சூழலில் (அமைந்த) கிராமத்துப் பெண் பிள்ளைகள் தமது கல்வியை மேற்கொள்ள தகுதியான சைவப்பாடசாலைகள் எதுவும் இல்லாத சந்தர்ப்பத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் அன்றைய அதிபர் திரு. ஏ. வீரசிங்கம் அவர்கள் கல்லூரி முகாமையாளரின் அனுசரணையுடன் 1944 ஆம் ஆண்டு தை மாதம் 4ம் 5ம் வகுப்புக்களில் பெண்பிள்ளைகளை அனுமதித்தார். இது படிப்படியாக உயர்தர வகுப்புக்கள் வரை அதிகரித்தமையால் பெண்களுக்கென தனியான ஒரு பிரிவு தொடக்க வேண்டுமென்ற ஓர் அபிப்பிராயம் முனைப்புப் பெற்றது இதற்கு அன்றைய உபஅதிபர் அமரர் சு. முத்துவேற்பிள்ளை அவர்களின் தூண்டுதலும் பெரும் துணை புரிந்தது 1952ல் திருமதி பட்டம்மாளின் இசைக்கச்சேரி மூலம் பணம் திரட்டப்பட்டு பெண்கள் பகுதிக்கான இருமாடிக்கட்டிடத்தின் கீழ்த்தளம் அமைக்கப்பட்டது. தொடர்ந்து 1955, 1960களில் களியாட்ட விழாக்கள் மூலம் பணம் திரட்டப்பட்டு இருமாடிக்கட்டிடம் பூர்த்தியாக்கப்பட்டது.

இக்கால கட்டத்தில் அதிபர் திரு. ப முத்துவேற்பிள்ளை, பழைய மாணவிகள் சங்கத் தலைவர் திரு. சி. நவரத்தினம், செயலாளர் திரு. பொ. செல்வரத்தினம், திரு. சி. எஸ். நவரத்தினம், திரு. S.T. சாரி, திரு R. சிவதாசன், திரு K. இராமலிங்கம், பொருளாளர் திரு. சிவா முத்துகுமாரசுவாமி வைத்திய காலநிதி ச. சோமசுந்தரம் ஆகியோரின் விடாமுயற்சியும் பங்களிப்பும் குறிப்பிடத்தக்கது. இக்காலப்பகுதியில் கட்டிட மேற்பார்வை செய்து உதவிய திரு. மு. தியாகராஜா அவர்களதும் கல்லூரி வளர்ச்சிக்கு முன்னின்று உழைத்த பழைய மாணவர் சங்க போசகர் திரு. சிவா. இராசேந்திரன் அவர்களதும், கல்லூரி பல்வேறு வழிகளிலும் முன்னேற்றம் காண உதவி ஒத்தாசை நல்கிவரும் திரு. S. பத்மநாதன் அவர்களதும் இன்றைய தலைமுறையினரதும் பணிகளும் இக்கல்லூரி வளர்ச்சியின் உரமான படிகளாகும். இவர்களின் அரிய சேவைக்கு நாம் செய்யும் நன்றிக்கடன் இந்நிறுவனத்தை மேன்மேலும் வளர்த்தெடுப்பதேயாகும் என்று வலியுறுத்தி கடந்த தசாப்த கால கல்லூரி அறிக்கையின் சாராம்சத்தை இச்சபை முன் சமர்ப்பிப்பதில் பெரு மகிழ்வடைகின்றேன்.

கடந்த எனது அதிபர் சேவைக்காலப் பகுதியில் பாடசாலையில் கற்றல் கற்பித்தல் உள்ளிட்ட சகல பாடவிதான இணைப்பாட விதான செயற்பாடுகள் யாவும். முறையாகச் செயற்படுத்தப்பட்டுள்ளன என்பதை இவ்விடத்தில் எடுத்துக் கூறுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். எனது சேவைக்காலம் பல்வேறுபட்ட அச்சுறுத்தல்கள் ஆக்கிரமிப்புக்கள் இடப்பெயர்வுகள் எனச் சொல்லொணாத இடர்கள் நிரம்பிய காலப்பகுதி ஆனாலும் சளைக்காத மனவுறுதி கொண்டு செயற்பட்டு இன்று மண்ணின் பெருமையை கல்விசார் திறமையை செயல்வடிவாக்கி வருகின்றோம் என்பதை இவ்விடத்தில் நினைவு படுத்த விரும்புகின்றோம்.

மாணவர் தொகை (1993 –2003)

மாணவர்	மா.தொ	தரம் 1 -2	தரம் 6 - 8	தரம் 9 - 11	தரம் 12 - 13
1993	1056	-	356	395	305
1994	1237	-	344	448	345
1995	1067	-	344	407	316
1996	524	-	152	231	144
1997	650	-	190	280	180
1998	647	-	182	301	164
1999	602	-	136	284	182
2000	547	-	130	297	170
2001	620	-	140	300	180
2002	623	23	136	284	183
2003	711	58	168	314	171

(1996 இடம் பெயர்வின் காரணமாக வரவு 50% விழ்ச்சியடைந்தது)

ஆசிரியர் குழாம்

தற்போது எமது கல்லூரியில் 28 நிரந்தர ஆசிரியர்களும் 05 தொண்டர் ஆசிரியர்களும் கடமை ஆற்றி வருகின்றனர்.

ஆசிரியர் இளைப்பாறல்

1994 :-

1995 :- திரு. S. சிவவீரசிங்கம் - B.Sc P.G.D.E
திருமதி M. செல்வரட்ணம் – B.A
திருமதி P.கதிர்காமநாதன் B.A, P.G.D.E
திருமதி S. விநாயகமூர்த்தி B.Sc
திரு S. இராமானுந்தசிவம் B.Com

1997 திரு A . விஜயரட்ணம் -Spl. Trd (Eng)
திருமதி M.T ஞானப்பிரகாசம் Spl. Trd (Sc)

1999 செல்வி T. இராஜரட்ணம் Spl.Trd (Tamil)
2002 திருமதி T. சுந்தரலிங்கம் Dip. in. Music
2003 திரு. T. சுந்தரலிங்கம் B.A, P.G.D.E

பதவி உயர்வு

2000– திரு A.இளங்கோ B.Sc., PG.D.E, M.Ed. பலாலி ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர்

ண

எம்முடன் புதிதாக இணைந்தோர்

1994 திருமதி P. சர்வானந்தா B.A
செல்வி U. ஆறுமுகம் B.A
செல்வி K சின்னராசா B.A

1995 செல்வி G. தம்பாபிள்ளை B.A, P.G.D.E
திருமதி C. அமிர்தலிங்கம் B.A, P.G.D.E
செல்வி G. நடராசா Spl. Trd (Maths)
திருமதி T. நாகேந்திரன் Spl. Trd (Sc)
திருமதி T. சிறஸ்கந்தராஜா B.Com
ஒப்பந்த அடிப்படையில்
செல்வி M. செல்லத்துரை Spl. Trd (Eng)

1997 திருமதி R. சிறிகரன் Spl. Trd (Maths)
திருமதி C.J ஜெயசீலன் B.Sc., P.G.D.E

1998 செல்வி J. கனகராஜா B.Sc., P.G.D.E
திருமதி V. குணதீசன் B.Sc., P.G.D.E
திருமதி R. சிவபாலன் BA

1999 திரு V. ஜெயக்குமார் B.Sc. P.G.D.E
ஒப்பந்த அடிப்படையில்
திருமதி M.T ஞானப்பிரகாசம்
திருமதி G. பூபாலுபிள்ளை
நூலக அபிவிருத்தி உத்தியோகத்தர்
செல்வி S. ஆறுமுகம் B.A

2000 செல்வி L. மகாலிங்கம் B.A
திரு S. செந்தில்வேல் Sp.Tr.d (Art)
செல்வி P. கதிரவேலு B.A
செல்வி S. றொபேட் A/L

2002 திருமதி M குமாரவேல் B.A
செல்வி S. ஜெயரட்ணம் Sp.Tr.d (Primary)

2003 திருமதி M. விக்னராஜா B.A, Spl Trd (Dance)
திருமதி B. உதயகுமார் B.Com, P.G.D.E

ஆசிரிய மாணவர்கள் 1 வருட சேவைக்கு எமது பாடசாலைக்கு அனுமதிக்கப்பட்டோர் விபரம்
செல்வி S. சுப்பிரமணியம்
செல்வி P. கணேசராசா
செல்வி P. தர்மலிங்கம்

சிரேஷ்ட மாணவ முதல்வர்களும் விளையாட்டுத்துறை தலைவர்களும்

மாணவ முதல்வர்	விளையாட்டுத்துறைத் தலைவர்
1994 சஸ்மிதா ஜெகநாதன்	துஷ்யந்தி பரமசாமி
1995 சிவநயனி பசுபதிப்பிள்ளை	றொபினிசைலா
1996 சுபாசினி சுப்பிரமணியம்	வைதேகி சோமேஸ்வரானந்தம்
1997 ஜெயந்தி அருளையா	சித்திராங்கி நவரட்ணம்
1998 சுதர்சினி அரசலிங்கம்	மீரா லோகநாதன்
1999 அனுசா விஜயானந்தன்	உசாஜினி சிவாஜி
2000 கிருஷ்ணரங்கா சிவனேயன்	தர்மினி விசுவநாதன்
2001 நித்தியா அருள்லிங்கம்	ரசிகலா குமாரவேலுப்பிள்ளை
2002 கார்த்திகா தில்லைநாதன்	எழிலரசி கனகராஜா
2003 சுபாசினி இரவிந்திரன்	சிவதர்சினி நாகேநதிரன்

மாணவ முதல்வர்கள் விளையாட்டுத்துறை தலைவர்கள் நிர்வாகத்திற்கும் கல்லூரி வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருந்து ஒத்துழைப்பு நல்குவதையே தமது பிரதான கடமையாகக் கொண்டு செயற்பட்டு வருவது பாராட்டிற்கும் மகிழ்ச்சிக்குமுரியது, இது போன்றே தொடர்ந்தும் கடமையுணர்வு கொண்டு செயற்பட்டு கல்லூரி வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என எதிர்பார்க்கின்றேன்.

கல்விச்சாதனைகள்.

கல்லூரி ஒன்றின் வளர்ச்சிக்கான பிரதிபலிப்பு மாணவர் பரீட்சைப் பெறுபேறுகளும் இணைப்பாடவிதான செயற்பாட்டுத் திறன்களுமாகும் இவையே கல்லூரியின் புகழை நாலாதிசையும் பரவச் செய்கின்றது. இந்த வகையில் கடந்த தசாப்த கால பொதுப்பரீட்சைப் பெறுபேறுகளையும் இணைப்பாட விதான செயற்பாட்டில் தேசிய மாகாண மட்டப் பரிசில்களையும் இவ்விடத்தில் குறிப்பிட்டுச் செல்லலாம் என எண்ணுகின்றேன்.

பொதுப் பரீட்சைப் பெறுபேறு

1. கல்விப் பொதுத்தராதர சாதாரண பரீட்சை

ஆண்டு	தோ. எண்	சி. அ. எண்	சி. பெறுபே	சி. பெற்ற மாணவி
1994	108	44	4D, 4S	சிவதாரணி சதாசிவம் சுபாசினி. சுப்பிரமணியம், சுதர்சினி. சதாசிவம்
1995	71	63	6D,2C	ஜெயந்தி. அருளைய கஜிதா. தணிகாசல
1996	88	66	6D,2C	சுதர்சினி அரசலிங்கம்
1997	92	43	5D,2C,S	அனுஷா விஜயானந்தன், ராதிகா சிவராசா, தர்சினி மோகன்
1998	118	60	7D,C	அஜந்தா, பேதுறுப்பிள்ளை

1999	73	42	5D,4C,S	நித்தியா. அ, ரசிகலா. கு
2000	72	48	7D,2C,S	நளினி சங்கரநாதன்
2001	78	70	8A,B,C	சங்கீதா சிவஞானம்
2002	99	65	8A,2C	பபித்தா ஸ்ரீசந்தணராஜா

2. கல்விப் பொது தராதரப் பத்திரம் உயர்தரப் பரீட்சை

ஆண்டு	தோ. எண்	சி. அ. எண்	சி. பெ.	சி. பெறுபேறு பெற்ற மாணவி
1994	90	44	3AS	கலாமதி வேலாயுதபிள்ளை
1995	114	74	3AC	மேரிலகன்செப்தா ஜெயபாலன்
1996	62	37	A 2B C	செந்தினி சிவானந்தராசா, சிவசாந்தி பொன்னுத்துரை
1997	39	38	3AC	மாலினி பரமகுரு
1998	85	70	2A 2B	மைதிலி நடராசா
1999	99	72	3A C	சாந்தகுமாரி சண்முகநாதன்
2000	83	53	2A B C	கார்த்திகாயினி அன்னலிங்கம்
2001	71	47	3A	மல்லிகா ஏபிரகாம்
2002	96	76	3A	கிருஷ்ணவானி கணேசலிங்கம்
2003	88	36	2AB	பிரியங்கா அற்புதராஜா

3. இணைப்பாடவிதான பெற்பாடுகள்

ஆண்டு	பெயர்	இடம்	பிரிவு	நிகழ்ச்சி
2003	இ.சுபாசினி	3ம் இடம்	தேசிய மட்டம்	மெய்வல்லுனர்
2002	கி. வாசுகி	1ம் இடம்	தேசிய மட்டம்	தனி இசை
	க. எழிலரசி	5ம் இடம்	தேசிய மட்டம்	மெய்வல்லுனர்
	வாசுகி	1ம் இடம்	தங்கப்பதக்கம்	பண்ணிசை
	த. நிஷா	1ம் இடம்	தங்கப்பதக்கம்	பண்ணிசை
2001	கி. யமுனா	3ம் இடம்	தேசிய மட்டம்	கட்டுரை
	ராதிகா. க.	வெண்கலப்பதக்கம்		சமயஅறிவு
1999	சி. கிருஷ்ணரங்கா	3ம் இடம்	தேசிய மட்டம்	நாடகப் பிரதியாக்கம்
	சி. சிவாஜினி	1ம் இடம்	தங்கப்பதக்கம்	சமய அறிவு
1998	க. சுதவதனி	2ம் இடம்	தேசிய மட்டம்	மெய்வல்லுனர்
1997	ஸ்ரீ. மேகலா	1ம் இடம்	தேசிய மட்டம்	
	அ. சுதர்சினி	ஜனாதிபதி விருது	தேசிய மட்டம்	சித்திரம்
	த. விதுவா	ஜனாதிபதி விருது	தேசிய மட்டம்	சித்திரம்

எமது கல்லூரியின் கல்விசார் செயற்பாடுகளுடன் ஒப்பிட்டு நோக்கும் போது இணைப்பாடவிதான செயற்பாட்டில் குறிப்பாக உடற்கல்வியை பொறுத்தமட்டில் நாம் முன்னணி வீராங்கனைகளையும், வலைப்பந்தாட்ட, உடற்பயிற்சி வீரர்களையும் சிறப்பான முறையில் உருவாக்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறோம் என்றுதான் கூற வேண்டும். காரணம் பல வருடங்களாக எமது கல்லூரிக்கு உடற்பயிற்சி

ஆசிரியர் ஒருவரை தந்துதவ எமது கல்வித்திணைக்களம் மறந்துவிட்டது என்றேதான் கூறவேண்டும். இதனால் தொண்டர் ஆசிரியர் சேவையைத் தான் நாம் நாடியுள்ளோம்

மன்றங்கள்

மாணவர்களின் இலைமறைகாயாக மறைந்திருக்கும் ஆற்றலை வெளிக்கொணரவும், ஆளுமை மிக்க தலைமைத்துவத்தை வளர்க்கவும் மொழி ஆற்றலை சிறப்பிக்கவும் சமூகப்பொருத்தப்பாடுடையவர்களாகவும், கல்லூரியில் பல மன்றங்கள் அமைக்கப்பட்டு, மாதமொருமுறை கூட்டப்படுகின்றன. அத்துடன் விழாக்கள் விசேடதினங்கள், அறிஞர்களின் சொற்பொழிவுகள், கருத்தரங்குகள், போட்டிகள் என்பனவற்றையும் நடாத்தி கல்லூரி வாழ்க்கையைக் களிப்படையச் செய்கின்றோம்.

குறிப்பாக விஞ்ஞான மன்றமும், வணிக மன்றமும் முறையே "சங்கேதம்", "வணிகச் சோலை" என்ற மாணவர் சஞ்சிகைகளை பாடசாலை மட்டத்தில் இருந்து பல்கலைக்கழகம் வரையான பல ஆக்கங்களை கொண்டவையாக வருடா வருடம் வெளியிட்டு வருகின்றன இது வரை 4 விஞ்ஞான இதழும் 3 வணிக இதழும் வெளிவந்துள்ளன ஏனைய மன்றங்களும் தமது செயற்பாட்டில் ஒன்றாக கோட்ட வலய மட்ட போட்டிகளுககு மாணவர்களைத் தயார்ப்படுத்தி அனுப்புவதோடு பரிசில்களைத் தட்டிக்கொள்ள ஏற்ற ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது குறிப்பாக ஆங்கில தினபோட்டியில் பெருந்தொகையான சான்றிதழ்களை எமது கல்லூரியே தட்டிக்கொள்கிறது என்பதனை இவ்விடதில் பெருமையுடன் எடுத்துக் கூறுகின்றேன்.

சமய நிகழ்வுகள்

எமது கல்லூரி சமய வழிபாட்டிற்கும் சமய விழாக்களிற்கும் முன்னுரிமை அளித்து வருகின்றது கல்லூரி முன்றலில் அமைந்துள்ள முருகன் ஆலயம் இடப்பெயர்வின் பின் புனரமைக்கப்பட்டு 1998 மே 1ம் திகதி கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. இதற்கு பணவுதவி நல்கிய அன்பர்களுக்கு எனது நன்றிகள் வருடா வருடம் மணவாளக்கோலம், திருக்கல்யாணம், நவராத்திரி விழா, கந்தசஷ்டி விரதம் குருபூசைத்தினங்கள் கார்த்திகைத்தினங்கள் என்பன சிறப்பான முறையில் அனுசரிக்கப்பட்டு கொண்டாடி வருகின்றோம். நவராத்திரி காலங்களில் கல்விப்புலம் சார் அறிஞர்களின் கருத்துரைகளும் வழங்கப்பட்டு வருகின்றன. வெள்ளிக்கிழமை தோறும் வகுப்புவாரியாக பூசை செய்யப்பட்டு சிவபுராணம், திருமுறை என்பன ஓதப்பட்டு வருகின்றன.

இதேபோன்றே கிறிஸ்தவ மாணவர்களின் வழிபாடும் அவர்களது சமய நிகழ்வும் குறிப்பாக ஒளிவிழா மிகச் சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்டு கொண்டாடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கல்லூரி வளர்ச்சியின் நிகழ்வுகள்

எனது காலப்பகுதியில் கல்லூரியின் வளர்ச்சிப்படிகள் எண்ணிறந்த செயற்பாடுகளால் உரமும் உறுதியும் பெற்று உயர்ந்துள்ளது என்பதனை இவ்விடத்தில் எடுத்தியம்புவதில் பெருமையும் மகிழ்வும் கொள்கிறேன். கல்லூரி வளர்ச்சி வெறும் போதனைகளால் மட்டுமல்ல சாதனைகளாலேயே நிர்ணயிக்கப்படுகின்றன.

இந்தவகையில் கல்லூரி அபிவிருத்திக்கு சாதகமாக பௌதீக வள அபிவிருத்தியிலும் கண்ணும் கருத்துமாக இருந்து செயற்பட்டுவந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

1994 வெள்ளி விழாக் கட்டிடத்திற்கு கிடுகுகளால் கூரை வேயப்பட்டு வகுப்புக்கள் நடத்தப்பட்டது.

1995 இடப்பெயர்வினால் சேதமாக்கப்பட்ட அதிபர் அலுவலகம் மஸ்கன் மண்டபம் என்பன அரச உதவியுடன் கல்நார் கூரையிட்டு முற்றாக மீண்டும் புனரமைக்கப்பட்டு பாவனைக்கு பயன்படுத்தப்பட்டது. கல்லூரி நூலகம புனருத்தாரணம் செய்யப்பட்டு நூல்கள் சேகரிக்கப்பட்டடு அன்றைய உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. கே. வேலாயுதம் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இக்காலப்பகுதியில் மாணவர் தொகை குறைவால் விஞ்ஞானப் பிரிவினை கல்வித் திணைக்களம் மூடவிருந்த போது அமரர் சிவா இராஜேந்திரனும் எனது தளரா முயற்சியால் தடுத்து நிறுத்தப்பட்டது. தை 30ம் நாள் சட்டப்படி இன்ரறக்கழகம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. சூழல் சுற்றுப்புரம் அழகுபடுத்தி சுத்தம் சுகாதாரம் பேணும் முகமாக சுழல் சுற்றுப் புற மாணவர் ஒன்றியம் அமைக்கப்பட்டு சுகாதாரம் பேணப்பட்டதுடன் பூங்கன்றுகள் நாட்டப்பட்டு கல்லூரி வளாகம் அழகுபடுத்தப்பட்டது. பரிசளிப்பு விழா நடத்துவதற்கான நிதியை வருடம் தோறும் பெறும் பொருட்டு பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினுடாக நிதி வங்கிவைப்பில் இடப்பட்டது. கல்லூரிக்கு அவசியமான கலந்துரையாடல் மேசை ஒன்றும் நாற்காலிகள் 20 பதும் ரூபா 35000.00 ற்கு பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மூலம் கல்லூரிக்கு கொள்வனவு செய்யப்பட்டது. திரு. R.V ஆறுமுகம் ஞாபகார்த்தமாக Dr. இராமநாதன் மாணவர் கல்வியை ஊக்குவிக்கு முகமாக வருடா வருடம் க.பொ.த சா.த பரீட்சையில் அதிதிறமைச் சித்திபெறும் மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்க 25000.00 ரூபா நிதியை வழங்கி புலமைப் பரிசில் நிதியம் ஒன்றை ஆரம்பித்து பணம் வங்கியில் வைப்பிலிடப்பட்டது.

1996 கல்லூரி அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு நல்கி வந்த அமரர் சிவா இராசேந்திரம் அவர்களுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக அவரது உருவப்படம் திரை நிக்கம் செய்யப்பட்டது.

1997 பழைய மாணவர் சங்க கனடா கிளை மூலம் ரூபா 41,500.00 நிதி உதவிபெற்று பௌதீகவள அபிவிருத்தி நடவடிகைகைகள் மேற்கொள்ளப்பட்டது. அப்பணம் மூலம் தொலைபேசி, மின்சார இணைப்புக்கள் பெறப்பட்டன. படித்து வேலையின்றி இருக்கும் பெண் பிள்ளைகளின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு கல்வித்திணைக்களத்தின் அனுசரணையுடன் முறைசாரா கல்விப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது.

கல்லூரிக்கு அளப்பரிய சேவைகள் செய்த எமது கல்லூரி முன்னாள் அதிபர்களின் நிழற்படங்கள் பிரதி செய்து பிரதான மண்டபத்தில் இணைக்கப்பட்டன.

1998 சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் ரூபா 70,000 பெறப்பட்டு வெள்ளி விழா மண்டப கூரை வேலை மேற் கொள்ளப்பட்டது.

1999 G.T.Z நிறுவனத்தினால் வடபகுதி பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டு வந்த அன்பளிப்பு எமது கல்லூரிக்கும் கிடைக்கப்பெற்று மலசல கூடங்கள் அமைக்கப்பட்டன.

திரு. சிவாராஜேஸ்வரன் அவர்களினால் கல்லூரியின் உள்ளக வீதி புனருத் தாரணம் செய்யப்பட்டது. கல்லூரி மாணவர்களின் புலமைப்பரிசில் திட்டத்திற்கு திருமதி. வி. முத்துவேற்பிள்ளை அவர்களால் ரூபா 50,000.00 அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

கனடா பழைய மாணவர்கள் சங்கத்திடம் இருந்து பெற்ற நிதி உதவியுடனபாடசாலையின் வடக்கு புறமதிலும், அடுத்த வடபகுதி மதில் பாடசாலை அபிவிருத்தி நிதியில் இருந்தும் கட்டப்பட்டன.

2000 கல்லூரியில் கணனி அறிமுகம் செய்யப்பட்டு க.பொ.த உ.த வகுப்பு மாணவர்களுக்கு கணனி போதிக்கப்பட்டு வருகின்றது.

2001 புனர்வாழ்வு புனர்நிர்மான அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவர்களின் உதவியும் எனது பெரு முயற்சியினால் 10 லட்சம் ரூபா நிதி உதவி பெற்று பூர்த்தியாக்கப்படாத வெள்ளி விழாக்கட்டிடம் ஓரளவு பூர்த்தியாக்கப்பட்டது.

2002 பல ஆண்டுகளுக்குப் பின் 23 மாணவர்களுடன் மீண்டும் ஆரம்ப பிரிவு தரம் 1 ஆரம்பிக்கப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் உயர் திரு சிவாஜிலிங்கம் அவர்களின் முயற்சியினால் பிரதேச செயலகத்தினூடாக, மேலைத்தேச இசைக்கருவிகள் (Band) பெறப்பட்டு மேலைத்தேச இசைக் குழு அமைக்கப்பட்டது. Dr. சுந்தராஜன் தாயார் நினைவாகவும் அமரர் சத்தியசீலனின் நினைவாகவும் விளையாட்டு முற்றத்திற்கான சில உபகரணங்கள் அன்பளிப்பாக பெறப்பட்டது.

அவுஸ்திரேலியா பழைய மாணவிகள் சங்கத்தினூடாக கணனி, மேலைத்தேச இசைக்குருவி என்பன அன்பளிப்பு செய்யப்பட்டது. அத்தோடு இரண்டு வருடங்களாக இருதொண்டர் ஆசிரியருக்கு கொடுப்பனவை வழங்கி வருகிறார்கள் கல்வித்திணைக்கள உதவியுடனான கட்புல செவிப்புல தகவல் மையம் ஆரம்பிப்பதற்கான கட்டிடம் அமைக்கப்பட்டது. கனடா பழைய மாணவிகள் சங்கத்தின் உதவியுடன் விளையாட்டு மைதானத்திற்கான காணி கொள்வனவு செய்வதற்கான ஆக்கபூர்வமான வேலைகள்

கனடா பழைய மாணவர்கள் வசந்த நிகழ்வின் போது நடாத்திய விளையாட்டுப் போட்டி

கனடா பழைய மாணவர்களுடன் எமது அதிபர்

கனடா பழைய மாணவர் சங்கக் கிளை நடாத்திய வசந்த நிகழ்வு 2003ன் போது எமது அதிபர்

மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கு திரு. திருமதி நவரட்ணராஜாவின் பிள்ளைகளுக்கும் முக்கியமாக அவரது மகன் கோணேசர் அவர்கள் பாடசாலைக்கு காணியை விற்பதற்கு முன்வந்து ஒத்துழைப்பு தந்தமைக்காக என்றென்றும் நன்றி கூறகடமைப்பட்டுள்ளேன். பாராளுமன்ற உறுப்பினர் உயர் திரு. மவைசேனாதிராஜா அவர்களது பெருமுயற்சியால் ரூபா 100,000/= தற்போது வெள்ளி விழாக்கட்டிட பூர்த்தி வேலைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. 10 வருட சேவையில் தோளோடு தோள் நின்று உழைத்த எனது பிரதி அதிபருக்கும், அத்துடன் என் ஆசிரியர் குழாத்துக்கும் எனது அன்பு கலந்த நன்றிகள். இதற்கு மேலாக ஓய்வு பெற்ற பின்னரும் தன் சேவையை என் வேண்டுகோளுக்கிணங்க நடாத்திவரும் திருமதி. பு. கதிர்காமநாதன் ஆசிரியைக்கு விசேடமாக என் நன்றியை கூறிக் கொள்கின்றேன். அத்துடன் கடந்த வருடம்வரை சேவையாற்றிய செல்வி ம. செல்லத்துரை அவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய சேவைக்காலப்பகுதியும் பாடசாலையும் சிறப்புற்று விளங்க உழைத்த என் ஆசிரியர் குழாத்துக்கும் என் அன்பு கனிந்த நன்றியை கூறிக்கொள்கின்றேன். மற்றும் ஏனைய கல்விசாரா ஊழியர்களுக்கும் எனது மனமுவந்த நன்றியை கூறிக்கொள்கின்றேன். மற்றும் இந்நிகழ்வுக்கு வருகைதந்த சகலருக்கும் எனது மனம்நிறைந்த நன்றியை தெரிவித்து விடைபெறுகின்றேன்.

கனடா பயணம்

இதே நேரத்தில் எனக்கு கனடா பயணம் செல்வதற்கு இறையருள் கிட்டியமை நான் செய்த பாக்கியம் என்தே கருதுகின்றேன். சொந்தவிடயமாக சென்ற எனக்கு மானிப்பாய் இந்துக்கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரியின் பழையமாணவர் சங்கம் மனமுவந்து வரவேற்று இருபாடசாலைகளின் வசந்தகால ஒன்றுகூடல் நிகழ்விற்கு விருந்தினராக என்னை அழைத்து எமது பாடசலையின் இன்றைய நிலை, தேவைகள் என்பவற்றை எடுத்துக்கூற வாய்ப்பளித்தமைக்கு உண்மையில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். அவர்கள் எனக்களித்த அன்பான மதிய விருந்தும் அவர்களால் எனக்களிக்கப்பட்ட பரிசும் இவ்வளவுதூரம் எமது பாடசாலையை மதித்துள்ளார்களே என்பதை நினைக்கும் போது மிக மகிழ்வாக இருக்கின்றது. நிர்வாக அங்கத்தவர்கள் மட்டுமல்ல இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்கள் மகளிர் கல்லூரியின் பழைய மாணவர்கள் எல்லோரும் ஒன்றிணைந்து நடாத்திய அந்த வசந்த கால நிகழ்விலே நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டி பரிசில்கள் எல்லாமே இருகல்லூரிகளும் ஒன்றிணைந்து செயற்படுத்தப்பட்டன அதனால் அதனுடைய சிறப்பு சொல்லற்கரியது காணி கொள்வனது செய்வதற்காக என்னுடன் இணைந்து செயல்பட்ட நிர்வாக குழுவின் தலைவர் திரு. கணேசலிங்கம் அவர்களும் திரு. இராஜாநாயகம், திருமதி முத்துவேற்பிள்ளை, திரு. ரகு, திருமதி மாலதி நகுலேஸ்வரன், திருமதி பேராயிரவர் திரு சிவாஞானம் விஜயகுமார் மற்றும் ஒவ்வொரு அங்கத்தவர்களும் முக்கியமாக எமது பழைய மாணவிகள்

திருமதி. தயாமதி கணேஸ், திருமதி ராகினி பகீரதன் மற்றும் எனது அன்புச் செல்வங்கள் என்மீது கொண்ட அன்பும், பற்றும் என்னால் என்றும் மறக்கமுடியாது அதுமட்டுமல்ல திருமதி. முத்துவேற்பிள்ளை, திருமதி. பேராயிவர் எமது முன்னாள் அதிபர்கள் திருமதி பு. சச்சிதான்தன், திருமதி A. இராஜரட்ணம் எனது பழைய ஆசிரியை திருமதி. நவரட்ணம், திரு. திருமதி. கந்தசாமி, திரு. திருமதி. ஜெயக்குமார் போன்றோர் கனடா பயணத்தில்

எனது தேவைகளுக்கு ஊக்கம் கொடுத்து அது நிறைவேற அருப்பாடுபட்டவர்கள் எமது கலாச்சாரத்தை பேணும் வகையிலேயே சங்கீதம், நடனம் போன்ற கலைகளை அந்நாட்டிலே வளர்ப்பதற்கு அருந்தொண்டாற்றி வருகின்ற திரு. திருமதி பாலசுப்பிரமணியம் மற்றும் பொன் சுந்தரலிங்கம் போன்றோர் பாராட்டப்படவேண்டியவர்கள் முற்றிலும் வேறுபட்ட கலாச்சாரமாக இருந்தாலும் எமது கலாச்சாரத்தை வளப்படுத்திகலைகளை வளர்த்து வருகின்ற சகலருக்கும் சிரம் தாழ்த்தி வணங்குகின்றேன் பாடசாலைக்கு நிதி உதவி அளித்த எமது பாடசாலை மாணவ செல்வங்களுக்கும் மனம் நிறைந்த நன்றிகள் தொடர்ந்தும் எமது கல்லூரியில் ஆங்கில ஆசிரியர்களை நியமித்து ஆங்கிலக் கல்வியை வளர்க்க அதற்கான பண உதவியை வழங்குவதாக வாக்களித்துள்ள கனடா பழைய மாணவர் சங்கத்துக்கு எனது மனமார்ந்த நன்றிகள். இவர்கள் அனைவருக்கும், மற்றும் எனையோருக்கும் தனிப்பட்ட முறையில் எனது நன்றியை கூற கடமைப்பட்டுள்ளேன்.

நன்றி

திருமதி விஜயராணி பசுபதிப்பிள்ளை
அதிபர்
மானிப்பாய் மகளிர் கல்லூரி
மானிப்பாய்

OUR PRINCIPAL & STAFF - 2003

Seated (Left to Right)
Mr. K.Pushpanathan, Mrs.C. Jeyaseelan, Mrs. V. Gunatheesan, Mr. R. Vasanthakumar, Mrs. V. Satkunaratnam, Mr. K. Kugeswararajah, Mrs. M. Thirugnanasampanthar, Mrs. V. Pasupathipillai (Principal), Mrs. V. Shanmugaratnam (Deputy Principal), Mr. V. Kalainesan, Mrs. G.Sivarajasuntharam, Mrs. T.Nagenthiran, Mrs. B. Vijayakanthan, Miss. C. Ganesparan, Mrs. S.Balasubramaniam, Mr. T.Subramaniam

Standing (Left to Right)
Mr. S. Senthilvel, Miss. L. Mahalingam, Mrs. C. Amirthalingam, Mrs. B. Uthayakumar, Mrs. G. Umasuthan, Mrs. S. Jeyanthikumar, Mrs. J. Mugunthan, Miss. P. Kathiravelu, Mrs. M. Kumaravelu, Mrs. R. Sivapalan, Mrs. R. Siriharan, Miss. S.Jeyaratnam, Mrs. M. Wicnarajah, Mr. V. Jeyakumar

Our Principal and Staff - 2003

Mrs.V.Pasupathipillai	– B.A. (Spl. Geo.), P.G.D.E(Merit), S.L.P.S.I
Mrs.V.Shanmugaratnam	– B.Sc, P.G.D.E, M.Ed, S.L.P.S.I
Mr.T.Subramaniam	– B.A., P.G.D.E
Mrs.M.Thirugnanasampanthar	– Spl.Trd. (H.Sc)
Mrs.G.Sivarajasundram	– Spl.Trd. (Science)
Mrs.V.Satkunaratnam	– Spl.Trd. (Commerce)
Mr.V.Kalaineshan	– B.Sc., P.G.D.E
Mr.K.Puspanathan	– B.Sc., P.G.D.E, M.Ed
Miss.C.Ganesparan	– Dip.in.Music
Mr.K.Kugeswararajah	– B.Com., P.G.D.E
Mrs.B.Vijayakanthan	– B.A., P.G.D.E , M.Phil
Mr.R.Vasanthakumar	– B.Com., P.G.D.E
Mrs.S.Balasubramanium	– Spl.Trd (Eng)
Mrs. S.Jeyanthikumar	– Spl.Trd. (Home Sc)
Mrs.G.Umasuthan	– B.A. (Hons), P.G.D.E
Mrs.C.Amirthalingam	– B.A, P.G.D.E
Mrs.T.Nagenthiran	– Spl.Trd. (Science)
Mrs.C.J.Jeyaseelan	– B.Sc. (Hons), P.G.D.E
Mrs.R.Srikaran	– Spl.Trd. (Maths)
Mrs.J.Mugunthan	– B.Sc., P.G.D.E
Mrs.R.Sivabalan	– B.A.
Mrs.V.Jeyakumar	– B.Sc., P.G.D.E
Mrs.V.Gunatheesan	– B.Sc., P.G.D.E
Miss.L.Mahalingam	– B.A.
Miss.P.Kathiravelu	– B.D. (Dance)
Mrs.M.Kumaravelu	– B.A. (English)
Miss.S.Jeyaratnam	– Spl. Trd. (Primary)
Mrs. M. Wicknarajah	- B.A, Spl. Trd. (Dance), P.G.D.E
Mr. S. Senthilvel	– Spl. Trd. (Art)
Mrs. B. Uthayakumar	– B.Com, P.G.D.E
Mrs.P.Kathigamanathan	– B.A.(Hons), P.G.D.E
Miss.V.Vasuki	
Miss.J.Kasthuri	
Miss. J. Jarshika	
Miss. K. Vijitha	
Miss. J. Roxshini	

Our School Minor Staff - 2003



Prize Giving Committee

Old Girls Committee Members

Library Exhibition Opended by Chief Engineer buildings Development Mr. S.Senthil

Library Exhibition 23-10-2003

Management Committee

Discipline Committee

Sports Committee

Computer Class

கல்லூரி பற்றிய எனது பார்வை

மானிப்பாய் மகளிர் கல்லூரி வலிகாமம் பிரதேசத்துக்கே மகிமையும் பெருமையும் ஈட்டும் வகையில் அகவை 40 ஐ அடைந்த இக்காலத்தில் துரித வளர்ச்சியைக் காட்டி நாடெங்கிலும் புகழ் பரப்பும் வகையில் தலை நிமிர்ந்து செயற்படும் ஒரு 1AB வகைக் கல்லூரியாக மிளிர்கின்றது. கல்லூரி முன்றலில் அழகுற வீற்றிருக்கும் முருகப் பெருமான் அருளால் இக்கல்லூரியில் கடந்த ஒரு தசாப்தகாலமாக பிரதி அதிபராக கடமையாற்ற கிடைத்த அரிய சந்தர்ப்பத்தையிட்டு பெருமகிழ்ச்சி அடைகிறேன். இச்சந்தர்ப்பத்தை எனக்கு வழங்க முழு ஒத்துழைப்பை வழங்கிய மதிப்பார்ந்த கல்லூரி அதிபர் திருமதி. வி. பசுபதிப்பிள்ளை அவர்கட்கும் அக்காலத்தில் மருதனாமடத்தில் எமது கல்வித்திணைக்களத்தின் பணிப்பாளரான திரு.அ.சிவானந்தம் அவர்களுக்கும் யாழ்ப்பாணத்தில் அவ்வேளையில் கல்விப்பணிப்பாளராக கடமையாற்றிய திரு இ. சுந்தரலிங்கம் அவர்களுக்கும், பிரதிக்கல்விப் பணிப்பாளரான அமரர் திரு. சு.ரட்ணராசா அவர்களுக்கும், மானிப்பாய் கொத்தணி அதிபராக விளங்கிய மானிப்பாய் இந்துக் கல்லூரியின் அதிபர் திரு. செ. கேசவராஜன் அவர்களுக்கும், எனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இக்கல்லூரியின் தனித்துவமான செயற்பாட்டுக்கும் கல்லூரியில் கட்டிக்காக்கப்படும் பாரம்பரியங்களுடன் கூடிய கல்விக்கும் அடிகோலியவர் எங்கள் முதல் அதிபர் செல்வி பத்மாசினி ஆறுமுகம் அவர்களே இவ்வதிபரின் திறமையும், நிமிர்ந்த நடையும், நேரிய பார்வையும், இவருக்குரிய சிறப்பான பண்புகளாக மிளிர்ந்தன. இதனால் அவர் யாழ்ப்பாணத்தில் பிரபல பாடசாலையாகவும் தற்போது தேசிய பாடசாலைகளில் ஒன்றாகவும் மிளிரும் யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலைக்கு அதிபராகச் சென்றார். தொடர்ந்து பதவியுயர்வுகளை பெற்று மன்னார் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ளார். இவ்வாறு ஓய்வு பெற்றதன் பின்னர் கூட எமது கல்லூரியின் வளர்ச்சியில் மிகுந்த அக்கறையுடையவராக

கல்லூரியின் பழைய மாணவர் சங்கக் கொழும்பு கிளையின் தலைவராக இருந்து செயற்படுகிறார். அவர் வேம்படி மகளிர் கல்லூரியில் அதிபராக இருந்த காலத்தில் அவரது வழிகாட்டலில் உருவாகிய ஒரு மாணவியாக எனது கல்வியை செவ்வனே கற்று, விஞ்ஞானமானிப் பட்டம் பெற்று, மன்னாரில் அவர் கல்விப் பணிப்பாளராக சேவையாற்றிய காலத்தில் ஆசிரியராக அங்கு ஐந்து வருடங்கள் சேவையாற்ற எனக்கு கிடைத்த அரிய சந்தர்ப்பத்தை நன்றியுடன் நினைவு கூர்ந்து பார்க்கிறேன்.

இவ்வதிபரைத் தொடந்து செயற்திறனும் ஆளுமையும் மிகுந்த அதிபர்கள் ஐவரைத் தொடர்ந்து 6.5.93 தொடக்கம் இன்றுவரை எமது கல்லூரியில் 10 வருடம் அதிபர் சேவையை ஆற்றி 08.12.03 இல் ஓய்வு பெற உள்ள அதிபர் திருமதி. வி. பசுபதிப்பிள்ளை அவர்களும் பாடசாலையின் நிர்வாகக் கடமைகளை செவ்வனே ஆற்றி கல்லூரியின் வளர்ச்சிக்கு அடிகோலியுள்ளார். மிகக்குறுகிய காலத்தில் இக்கல்லூரி கண்ட வளர்ச்சிக்கு இக்கல்லூரியில் அதிபர்களாக இருந்து சிறந்த சேவையாற்றிய அதிபர்களும், அவர்களோடு தோளோடு தோள் நின்று உழைத்த ஆசிரிய பெருந்தகைகளுமே போற்றிப் பாராட்டப்பட வேண்டியவர்களாவர்.

கடந்த ஒரு தசாப்தமாக அதிபராகக் கடமையாற்றிக் கொண்டிருக்கும் செயற்றிறன் மிக்க மதிப்பிற்குரிய அதிபர் திருமதி. வி.பசுபதிப்பிள்ளை அவர்கள் ஆளுமை, ஆற்றல், தற்துணிவு, எந்தப் பிரச்சினைகளையும் துணிந்து எதிர்கொள்ளும் மனப்பாங்கு, தலமைத்துவத்துக்கு உரித்தான திடீர்தீர்மானம் எடுக்கும் பண்பு பேன்ற பல்வேறு தன்மைகளையும் கொண்டவர். எப்போதும் செந்தழிப்பாகவும் சந்தோசமாகவும் இன்முகத்துடன் பழகுபவர்களை வசீகரப்படுத்தும் பண்பும் எடுத்த காரியம் எதிலும் வெற்றியீட்டும் அவரின் செயற்பாடும் பாடசாலையின் வினைத்திறனை அதிகரிக்கின்ற காரணிகளாக உள்ளன. இவரின் தற்துணிவும் தனது சிந்தனைக்கருத்தை எவ்விடர்வரினும் தளராது செயற்படுத்தும் திறனையும் உறுதிப்படுத்துவதாக, கடந்த 95ம் ஆண்டில் யாழ் குடாநாடு பூராகவும் இடம் பெயர்ந்த காலத்தில் கூட பாடசாலையை விட்டு விலகாமல் தனது பாடசாலையையும், உடைமைகளையும் மற்றும் தனது சொந்த வீட்டையும் விட்டு இடம் பெயராது இருந்தமை எடுத்துக்காட்டுகிறது. குறுகியகால ஆசிரியர் சேவையில் இருந்து பரீட்சை மூலம் அதிபர் தரத்தைப் பெற்று பிரதி அதிபராக வந்த எனக்கு இவர் பல்வேறு நிர்வாக விடயங்களையும், முகாமைத்துவ அலுவல்களையும், பாடசாலை முகாமைத்துவத்தில் உள்ள பல விடயங்களையும் ஒரு அதிபராகவும், ஆலோசகராகவும், தாய் போன்றும் செயற்பட்டு வழிப்படுத்தினார். அத்துடன் அவரின் வழிகாட்டலில் உருவாகிய என்னை தொடர்ந்து இப்பாடசாலையின் அதிபராக நியமிப்பதற்கான தனது சிபாரிசினையும், கல்வி அதிகாரிகளுக்கு வழங்கியுள்ளார். அவரின் சேவைக்காலத்தில் ஆசிரியரின் வாண்மை விருத்தியில் பெரிதும் அக்கறை கொண்ட எம் அதிபரின் ஊக்குவிப்புக் காரணமாக பல ஆசிரியர்கள் டிப்ளோமா பட்டத்தைப் பெற்றுள்ளனர். 2001ல் முதல் முறையாக யாழ். பல்கலைக்கழகத்தில் உருவாக்கப்பட்ட கல்வி முதுமானி கற்கை நெறிக்கு நான் தெரிவு செய்யப்பட்டு கல்வி முதுமானி பட்டத்தைப் பெற்றதையும் 2002ல் எமது சிரேஷ்ட ஆசிரியர் திரு. க. புஸ்பநாதன் கல்வி முதுமானி பட்டத்தை பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. அதிபர் கடந்த மூன்று மாத 2-7-03 – 26-09-03 காலத்தில் வெளிநாடு சென்றமையால் பதில் அதிபராக செயற்படும் வாய்ப்பையும் வழங்கியிருந்தார். இக்காலத்தில் பல்வேறு செயற்பாடுகளின் மூலம் நிறைந்த அனுபவங்களைப்பெற்று சிறப்பாகக் கொண்டு நடத்த முடிந்தமையை இட்டு நான்

மிகவும் மகிழ்ச்சியடைந்ததுடன் அதிபரின் ஓய்வுக்காலத்தைத் தொடர்ந்து இக்கல்லூரியின் அதிபராக இருந்து இக்கல்லூரி செயற்பாட்டை சிறப்பாக நிர்வகிக்க முடியும் என்ற தன்னம்பிக்கையையும் தளராத துணிவையும் என்னுள் வளர்க்க சந்தர்ப்பம் கிடைத்தது. இக்காலத்தில் பாடசாலை ஓகஸ்ட் விடுமுறையில் 56 மாணவர்களையும், 9 ஆசிரியர்களையும் இணைத்து கண்டி, நுவரேலியா, மன்னார், அனுராதபுரம், திருகோணமலை ஆகிய இடங்களுக்குச் சென்று 6 நாள் கல்விச் சுற்றுலா ஒன்றையும் நிகழ்த்த முடிந்தமை எனக்கு கிடைத்த அரிய சந்தர்ப்பமாக அமைந்தது. இச்சந்தர்ப்பத்தில் அதிபரின் விருப்பின் பேரில் பாடசாலையின் வளர்ச்சி பற்றிய வரலாறு பதிக்கப்பட்டு மாணவர் ஆக்கத்துக்கு உற்சாகமும் சந்தர்ப்பமும் வழங்கும் நோக்கில் இளநங்கை இரண்டு மலரை வெளியிட முனைந்தேன். எமது பாடசாலையில் மலர்க்குழு ஒன்றை அமைத்து வெளியிட எடுத்த முயற்சி வெற்றியளித்தமையை இட்டு பிரதிஅதிபராகிய நான் மிகுந்த பேருவகையும், தன்னிறைவும் அடைகின்றேன். அத்துடன் இம்மலரினை வெளியிட ஒத்துழைத்த ஆசிரியர்கள், மாணவர்கள், ஆக்கங்கள் யாவற்றையும் தந்துதவிய கல்விமான்கள் பெரியோர்கள் மலரை அச்சிட ஊக்கமளித்த வர்த்தக பெருமக்களுக்கும், பணத்தை வாரிவழங்கிய பெற்றாருக்கும், பணம் சேகரிப்பில் ஈடுபட்ட பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர்கள் அனைவருக்கும் எமது கல்லூரியின் சார்பில் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கல்வி நிர்வாகம்

எமது கல்லூரியின் வளர்ச்சிக்கு உறுதுணையாகவும் வழிகாட்டிகளாகவும், பக்கபலமாகவும் இருந்து செயற்பட்டதுடன் கல்லூரியின் நிறைகுறைகளை எடுத்துக்கூறி வழிகாட்டிய கல்வி நிர்வாக உறுப்பினர்களையும், கல்வி நிர்வாக அமைப்புக்களையும், நாம் மறந்துவிட முடியாது.

1993ல் கொத்தணி அதிபராக இருந்த முன்னாள் மானிப்பாய் இந்துக்கல்லூரியின் அதிபர் திரு. செ. கேசவராஜன் தன்னால் இயன்ற உதவிகளையும், வழிகாட்டல்களையும் கல்லூரிக்கு வழங்கியதுடன் கல்லூரிகளின் சகல நிகழ்வுகளிலும் கலந்து சிறப்பித்து வந்தமை குறிப்பிடத்தக்கது. சண்டிலிப்பாய் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிய திரு துரைசிங்கம் அவர்களின் காலத்தில் அவர் பாடசாலைக்கு வழங்கிய ஊக்கத்திற்கும், உதவிகளுக்கும் பாடசாலை சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். சண்டிலிப்பாய் கோட்டத்தில் கோட்டக்கல்வி பணிப்பாளராக கடமையாற்றியவரும், தற்போது வலயக் கல்விப் பணிப்பாளராக வலிகாகம் வலயத்தை அலங்கரித்து நிற்பவருமான திருமதி றெஜீனா இருதயநாதன் அவர்கள் அன்றுமுதல் இன்றுவரை எமது கல்லூரியின் வளர்ச்சிக்கு தொடர்ந்து பல உதவிகளையும் ஒத்தாசைகளையும் வழங்கி வருகின்றமையை மறக்க முடியாது. கல்விப்பணிப்பாளர் என்ற பதவிக்கும், உரிமைக்கும் மேலாக தனது உற்ற நண்பி அதிபராக இருக்கின்ற காரணத்தினால் மனம் கோணாது நன்மை தீமைகளையும், குறை நிறைகளையும் எடுத்துக் காட்டுகின்ற சிறந்த நட்பு நிலை பணிப்பாளரிடமும், அதிபரிடமும் உள்ளதை நாமும் என்றும் மறக்க முடியாது. மேலும் யாழ் மாவட்டத்தில் இரண்டு வலயங்களின் கீழ் கல்வி நிர்வாகம் நிர்வகிக்கப்பட்ட காலங்களில் வலயம் II இன் பணிப்பாளராக கடமையாற்றிய திரு. சி. சிவராஜா அவர்களையும், அதனைத் தொடர்ந்து கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி இறைபதம் அடைந்த அமரர் திரு

சு. ராட்ணராஜா அவர்களும் பாடசாலைக்கு வழங்கிய ஒத்துழைப்புக்களையும் உதவிகளையும் வழிகாட்டல்களையும் மறந்துவிட முடியாது. இதனைத் தொடர்ந்து கல்வி நிர்வாகம் 5 வலயங்களாக மாற்றப்பட்டு வலிகாமம் வலயத்தின் கல்விப் பணிப்பாளராகவும், தற்போது வடக்கு கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளராகவும் விளங்கும் திரு. வீ. இராசையா அவர்களினது சேவையும், கல்லூரி வளர்ச்சியில் பெரும் பங்காற்றியுள்ளது. இக்காலத்தில் எமது சண்டிலிப்பாய் கோட்டத்துக்குரிய கோட்டப் பணிப்பாளராக சிலகாலம் கடமையாற்றி தற்போது சங்கானைக் கல்விக் கோட்டக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றும் திரு. செல்லையா அவர்களதும், சேவை ஒத்துழைப்புக்கும் ஊக்குவிப்புக்கும் எமது பாடசாலை நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளது. தற்போது சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளராக விளங்கும் திரு. க.தனபாலசிங்கம் அவர்கள் பாடசாலைக்கு வழங்கிவரும் ஆக்கபூர்வமான, பங்களிப்பு, ஊக்குவிப்பு என்பவையும் கல்லூரி வளர்ச்சிக்கு மெருகூட்டுகின்றது. இவ்வகையில் கல்வி நிர்வாகிகளும், மேற்பார்வையாளர்களும் வழங்கிவரும் சேவையும், உதவியும் பாடசாலையின் வளர்ச்சிக்கு பக்கபலமாக துலங்குவதுடன், பாடசாலை வளர்ச்சியடைந்து தன்புகழ் பரப்ப ஒரு உந்துசக்தியாகின்றன. இவர்கள் அனைவரினதும் சேவையை நன்றியுடன் பாராட்டி நிற்கின்றேன்.

மேலும் எமது பாடசாலை 63ம் ஆண்டில் இருந்து 76ம் ஆண்டுவரை தரம் 1 தொடக்கம் 13 வரை பெண்களைக் கொண்ட ஒரு 1AB பாடசாலையாக இருந்தது. 76ம் ஆண்டில் அயலில் உள்ள ஆரம்ப பாடசாலைகளின் வளர்ச்சியை பெரிய கல்லூரி தடுப்பதாக கருதி அக்காலத்தில் இருந்த கல்வி நிர்வாகிகளின் சிபாரிசின் படி 76ம் ஆண்டில் இருந்து ஆரம்பப் பிரிவுகளில் மாணவர்களை சேர்ப்பதை நிறுத்தி படிப்படியாக 1 – 5 வரையான வகுப்புக்கள் நீக்கப்பட்டன. இதன் காரணமாக 6 – 13 வகுப்புக்கள் கொண்ட கல்லூரியாக மாற்றமடைந்தது. எனினும் அயலில் உள்ள ஆரம்ப பாடசாலை மாணவர்கள் நகர்ப்புற மோகத்தினால், 5ம் தர புலமைப்பரீட்சையில் சிறந்த புள்ளிகள் பெறும் அயல் பாடசாலைகளின் மாணவர்கள் யாழ் பிரதேச பாடசாலைக்கு செல்ல, குறைந்த புள்ளிகளைப் பெறும் மாணவர்களே எமது கல்லூரியில் 6ம் தரத்தில் அனுமதி பெற்று வந்தார்கள் இவ்வாறு மீத்திறன் உடைய மாணவர்கள் அற்ற நிலையில் ஏனைய சராசரி மாணவர்களும் மீத்திறன் குறைந்த மாணவர்களும் சேர்க்கப்பட்டு எம் ஆசிரியர்களின் அயராத உழைப்பினால் எமது மாணவர்கள் கல்வி அடைவுகளிலும் பெறுபேறுகளிலும் சகல செயற்பாடுகளிலும் சண்டிலிப்பாய் கோட்டத்தில் சிறந்து விளங்குகின்றனர். மேலும் எமது மாணவர்களின் அனுமதி நிலை மாறி நகர்ப்புறமோகம் தவிர்க்கப்பட்டால் எம் கல்லூரியின் வெளியீடுகள் நிட்சயமாக மேலும் அதிகளவிலேயே இருக்கும், என்பதனை இங்குள்ள பெற்றோர்கட்கு வலியுறுத்த விரும்புகின்றேன்.

எனவே இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்து, மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் ஒரு உதவேகத்தை உருவாக்கும் நோக்கில் மானிப்பாய் இந்துக் கல்லூரியும், மானி மகளிர் கல்லூரியும் ஒன்றிணைப்புச் செய்ய எமது கல்லூரி அதிபரும் சகோதரப் பாடசாலை அதிபர் திரு. கு. சண்முகநாதனும் பெற்றோரும் இணைந்து 2000ம் ஆண்டில் செயற்பட முனைந்த சமயம் வடக்கு கிழக்கு மேலதிக கல்விப் பணிப்பாளராக இருந்த திரு. அ. சிவானந்தம் அவர்களின் அனுசரணையாலும் அந்நாள் கல்விச் செயலாளர் திரு. பரமேஸ்வரன், திரு டிவகலாலா அவர்களின் அயராத முயற்சியாலும் மீண்டும் எமது கல்லூரியில் 2002ம் ஆண்டில் இருந்து

ஆரம்பப் பிரிவு தரம் 1 ஆரம்பிக்கப்பட அனுமதி வழங்கப்பட்டுத் தற்போது தரம் 1, தரம் 2 வகுப்புக்களைக் கொண்டதாக கல்லூரியின் ஆரம்பப் பிரிவு உள்ளது. இது அதிபரும், ஆசிரியர்களும் மானிப்பாய் சமூகமுமே மகிழ்ச்சியுடன் வரவேற்கும் ஒரு நிலைப்பாட்டை உருவாக்கியுள்ளது. இவ்வாரம்பப் பிரிவு மாணவர்களுக்கு தற்கால கல்வி முறைக்கு ஏற்ப செயற்பாட்டு அறை, விளையாட்டு முற்றம் கூடிய இடவசதி உள்ள தனித்தனி வகுப்பறைகள் இல்லாமை அம் மாணவர்களுக்கும் பாடசாலை வளர்ச்சிக்கும் ஒரு தடைக்கல்லாக விளங்குகிறது. இவ்வாரம்பப் பிரிவை ஒழுங்காக வழிநடத்த ஆசிரியர் இல்லாத குறையை 2001 ம் ஆண்டு ஜனவரியில் இருந்து யூன் வரை சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் ஆரம்பக் கல்வி ஆசிரியராக கடமையாற்றி ஓய்வு பெற்ற திருமதி. மைக்கல் அவர்கள் சேவையாற்றி எதுவித கொடுப்பனவும் இன்றி தனது சேவையை அர்ப்பணித்து தரம் 1இல் 33 பிள்ளைகளை ஒழுங்காக வழிநடத்தி வந்தார். இக்காலத்தில் எமது கல்லூரியின் ஆசிரியர் தேவையை உணர்ந்து வலிகாமம் கல்விப்பணிப்பாளரான திரு. வீ. இராசையா அவர்கள் எமது பாடசாலை பழைய மாணவியும், சிறந்த ஆரம்பக் கல்வி ஆசிரியருமான செல்வி. ஜெ. ஸ்ரீதேவி அவர்களின் விருப்பிற்கு இணங்க எமது கல்லூரிக்கு நவாலி மகாவித்தியாலயத்தில் இருந்து இடமாற்றம் செய்து உதவினார். குறிப்பிட்ட ஆசிரியரின் வழிநடத்தலிலேயே ஆண்டு 1, ஆண்டு 2 வகுப்புக்கள் இவ்வருடம் இயங்கி வருகின்றன. மேலும் தற்போதைய புதிய கல்வி சீர்திருத்தத்தில் முதல் நிலை ஒன்றுக்கு உரிய அறிவுறுத்தலின் படி தரம் 1, தரம் 2 வகுப்புக்கள் ஒரே ஆசிரியரால் கற்பிக்கப்படல் வேண்டும். ஆனால் ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக குறிப்பிட்ட ஆசிரியரே இரு வருடங்களிலும் தரம்1ஐ சிறப்பாக வழிநடத்திச் செல்கின்றார். இவ்வருடம் மேலும் எமது பிரதேசத்தில் அமைந்துள்ள தேசிய கல்வியியற் கல்லூரியில் இருந்து பயிற்சிக்காக வருகைதந்த 3 ஆசிரியர்களில் செல்வி பிரபாலினி தர்மலிங்கம் என்ற ஆசிரியை தரம் 2 வகுப்பில் தனது பயிற்சிக்காலத்தில் முழுப்பொறுப்பையும் ஏற்று தரம் 2 வகுப்பை செவ்வனே நடத்தி வருகின்றார். அவர் தனது பயிற்சிக் காலத்தில் தரம் 3, 4, 5ல் செய்ய வேண்டிய பயிற்சியை மாற்றியமைத்து தரம் 2ல் மட்டும் பயிற்சியைப் பெற சம்மதித்தும் கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி திரு T. கமலநாதன் அவர்களின் அனுமதியோடு இதனை நிகழ்த்தி வருகிறார். இந்த வகையில் உற்ற நேரத்தில் அவர் செய்த உதவி எமது பாடசாலையினால் மறக்க முடியாத ஒன்று. அவரின் இச்சேவைக்கு நன்றி கூறுவதுடன் எமது கல்லூரியின் ஆரம்பப் பிரிவு செவ்வனே நடைபெற தற்காலிகமாக ஏற்படும் ஆசிரியர் பற்றாக்குறையை வருடா வருடம் கருணை கூர்ந்து நிவர்த்தி செய்து உதவுமாறு தயவாக வேண்டிக் கொள்கிறேன். மேலும் எமது வலயக் கல்விப் பணிப்பாளர் அடுத்து வரும் வருடங்களுக்கு ஆரம்பக் கல்வி ஆசிரியரை தந்துதவுவதாக உறுதியளித்ததை இட்டு மகிழ்ச்சியுடன் பாராட்டுகிறேன். எமது ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான ஆசிரிய தேவை உட்பட பல்வேறு தேவைகள் இதுவரை பூர்த்தி செய்ய முடியாத நிலையில் கல்வித்திணைக்களம், பணம் படைத்த மானிப்பாய் பிரதேச மக்கள் பழைய மாணவர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களினது உதவிகள் எமக்கு தேவையாக உள்ளது. இத்தேவைகள் யாவும் நிறைவு செய்யப்படும் ஆயின் எமது கல்லூரியின் ஆரம்பப் பிரிவு மாணவர்கள் மிகுந்த வினைத்திறன் மிக்க மாணவர்களாக உருவாகுவார்கள் என்பதில் திடமான நம்பிக்கையாய் உள்ளேன்.

கடந்த 10 வருடங்களில் மாணவர் ஆளனியினரின் வளர்ச்சி

கடந்த தசாப்தத்தில் படிப்படியாக கல்லூரி ஆளணியினர் வளர்ச்சியடைந்து ஒவ்வொரு தரத்திலும் 4 பிரிவுகளாக பாடசாலை இயங்கி வந்த சமயத்தில் துரதிஸ்டவசமாக 95ம் ஆண்டில் நாட்டில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலை காரணமாக மக்கள் இடம்பெயர்வும் அதன் காரணமாக எம்மக்கள் நாட்டை விட்டும் யாழ் குடாநாட்டை விட்டும் புலம் பெயர்ந்ததும் காரணமாக பாடசாலையின் ஆளணியினர் தொகை 96ல் மிகவும் வீழ்ச்சியடைந்துள்ளது. இது பாடசாலையின் தொடர் வளர்ச்சிக்கு இடையூறாகியது மீண்டும் 96ல் மக்கள் சிறிது சிறிதாக யாழ்ப்பாணத்தில் மீளக்குடியேறி அவர்களின் வரவு நாளுக்கு நாள் அதிகரித்து தற்போதைய நிலையில் பல வகுப்புக்கள் இரண்டு பிரிவுகளும் ஒருசில வகுப்புக்கள் மூன்று பிரிவுகளுமாக இயங்குவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

ஓய்வு பெற்றவர் விபரம்

22 வருடங்களாக எமது கல்லூரியின் தாவரவியல் ஆசிரியரும் எனது குருவுமான திரு. எ. சிவவீரசிங்கம் ஆசிரியர் மிகவும் கண்டிப்பாகவும், திறமையாகவும் சிறந்த பெறுபேறுகளை மாணவர் பெறும் வகையிலும் தாவரவியல் பாடத்தினை கற்பித்த ஆசிரியராவார். 95 நவம்பரில் இவர் ஓய்வு பெற்றார் அந்நேரத்தில் எமது பாடசாலை அதிபர் யாழ் குடாநாட்டில் இருக்க நாம் தாயை இழந்த பிள்ளைகள் போன்று இடம்பெயர்ந்து மட்டுவில், சாவகச்சேரி, பருத்தித்துறை, என பல்வேறு பட்ட இடங்களிலும் சிதறி பிரிந்திருந்த வேளையில் பிரதியதிபராக இருந்து எனது குருவாக விளங்கிய இவ்வாசிரியரின் ஓய்விற்கு தேவையான சகல செயற்பாடுகளையும் என்னால் நன்றியுணர்வுடன் வழங்க முடிந்தமை எனக்கு மனநிறைவை ஏற்படுத்தியது.

எமது ஆங்கில ஆசிரியரான திரு. W. விஜயரத்தினம் 1996ல் ஓய்வு பெற்றார் இவர் எமது கல்லூரியில் ஆங்கில ஆசிரியராக சேர்ந்த காலப்பகுதியில் ஆங்கிலத்துறை வளர்ச்சியடையத் தொடங்கியது. இவர் சிறந்த ஒரு ஆங்கில ஆசிரியராக விளங்கினார். இவரின் ஓய்வு எமக்கு பெரும் இழப்பாகியது. இவரின் சேவையும் ஓய்வுக் காலமும் சிறக்க இறைவனை வேண்டுகிறேன்.

1998ம் ஆண்டு எமது பாடசாலையில் 35 வருடங்களாக தமிழ் ஆசிரியராக இருந்து வழிநடத்திய சிரேஷ்ட ஆசிரியரும் பகுதித்தலைவருமான பண்டிதர் திருமதி. எம். செல்வரட்ணம் அவர்கள் ஓய்வு பெற்றார். இவர் தனது சேவைக்காலம் முழுமையாக எமது கல்லூரிக்கு வழங்கியுள்ளதுடன் எமது கல்லூரியின் பழைய மாணவியும் என்பதை மிகவும் பெரு மகிழ்வுடன் கூறிக் கொள்ள விரும்புகிறேன். இவரது சேவைக்காலத்தில் தமிழ்த்துறையில் பல்வேறுபட்ட நிகழ்விலும் பங்காற்றி மாணவர்களுக்கு வழிகாட்டி சிறந்தமுறையில் கல்லூரியின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டார். இடம்பெயர்வின் போதும் இவர் பாடசாலையின் பொறுப்பை என்னுடன் இணைந்து சிறந்த முறையில் ஆற்றுவதற்கு தன்னால் ஆன முழு ஒத்துழைப்பையும், வழங்கிவந்தமையை நாம் மறக்க முடியாது. இவரிற்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். இவர் முகாமைத்துவத்தில் என்ன பிரச்சினைகள் ஏற்படினும் அதனை மிக இலகுவாக இப்பஎன்ன பிரச்சனை no problem என்ற அவரின் தாரக மந்திரத்தை அடிக்கடி

உச்சரித்து பிரச்சினைகளுக்கு இலகுவான தீர்வையும் வழங்கும் செயற்றிறன் மிக்கவர் என்பதையும் குறிப்பிடலாம்.

அதே காலத்திலேயே எமது தமிழ் ஆசிரியர் திருமதி பு. கதிர்காமநாதன் 50ம் வயதினிலேயே தனது சொந்த விருப்பின் பேரில் கணவரின் நோய் காரணமாக ஓய்வு பெற்றார். இவர்களின் ஓய்வு எமது கல்லூரியின் தமிழ் துறைக்கு பெரியதொரு இழப்பாகியது. எனினும் தொடர்ந்து 1998ல் திரு. சோ. கதிர்காமநாதன் அவர்கள் இறைபதம் எய்தினார் இவ் ஆசிரியர் 1998ம் ஆண்டிலிருந்து மீண்டும் எமது கல்லூரியில் சேவையை வழங்க முன்வந்தமையை நன்றியுணர்வுடன் பாராட்டுகிறேன். அவர் சேவைக்காலத்தில் ஆற்றிய சகல பணிகளையும், தொடர்ந்தும் ஆற்றவேண்டும் என்றும் எமது கல்லூரியின் தமிழ் துறையின் வளர்ச்சிக்கும் கல்லூரியின் உயர்தரவகுப்பின் தமிழ் கற்பிக்க ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்தும் போதனாசிரியராக எதுவித வேதனமுமின்றி தனது சேவையை அர்ப்பணித்தும் வருகிறார். இவரின் சேவையை எமது கல்லூரிச் சமூகம் என்றென்றும் மறக்க மாட்டாது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். தொடர்ந்தும் அவர் எமக்கு தமது சேவையை வழங்க முன்வர வேண்டும் என்று எல்லாம் வல்ல முருகப் பெருமானின் ஆசியோடு அவர் நீடுழி காலம் வாழவும் வேண்டி மனப்பூர்வமாக வாழ்த்துகிறேன்.

அதனைத் தொடர்ந்து எமது கல்லூரியில் 12 வருடங்களாக விஞ்ஞானத்துறைக்கு தலைவராகவும் விலங்கியல் பாடத்தினை சிறப்பாக கற்பித்தும் சேவையாற்றியதுடன் பாடசாலை நேரசூசிகையை கிரமமாக தயாரித்து முகாமைத்துவத்துக்கு உதவிவந்த அமரர் திருமதி. ம. செல்வராஜா அவர்களையும் இவ்விடத்தில் நினைவு கூர்கிறேன் இவர் எமது பாடசாலையின் இடப்பெயர்வு காலத்தில் வவுனியா மகாவித்தியாலயத்தில் கடமையாற்றிய நேரம் நோய்வாய்ப்பட்டு இறைபதம் எய்தினார். அவரின் ஆத்மா சாந்தியடையவும் அவர்களின் குடும்பம் சிறக்கவும் வாழ்த்துகிறேன்.

திருமதி விநாயகமூர்த்தி ஆசிரியர் மிகவும் அமைதியான சுபாவம் உடையவர். 14 வருடங்களாக விஞ்ஞான ஆசிரியராக இருந்து எமது பாடசாலையில் விஞ்ஞானத்தை கற்பித்து 96ம் ஆண்டில் ஓய்வு பெற்றார். இவர் நீடுழிகாலம் சுகதேகியாக வாழ மனதார இறைவனை வேண்டிக் கொள்கிறேன்.

செல்வி. தி. இராஜரட்ணம் ஆசிரியை எமது பாடசாலையில் 7 வருடங்களாக தமிழ் ஆசிரியராகவும், தமிழ்த்துறைக்கு பொறுப்பாசிரியராகவும் இருந்து செயற்பட்டு எமது கல்லூரியில் சேவையாற்றி 96ல் ஓய்வு பெற்றார். அவரது காலத்தில் முத்தமிழ் விழா மிகவும் விமரிசையாக வருடா வருடம் நிகழ்த்தப்பட்டது. இவரது அயராத உழைப்பிற்கும் சேவைக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்கள்.

திரு. க. இராமானந்தசிவம் எமது மூத்த வணிகத்துறை ஆசிரியராக 7 வருடங்கள் வர்த்தக பாடத்தையும், உயர்தர வகுப்பிற்குரிய ஆங்கில பாடத்தையும் கற்பித்து சிறந்த சேவையை ஆற்றியமைக்காக கல்லூரி சார்பில் எனது வாழ்த்துக்களை தெரிவித்து சுகமாக நீடுழிகாலம் வாழ வாழ்த்துகிறேன்.

1999ம் ஆண்டில் விஞ்ஞான ஆசிரியராக 20 வருடங்கள் கடமையாற்றிய திருமதி எம். ரி. ஞானப்பிரகாசம் ஓய்வு பெற்றார். இவர் விஞ்ஞான ஆசிரியராகவும் அதேநேரத்தில் பாடசாலையின் உடற்பயிற்சி ஆசிரியர் இல்லாத குறையை நிவர்த்தி செய்ய Prefect of Games ஆகவும் இருந்து தனது சேவையை இரு துறைகளிலும் சிறப்பாக ஆற்றி வந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இவர் ஒரு கத்தோலிக்க ஆசிரியராக இருந்தமையால் எமது கல்லூரியின் கிறிஸ்தவ மாணவர்களுக்கு பொறுப்பாக இருந்து கிறிஸ்தவ மாணவர் செயற்பாட்டிற்கும் தலமை வகித்தார். மேலும் கல்லூரியின் ஒளிவிழா நிகழ்வுகளை வருடா வருடம் மிகவும் சிறப்பாக நடத்தி வந்தார். இவரின் ஓய்வும் கல்லூரிக்கு பெரும் இழப்பாகியது இவரது ஓய்வின் பின்னும் பகுதிநேர ஆங்கில ஆசிரியராக பணியாற்றினார். அந்நேரத்திலும் எமது விளையாட்டுத்துறைக்கு தலைவியாக இருந்து தனது சேவையை மனப்பூர்வமாக நல்கினார். 2001ம் ஆண்டில் அவரது துணைவனாரின் இறப்பு அவரை மனவேதனைக்குள்ளாக்கியதுடன் அவரது சேவையை தொடர்ந்து கல்லூரி இழந்தது. அவர் சுகதேகியாக நீடுழிகாலம் வாழ்ந்து தன் குழந்தைதகளின் சிறப்பைக் கண்டு களிக்க ஆண்டவன் அருள்பாலிக்க வேண்டுகின்றேன்.

2002ம் ஆண்டு எமது இசைத்துறைக்கு பொறுப்பாகவும், இந்துமா மன்றத்தின் தலைவராகவும், இருந்து சமய விழாக்கள் கோயில் நிகழ்வுகள் யாவற்றையும் சிறப்பாக நடாத்தி வழிகாட்டிய திருமதி. த. சுந்தரலிங்கம் ஆசிரியை ஓய்வு பெற்றார். அவர் எமது கல்லூரியில் நீண்டகாலம் சேவையாற்றி கல்லூரியின் இசைத்துறைக்கு அவர் ஈட்டித்தந்த பெருமையும் சாதனைகளும் பற்பல. அவரின் ஓய்வும் இசைத்துறைக்கு மிகப் பெரும் இழப்பாகும். எனினும் தொடர்ந்து அவர் செய்த சேவையின் பிரதிபலிப்பாக எமது கல்லூரியின் தனது மாணவியாகிய செல்வி சந்திரிக்கா கணேஸ்பரனை இசை ஆசிரியராக மிளிர வைத்து அவரின் வெற்றிடத்தை நிரப்பி வருகின்றார் என்றால் மிகையாகாது. இவ்வாசிரியரின் சேவைக்காலத்தில் 01.05.1998 ஆம் ஆண்டில் எமது பாடசாலை முன்றலில் அமைந்த முருகப்பெருமானுக்கு கும்பாபிஷேகம் செய்து கல்லூரியை சிறப்பித்தமையும் நினைவு கூர முடிகிறது. இவரது குடும்ப வாழ்வில் துரதிஸ்டவசமாக ஏற்பட்ட இவரது துணைவர் திரு. சுந்தரலிங்கம் (விஞ்ஞானக் கல்விப்பணிப்பாளர்) பரீட்சை நிலையத்தில் பிரதம பரீட்சகராக கடமையாற்றிய நேரத்தில் 1997ல் இறைபதம் அடைந்தார். இவ்விழப்பை நினைத்து வருந்தி மீளமுன் இவரது ஏகபுத்திரியான செல்வி தனுஜா சுந்தரலிங்கம் இறைபதம் அடைந்தார். இவர் எமது கல்லூரியில் சிறந்த வர்த்தகத்துறை மாணவியாக விளங்கினார். 2002ம் ஆண்டு யூன் மாதம் திடீரென இறந்த செய்தி மானிப்பாய் மகளிர் சமூகத்தை அதிர்ச்சியிலும், வேதனையிலும் ஆழ்த்தியது. இவரது ஆத்மா சாந்தியடைய நாம் இறைவனை பிரார்த்திக்கின்றோம். இவரது துன்பகர நிகழ்ச்சியிலிருந்து இவ்வாசிரியர் மீளவும், தனது தந்தையாரின் நினைவினை நிறைவேற்ற ரஷ்யாவில் மருத்துவக்கல்வியைக் கற்கும் மகன் றமணன் கல்வியை முடித்து சிறந்த மருத்துவராகி அவருடன் இணைந்து நீடுழிகாலம் சுகமாகவும், சந்தோசமாகவும் வாழ இறைவனை இறைஞ்சி நிற்கின்றேன்.

தொடர்ந்து எமது வர்த்தகத்துறையில் உயர்தர வகுப்பிற்கு பொருளியல் பாடத்தை செவ்வனே கற்பித்தும் பாடசாலையின் பகுதித்தலைவராக இருந்து முகாமைத்துவத்துக்கும், விளையாட்டுத்துறைக்கும் தனது கடமையை ஆற்றி வந்த சிரேஷ்ட ஆசிரியர் திருவாளர் த. சுப்பிரமணியம் அவர்கள் 4.9.2003 ல் ஓய்வு பெற்றார். அவரின் ஓய்வும் எமது கல்லூரிக்கு மாபெரும் இழப்பாகும். எனினும் அவரின் ஓய்வு கால வெற்றிடத்தை நிரப்புவதற்கு எமது கல்லூரியில் அவரது மாணவியாக வர்த்தகத்துறையில் கல்வி பயின்று, வணிகவியல் பட்டதாரி ஆசிரியராகி யா/ சிந்மய பாரதியில் சேவையாற்றிக் கொண்டு இருந்த ஆசிரியை திருமதி. பவானி உதயகுமார் அவர்கள் இவ்வருடம் யூன் மாதம் எமது கல்லூரியில் ஆசிரியராக இணைந்தார் அவரை வருக வருக என வரவேற்கின்றேன்.

பதவியுயர்வு பெறுபவர்கள்

எமது கல்லூரியில் விஞ்ஞான துறையில் உயர்தர வகுப்பிற்கு பௌதீகவியலும், தூய கணிதமும் கற்பித்த திரு. ஆ. இளங்கோ ஆசிரியர் 1999ல் பதவி உயர்வு பெற்று கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் விரிவுரையாளராக பணியாற்றி வருகிறார். அவர் மேலும் பல பதவியுயர்வு பெற்றும் தான் சென்ற இடமெல்லாம் சிறக்கவும், சிறந்த சேவையாற்றவும் வாழ்த்துகின்றேன். அவர் விஞ்ஞான ஆசிரியராக கடமையாற்றிய காலத்தில் எமது கல்லூரியின் விஞ்ஞான மன்றத்தை ஸ்தாபித்து அதன் தலைவராக இருந்து சங்கேதம் என்ற சஞ்சிகையை மிகவும் சிறப்பாக 1994ம் ஆண்டில் வெளியிட்டு வைத்த பெருமை அவரையே சாரும். தொடர்ந்து அவரது முயற்சியால் 99வரை 3 மலர் வெளியிட்டு வைத்தார். 99ல் எமது கல்லூரியிலிருந்து பதவியுயர்வு பெற்று விலகியதால் விஞ்ஞான மன்னறத்தின் பொறுப்பாசிரியர்களாக திரு.வி.கலைநேசன், திருமதி. வே. சண்முகரட்ணம், பொறுப்பேற்றுக் கொண்டனர். 2001ம் ஆண்டில் அவர்களின் பொறுப்பில் சங்கேதம் 4 வெளிவந்தது. தொடர்ந்தும் திரு.வி கலைநேசனும், திரு. புஸ்பநாதனும் மன்றத்தின் பொறுப்பாசிரியராக இருந்து வருகின்றனர். இவர்கள் 2004ல் அடுத்த இதழை வெளியிட உள்ளனர் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறேன்.

எமது கல்லூரி நிகழ்வுகள்

வருடா வருடம் எமது கல்லூரியில் நிகழும் பரிசளிப்பு விழா, விளையாட்டுப் போட்டி, தமிழ்த்தின விழா, நவராத்திரி விழா, ஒளிவிழா, சஞ்சிகைகளான சங்கேதம், வணிகச் சோலை, வெளியீட்டு விழாக்கள் என்பன மிகவும் விமரிசையாக நடைபெறுகின்றன. இவற்றிற்கு பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், துணைவேந்தர்களான அமரர். வி. துரைராஜா, திரு. பொ. பாலசுந்தரம்பிள்ளை ஆகியோரும் கலாநிதி. வி. கே. கணேசலிங்கம் மற்றும் பல பேராசிரியர்களும் எமது பாடசாலை புறநிகழ்வில் கலந்து சிறப்பித்தமையுடன் பாடசாலையின் பாரம்பரியம், கட்டுப்பாடு, செயற்பாடுகள், ஒழுக்கம் என்பன பற்றி பாராட்டுக்களைத் தெரிவிப்பதில் மிகவும் மகிழ்ச்சியும், பெருமையும் அடைகின்றோம்.

எமது கல்லூரியின் நாளாந்த செயற்பாடுகள்

நாளாந்தம் பண்ணுடன் கூடிய தேவாரத்துடன் காலைக்கூட்டம் இனிதே ஆரம்பிக்கப்படுகிறது. அதனை எமது இசைக்குழு மிகவும் சிறந்த முறையில் நிகழ்த்தி வருகின்றது. வெள்ளிக்கிழமைகளில் காலை முருகனுக்கு கோவிலில் பக்தி பூர்வமாக ஒவ்வொரு வகுப்பின் பொறுப்பில் பூஜைகள் நடாத்தப்படும் அதனை தொடர்ந்து சிவபுராணம் ஓதப்படுகிறது. இந்நிகழ்வு மிகவும் பாராட்டத்தக்க ஒன்றாகும். நாளாந்தம் நடைபெறும் தேவாரத்தைத் தொடர்ந்து கல்லூரிக் கீதமும் காயத்திரி மந்திரமும் அனைத்து மாணவர்களாலும் உணர்வு பூர்வமாக ஓதப்படுவதை காணக்கூடியதாக உள்ளது. அதனை வழிநடத்தி வரும் இசைப் பொறுப்பு ஆசிரியர் செல்வி ச. கணேஸ்பரன் அவர்களை நன்றியுடன் பாராட்டுகின்றேன்.

மேலும் கிழமையில் 3 நாட்கள் அனைத்து மாணவர்களும் இசையுடன் கூடிய உடற்பயிற்சி நிகழ்விலும் ஈடுபடுகின்றனர். இந்நிகழ்வு கல்வியியற் கல்லூரியின் பயிற்சி ஆசிரியர்களும், எமது கல்லூரியின் பழைய மாணவிகளுமாக செல்வி சு. சுபாசினி, செல்வி. க. பிரியதர்சினி ஆகியோர் பொறுப்புடன் ஏனைய சகல ஆசிரியர்களின் வழிகாட்டலில் நடைபெறுகின்றது.

மேலும் வாரந்தோறும் செவ்வாய் காலையில் நற்சிந்தனையும் புதன் மாலையில் பொது அறிவு வினாத்தொகுப்பும் ஒவ்வொரு வகுப்பு மாணவர் பொறுப்பில் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கதாகும்.

நாளாந்தம் பாடசாலையின் ஒழுக்காற்றுக்குழு ஆசிரியர்களும் மாணவத்தலைவர்களும் ஒழுக்கத்தைப் பேணும் வகையில் அரும்பணியாற்றி வருகின்றார்கள். இவர்கள் அனைவரையும் நன்றியுடன் பாராட்டுகின்றேன்.

பாடசாலையின் தோற்றம்

1993ல் தற்போதைய அதிபர் பதவியை ஏற்ற காலப்பகுதியில் இருந்து இன்றுவரை பாடசாலையின் புறத் தோற்றத்திலேயே பல்வேறு வகையான மாற்றங்களை நாம் காணக் கூடியதாகவுள்ளது. பிரதான மண்டப சுவரில் பாடசாலையின் சின்னமும் பெயரும் மிக அழகாக பொறிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பாடசாலையின் உள்ளே மிக அழகாகவும் நேர்த்தியாகவும் அமைக்கப்பட்ட அழகிய பூஞ்சோலை வருபவர் அனைவரையும் வருக வருக என பலவர்ண பூக்களால் வரவேற்பதைக் காணலாம். இது எல்லோர் உள்ளத்தையும் கவர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. பாடசாலையின் பெரும்பாலான வேலிகள் மதில்களாக மாறியுள்ளது. பாவிக்க முடியாத நிலையில் பூர்த்தியாக்கப்படாது அரைகுறையாக இருந்த வெள்ளிவிழாக் கட்டடம் தற்காலிகமாக ஓர் அளவிற்காவது பயன்படுத்தக்கூடிய நிலைக்கு மாற்றப்பட்டுள்ளது.

கல்லூரி வளர்ச்சியில் சிரேஷ்ட மாணவத் தலைவிகள்

ரவீந்திரகுமார் சுபாசினி
மாணவத்தலைவி - 2003

நாகேந்திரன் சிவசுதர்சினி
விளையாட்டுத் துறைத் தலைவி - 2003

மாணவத் தலைவிகள்

2003



தேசிய மட்டத்தில் எமது பாடசாலை மாணவிகள்

வாசுகி கிருஸ்ணன்
2002 தமிழ்த்தின விழாவில்
தேசிய மட்டத்தில் தனி இசையில்
1ம் இடம்

எழிலரசி கனகராசா
2001 ம் ஆண்டில் மாகாண
மட்டத்தில் 3000 மீ. ஓட்டத்தில் 1ம்
இடம், தேசிய மட்டத்தில் 5ம் இடம்



சுபாசினி ரவீந்திர்குமார்
மெய்வல்லுனர் போட்டி- 2003 தேசியமட்டத்தில்
200 மீ ஓட்டம் - 3ம் இடம்

கிருஷ்ணரங்கா சிவனேயன்
தேசிய மட்டம் - 2001 சிறுகதையாக்கம்
3ம் இடம்

சுதவதனி கந்தையா
தேசிய மட்டம் - 1999
100 மீ. ஓட்டம்- 5ம் இடம்

School Prefects - 2003



தமிழ்த்தின விழா - 2003

கல்லூரி நாட்டிய நாடக ஆரம்ப நிகழ்வு – அமரர் வீரமணி ஐயா நாட்டிய நாடக விளக்கமளிக்கின்றார்.



பரிசுத்தின கலைநிகழ்வு

ஒளிவீழா – 2002

Science Day



2003ல் மா. இந்துக் கல்லூரி, மா. மகளிர் கல்லூரி ஒன்றிணைந்து நடாத்திய இல்ல மெய்வல்லுனர் போட்டி

பாடசாலை பான்ட் வாத்தியக் குழு



2003இல்ல மெய்வல்லுனர் போட்டியில் தரம் 6 இன் புதிய மாணவ மாணவியர் இணைந்து நடாத்திய உடற்பயிற்சி



2003ல் ஆசிரியர் தின நிகழ்வின் போது

ஆங்கிலத்துறை

எமது பாடசாலையில் ஆங்கிலத்துறை பெரும் வளர்ச்சிப் போக்கை கண்ட ஒரு துறையாக காணப்படுகின்றது. இதில் எமது பாடசாலையில் ஆங்கில ஆசிரியராக இருந்து ஓய்வு பெற்ற திருமதி. ப. திருச்செல்வம் ஆசிரியர் 1994 வரை பகுதி நேர ஆங்கில ஆசிரியராக கடமையாற்றினார். அதன் பின் செல்வி. ம. செல்லத்துரை பாடசாலையில் 3 வருடங்கள் பகுதிநேர ஆங்கில ஆசிரியராக கடமையாற்றினார். பின்னர் 2002 வரை தன்சேவையை வேதனமின்றி வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். திருமதி பூபாலபிள்ளை ஆசிரியரும் பகுதிநேர ஆங்கில ஆசிரியராக 1993ல் எமது பாடசாலையில் இணைந்து கொண்டார். அவரோடு திருமதி சா. பாலசுப்பிரமணியம், செல்வி ம. செல்லத்துரை, செல்வி மொறின் ஆகிய ஆசிரியர்களும் இணைந்து ஆங்கிலத்துறையை வளர்த்து வந்தனர். சண்டிலிப்பாய் கோட்டத்தில் அன்று தொட்டு இன்றுவரை ஆங்கிலத்துறை சார்ந்த போட்டிகளில் முதலிடம் வகிக்கின்றது எமது பாடசாலை என்றால் மிகையாகாது. அவர்களின் முயற்சியினால் 1995ல் வெளியிடப்பட்ட The Grumbling House Wife என்ற நாடகம் வலய மட்டம் வரை சென்று இரண்டாம் பரிசிலைத் தட்டிக் கொண்டது. இக்காலப்பகுதியில் திரு. விஜயரட்ணம் ஆசிரியர் ஓய்வு பெற்றார். செல்வி. மொறின் 1998ல் திருமணமாகி வெளிநாடு சென்றார். செல்வி. ம. செல்லத்துரை ஆசிரியர் பகுதிநேர ஆங்கில ஆசிரியர் பதவியில் இருந்து நீங்கினார். இவர்களின் எதிர்கால வாழ்வு சிறக்கவும், நீடுழிகாலம் வாழவும் வாழ்த்துகின்றேன். அதனைத் தொடர்ந்து திருமதி. சா. பாலசுப்பிரமணியம் பொறுப்பாசிரியராகவும் 96 முதல் 99 வரை தொண்டர் ஆசிரியர் சேவையில் பணியாற்றிய செல்வி. லிங்கேஸ்வரி மகாலிங்கம் ஆங்கில ஆசிரியராகவும் 2000 ம் ஆண்டில் இணைந்து கொண்டார். 2002ல் திருமதி. ம. குமாரவேல் ஆசிரியரும் இவர்களுடன் இணைந்து கொண்டார். இவர்களை வருக வருக என வரவேற்பதுடன் இவர்களின் சேவை சிறக்க வாழ்த்துகிறேன். இவ்வாசிரியர்களின் செயற்பாடுகள் மூலம் பாடசாலையின் ஆங்கிலக் கல்வியில் ஒரு முன்னேற்றத்தை கொண்டுவர முடிந்தமை பாராட்டப்பட வேண்டியதே. எமது இவ்வாசிரியர்கள் இணைந்து கடந்த வருடங்களில் ஆங்கில தினப் போட்டிகளில் கோட்ட மட்டம், வலய மட்டம், மாவட்ட மட்டம், மாகாணமட்ட போட்டிகளில் மாணவர்கள் பங்குபற்றி வெற்றியை பெற வழிகாட்டியுள்ளார்கள். 2001, 2002, 2003 ஆகிய காலப்பகுதியில் சிரேஷ்ட கனிஷ்ட மாணவர்கள் குழுப்பாடல் நிகழ்வில் பங்குபற்றி கோட்டம், வலயம் சென்றமை குறிப்பிடத்தக்கது. 2003ல் கனிஷ்ட பிரிவில் Merchent of Venice எனும் நாடகத்திலும் பங்கு பற்றி கோட்ட மட்டத்தில் 1ம் இடத்தையும் வலய மட்டத்தில் 3ம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர் இந்நாடகத்தினை நெறிப்படுத்திய எமது பாடசாலை ஆங்கில ஆசிரியர்களும், திரு. வே. ஜெயக்குமார் ஆசிரியரும், பாடசாலையின் நலன்விரும்பிகளான திரு. அ.நற்குணசேகரம், திரு. பிருந்தாவனம் ஆகியோருக்கும் இதில் பங்கேற்று நடித்த மாணவிகட்கும் எனது பாராட்டுக்களை தெரிவிப்பதுடன் மேலும் ஆங்கிலத்துறை வளர வாழ்த்துகிறேன்.

தமிழ்த்துறை

வருடாவருடம் தமிழ்த்தின நிகழ்வுகளில் 10 நிகழ்வுகளில் மாத்திரமே மாணவர்கள் அனுமதிக்கப்படுகின்றனர். இந்நிகழ்வுகளில் கோட்ட மட்டம், வலய மட்டம், மாவட்ட மட்டம், மாகாண மட்டம், தேசிய மட்ட போட்டிகளில் மாணவர்கள் வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது. இவற்றை நெறிப்படுத்திய தமிழ்த்துறைக்கு பொறுப்பாக விளங்கிய ஓய்வுபெற்ற செல்வி. தி. இராஜரட்ணம், திருமதி. ம. செல்வரட்ணம் இசைப் பொறுப்பாளராக இருந்து ஓய்வுபெற்ற திருமதி. த. சுந்தரலிங்கம் நடனத்துறைக்கு பொறுப்பாய் இருந்து எம்மை விட்டு பிரிந்த அமரர் விமலலோஜினி தர்மகுலசிங்கம் ஆசியரையும் நன்றியுடன் நினைவு கூர்கிறேன். எமது கல்லூரியில் ஆசிரியராக நீண்டகாலம் சேவையாற்றி ஓய்வு பெற்ற பின்பும் தொடர்ந்து இன்றுவரை தமிழ்த்துறைக்கு பொறுப்பான ஆசிரியர்களில் ஒருவராக செயற்படும் திருமதி. பு. கதிர்காமநாதன் அவர்களையும் இவர்களுடன் இணைந்து தற்போது தமிழ்த்துறைக்கு பொறுப்பாசிரியராக விளங்கும் எமது சஞ்சிகையின் இதழாசிரியர் திருமதி. பா. விஜயகாந்தன் அவருடன் இணைந்து செயற்படும் திருமதி. ர. சிவபாலன் இசைத்துறைக்கு பொறுப்பு வகிக்கும் செல்வி சந்திரிக்கா கணேஸ்பரன் அவர்கட்கும் நடன ஆசிரியர் செல்வி பத்மஸ்ரீ கதிரவேலு ஆகியோரின் சேவையையும் மனதார பாராட்டுகிறேன். மேலும் எம்முடைய ஆசிரியர் குழாத்துடன் இந்தவருடம் இணைந்து கொண்ட இசை நடன ஆசிரியை திருமதி மதிவாணி விக்னராசா அவர்களை வருக வருக என வரவேற்று பாராட்டுகின்றேன். இவர்களின் சேவைகள் யாவும் தொடர்ந்து சிறக்கவும் அவ்வாசிரியர்கள் சகல சௌபாக்கியமும் பெற்று நீடுழிவாழ்ந்து சேவையாற்ற இறைவனை இறைஞ்சி வாழ்த்துகின்றேன்.

கணித விஞ்ஞானத்துறை

வருடா வருடம் கோட்ட மட்ட, வலய மட்ட கணித விஞ்ஞானப் போட்டிகளில் பங்கு பற்றி மாணவர்கள் வெற்றியீட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இப் போட்டிகளுக்கு பொறுப்பாசிரியர்களாக திருமதி. கௌ. சிவராஜசுந்தரம், திருமதி. தி. நாகேந்திரன், திரு. க. புஷ்பநாதன், திருமதி. ர.ஸ்ரீகரன், திருமதி. ஜெ. முகுந்தன், திருமதி C.J. ஜெயசீலன், திருமதி. வ. குணதீசன், திரு. வி. கலைநேசன், திரு. வே. ஜெயக்குமார் அவர்களை பாராட்டுகின்றேன்.

சமூகக்கல்வித்துறை

இத்துறையைச் சேர்ந்த திருமதி. வி. சற்குணரட்ணம், திருமதி. க. உமாசுதன், திருமதி. ச. அமிர்தலிங்கம் ஆகிய ஆசிரியர்கள் வருடா வருடம் நடைபெறும் சமூகக்கல்விப் போட்டிகளில் கோட்ட மட்டம், வலய மட்டம், போன்றவற்றில் பல பரிசில்களைப் பெற மாணவர்களை வழிகாட்டி வந்துள்ளனர். அவர்களின் சேவையை பாராட்டுகிறேன் அத்துடன் செயற்திட்ட போட்டிகளில் வலயமட்டத்தில் 1ம் பரிசினை தொடர்ச்சியாக பெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது.

2001 செல்வி. கு. ரசிகலா – யாழ் குடாநாட்டின் இன்றைய இடப்பெயர்வு
2002 செல்வி அ. பிரியங்கா – தமிழ் சிறார்களின் உரிமை மீறல்
2003 செல்வி வ. சிந்துஜா – யாழ்ப்பாணம் வருகிறது மிதிவெடி கவனம்

சமயத்துறை

இந்து சமயத்தில் சைவபரிபாலன சபையால் நடாத்தப்படும் பரீட்சையில் 1997ல் 11ம் ஆண்டில் செல்வி சுதர்சினி அரசலிங்கம் 1ம் இடத்தை பெற்று தங்கப்பதக்கம் பெற்றார். 2002ம் ஆண்டில் ராதிகா சிவதாசன் 11ம் ஆண்டில் 3ம் இடத்தைப் பெற்று வெண்கலப்பதக்கம் பெற்றுள்ளார். இவர்களை வழிப்படுத்திய ஆசிரியர்களான திருமதி. பு. கதிர்காமநாதன், திருமதி. ர. சிவபாலன், ஆகியோரை மனதார பாராட்டுகிறேன். இச்சமய துறையினரின் வருடா வருடம் சைவபரிபாலன சபை, சுதுமலை அம்மன் விளையாட்டுக்கழகம், இணுவில் இந்து வாலிபர் சங்கம், யாழ். மாநகரசபை போன்ற நிறுவனங்களினால் நடாத்தப்படும் பரீட்சைகளில் மாணவர்களை ஈடுபடச் செய்து பரிசில்களை ஈட்டியமை குறிப்பிடத்தக்கது.

விளையாட்டுத்துறை

எமது கல்லூரியின் விளையாட்டுத்துறை முன்னேற்றத்துக்கு ஒரு உடற்பயிற்சி ஆசிரியர் இல்லாத குறைபாடு தொடர்ச்சியாக நிலவி வருகிறது. எனினும் 93 – 99 ஆண்டுவரை விஞ்ஞான ஆசிரியராக இருந்து இளைப்பாறிய திருமதி ஞானப்பிரகாசம் இத்துறையைப் பொறுப்பேற்று மிகவும் சிறப்பாக நிறைவேற்றி வந்தார். அவருடன் இணைந்து சிலகாலம் 93 – 96 வரை செல்வி ஜெயஜோதி வல்லிபுரம் விளையாட்டுத்துறைக்கு பொறுப்பு வகித்தார். மேலும் அவர் 1999ம் ஆண்டில் இடமாற்றம் பெற்று சென்றுள்ளார். அவரின் சேவை சிறக்க வாழ்த்துகின்றேன். எனினும் அதிபர் எமது கல்லூரி ஆசிரியர்களின் உதவியுடன் தொண்டர் ஆசிரியரை நியமித்து வழிநடத்தி வருகிறார். தற்பொழுது செல்வி. தர்சிகா எனும் ஆசிரியை இப்பொறுப்பை ஏற்று நடாத்துகின்றார். எமது மாணவர்கள் கோட்ட மட்ட, வலய மட்ட மெய்வல்லுனர் போட்டிகளில் முன்னணியில் நின்று பல இடங்களை வருடா வருடம் தட்டிக் கொள்கின்றனர். இம்மாணவர்களை மனதார பாராட்டுகிறேன். மாவட்ட, மாகாண, தேசிய மட்டத்திலும் எமது மாணவர்கள் மெய்வன்மை போட்டிகளில் கடந்த சில வருடங்கள் பங்கு பற்ற சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இவற்றில் பங்கு பற்றிய மாணவர்களுக்கு பாராட்டுக்கள் உரித்தாகுக.

2002/ 2003ல் பெற்ற வெற்றிகள் விபரம்

தேசிய மட்டம்	சுதவதனி கந்தையா	1999	100 மீ. ஓட்டம் - 2ம் இடம்
	எழிலரசி கனகராசா	2001	3000 மீ. ஓட்டம் - 5ம் இடம்
மாகாண மட்டம்	பாமினி கந்தசாமி	1999	உயரம் பாய்தல்
	சுபாசினி ரவீந்திரன்	2001	200 மீ. ஓட்டம்

எமது இல்ல விளையாட்டுப் போட்டிகளில் பொறுப்பாசிரியர்களுடன் இணைந்து விளையாட்டுக்குழு ஆசிரியர்களான திரு. க. குகேஸ்வரராஜா, திருமதி கௌரி சிவராஜசுந்தரம், திருமதி ச. அமிர்தலிங்கம், திருமதி ம. திருஞானசம்மந்தர், திரு. த. சுப்பிரமணியம், திருமதி. தி. நாகேந்திரன், திரு. இ. வசந்தகுமார், திருமதி. ச. ஜெயந்திகுமார், செல்வி லி. மகாலிங்கம், ஆகியோர் இணைந்து சிறப்பாக செயற்பட்டு வருகின்றனர்.

எமது பாடசாலையில் வருடா வருடம் இல்ல விளையாட்டுப் போட்டிகள் மிகவும் விமரிசையாக நிகழ்த்தப்பட்டு வருகின்றது. மேலும் எமது கல்லூரியில் மைதானம் பற்றாக்குறை காரணமாக், சகோதர பாடசாலையுடன் இணைந்து 2000ம் ஆண்டில் இருந்து மெய்வன்மை போட்டியை நிகழ்த்துவதன் காரணமாக இரு கல்லூரிகளிலும் இல்ல விளையாட்டுப் போட்டி ஒரே மைதானத்தில் ஒரே நேரம் நடைபெறுவதன் மூலம் போட்டிக்கான செலவு குறைவதுடன், மாணவர்கட்கு இரு தடவைகள் கல்வியில் ஏற்படும் இடையூறுகள், குறைக்கப்படுகின்றன. ஒரே நேரத்தில் விளையாட்டுப் போட்டி காரணமாக பெற்றோர்கள், நலன்விரும்பிகள் நேரம் மீதப்படுத்தப்படுகின்றதுடன் மாணவர்கள் மிகவும் உற்சாகமாக விளையாட்டில் பங்கு பற்றுவதற்கான உள நிலை தோன்றுகிறது. என்றால் மிகையாகாது தொடர்ந்து இப்போட்டி ஒன்றிணைந்து செயற்பட இரு கல்லூரிகளினதும் ஆசிரியர் மாணவர் ஒத்துழைப்பை வேண்டி நிற்கின்றேன்.

மனையியல் துறை

எமது கல்லூரியில் மாணவர்கள் எதிர்காலத்தில் சிறந்த இல்லத்தலைவியாக விளங்கவும், தமது தேவைகளை தாமே நிவர்த்தி செய்யக்கூடிய முறையிலும், மனையியல் பாடத்தை கற்று வருகிறார்கள். இதற்கு பொறுப்பு ஆசிரியராக இருந்து வழிநடத்தி வரும் சிரேஷ்ட ஆசிரியரும் பகுதித் தலைவருமான திருமதி. ம. திருஞானசம்மந்தர் அவர்களின் சேவையை நாம் மறக்க முடியாது. அவருடன் இணைந்து செயற்பட்ட செல்வி. ஆறுமுகராஜா ஆசிரியை சிறந்த ஒத்துழைப்பு வழங்கி வந்தார். மேலும் அவர் இடமாற்றம் பெற்று நவாலி மகாவித்தியாலத்திற்கு சென்றுள்ளார் அவரின் சேவை சிறக்க வாழ்த்துகின்றேன். தற்போது 1997ல் இருந்து இத்துறைக்கு புதிதாக இணைந்த திருமதி. ச. ஜெயந்திகுமார் அவர்களையும், பாராட்டுகிறேன். இவர்கள் இருவரினதும் சேவை பாடசாலையில் எந்த ஒரு விழாவாக இருந்தாலும் அதில் முக்கிய இடமாக வகிக்கின்றது. விருந்துபசார நிகழ்வில் முழுப் பொறுப்பையும் ஏற்று சிற்றுண்டிகளைத் தயாரித்து வழங்குதல், பரிமாறுதல் போன்ற செயற்பாடுகளில் மாணவர்களை மிகுந்த பொறுப்புணர்ச்சியுடன் ஒழுங்காக, சேவையாற்றக் கூடிய பயிற்சியையும், வழங்கி வருகின்றனர். மாணவர்கள் பல்வேறு மட்டத்தில் கோலம் போடுதல், தையல், கைப்பணி போன்றவற்றில் பல பரிசில்களையும் பெறும் வகையில் ஊக்குவிக்கப்பட்டு வெற்றியீட்டுகின்றனர். இவ் ஆசிரியர்களுக்கும், இவற்றில் வெற்றியீட்டிய மாணவிகளுக்கும் எமது மனப்பூர்வமான பாராட்டுக்களை தெரிவிப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

நடனத்துறை

எமது கல்லூரியின் தமிழத்துறையில் இசையுடன் மேலாக நடனத்துறையும் சிறப்புற வளர்ச்சியுறுகின்றது. மிகுந்த மாணவர் ஆர்வமாயும் உற்சாகமாயும் நடன நிகழ்வில் பங்குபற்றி வருகின்றனர். இந்நடனத்துறையில் ஆரம்ப காலத்தில் திருமதி. லீலா செல்வராசா (நடன கலாமணி) சிறந்த முறையில் மாணவர்களை ஈடுபடுத்தி வந்தமை பாராட்டத்தக்கதாகும். இவர் பதவியுயர்வு பெற்று சென்று பின்னர் எமது கல்லூரியில் அவரது மாணவியான அமரர் விமலலோஜினி தர்மகுலசிங்கம் சிறந்த முறையில் செயற்பட்டு வந்தார். துரதிஸ்டவசமாக காலன் அவரை எம்மிடம் இருந்து

2001 ல் பறித்து விட்டான். அவர் வழிநடத்தி எமது மேடையேறிய நாட்டிய நாடகங்கள் இன்றும் எம்கண்முன் நிற்கின்றது என்றால் மிகையாகாது.

தற்பொழுது செல்வி பத்மஸ்ரீ கதிரவேலு அவர்கள் நடனத்துறைக்கு ஆசிரியராக இணைந்து அத்துறை வளர்ச்சிக்கு பொறுப்பு ஆசிரியராக இருந்து வருகின்றார். மேலும் 2002ம் ஆண்டில் இருந்த எமது நடனத்துறைக்கு திருமதி. ம. விக்னராஜா அவர்களும் இணைந்து கொண்டார். இவர்களின் வரவு எமது கல்லூரிக்கு கிடைத்த வரப்பிரசாதமே என எண்ணுகிறேன்.

எமது கல்லூரி ஆரம்பித்த காலத்தில் ஆசிரியராக கடமையாற்றியவரும் 8.10.03ல் இறைபதம் அடைந்தவருமான நாட்டிய கலைமாமணி நா.ம.த வீரமணி ஐயா அவர்கள் கடந்த யூலை மாதம் எமது கல்லூரியில் சைவத்தையும், தழிழையும் வளர்க்கும் நோக்கில் மணிவாசகத்தை நாட்டிய நாடகமாக நெறிப்படுத்தி அரங்கேற்ற ஐயா அவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் செயற்பட்டார். துரதிஸ்டவசமாக வீரமணி ஐயரின் இறப்பு எம்மை ஆழ்ந்த கவலைக்குள்ளாக்கியது. அவரின் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கின்றேன். எமது ஆசிரியர்களும் எமது ஆசிரியர்களுக்கு பக்கபலமாக நின்று உதவும் மானி. இந்து பழைய மாணவர்களான திரு. நற்குணசேகரம், திரு பிருந்தாவனம் அவர்களின் ஒத்துழைப்புடன் எமது நடனத்துறை ஆசிரியர்கள் மிக விரைவில் குறித்த நாட்டிய நாடகத்தை அரங்கேற்ற உள்ளனர். மிகவிரைவில் அரங்கேற்றவுள்ள நாட்டிய நாடகம் சிறந்த முறையில் வரவேற்பை பெற என் வாழ்த்துக்கள்.

இந்துமா மன்றம்

எமது இந்துமா மன்றத்தின் பொறுப்பு ஆசிரியராக 2002 ஒக்ரோபர் வரை திருமதி. த. சுந்தரலிங்கம் மிகவும் சிறப்பாக செயற்பட்டு வந்தார். வருடா வருடம் முருகனின் மணவாளக் கோலம் தை மாதம் ரேவதி நட்சத்திரத்திலும், பரட்டாதியில் நவராத்திரி விழாவும், தொடந்து ஐப்பசியில் கந்தசஷ்டியும், அதன் இறுதிநாள் திருக்கலியாணமும் மிகவும் விமரிசையாக கொண்டாடப்படுகிறது. மாதம் தோறும் கார்த்திகை உற்சவமும், விஷேடமாக நடைபெற்று வருகிறது. இவ்விழாவுக்கு சகல ஆசிரியர்களும், மாணவர்களும், ஒத்துழைப்பு வழங்கி செயற்படுவது மிகவும் பாராட்டத்தக்கதாகும் இக்காலப்பகுதியில் திருமதி. த. சுந்தரலிங்கம் பொறுப்பாசிரியரின் தலமையில் முருகன் ஆலயம் புனரமைக்கப்பட்டு 1998ல் கும்பாபிஷேகம் சிறப்பாக நடாத்தப்பட்டது. திருமதி. த. சுந்தரலிங்கம் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து திருமதி. ஆர். சிவபாலன் இந்துமா மன்ற தலைவர் பதவியை ஏற்று ஏனைய ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடாத்தி வருகின்றார். என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கிறிஸ்தவ மன்றம்

எமது கல்லூரியின் கிறிஸ்தவ மன்றம் வருடா வருடம் ஒளிவிழாவை மிகவும் சிறப்பாக கொண்டாடி வருகிறது. இதன் பொறுப்பாசிரியராக திருமதி. சி. ஜே. ஜெயசீலன் அவர்களும், அவருடன் திரு. வே. ஜெயக்குமார் ஆசிரியரும் இணைந்து இந்நிகழ்வை மிகவும் சிறப்பாக நடாத்தி வருகின்றனர். இவ்விழாக்களில் எவ்வித வேறுபாடும் இன்றி சகல மாணவர்களும் ஆசிரியர்களும் இணைந்து பங்கெடுத்து நடாத்தும் பண்பு பாராட்டத்தக்கதாக அமைகின்றது.

வர்த்தக மன்றம்

எமது கல்லூரியில் வர்த்தகத்துறையில் பொறுப்பு ஆசிரியராக திருமதி. வி. சற்குணரட்ணம் ஓய்வு பெற்ற திரு. த. சுப்பிரமணியம் திரு கே. குகேஸ்வரராஜா, திரு ஆர். வசந்தகுமார் ஆகியோர் இணைந்து அத்துறையை சிறப்பாக வளர்த்து வருகின்றனர். இவ் ஆசிரியர்களின் முயற்சியால் வணிகச் சோலை என்ற சஞ்சிகை தொடர்ந்து வெளிவருகின்றமை பாராட்டத்தக்கதாகும். எமது வர்த்தகத்துறைக்கு புதிதாக இணைந்த எமது கல்லூரியின் பழைய மாணவியான திருமதி பவானி உதயகுமாரனையும் வருக வருக என வரவேற்கின்றேன். மேலும் வணிக மன்றத்தின் வெளியீடான வணிகச்சோலை தொடர்ந்தும் வெளிவர வாழ்த்துகின்றேன்.

முறைசாராக்கல்வி

நீண்டகாலமாக கல்வித்துறையில் செயற்படும் ஒழுங்கான கல்விக்கு மேலாக பாடசாலைகளில் அறிமுகப்படுத்தப்பட்ட முறைசாராக கல்வி நெறியில் எமது கல்லூரியில் தட்டச்சும், சுருக்கெழுத்தும் செல்வி லிங்கேஸ்வரி மகாலிங்கத்தின் வழிகாட்டலில் நிகழ்ந்து வந்தது. தொடர்ந்து கடந்த 2 வருடங்களாக கணனிக் கற்கை நெறி நிகழ்கின்றது. சென்ற வருடத்தில் இதற்கு போதனா ஆசிரியராக விளங்கியவரும் எமது தொண்டர் ஆசிரியருமான செல்வி கஸ்தூரி பாலசுப்பிரமணியம் அவர்களை வாழ்த்துவதுடன் அவர்களின் எதிர்காலம் சிறக்க வேண்டி நிற்கின்றேன். இவ்வருடம் எமது கணனியியல் நெறிக்கும் கல்லூரியின் உயர்தர வகுப்பு கணனி செயற்பாட்டிற்கும் போதனாசிரியராக செயற்படும் மானி. இந்துவின் பழைய மாணவரான திரு பொ. கிருபானந்தன் அவர்களையும் வருக வருக என வரவேற்று சிறந்த முறையில் வகுப்புக்களை கொண்டுநடத்துவதை பாராட்டுவதுடன் அவரது பணி சிறக்க வாழ்த்துகின்றேன். மேலும் இம்முறை முறைசார கல்வி நெறியினை நடாத்த அனுமதி வழங்கிய வலயக்கல்விப் பணிப்பாளரையும், முறைசாராப் பிரிவு பொறுப்பாளர் திரு. கே. சிவநேசன் அவர்களையும், அதன் மேற்பார்வையாளராக செயற்படும் திட்டமிடல் பொறுப்பு அதிகாரி திரு சண்முகராஜா அவர்களிற்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இன்ரறக்ட் கழகம்

எமது கல்லூரியில் சேவையாற்றி இடமாற்றம் பெற்று சென்ற திரு கந்தவேள் ஆசிரியர் அவர்களின் பொறுப்பில் இக்கழகம் 1994ல் ஆரம்பிக்கப்பட்டு பல செயற்பாடுகளை பாடசாலையில் வளர்த்துள்ளன. பாடசாலையில் பூமரங்களையும், ஏனைய நிழல் மரங்களையும் நட்டு ஆரம்பித்து வைத்த நிகழ்வு குறிப்பிட்ட ஆசிரியரின் இடமாற்றத்தைத் தொடர்ந்து செல்வி விமலலோஜினி ராஜதுரையும், திருமதி. ம. திருஞானசம்மந்தர் ஆகியோர் தொடர்ந்து கழகத்தை நெறிப்படுத்தி வந்தனர் தற்பொழுது தொடர்ந்து திருமதி. சி. ஜே. ஜெயசீலன் திருமதி பவானி உதயகுமாரன் தலமையில் செயற்பட்டு வருகின்றமையை பாராட்டுவதுடன் இக்கழகத்தின் செயற்பாடுகள் சிறக்க வாழ்த்துகிறேன்.

ஆசிரியர் கழகம்

ஆசிரியர் கழகம் மிகவும் சிறப்பாக ஆசிரியர்களின் நன்மை தீமைகளில் கலந்து கொண்டு சிறப்பிக்கிறது. இடமாற்றம் பெறும் ஆசிரியர்கள், பதவிஉயர்வு பெற்று செல்லும் ஆசிரியர், சேவையில் இருந்து ஓய்வு பெறும் ஆசிரியர்களையும் கௌரவித்து அவர்களிற்கான சேவைநலன் பாராட்டு வைபவத்தை சிறப்பாக கொண்டாடி வருகின்றது. வருடா வருடம் இச்செயற்பாட்டில் பங்கு பற்றி செயற்பட்ட சகல ஆசிரியர்களையும் நன்றியுடன் பாராட்டுகிறேன். ஆசிரியர் கழகத்தின் உதவியினால் எமது கல்லூரியில் சேவையாற்றி இறைபதம் இடைந்த ஆசிரியர் திருமதி. ரவீந்திரன், திருமதி தர்மகுலசிங்கம் ஆகியோரின் பெயரில் வருடாவருடம் பரிசளிப்பு விழாவில் மாணவர்களுக்கு பரிசில்களையும் வழங்கி வருகிறது.

1995ம் ஆண்டில் ஆசிரியர் கழகத்தின் தலைவராக திருமதி. ம. திருஞானசம்மந்தர் செயலாளராக அமரர் திருமதி. விமலலோஜினி தர்மகுலசிங்கம் செயற்பட்ட காலத்தில் மாணவர்களை பாடசாலை மட்டத்தில் வர்த்தக நாள் ஒன்றில் மாணவரின் உற்பத்திப் பொருட்கள் விற்பனை செய்ததன் மூலம் பாடசாலை சூழலை அழகுபடுத்தலில் பங்கேற்றனர். இதனை மனப்பூர்வமாக வாழ்த்துவதுடன் ஆசிரியர் கழகத்தின் சேவை மேலும் சிறக்க வாழ்த்துகிறேன்.

சமூக உறவு

எமது பாடசாலைக்கு பல்வேறு சமூக உதவிகள் பாடசாலைக்கு புறம்பான வகையில் பணமாக, பொருளாக, சேவைகளாக வழங்கப்பட்டு வருகிறது. அவற்றில் பெரும்பாலான உதவிகள் அரச சார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்பட்டு வருகிறது. 1999ல் G.T.Z பாடசாலை அபிவிருத்திச் சங்க உதவியுடன் 7 மலசல கூடம் அமைக்கப்பட்டது. Action Faim இன் உதவியுடன் எமது கிணறுகள் திருத்தியமைக்கப்பட்டன. மேலும் லயன்ஸ் கழகம் மாணவர்களுக்கான சீருடைகள்,வறிய மாணவர்கட்கு குடைகள், கணித பாடத்துக்கான பயிற்சி நூல்கள் விளையாட்டுக்குழுவுக்கான சீருடைகள் போன்றவற்றை அண்மைக்காலத்தில் வழங்கியுள்ளன. மேலும் 1996ல் லயன் கழகத் தலைவரும் எமது பாடசாலை அபிவிருத்திச் சங்க தலைவராகவும் இருந்து வழிகாட்டிய ஓய்வுபெற்ற பொறியியலாளரான திரு. எஸ். பத்மநாதன் மாணவருக்கான துவிச்சக்கர வண்டிகளை நிறுத்தும் இடம் செப்பனிட்டு அமைத்துத்தந்தார்கள். இவற்றின் மூலம் பெறும் உதவிகட்கு நன்றிகளைத் தெரிவிக்கின்றோம். மேலும் எமது பாடசாலை ஒரு சமூகப் பாடசாலையாக இயங்கி வருகின்றது. லயன்ஸ் கழகத்துக்கான மானிப்பாய் Paris Lions கழகம், லியோ கழகம் என்பவற்றின் கூட்டங்கள் யாவும் எமது கல்லூரி மஸ்கன் மண்டபத்தில் நடைபெறுகின்றன. சென்ற் ஆன்ஸ் பாடசாலை, சோதிவேம்படி பாடசாலை ஆகியவற்றின் இல்ல விளையாட்டுப் போட்டிகள் கடந்த 3 வருடங்களாக எமது கல்லூரி மைதானத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. 91ல் வலிகாமம் தென்மேற்குப் பிரதேசத்தில் யுத்த அனர்த்தம் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்த காலப்பகுதியில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி தற்காலிகமாக எமது கல்லூரியில் இயங்க இடவசதிகள் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். 2001ம் ஆண்டில் தென்மராட்சியில் யுத்த சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்த பல பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் இணைந்து மீசாலை விக்கினேஸ்வராக்

கல்லூரி அதிபர் திரு வ. கந்தசாமி அவர்களின் தலமையில் எமது கல்லூரியில் இயங்க இடவசதிகள் வழங்கப்பட்டது. கல்லூரியின் கல்வி சார் வெற்றிகள், சாதனைகளை எழுதிக் கொண்டு போகும் போது அவை தொடர்ந்து நீண்டு செல்வதால் கல்விச் சாதாரண பெறுபேறு, உயர்தர பெறுபேறு என்பவற்றை அட்டவணையாக்கி தொகுத்து வழங்குகின்றேன்.

க. பொ. த சாதாரணதரம்

வருடம்	தோற்றியோர்	சித்தி	வீதம்(%)
1993	224	69	30.80
1994	175	75	42.85
1995	115	86	74.78
1996	88	35	39.77
1997	92	43	46.73
1998	118	60	50.84
1999	106	49	46.22
2000	**93**	**43**	**49.46**
2001	61	40	65.57
2002	83	57	68.67



க. பொ. த உயர்தரம்

வருடம்	தோற்றியோர்	சித்தி	வீதம்(%)
1993	102	64	62.74
1994	92	67	72.82
1995	115	87	75.65
1996	88	76	86.36
1997	83	69	83.13
1998	85	60	70.58
1999	99	71	71.71
2000	82	53	64.63
2001	111	58	52.25
2002	48	42	87.5
2003	55	45	81.8

School Development Committee Members - 2003

Seated :- (Left to Right)
Mr. K.Puspanathan, Dr. S.Sunderrajan (Secretary, S.D.S)
Mrs. V.Pasupathipillai (Principal), Mrs. V.Shanmugaratnam
(Vice Principal) Mrs. M. Thiruganasampanthar (Asst.Secretary),
Mrs. V.Satkunaratnam (Treasure)
Standing :- (Left to Right)
Mrs. G.Sivarajasuntharam, Mrs. M.Manoharan,
Mrs. R.Lingakumar,Mrs. V.Vijajakanthan, Mrs. R.Ganenthira,
Mrs. G.Kathirkamanathan, Mrs. K.Parapajasingam,
Mrs. J.Subramaniam.

Teachers Guild - 2003



பிற உதவிகள்

எமது கல்லூரிக்கு மிகவும் அண்மைக்காலத்தில் சமூகத்தினால் பல்வேறுபட்ட உதவிகள் கிடைத்து வந்துள்ளன. அவை எமது கல்லூரியின் வளர்ச்சிக்கு மிக அவசியமாகின்றது. வருடா வருடம் நூலக நூற் கொள்வனவிற்கு என பேராசிரியர் சண்முகநாதன் அவர்களினால் 1994ம் ஆண்டிலிருந்து இன்றுவரை ரூபா 2000.00 நன்கொடையாக வழங்கப்பட்டு வருகிறது. Dr. எஸ். சுந்தர்ராஜன் எமது கல்லூரியில் பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளரும், நீண்டகால அபிவிருத்திச் சங்க உறுப்பினரும் ஆவார். இவர் கல்லூரியின் செயற்பாட்டுக்கு தேவையான நேரங்களில் பல்வேறு உதவிகளையும் வழங்கி வருகின்றார். ஆரம்பப் பிரிவுக்கு ஊஞ்சல் ஒன்றையும் அன்பளிப்புச் செய்தார்.

அமரர் திரு. சத்தியசீலன் அவர்களின் ஞாபகார்த்தமாக அவரது சகோதரி விளையாட்டு முற்றத்துக்கு "Sea Saw" ஒன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

எமது கல்லூரியின் பழைய மாணவியும், டாக்டருமான திருமதி. மலர்விழி சிறிசரவணபவானந்தன் அவர்கள் கல்லூரிக்கு மின்விசிறி ஒன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

எமது கல்லூரியின் பழைய மாணவிகளான திருமதி. லோஜினி குலேந்திரன் அவரது சகோதரியான லோகினியும் கல்லூரிக்கு திரைச்சீலை ஒன்றை அன்பளிப்பாக வழங்கினர்.

பழைய மாணவி திருமதி. கடம்பேஸ்வரி சரவணபவானந்தன் கல்லூரிக்கு திரைச்சீலை ஒன்றை வழங்கியுள்ளார்.

எமது பாடசாலையின் 96 – 97ல் அபிவிருத்திச் சங்க செயலாளராக இருந்த திரு. தில்லைநாதன் தன்னுடைய பதவிக் காலத்தில் ஆசிரியர் தின நிகழ்வை சிறப்பாக நடாத்தியதுடன் திரைச்சீலை ஒன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

எமது கல்லூரிகளின் நலன் விரும்பிகளில் ஒருவரான திரு. எ. சிவானந்தா அவர்கள் எமது மனையியல் துறைக்கு பல உபகரணங்களை அன்பளிப்பு செய்துள்ளார்.

எமது கல்லூரியின் பழைய மாணவிகள் திரு கந்தசாமி குடும்பத்தினர் 2 மின் விசிறியை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

எமது கல்லூரியில் ஆசிரியராக சேவையாற்றி செல்வி. கலைமதி சின்னராசா அவர்கள் கல்லூரி முருகன் ஆலயத்துக்கு 5000.00 ரூபா வழங்கியுள்ளார்.

எமது பழைய மாணவி செல்வி. இ. யாழினி முருகனுக்கு தங்கச் சங்கிலி ஒன்றை வழங்கியுள்ளார்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகர்க்கு"

என்ற வள்ளுவன் வாக்கிற்கு இணங்க இவர்கள் செய்த உதவிகள் என்றும் நினைக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

சமாதான நிகழ்வு

தற்கால சமாதான சூழ்நிலை காரணமாக பல அரிய வாய்ப்புக்களைப் பெற்று தென்பகுதி மாணவர்களுடன் கைகொடுத்து பழகும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. 2001ம் ஆண்டில் செல்வி ஸ்ரீதேவி ஆசிரியரும் 11 மாணவர்களும் இணைந்து மக்கள் நலன்புரி கழகத்தின் ஆதரவில் தென்பகுதிக்கு நான்கு நாள் சுற்றுலா மேற்கொண்டு திரும்பினர். தென்பகுதியில் இருந்து 2002 டிசம்பரில் St. Emaculate Convent பாடசாலை மாணவரும் ஆசிரியரும் 35 பேர் எமது பாடசாலையில் 3 நாட்கள் தங்கி மாணவர்கள் ஆசிரியருடன் அளவளாவி யாழ் குடாநாட்டில் சுற்றுலா மேற்கொண்டு மகிழ்ந்தனர். தொடர்ந்து எமது கல்லூரியின் 9ம், 10ம் ஆண்டு மாணவர்கள் 25 பேரும் ஆசிரியருமாக 35 பேர் மாசி மாதம் 2003ல் மீண்டும் தென்பகுதி சென்று அங்கு சுற்றுலாவில் கலந்து கொண்டு மிகவும் மகிழ்ச்சியுற்று மகிழ்ந்தனர். ஆகஸ்ட் மாதத்தில் 8 மாணவதலைவர்கள், எமது சிரேஷ்ட ஆசிரியர் திருமதி. ம. திருஞானசம்மந்தரின் தலைமையில் காகீல்ஸ் கொம்பனியால் பண்டாரநாயக்கா மண்டபத்தில் நிகழ்த்தப்பட்ட 1நாள் தலைமைத்துவ கருத்தரங்கின் போது யாழ் வலயப் பாடசாலை பிள்ளைகளுடன் இணைந்து பயிற்சி பெற்று தமது கருத்துக்களைப் பரிமாறி தென்பகுதி மக்களுடனும் கலந்துரையாடி புதிய அனுபவங்களை பெற்று மகிழ்ந்து திரும்பினார்கள். 2003ல் 56 மாணவர்களும் 9 ஆசியர்களும் கல்விச்சுற்றுலா மேற்கொண்டமை சமாதான சூழ்நிலையில் ஞாபகச் சின்னமாக எமது மாணவர்களுக்கு கிடைத்த அரிய சந்தர்ப்பமாகும் இச்சமாதனத்திற்கான சூழ்நிலை தொடர இறைவனை வேண்டி பிரார்த்தித்து எனது நினைவலைகளை நிறுத்திக் கொள்வதுடன் தொடர்ந்து வரும் காலங்களில் இவ்வாறான பெருமைகளுடன் மாணவர்களைக் கொண்ட இப் பாடசாலையில் தொடர்ந்து சேவையாற்றி இக்கல்லூரியின் பெருமைகளும், புகழும் மேலும் பரவ இக்கல்லூரி முன்றல் முருகன் அருள்பாலிக்க வேண்டி நிற்கின்றேன்.

நிறைவாக

எமது கல்லூரியின் வளர்ச்சிக் காலத்தில் தற்போது பாடசாலை மாணவர்கள் அணியும் சீருடை, கழுத்துப்பட்டி என்பன எமது அதிபரின் வழிகாட்டலில் மாற்றியமைக்கப்பட்டு மாண்வர்கள் கம்பீரமான தோற்றப் பொலிவைப் பெற்றுள்ளனர். இது பாராட்டக் கூடிய ஒன்றாகும்.

வருடா வருடம் ஆசிரியர் தினம் விமரிசையாக 1998ல் இருந்து பாடசாலை அபிவிருத்தி சபையினருடன் மாணவர்களும் இணைந்து சிறப்பாக செய்து வருகின்றனர். இவர்கட்கு எமது மனப்பூர்வமான நன்றிகள்.

95ம் ஆண்டில் நாம் இடம்பெயர்ந்து சாவகச்சேரியில் தஞ்சம் புகுந்த வேளை எமது கல்லூரிக்கு இடவசதி வழங்கி கல்விச் செயற்பாட்டை ஓரளவுக்காவது முன்னெடுக்க உதவிய சாவகச்சேரி மகளிர் கல்லூரி அதிபர் செல்வி. கி. வீரசிங்கம் அவர்களையும் பல்வேறு உதவிகள் வழங்கிய ஆசிரியர் மாணவர்களையும், நன்றியுடன் நினைவு கூர்கிறேன்.

எமது பாடசாலைக்கு வேண்டிய நேரத்தில் வேண்டிய உதவியை வழங்கும் சகோதர பாடசாலை அதிபர் திரு. கு. சண்முகநாதன் அவர்களின் சேவைக்கு எமது கல்லூரி என்றும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளது.

2000ம் ஆண்டில் எமது கல்லூரியில் யாழ் பிரதேசத்தில் ஏற்பட்ட யுத்த அனர்த்தம் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்து எமது கல்லூரியில் கல்விச் செயற்பாட்டினை நடத்த முடியாத நிலையில் மானிப்பாய் இந்துக்கல்லூரியின் அதிபர் திரு. கு. சண்முகநாதன் அவர்கள் எமது வகுப்புக்களை அங்கு நடத்த இடவசதியும் ஏனைய வசதிகளையும் ஏற்படுத்தித் தந்தமையை யாரும் மறக்க முடியாது. கல்லூரி சார்பில் அவருக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

அக்காலத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் கூட மக்கள் இடம்பெயர்ந்து பாடசாலையின் பெரும் பகுதியை பயன்படுத்தியது குறிப்பிடத்தக்கது. இடம்பெயர்வின் போது நாம் பட்ட கஷ்டங்களில் இருந்து விடுதலைபெற உதவிய சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திரு. வி. வேதநாயகன் அவர்கட்கும், கிராமசேவகர் திரு எஸ். சிவகுமார், திரு. இ. இராஜயோகன் அவர்கட்கும் எனது நன்றிகள் உரித்தாகுக.

பல்வேறு துறையிலும் துரித வளர்ச்சியைக் காட்டி நிற்கும் எமது கல்லூரியின் வளர்ச்சிப்பாதையில் 10 வருடங்கள் எனது சேவையை பிரதிஅதிபராக இருந்து செயற்பட்டு எனது பங்களிப்பை சிறந்த முறையில் வழங்க வாய்ப்பு வழங்கிய அதிபர் அவர்கட்கும், கல்வி நிர்வாகிகட்கும் என்னுடன் ஒத்துழைத்து சேவையாற்றிய அனைத்து ஆசிரியர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இக்கல்லூரியில் தொடர்ந்து வரும் அதிபர் சேவை வெற்றிடத்தினை நிரப்புவதற்கான சகல தகுதிகளையும் நான் கொண்டிருப்பதையிட்டு பெருமகிழ்ச்சியடைவதுடன் என்னை அதிபராக நியமிக்க சிபாரிசு வழங்கிய எமது மதிப்புக்குரிய அதிபர் திருமதி. வி. பசுபதிப்பிள்ளை அவர்கட்கும் என்னை அதிபராக நியமிக்க ஏற்று சம்மதம் தெரிவித்த பெற்றோர்கள், பழையமாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், ஆசிரியர் கழகம் என்பவற்றிற்கும் எனது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவிப்பதுடன் எமது கல்லூரியின் வளர்ச்சியில் அக்கறையுடன் செயற்படும் எமது கோட்டக்கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர், வடக்கு கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் அனைவருக்கும் கடந்த 10 வருடங்கள் இக்கல்லூரியில் சேவையாற்றுவதற்கான வாய்ப்பினை வழங்கியதற்கு எனது மனப்பூர்வமான நன்றிகளை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் இக்கலூரியை நெறிப்படுத்திய கல்வி நிர்வாகிகள், அனைவருக்கும் அவர்களுடன் இணைந்து காலத்திற்கு காலம் செயற்பட்டு தமது பூரண ஒத்துழைப்பை நல்கிய முகாமைத்துவக்குழு அங்கத்தவர்கட்கும் எல்லாவற்றுக்கும் மேலாக கல்விச் சேவையில் கற்றல் - கற்பித்தலில் முழுமையாக ஈடுபட்டு தமது மாணவர்களின் கல்வியை திறம்பட செயற்படுத்தி மாணவர்களை வழிப்படுத்தி கல்வி புகட்டிய அனைத்து ஆசிரியர்களுக்கும், தொண்டர் சேவையாற்றிய அன்பு உள்ளங்களுக்கும், எமது கல்லூரி அன்னை சார்பில் நன்றியை கூறி அனைவரினதும், எதிர்காலம் சீரும் சிறப்புமாக மேலோங்கி பல உயர்வுகளையும், கண்டு தம் வாழ்வில் நிறைவான அமைதியும், பூரண திருப்தியும் அடைந்து நீடுழி காலம் வாழ எல்லாம் வல்ல முருகப் பெருமானை வேண்டி மனதார வாழ்த்தி நிற்கின்றேன். என்னை இவ்வாறு கூற வழிகாட்டிய ஆலய முருகப் பெருமானின் பாதார விந்தங்களை நன்றியுடன் வணங்குகிறேன்.

திருமதி. வேணுகா சண்முகரட்ணம்
பிரதி அதிபர்
மானிப்பாய் மகளிர் கல்லூரி

கல்லூரி வளர்ச்சியில் அதிபர்கள்

கல்லூரி ஒன்றின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் உறுதுணையாக நின்று உழைத்து வருபவர் அக்கல்லூரி அதிபரே. ஒரு அதிபரின் ஆளுமை, நிர்வாக நுட்பம், எதனையும் எண்ணித்துணிந்து கருமமாற்றும் செயற்றிறன் என்பன ஒருங்கே அமையும் பொழுதுதான் அவ்வதிபரின் கல்லூரிச் செயலாற்றுகை, இலக்கு என்பன உரிய இடத்தைப் பெற்று உயர்வையும், வெற்றியையும் தரும். இவ்வெற்றியை அடைய பரிபாலிப்பு கருமங்களும், அபிவிருத்திக் கருமங்களும் செவ்வனே இடம்பெறல் வேண்டும்.

இந்தவகையில் மானிப்பாயில் பெண்கள் கல்லூரி தேவை என்ற பலரின் விருப்பிற்கேற்ப மகளிர் கல்லூரியாக "உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்" என்ற மகுட வாசகத்தை மெய்ப்பித்து நிற்கும் கல்லூரியாக இது தனித்தியங்கும் சிறப்பிற்கு கல்லூரியின் தற்காலச் சாதனைகள் மட்டுமன்றி அதன் கடந்தகால நிகழ்வுகளும் சேவைகளும் என்றால் அது மிகையாகாது. ஆழ்ந்த ஞானமும், தீர்க்க தரிசனமும், சேவையாற்றும் திறனும், கல்விச் சிறப்பும் கொண்ட பெரியோர்களாகிய திரு.K.வீரசிங்கம், திரு.K.முத்துவேற்பிள்ளை, திருமதி.M.பரமசாமி போன்ற பலரும் எமது கல்லூரி வரலாற்றில் காலத்தால் சிதைக்கப்படாத சிற்பங்கள் எனலாம். மானிப்பாய் இந்துக்கல்லூரியின் பழைய மாணவர்களினது தளரா முயற்சியால் உருவாகிய இப்பாடசாலை 1.2.1963 இல் இருந்து தனித்து இயங்க ஆரம்பித்தது. இது திரு.K.முத்துவேற்பிள்ளையின் தலைமையின் கீழ் திருமதி.M.பரமசாமி அவர்களை சிரேஷ்ட உதவியாளராகக் கொண்டு 30.6.1963 வரை செயற்பட்டது. 28.10.1963ல் அரசு பொறுப்பேற்றது. 28.10.1963ல் இருந்து பதவி ஏற்ற முதல் அதிபர் செல்வி .P.ஆறுமுகம் அவர்கள் எடுத்த பணியைச் செம்மையுறக் கையாண்டு 1964 – 1970 வரையுள்ள காலப்பகுதிக்குள் எமது கல்லூரியை தலைநிமிர்ந்து நிற்க வைத்த பெருமை அறிவுசால் அதிபர் அவர்களையே சாரும். உயர்தர வகுப்புக்கள் - கலை, வர்த்தகப் பிரிவுகள், மஸ்கன் மண்டபம், ஆய்வுகூட வசதிகள் எனப் பல கோணத்திலும் கல்லூரி பரிணமித்தது. இவரது அமைதியான போக்கு, தன்னைப் புகழாத சீரிய வார்த்தைகளைச் செப்பிய செம்மை, கல்லூரிக் கடமையைத் தன் கடமையாகக் கொண்ட பெருமை என்பன இவரது காலத்தில் கல்லூரி மிகத் துரித செயற்பாடுகளை மேற்கொள்ள காரணமாக இருந்ததெனலாம். தற்போது ஓய்வுபெற்று பழைய மாணவிகள் சங்க கொழும்புக்கிளை தலைவியாக, கொழும்பில் வசித்து வரும் இவர் சுகநலமாய் நீடூழி வாழ எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுவோம்.



Miss. P. Arumugam
B.Sc, M.A, P.G.D.E
S.L.E.A.S Class 1
(Former Principal M.L.C, Vembady G.H.S, Former D.E - Mannar)

Miss. P. Satchithanandam
B.A (Hons)

1971 – 1978 வரை பொறுப்பேற்றவர் திருமதி.P.சச்சிதானந்தம் அவர்கள். சைவ பக்தியுடையவர். ஆசிரியர்களுடன் மிகவும் அன்பாகப் பழகுவதுடன், நிர்வாகத் தலைமைத்துவச் சிறப்புமுடையவர். இவரது காலப்பகுதியில் இதர மாடிக்கட்டிடம் தோற்றம் பெற்றது. 1972இல் உயர்வகுப்புக்களில் மனையியல் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. 1975இல் மாபெரும் முதலுதவி விழா மனையியல் சம்பந்தமான பொருட்காட்சி, குடிநீர் வசதி என்பன இவரது காலத்தில் கல்லூரி வளர்ச்சியின் சில நிகழ்வுகள் இவரது அன்பான, பண்பான பேச்சுக்கள் என்றும் மறக்கமுடியாதவை. தற்போது தனது பணியில் ஓய்வு பெற்று கனடாவில் வசித்துவரும் இவர் நலத்தோடு நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.



Mrs.A.Rajaratnam
B.A (LAND)
Eng Trained
S.L.E.A.S

1979 – 1980 வரை பொறுப்பேற்றவர் திருமதி.A.இராஜரத்தினம் அவர்கள். அமைதியான முறையில் ஆளுமை மிக்கவராய் நிர்வாத்தை நடத்திச் சென்றவர். இவர் ஆசிரியராகவும், உப அதிபராகவும் கடமையாற்றியபோது நல்கிய ஒத்துழைப்புக்கள் தான் கல்லூரி வளர்ச்சிக்கு அவர் நல்கிய உரமான படிக்கட்டுக்கள். கல்விவளர்ச்சியில் மாத்திரமல்லாது கல்லூரி அபிவிருத்தியிலும் அவரது சேவை மகத்தானது. தற்போது கனடாவில் வசித்து வரும் இவர் நலம் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகிறோம்.

Mrs.P. Rasanayagam
B.A (Hons.)
Ceylon

1980 – 1987 காலப்பகுதியைத் தன் சேவையால் அலங்கரித்தவர் அமரர் P.இராஜநாயகம் அவர்கள். சிறந்த தலைமைத்துவப் பண்பு, தன்னம்பிக்கை, தளரா முயற்சி என்பவற்றிக்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர். ஆசிரியராய், உபஅதிபராய், அதிபராய் பதவி உயர்வுகளைப் பெற்று இக்கல்லூரியில் இருந்து ஓய்வு பெற்றார். நாளும் பொழுதும் நல்ல சேவையை நல்கவேண்டும் மானி மகளிருக்கென்ற அவா அவருள்ளத்தை தூண்டியதாலேயே கல்லூரிக்கு அண்மையாக தனது இல்லத்தை அமைத்தவர். இவரது அன்பான பேச்சு, சரளமான தமிழ்ப்புலமை, எல்லோரையும்

ஒன்று திரட்டி செயற்படுத்தும் சீர்மை என்பன இவரது நல்லதொரு நிர்வாகத்திற்கு துணை சேர்த்தன எனலாம். கலையில் சிறந்த ஈடுபாடு கொண்டவர். தோற்றத்தில் கடினம் போல் காணப்பட்டாலும் பழகுவதற்கு இனிமையானவர். அன்னாரது அமர வாழ்க்கை சாந்தி பெற இறைவன் அருள் புரியட்டும்.

Mrs.S.Kalyanasundaresan
B.Sc, P.G.D.E, M.A,
S.L.P.S.I, S.L.E.A.S
Former Principal M.L.C
Former A.D (Jaffna)

1988 – 1991 வரை கல்லூரி வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக இருந்து செயற்பட்ட சிறந்த அதிபர் திருமதி.S.கல்யாணசுந்தரேசன் அவர்கள். தளம்பலற்ற நிர்வாகத் திறமை, சகல துறைகளிலும் ஆழ்ந்த அறிவு, மிகுந்த சுறுசுறுப்பு, எடுத்த கருமத்தை எண்ணியவாறு செயலாற்றும் திறன், ஆளுமை மிக்க பேச்சாற்றல் என்பவற்றைத் தனக்கெனக் கொண்டவர். இயல், இசை, நாடகத்தில் மட்டுமன்றி ஆங்கில நாடகங்களை மேடை ஏற்றுவதிலும் ஆர்வம் நிறைந்தவர். இறைபக்தி மிக்கவர். இவரது காலத்திலே வடபால் வாழ்ந்த பல்வேறு அறிஞர்களையும் கௌரவித்து கல்லூரி வெள்ளிவிழா மிகக் கோலாகலமாக கொண்டாடப்பட்டது. இக்காலப்பகுதியில் வெள்ளிவிழா மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. லயன்ஸ் கழக உதவியுடன் நுவிச் சக்கரவண்டி தரிப்பிடம் அமைக்கப்பட்டது. பழைய மாணவிகள் சங்கம் புத்துயிர்ப்பு பெற்றது. கல்லூரி வணிக மன்றமும் சஞ்சிகை வெளியிடும் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது ஓய்வு பெற்று தமதில்லத்தில் வாழ்ந்து வரும் இவர் நலம் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

Mrs.Y.Thiyagarajah
B.Sc (Myore)

1991 – 1993 வரை கல்லூரி வளர்ச்சிக்கு தனது உடலாலும் உள்ளத்தாலும் தன்னை அர்ப்பணித்த அதிபர் திருமதி.Y.தியாகராஜா அவர்கள். ஏனைய அதிபர்கள் போன்றே தனது செயற்திறத்தாலும், சேலை மனப்பாங்காலும், சிறந்த மனோதிடத்தாலும் நனி சிறந்த நிர்வாகத்தினை நடத்திய பெருமைக்குரியவர். கல்லூரியின் எந்நிகழ்வானாலும் அனைத்தும் தனது மேற்பார்வையின் கீழ் சிறப்புற அமைய வேண்டும் என்னும் பெரும் ஆவல் கொண்டவர். இதனால் இவரது காலத்தில் ஒத்திகை பார்க்காத எந்த நிகழ்வும் இல்லை எனலாம். கல்லூரி ஒழுக்கம், கட்டுப்பாட்டில் மிகுந்த கண்டிப்பானவர். சுறுசுறுப்பானவர். கல்லூரியின் தரம் எந்தவிதத்திலும் குறைந்துவிடாது கண்ணும் கருத்துமாக நின்று செயற்பட்டவர். இவரது காலத்திலேயே மஸ்கன் மண்டபத்திற்கு கிடுகுகளால் ஆன உட்புறக் கூரை அமைக்கப்பட்டது. விஞ்ஞான மன்றம் அமைக்கப்பட்டு சஞ்சிகை வெளியிடும் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது ஓய்வு பெற்று தமதில்லத்தில் வாழ்ந்து வரும் இவர்கள் நலம் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

Mrs.V.Pasupathipillai

B.A (Spec.Geo) P.G.D.E

S.L.P.S.I

1993 – 9.12.2003 வரை கடமையாற்றிக் கொண்டிருக்கும் எமது அதிபர் திருமதி.வி. பசுபதிப்பிள்ளை அவர்கள் கல்லூரி நிர்வாகத்தை செவ்வனே செயற்படுத்தும் அறிவு, ஆற்றல், அனுபவம், ஆளுமை, மனோதிடம் என்பவற்றை ஒருங்கே அமையப் பெற்றவர். இவற்றோடு சகல துறைகளிலும் அதீத ஈடுபாடும் கொண்டவர். நிர்வாகத்தைப் பகிர்ந்தளித்து வெற்றியோடு செயற்படுத்தும் திறனே இவரது ஆளுமையின் இலக்குகள். கண்டிப்பு அடங்கிய கோபம், அடுத்த கணம் கோபம் மறைந்த சிரிப்பு. இது இவரது நிர்வாகத்தில் ஒரு படிப்பு. தான் நினைத்ததைச் செய்து முடிக்கும் ஓர்மம், கலகலப்பான பேச்சு, துணிந்து வாதிடும் திறன். இது இவரது நிர்வாகத்தில் ஒரு பிடிப்பு.

எமது கல்லூரி வரலாற்றில் மிகக்கூடிய காலம், அதாவது ஒரு தசாப்த காலம் அதிபராகச் சேவை செய்யும் பாக்கியம் பெற்ற இவர் இக்கல்லூரியிலேயே ஆசிரியராக, பகுதித்தலைவராக, இணை உபஅதிபராக, உபஅதிபராக, அதிபராக தனது சேவையாலும் பதவியாலும் உயர்வு பெற்றுள்ளார். இவரது ஆசிரியம் முழுமை அடைந்துள்ளது.

முன்வைத்த காலைப் பின் வைக்காத நிதானமான போக்கு, கல்லூரி நலனே தன் நலன் எனக் கொண்ட சிந்தை, குடும்பமே பாடசாலை. பாடசாலையே குடும்பம் என்ற நல்லதொரு பொது நல நோக்கு என்பன இவரது காலத்தில் கல்லூரி பல்வேறு படிமுறைகளில் வளர்ச்சி கண்டது. கல்வி அபிவிருத்தி, பௌதீக அபிவிருத்தி எனப் பல கோணத்தில் உயர்ச்சி பெற்றது.

1994 - 1. பழைய மாணவர் சங்கம் சார்பாக இராமநாதன் புலமைப்பரிசில் நிதியம் தொடங்கப்பட்டது.
- 2. முடிக்கப்படாத வெள்ளிவிழா மண்டபத்திற்கு தற்காலிக கூரை அமைக்கப்பட்டு வகுப்புக்கள் நடத்தப்பட்டது.
- 3. நூலகம் புனருத்தாரணம் செய்யப்பட்டது.

1995 - ❋ மூடப்படவிருந்த விஞ்ஞானப் பிரிவை நிறுத்துவதற்குரிய முயற்சி மேற்கொள்ளப்பட்டு தொடர்ந்து இயங்க வைத்தது.
❋ இன்ரறக்ட் கழகம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டு கல்லூரியில் சிறுசிறு பௌதிக அபிவிருத்தி மேற்கொள்ளப்பட்டது.
❋ கல்லூரியின் சுற்றுச்சூழல் பேணப்பட்டு பூந்தோட்டம் அமைக்கப்பட்டது.

1996 - ❋ கல்லூரி பழைய மாணவர் சங்க போசகர் அமரர் சிவா.இராஜேந்திரன் அவர்களது நினைவு தினம் நடத்தப்பட்டு அவரது உருவப்படம் திரைநீக்கம் செய்யப்பட்டது.
❋ இடப்பெயர்வின் போது உடைக்கப்பட்ட மஸ்கன் மண்டபம் அரசாங்க நிதியைப் பெற்று திருத்தி அமைக்கப்பட்டது.

1997 - ❋ ஜனாதிபதி விருதினைப் பெற்றது. (சித்திரம்)

1998 - ❋ மே 1ம் திகதி கல்லூரி முருகன் ஆலயம் புனரமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

1999 - ❋ G.T.Z உதவியுடன் மலசலகூடங்கள் அமைக்கப்பட்டன.

2000 - ❋ 140', 45' அடி நீளமுள்ள கல்லூரியில் வடக்கு, மேற்குப்புற மதில்கள் கட்டப்பட்டன.
❋ வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி சகோதர பாடசாலைகள் இணைந்த நடத்தும் முதல்முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

2001 - ❋ புனர்அமைப்பு புனர் நிர்மாண அமைச்சின் உதவியுடன் வெள்ளிவிழாக் கட்டிட மேற்தளம் பூர்த்தியாக்கப்பட்டது.

2002 - ❋ ஆரம்ப பிரிவு தரம் 1 ஆரம்பிக்கப்பட்டது.

2003 - ❋ மேலைத்தேய இசைக்குழு (Band) அறிமுகம் செய்யப்பட்டது.

இவைதவிர கல்வி அபிவிருத்தியில் சகல துறைகளிலும் வருடா வருடம் மாணவர் பங்கு பற்றி மாவட்ட தேசிய மட்ட பரிசில்களையும் தங்கப்பதக்கங்களையும் பெற்று வருவதோடு வருடா வருடம் கலை, விஞ்ஞானம், நுண்கலை, கல்விக்கல்லூரி என கல்வி கற்கும் மாணவிகளில் பெருந்தொகையான மாணவர்களை உயர்கல்வி என்னும் உன்னத பீடத்திற்கு அனுப்பி வைக்கின்றமை உண்மையில் அதிபரின் நிர்வாகத்திற்கு கிடைக்கும் மாபெரும் வெகுமதிகளேயாகும். இந்தவகையில் சேவையாற்றி 9.12.2003ல் ஓய்வு பெற்றுச் செல்லவுள்ள எமது அதிபர் அவர்கள் என்றும் நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

திருமதி. பா. விஜயகாந்தன்
M.Phil
ஆசிரியை
மானிப்பாய் மகளிர் கல்லூரி.

கல்வியியலாளர் அரங்கம்



கலைத்திட்டமும் அதிபரின் தலைமைத்துவப் பங்கும்

கலைத்திட்ட முகாமைத்துவம் என்பது சிக்கலும், அதிக வினைத்திறனைப் பயன்படுத்த வேண்டியதுமான இயல்பை அவாவியுள்ள இன்றைய காலகட்ட வளர்ச்சியில் முகாமை செய்வோரின் தலைமைத்துவப் பண்புகள் பற்றிய ஆய்வுகள் முதன்மை பெறத் தொடங்கியுள்ளன. கலைத்திட்டத்தை ஒழுங்கமைத்தல், நடைமுறைப்படுத்தல், நெறிப்படுத்தல் என்பவற்றின் வெற்றியானது, முகாமை செய்வோரின் தலைமைத்துவப் பண்புகளுடன் தொடர்புடையதாக அமைந்துள்ளது.

பள்ளிக்கூட அதிபர்கள் கூடியளவு இடைவினைகளை நிர்வாகிகள், பெற்றோர்கள், அனுசரணையாளர்கள், மற்றும் ஆசிரியர்களுடன் மேற்கொள்வதனால் கலைத்திட்டச் செயற்பாடுகளில் போதிய நேரத்தை ஒதுக்க முடியாமல் இருத்தலை வோல்கொட் (WOLCOTT) என்பாரின் ஆய்வுகள் புலப்படுத்துகின்றன. மொறிஸ் (Morris) என்பார் இத்துறையில் மேற்கொண்ட ஆய்வுகளின் படி பள்ளிக்கூட அதிபர்கள் போதனைசார் தலைமைத்துவ செயற்பாடுகளில் (Intructional) போதியளவு நேரத்தை ஒதுக்க முடியாமலிருத்தலும் பிரச்சனைகளை உள்ளடக்கிய நேருக்கு நேர் தொடர்பாடல்களில் அவர்கள் கூடுதலான நேரத்தை ஒதுக்குகின்றார்கள் என்பதும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

பள்ளிக்கூட அதிபர்கள் முகாமையாளர்களாயும், தலைவர்களாயும் செயற்படும் பொழுது தான் கலைத்திட்ட இயக்கம் எதிர்பார்த்த இலக்குக்களை நோக்கி விரைந்து செல்ல முடியும். முகாமையாளர்கள் என்ற வகையில் அவர்கள் நிறுவன இலக்குகளை அடைவதற்குரியவாறு வளங்களையும், வலுவையும் வினைத்திறனுடன் ஒழுங்கமைத்துச் செயற்படுத்துதல் வேண்டும். தலைமைத்துவத்தை ஏற்பவர் என்ற வகையில் தொலைநோக்கும் கல்வி சார்ந்த தரிசனமும் உடையவராக இருத்தலுடன், கற்பித்தல் சூழலை தூண்டுபவராகவும், வினைத்திறன் மிக்க கற்கும் சூழலை உருவாக்குபவராகவும், இலக்குகளை வென்றெடுப்பதற்குரிய தொடர்பாடல் வலைப்பின்னலை உருவாக்கிப் பராமரிப்பவராகவும் இருத்தல் வேண்டும். முகாமைத்துவப் பண்புகளும், தலைமைத்துவப் பண்புகளும் சமாந்தரமாக வளர்ச்சி பெறும் பொழுது கல்வி இலக்குகளை எளிதாக எட்ட முடியும்.

ஒரு பள்ளிக்கூடத்தின் வெற்றியும், அதற்குரிய கலைத்திட்ட செயற்பாட்டின் வெற்றியும் அதிபரின் தலைமைத்துவப் பண்புகளில் தங்கியுள்ளன. நிறுவனக் கட்டமைப்பைப் பேணுதல், ஆசிரியர் மாணவர் மற்றும் கலைத்திட்டச் செயற்பாடுகளை ஊக்குவித்தல், இலக்குகளை நோக்கி நகரச் செய்தல் முதலியவை தலைமைத்துவப் பண்புகளுடன் தொடர்புடையவை.

தலைமைத்துவம் பற்றி விளக்க வந்த தொன்மையான உளவியற் கருத்துக்கள் ஒருவரது பிறப்புடன் இணைந்த உள்ளார்ந்த ஆற்றல்களுடன் அது தொடர்புடையது என விளக்குகின்றன. ஆனால் அது பற்றி விளக்குகின்ற அண்மைக்காலக் கருத்துக்கள் தலைமைத்துவம் முகாமைத்துவ சந்தர்ப்பங்களுடன் இணைந்துள்ளதென்பதைச் சுட்டிக் காட்டி வருகின்றன. முகாமைத்துவ சந்தர்ப்பங்களால் உருவாக்கப்படும் உயர் நிலையான அடைவுத் தேவை, சமூகமயமாக்கல் தழுவிய வலுவின் தேவை, உயர் நிலையான வலு மட்டம், பொருத்தமான ஆளிடைத் தொடர்புத்திறன்கள், அறிகை, எழுச்சி மற்றும் தொழில்நுட்பத் திறன்கள் முதலியவற்றுடன் தலைமைத்துவ ஆக்கம் இணைந்துள்ளதென்று குறிப்பிடப்படுகின்றது.

கலைத்திட்டத்துக்கு தலைமை தாங்கும் அதிபரும் அவற்றை நடைமுறைப்படுத்தும் ஆசிரியரும் மற்றும் மாணவரும் ஒருவர் மீது மற்றவர் செல்வாக்குச் செலுத்தும் தன்மையுடையவர்கள். அதிபர் மற்றையோர் மீது வலுவையும் (Power) அதிகாரத்தையும் (Authority) பிரயோகித்தல் அவருக்குரிய கல்வியாற்றல், புலமை, அவரின் தொடர்பாடல் திறன் முதலியவற்றுடன் இணைந்துள்ளது. அதிபர் என்ற அந்தஸ்து நிலையால் கிடைக்கும் வலு (Position power) அவரது தனிப்பட்ட குணவியல்புகளாலும் ஆற்றலாலும் தொடர்புடைய வலு (Personal Power) ஆகியவை இணைந்த முறையில் வலுவின் செறிவு ஏற்படுகின்றது. அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி இலங்கையில் அந்தஸ்து நிலையால் வலுவைத் தம்மகத்தே கொண்ட அதிபர்களில் அண்ணளவாக மூவாயிரம் பேர் வரை தமது பதவிக்கு பொருத்தமற்ற வகையில் ஆற்றல் குன்றியவர்களாக இருக்கின்றனர் என்பது புலப்படுத்தப்பட்டுள்ளது.

வெபர் (Weber) என்ற சமூகவியலாளர் பணியாட்சியுடன் (Bureaucracy) தொடர்புபடுத்தி அதிகாரத்தையும் வலுவையும் விளக்கியுள்ளார். பணியாட்சியுடன் இணைந்த ஏறு நிரலமைப்புடன் (Hierarchy) அதிகாரமும் வலுவும் இயல்பாகவே இணைந்திருக்கும் என்று குறிப்பிட்டுள்ளார். ஒவ்வொரு நிலையிலும் உயர் அதிகாரிகளாக இருப்போர் தம்மிலும் கூடிய வலுவையும் அதிகாரமும் கொண்டவர்களாக இருப்பர். நிறுவன ஒழுங்கமைப்பின் இலக்குகளை வென்றெடுப்பதற்கும், வினைத்திறனை வருவிப்பதற்கும், ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதற்கும் இந்த ஏற்பாடு அவசியமென வலியுறுத்தப்படுகின்றது. வலு தொடர்பான விரிவான ஆய்வுகள் கல்வியியலில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பிரெஞ் என்பாரும் றேவன் என்பாரும் அதிகாரம் தொடர்பான மூலாதாரங்களைப் பின்வருமாறு பகுத்துக் கூறியுள்ளார். அவையாவன

1. **வெகுமதி வழங்கல் நிலை வலு (Reward Power)**
   பிறரால் பெறுமதி மிக்கதாகக் கொள்ளப்படும் வெகுமதிகளை வழங்குதல், விநியோகித்தல் முதலியவற்றுடன் இது தொடர்புடையதாக இருக்கும்.

2. **வெகுமதிக் கட்டுப்பாட்டு நிலை வலு (Coercive Power) :-**
   வெகுமதிகளை கட்டுப்படுத்துதல், தடுத்து வைத்தல் முதலியவற்றுடன் அது தொடர்புடையது.

3. **உத்தியோக நிலை வலு (Legitimate Power) :-**
   தாம் வகிக்கின்ற உத்தியோக நிலையால் கிடைப்பெறும் அதிகாரம் இதில் இடம்பெறும்.

4. **மேதாவி நிலை வலு (Expert Power) :-**
   ஒரு குறிப்பிட்ட துறையில் வல்லுநராக ஒருவர் இருப்பதனாற் கிடைக்கப்பெறும் வலு இதில் அடங்கும்.

5. **தனியாட் கவர்ச்சி வலு (Referent Power) :-**
   ஒருவரது தனியாட் கவர்ச்சி, அல்லது குறிப்பிட்ட ஒருவர் போல இருப்பதால் ஏற்படும் கவர்ச்சி, அல்லது குறிப்பிட்ட குழுவின் உறுப்பினராக இருப்பதனால் ஏற்படும் கவர்ச்சி, முதலியவற்றுடன் தொடர்புடைய வலுவை இது குறிப்பிடும்.

அதிகாரத்தையும் வலுவையும் நிறுவனக் கட்டமைப்புடனும் தொழிற்பிரிவுடனும் தொடர்புபடுத்தி பிபிபர் (Pfeffer) விளக்கியுள்ளார். இவருடைய விளக்கத்தின் படி எட்டு மூலகங்களில் இருந்து தோன்றுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். அவை :-

1. சார்ந்திருக்கும் நிலை (Dependence)
2. வள வழங்கல் நிலை (Providing Resources)
3. தளம்பல் நிலையோடு இணையும் திறன் (Coping with uncertainty)
4. குறிப்பிட்ட ஒரு தலைவரை மாற்றினால் அந்த இடத்துக்கு இன்னொருவரைப் பெறுதல் கடினமாக இருக்கும் நிலை
5. தீர்மானங்களை மேற்கொள்வதில் தலைவரின் பங்கு தவிர்க்க முடியாததாயிருத்தல்
6. தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதில் தலைமை தாங்குவோரின் பங்கு தவிர்க்க முடியாததாயிருத்தல்
7. நியமனங்கள் வழியாக அதிகாரத்தை திரட்டிக் கொள்ளும் ஆற்றல்
8. அரசியல் திறன்கள்

கலைத்திட்டத்துக்குத் தலைமை தாங்கும் அதிபர்களின் செயற்பாடுகள் செயல்வழித் தொடர்புகள் வழியாகப் பின்வருமாறு விளக்கப்படும்.

1. பணிப்புரை வாயிலான தொடர்புகள் :
   குறிப்பிட்ட கட்டளைகளை வழங்குதல் வாயிலாக இது நிகழ்த்தப்படும்.
2. உயர் இலக்குகளை அடைதல் வாயிலான தொடர்புகள் :
   உயர்ந்த தரத்தையும், ஆற்றுகையையும் உருவாக்குவதற்கு ஊக்கமளித்தல்.
3. அனுசரணையாளராகச் செயற்படல் :
   ஆசிரியர், மாணவர் ஆகியோருடன் இணைந்து செயற்பாடுகளை முன்னெடுத்தல்
4. பங்குபற்றும் செயற்பாடுகளில் ஈடுபட்டு தீர்மானங்கள் மேற்கொள்ளலும் நடைமுறைப்படுத்தலும்.

கலைத்திட்டத்துக்குத் தலைமை தாங்கும் அதிபரின் ஆற்றுகை இயல்புகள் ஆசிரியர்களின் அனுபவம், முதிர்ச்சி, அறிவுப்பலம் முதலிய காரணிகளிலும் தங்கியுள்ளன.

பாடசாலைத் தலைமைத்துவம் கலைத்திட்டத் தலைமைத்துவம் ஆகியவற்றை ஆராயும் பொழுது அமெரிக்கா மற்றும் ஜப்பான் ஆகிய பாரம்பரியங்களில் முகிழ்ந்த ஒழுங்கமைப்பின் இயல்புகள் பற்றித் தெரிந்து கொள்ளலும் அவசியமாகின்றது. பின்வருவன ஜப்பானிய நிறுவன அமைப்பிலே காணப்படும் பொதுப்பண்புகளாகும்.

1. ஒருவர் வாழ்நாள் முழுவதும் அதே நிறுவனத்திலே பணிபுரியலாம்.
2. மெதுவான மதிப்பீட்டு முறைகளும் பதவி உயர்வுகளும்
3. சிறப்புத் தேர்ச்சி அற்ற வகையிலும் தொடர் தொழில் வழிகள் அமைந்திருக்கும்.
4. கூட்டுப்பொறுப்பு, கூட்டான தீர்மானம் மேற்கொள்ளல்
5. முழுநிறுவனம் என்ற அமைப்பின் மீது கவனம் செலுத்துதல்.

அடுத்ததாக அமெரிக்க நிறுவன ஒழுங்கமைப்பின் பொதுப்பண்புகள் வருமாறு:

1. குறுங்கால வேலை வழங்கல் ஏற்பாடு
2. விரைந்த மதிப்பீடும் பதவி உயர்வும்
3. சிறப்புத்தன்மை அற்ற வகையிலும் தொடர் தொழில் வழிகள் அமைந்திருக்கும்.
4. தனியாள் பொறுப்பியம் ஏற்றலும், தனியாளே தீர்மானம் எடுத்தலும்
5. பகுதி பகுதியாக நிறுவன ஒழுங்கமைப்பின் மீது கவனம் செலுத்துதல்

எமது கல்வி நிறுவனங்கள் பற்றிய செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கு மேற்கூறிய அனுபவங்கள் முன்னுதாரணங்களாக இருக்கும்.

அதிபரின் தலைமைத் பதவியில் சிறப்பாக கருதப்படும் செயற்பாடுகளுள் ஒன்றாக தீர்மானம் எடுத்தல் அமைகின்றது. பிரச்சினையை வரையறுத்துத் தெளிவாக்குதல், பிரச்சினையின் கூறுகளைத் தெளிவாக ஆராய்தல் தந்திரோபாயங்களைக் கண்டறிதல், மாற்று வழிகளைப் பரிசீலித்தல், விளைவுகளை பரிசீலித்தல் என்றவாறு தீர்மானம் எடுத்தல் பல்வேறு செயல்முறைகள் வாயிலாக முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளது. தீர்மானம் எடுத்தல் தொடர்பாக அண்மைக்காலமாக பல புதிய கோட்பாடுகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. தீர்மானம் எடுத்தலை அதிபர் தனித்து மேற்கொள்ளாது, பங்குபற்றுவோரது கருத்தறிந்து மேற்கொள்ளப்படல் வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆனால் அதிலும் பல குறைபாடுகள் இருக்கின்றன. நேரவிரயம், செலவுக்குரிய வினைத்திறன் பாதிக்கப்படுதல் முதலிய எதிர் மறைப்பண்புகளும் காணப்படுகின்றன.

தீர்மானம் எடுத்தலில் தரப்பண்புகள் பாதிக்கப்படாதிருப்பதற்குரிய உபாயங்களை அதிபர் முன்னெடுத்தல் வேண்டும். தீர்மானங்கள் தொழிற்படுவோரின் ஊக்கலை வளம்படுத்தக்கூடியதாக இருத்தல் சிறந்தது.

கலைத்திட்ட நெறிப்பாட்டின் தலைவராக விளங்கும் அதிபர் வினைத்திறன் மிக்க நேர முகாமைத்துவத்தையும் ஒழுங்கமைத்தல் வேண்டும். கலைத்திட்ட இயக்கத்தை வளமும் வலுவும் உள்ளதாக்கும் செயல் முறை நேர முகாமைத்துவத்துடன் ஒன்றிணைந்தது. ஆசிரிய ஆளணியினரை ஒழுங்குபடுத்துதல், காரியாலயப் பணிகளை ஒழுங்குபடுத்துதல், ஆண்டுக்குரிய செயற்பாடுகள், தவணைகளுக்குரிய செயற்பாடுகள், வாராந்த செயற்பாடுகள், நாளாந்த செயற்பாடுகள் முதலியவற்றை நன்கு திட்டமிடுவதன் வாயிலாகவும், நேர முகாமைத்துவத்தில் வினைத்திறனை ஏற்படுத்த முடியும்.

அறிவின் இயல்பு, அறிவை உள்வாங்கும் மாணவர் இயல்பு, அறிவு மூலகங்களின் இயல்பு, அறிவு மாணவர் மீதும் சமூகத்தின் மீதும் ஏற்படுத்தக்கூடிய தாக்கங்கள் பற்றிய விளக்கம் அதிபருக்கு இன்றியமையாது, சமூகத்தை வியாக்கியானம் செய்வதற்கும், சமூகத்தைக் கட்டுமானம் செய்வதற்கும் அறிவின் பிரயோகம் பற்றிய தெளிவு கலைத்திட்டத்தைத் தலைமை தாங்குபவரிடத்து இருத்தல் வேண்டும்.

கல்விக்குரிய தலைமைத்துவம் ஏனைய நிறுவனங்களின் தலைமைத்துவத்திலும் வேறுபட்டது. ஏனெனில் கல்விக்குரிய தலைமைத்துவம் நேரடியாக மனிதவள விருத்தியோடு தொடர்பு கொண்டது. மனித வளவிருத்தி அகநிலை விருத்தி என்றும் புறநிலை விருத்தி என்றும் இரு வகைப்படும். அகநிலை விருத்தியில் பள்ளிக்கூடத்தின் உள்ளமைந்த மனிதவள விருத்தி கருத்திற் கொள்ளப்படும். ஆசிரிய வளவிருத்தி, கலைத்திட்டத் தேவைக்கும் மேம்பாட்டுக்குமுரிய ஆளணியினரை உருவாக்குதல் என்பவற்றுடன் அகநிலைவிருத்தி தொடர்புடையது. புறநிலை விருத்தியில் நாட்டுக்குத் தேவையான எதிர்கால மனிதவள ஆக்கத்துக்குரியவாறு மாணவரை உருவாக்குதலும், ஆற்றுப்படுத்துதலும் சிறப்பிடம் பெறும். இதற்கு அனுசரணையாகவே இன்று தொடர் தொழில் ஆற்றுப்படுத்தல் திட்டங்கள் கல்விச் சீர்மியம் முதலியவை பள்ளிக்கூடங்களிலும், பல்கலைக்கழகங்களிலும் அறிமுகப்படுத்தப் படுகின்றன.

மனிதவள விருத்தி என்பது ஒவ்வொருவரது ஆளுமை விருத்தியை நாட்டின் விருத்தியோடும், தொழில்சார்ந்த விருத்திகளோடும் சங்கமிக்க வைக்கும் நடவடிக்கையாகும்.

அதிபருக்குரிய தலைமைத்துவ சிறப்புப் பணிகளுள் ஒன்றாக அமைவது கலைத்திட்டத்தை ஆசிரியரிடமும் மாணவரிடமும் தொடர்புபடுத்தி வைத்தலாகும். முறைசார்ந்த வகையிலும் முறைசாரா வகையிலும் தொடர்பாடலை மேற்கொள்ளும் பொழுது வேகம் (Speed), தெளிவுறத்தருதல் (Accuracy), குறைந்த கிரயம்(Least cost), பாத்திரத் தெளிவு (Role clarity), திருப்தி (Satisfaction), ஆக்கப்பண்பு (Creativity), தழுவும் பண்பு (Adaptability) முதலியவற்றில் கவனம் செலுத்த வேண்டும். ஆசிரியர் மற்றும் மாணவரின் வினைத்திறனை அதிகரிப்பதற்குரிய தொடர்பாடல் ஒழுங்கமைப்பே சிறந்ததாகும்.

பள்ளிக்கூட அபிவிருத்திக்கழகம், பழையமாணவர் கழகங்கள் முதலியவற்றுடனான தொடர்பாடல் பண்புகள் முதலியவை கலைத்திட்ட இலக்குகளை வென்றெடுக்கும் வண்ணம் அமைத்தல் வேண்டும். அவை கலைத்திட்டச் செயற்பாடுகளுக்கு வளம் செய்யும் பணிகளை மேற்கொள்ள வேண்டுமேயன்றி தலையீடு செய்யும் அமைப்புக்களாக இருப்பதை அனுமதிக்கலாகாது.

கலைத்திட்டம் தொடர்பான நான்கு கருத்தியல்களை சமகால ஆய்வாளர்கள் முன்மொழிந்துள்ளனர். அவையாவன

1. ஆறிவோங்கற் புலமைக் கருத்தியல் (Scholar Academic Ideology)
2. சமூக வினைத்திறன் கருத்தியல் (Social Efficiency Ideology)
3. சிறாரை ஆய்ந்தறியும் கருத்தியல் (Child study Ideology)
4. சமூக மீள்கட்டுமானக் கருத்தியல் (Social Reconstion Ideology)

அறிவை ஆழமாகவும் அகலமாகவும் முன்னெடுக்கும் செயற்பாடுகளை ஒழுங்கமைத்து நெறிப்படுத்துதல் அறிவோங்கற் புலமைக்குருத்தியலில் மேலோங்கி நிற்கும். கலைத்திட்டச் செயற்பாடுகள் வழியாக சமூகத்தின் பன்முக ஆற்றல்களையும் வளர்ப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் சமூக வினைத்திறன் கருத்தியலில் வலியுறுத்தப்படுகின்றது.

மாணவரது படிநிலை வளர்ச்சிக்குக் கேற்றவாறு அறிவையும் அனுபவங்களையும் ஒழுங்கமைத்து வளர்தல் சிறாரை ஆய்ந்தறியும் கருத்தியலிலே முன்னெடுக்கப்படுகின்றது. சமூக அநீதிகளை ஒழித்து, வளப்பகிர்வில் சமநிலைகளை ஏற்படுத்தி சமூக ஆற்றல்களை வளர்க்கும் நடவடிக்கைகளை வளர்த்தல் சமூக மீள்கட்டுமானக் கருத்தியலில் வலியுறுத்தப்படுகின்றது.

கலைத்திட்டத்தின் தலைமைத்துவப் பங்கினை ஏற்கும் அதிபர் தெளிவானதும், சமூக நோக்குள்ளதுமான கருத்தியல் ஆழம் மிக்கவராக இருத்தல் இலக்குகளை நோக்கி விரைந்து நகர்வதற்குரிய அடிப்படையாக அமையும்.

பேராசிரியர் சபா.ஜெயராசா
தலைவர், நுண்கலைத்துறை
யாழ். பல்கலைக்கழகம்

முன்னவர் தீதென மொழிந்த பூவாசைகளுடன் பின்னரும் பல பேராசைகள் முளைக்கின்றன.

"ஆசை ஆரைத்தான் விட்டது", "ஆசைக்குத் தக்க அலைச்சல்" என்பன எமது முன்னோரது அனுபவ வயலின் கண்ணே விளைந்த நெல்மணிக்கு நிகரான முது மொழிகள். அவர்களே ஆசையின் வகைகளையும் வரையறுத்திருந்தார்கள். மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை என்பன அவர்கள் அறிந்திருந்த ஆசையின் வகைகள். ஆனால் இவைகளையும் தாண்டி, இப்பொழுது வேறு வகையான ஆசைகளும் கிளைவிட்டிருக்கின்றன என்று இக்காலகட்டத்தில் வாழ்பவர்களுக்குத் தான் விளங்கும் அதாவது மேற்கூறப்பட்ட ஆசைகளுக்கு மேலாக, புகழ், அதிகாரம் என்பன சார்ந்த ஆசைகளும் வேறு பல அற்ப ஆசைகளும் மனிதனை ஆட்டிப் படைக்கின்றன.

"விருப்பம்", "ஆசை" என்னும் பதங்கள் அர்த்தத்தைப் பொறுத்து ஒரே மாதிரித் தோன்றினாலும், ஆசை என்பது விருப்பத்தின் தீவிரப் போக்கையே குறித்து நிற்கின்றது. விருப்பம் என்ற செயலைத் தர்மத்தின் எல்லையுட் கட்டுப்படுத்தலாம். ஆனால் ஆசை என்பது அடங்காத ஒன்று. ஆசை கொண்ட பொருளை அடையும் வரை அதற்காகச் செயல்பட வைப்பது. அச் செயல்களோ தர்மத்தின் எல்லையையும் தாண்டிச் செல்லக்கூடியவை.

இந்த ஆசையின் வகைகளை நாம் ஆராய்ந்தால், முதல் மூன்று வகையான ஆசைகளையும் குறை களைந்து நிறைவை நோக்குங்கால் மனித வாழ்க்கைக்குத் தேவையானவை என்று நியாயப்படுத்தலாம் போலத் தோன்றுகின்றது. அதாவது உறையுள், உழவுத்தொழில் போன்றவைக்கு நிலம் வேண்டும், இல் வாழக்கைக்கு ஒரு பெண் வேண்டும், வள்முடன் வாழப் பொருள் வேண்டும் என்று கூறிக் கொள்ளலாம். பின்னே கூறப்பட்ட இரண்டு ஆசைகளும் மனிதனது வாழ்க்கைக்கு மிக முக்கியமானவை என்று கொள்ள முடியாது. அவைகளின் மேல் கொண்ட மோகமானது மனிதப் பண்புகளில் நின்றும் மனிதனை விலகவே செய்யும் தன்மை வாய்ந்தவை. அதிகார மோகம் மனிதனை மனிதன் அடிமையாக்க விளைவது. தர்மத்திற்கு ஒவ்வாதது. புகழ் என்பது தேடி வரவேண்டிய ஒன்று. அலைந்து உலைந்து தகாத வழிகளில் பெற்ற புகழ், சில வேளைகளில் இகழ்ச்சியாக மாறித் தீராத மன வேதனைகளையும் தரக்கூடும்.

தகுதியுடையவனுக்கு அவனுக்குத் தெரிந்தோ தெரியாமலோ புகழ் தேடி வருகின்றது. விஞ்ஞானத்துறை, இலக்கியத்துறை, விளையாட்டுத் துறை இவைகளில் சாதனை புரிபவர்கள், தம்முள்ளே உந்திப் பொருமிக் கொண்டிருக்கும் தமது ஆற்றலுக்கும் திறமைக்கும் வடிகாலாகவே தமது ஆக்கங்களைக் கருதுவதுடன், ஆத்மீக திருப்தியினையும் பெற்றுக் கொள்கின்றனர். புகழ் என்பது இவர்கள் தேடிப் போகாத ஒன்று.

புகழுக்கு அருகதை அற்றவனே புகழைத் தேட எத்தனையோ தந்திரோபாயங்களைக் கையாளுகின்றான். சிலர் சுலபமான முறையில் புகழ் சம்பாதிப்பதன் பொருட்டுச் சங்கங்கள், நிறுவனங்கள், ஸ்தாபனங்கள் போன்றவற்றை நிறுவி, பல நோக்கங்களை அடைவதன் பொருட்டு உழைப்பது போல நடித்து நிதிகளையும் திரட்டிக் கொள்கின்றனர். காலத்திற்குக் காலம் புகழுக்காக விளம்பரம் செய்து, பட்டமளிப்பு விழாக்களையும், பொன்னாடை போர்த்தும் வைபவங்களையும் தவறாது நிகழ்த்தி விடுகின்றனர். இக்கைங்கரியங்களுக்குரிய சீரிய பண்பினைப் பெற்றிருக்கின்றார்களோ வென்றால் இல்லையென்றே கூறிவிடலாம்.

குறிப்பாக, தானதர்ம செயல்களில் ஈடுபடுவோர்க்கு, தர்மசிந்தனையானது பரம்பரைச் சொத்தாகவோ, அன்றேல் பயிற்சி மூலமாகவோ இரத்தத்தில் இரண்டறக் கலந்திருக்க வேண்டிய ஒன்று. அன்னதானம் செய்வோர் ஏழைகளைக் கண்டவுடன், அருவருப்புடன் ஓடி ஒழிப்பதும், செல்வந்தர்களை மாத்திரம் தகுந்த மரியாதையுடன் நடாத்தி உணவு பரிமாறுவதும் அன்னதானத்தின் பண்பினையே தலைகீழாக மாற்றி விடுகின்றது. அதைப் போன்றே அனாதை இல்லங்களை அமைத்து நிர்வகிப்பது என்பதும் சுலபமான காரியம் அல்ல. உள்ளத்தால் பாதிப்பு அடைந்து நெறி தவறி நடந்து கொள்ள எத்தனிக்கும் குழந்தைகளை நன்கு பராமரித்து, வழிநடத்துவது என்பது உளவியல் விற்பன்னர்களாலேயே இயலக்கூடிய காரியம். இல்லையேல் நோக்கம் உரிய முறையில் நிறைவேறாது போய்விடும். உண்மையான அநாதைக் குழந்தைகளைச் சில அநாதை இல்லங்கள் ஏற்றுக்கொள்வதில்லை. பணம் வசூலிக்கும் நோக்குடன் பெரும்பாலும் பணவசதி பெறக்கூடிய அநாதைக் குழந்தைகளே அங்கு அனுமதிக்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றனர்.

சிலர் பொது நிதியத்திற்குரிய பணத்தையே தருமம் என்ற பெயரில் வாரி இறைத்துப் புகழ் தேட முனைகின்றனர். பணம் போகும் இடமோ பசையுள்ள இடம். அதாவது தானம் கொடுப்பவரின் புகழை மறவாது பாடக்கூடிய இடம். வலது கை கொடுப்பதனை இடது கை அறியக்கூடாது என்பது தான் தர்மத்தின் இலட்சணம். ஆனால், பறைசாற்றிப் பத்திரிகை விளம்பரங்களுடன் நடைபெறுவது தான் தர்மம் என்றாகி விட்டது. இக்காலம் ஆக்க பூர்வமான நிகழ்ச்சிகளுக்கு, யாசிப்பவர்களின் சீரிய நோக்கம் அறிந்து யாசித்த தொகையினுக்கு மேலாக, தனது சொந்தப் பணத்தினின்றும் வழங்குவது மட்டுமல்லாமல், தனது பெயரை ஓரிட்த்திலேனும் குறிப்பிட்டுவிட வேண்டாம் என்று இரந்து கூறும் பெருந்தகைகளும் இலைமறை காய் போல இருக்கிறார்கள் என்பது ஒரு அதிசயம். அவர்கள் தெய்வத்திற்கு அடுத்த நிலையில் வைத்துப் பூசிக்கப்பட வேண்டியவர்கள்.

மனிதனை ஆட்டிப்படைக்கும் இன்னுமொரு ஆசை, அதிகாரம் செய்யும் ஆசை, தொழில் தெரிவு செய்யும் போது கூட உச்ச அதிகாரம் கொண்ட தொழில்களிலேயே நாட்டங் கொள்கின்றனர். அதிகார பலத்தைக் கொண்டு சுய தேவைகளைக் கூடப் பூர்த்தி செய்து கொள்கின்றனர்.

வேறு பல அற்ப ஆசைகளுடன், தரக்குறைவாக நடந்து கொள்ளும் பாவ ஆத்மாக்களும் சமுதாயத்தில் உலாவி வருகின்றனர். மற்றவர்களுடைய சாதனைகளைக் கபடமாகக் கவர்ந்து தனதாக்கிக் கொண்டு புகழ் சம்பாதிக்க விரும்புபவர்களும், பதவிகளை வஞ்சகமாக அபகரிப்பவர்களும், பட்டதாரிப் பரீட்சையில் சித்தியெய்யாது தனக்குத் தானே பட்டதாரி என்னும் பட்டத்தினைக் களவாகச் சூட்டிக் கொள்பவர்களும், சூழ்நிலையைச் சாதகமாக்கிக் கொண்டு மிகுதிப் பணத்திற்குப் பதிலாக தம்மிடமுள்ள வேறு பொருள்களை விற்பனை செய்யும் சில வர்த்தகர்களும், பயணிகளிடமிருந்து ஐம்பது சதத்திற்குப் பதிலாக ஒரு ரூபாவை அபகரித்துக் கொள்ளும் பேரூந்து நடத்துநர்கள் சிலரும் இன்னும் சில வகையினரும் இந்த ரகத்தில் அடங்குவர். இவர்கள் சமுதாயத்திற்கு அநீதி இழைப்பவர்கள்.

இத்தகைய தகாத, நியாயமற்ற ஆசைகள் மனிதனை மனித நேயப் பண்பினின்றும் விலகிச் செல்ல வைப்பது மட்டுமல்லாமல் மானிட வர்க்கத்திற்கே ஒரு சாபக் கேடாகவும் மாறி விடுகின்றது. வேண்டாத ஆசைகளை விலக்கி, சீரிய பண்பினைப் பேணிப் பின்பற்றி வளமான வாழ்வை மேற்கொள்ள மனித சமுதாயம் விழைய வேண்டும்.

திருமதி S.கல்யாணசுந்தரேசன்
Bsc, Dip-in-Edu, MA-in-Edu
முன்னாள் அதிபர்,
ஓய்வு பெற்ற பிரதிக்கல்விப் பணிப்பாளர்.

பணிக்குழு வும் அபிவிருத்தியும்

Bureaucracy and Development

நவீன அரசுகள் பலவும் அபிவிருத்தி மூலம் மாற்றங்களை எதிர்பார்க்கின்றன. நவீனத்துவத்தின் அடிப்படையில் அரசியல், சமூக, பொருளாதார முன்னேற்றத்தினை விழைகின்றன. மாற்றங்கள் பொதுவாக பொருளாதார சூழ்நிலைகளில் ஏற்பட்டாலும் அவை சமூக மற்றும் அரசியல் தாக்கங்களை உண்டாக்குகின்றன. மேலும் இவை தனிமனித சுதந்திரம், அடிப்படை வசதிகள், வாழ்க்கைத்தரம் ஆகியவற்றையும் முன்னேற்றுகின்றன. இதில் அடிப்படை மனித விழுமியங்களும் பாதுகாக்கப்படவேண்டும்.

மூன்றாம் உலகநாடுகள் யாவும் வளர்முக நாடுகளாகக் கருதப்படுகின்றது. இவை பெரும்பாலும் கிராமிய வாழ்க்கையை அடிப்படையாக கொண்டுள்ளன. உதாரணமாக இந்தியா, இலங்கை போன்றவற்றில் எழுபத்தைந்து சதவீகிதமான மக்கள் கிராமங்களிலேயே வாழ்கிறார்கள். ஆகவே வளர்முக நாடுகள் பலவும் கிராமியப் பொருளாதாரத்திலேயே தங்கியுள்ளன. அதுவும் விவசாயம், சிறு கைத்தொழில் ஆகியவற்றில் பெரும்பான்மையான மக்கள் தங்கியுள்ளனர். ஆகவே நவீன அபிவிருத்திக் கோட்பாடு கிராம அபிவிருத்தியை அடிப்படையாக கொண்டுள்ளது. இந்தியாவில் பத்து ஜந்தாண்டு திட்டங்கள் மூலம் ஒருங்கிணைந்த தேசிய அபிவிருத்தியை உண்டுபண்ணியுள்ளனர்.

நவீனத்துவம் அபிவிருத்தி என்பவற்றில் அரசியல் தலைமைத்துவத்துடன் நிருவாக அமைப்பின் பங்களிப்பும் இன்றியமையாததாகும். ஆரசியல் பீடம் நாட்டின் முழு தேசிய கொள்கையினை வகுக்கின்றது. மக்களின் தேவைகளைக் கண்டறிந்து மக்களின் வாழ்க்கை தரத்தை வளம்படுத்த அரசியல் தலைவர்கள் முனைகிறார்கள். அதேவேளை இத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு நிருவாக அமைப்பிடம் தங்கியுள்ளது. அரசு வகுக்கின்ற திட்டங்களை சரியாக அமுல் செய்து, நடைமுறைப்படுத்தி நாட்டிற்கு நன்மை தேடித்தருபவர் அரசு நிருவாகிகளே ஆவர். இவர்களை சாதாரண அலுவலர்களாகவும், உயர்மட்ட உத்தியோகத்தர்களாகவும் வகைப்படுத்துகின்றன. உயர்மட்ட நிருவாகிகளை பணிக்குழு என Bureaucracy அழைக்கிறார்கள். இவர்கள் நிரந்தர உத்தியோகத்தவர்களாகவும். அனுபவம் பெற்ற உயர் அதிகாரிகளாகவும், துறைசார்ந்த நிபுணர்களாகவும் உள்ளனர். இந்த உயர் அதிகாரிகளே அரசியல் தலைவர்கள், மற்றும் அமைச்சர்களுக்கு அறிவுரை வழங்குபவர்களாகவும் உள்ளனர். இவர்களிடம் எல்லாத் தரவுகளும் சிவில் நிருவாகத்தில் அனுபவமும் உள்ளதால் அவர்கள் தனிப்பட்ட முறையில் பணிக்குழுவென அழைக்கப்படுகிறார்கள்.

நாட்டின் அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப்படுத்துவதும் அல்லாது விடுவதும் பணிக்குழு கையில் தான் தங்கியுள்ளது.

பணிக்குழு தனது நீண்டகால அனுபவத்தின் மூலம் சில விழுமியங்களை வளர்த்துக் கொண்டுள்ளது என்று மாக்ஸ் வெபர் கூறுகிறார். அது முதலில் ஒரு தொழில் அமைப்பாக உருவாகியுள்ளது. அதாவது வங்கியாளர். ஒரு வைத்தியர் போன்று அனுபவம் வாய்ந்த அரச நிருவாகியும் ஒரு தொழில் சார்ந்த நிபுணரே ஆவர். அந்த சிவில் நிருவாகிகளுக்கு தனிப்பட்ட உரிமைகளும் அதிகாரங்களும் உள்ளன. அவர்கள் திறமையாக அன்றாட பணிகளில் ஈடுபடுகிறார்கள். சிலர் சிறப்பான பயிற்சியும் தேர்வுகளில் சித்தியும் அடைந்துள்ளார்கள். பணிக்குழுவினர் அரசாங்கத்திற்கு வேண்டிய தரவுகளைத் தந்து ஆலோசனை கூறினாலும் அரசியல் தலைவர்களே கொள்கை தீர்மானம் எடுப்பார்கள் என்பது மக்களாட்சி பாரம்பரியமாகும். எனவே அரசியல் தலைவர்கள் பேரும் புகழும் பெற சிவில் நிருவாகிகள் "அனாமதேயர்களாக" நின்று பணிபுரிகிறார்கள்.

பணிக்குழுவினருக்கு பொறுப்புகள் அதிகம், அவர் சிவில் நிருவாகத்தில் சேர்ந்துகொண்ட நாளிலிருந்து இளைப்பாறும் வரை பணியாற்றுவதால் அனுபவமும் பொறுப்பும் பொறுமையும் வேண்டப்படுகிறது. உயர் அதிகாரிகள் அதிகாரத்தின் இருப்பிடமாக உள்ளதால் பெரும் பொறுப்பும் தேசிய நலனும் அவர்களிடம் எதிர்பார்க்கப்படுகிறது. இவர்கள் அபிவிருத்தித் திடடங்களை நிர்வகித்து நாட்டின் நலனை பேணுகிறார்கள் அவர்கள் தங்கள் அலுவலகங்களுக்கு நேரத்திற்கு வந்து மற்றப் பணியாளர்களுக்கு உதாரணமாக விளங்குகிறார்கள். அதிகாரமும் பொறுப்புணர்வும் இணைந்துள்ளதனை பணிக்குழுவினரிடம் காணலாம். தேசிய நிதியைக் கையாழுவதிலும் அக்கறையும் பொறுப்புணர்ச்சியும் வேண்டப்படுகிறது. மூத்த அலுவலர்கள் ஏனைய உத்தியோகத்தவர்களுக்கு நல்ல உதாரணமாக விளங்கி பணிக்குழு விழுமியங்களை முன்னெடுக்க வேண்டும். பொது ஆட்சி இயலில் இது முக்கியமாகும்.

உயர்மட்ட நிருவாகிகளும் அபிவிருத்தியும்

சிவில் நிருவாக சேவை அமைப்பில் உயர்மட்ட நிருவாகிகள் நாட்டின் அபிவிருத்தியில் பெருங்பங்கு வகிக்கின்றனர். இவர்கள் தமது பிரத்தியேக பயிற்சி மற்றும் அனுபவம் மூலம் உயர்தரத்தை அடைகிறார்கள். முக்கியமாக விஞ்ஞான தொழில் நுட்ப விஷயங்களில் தேர்ச்சி பெற்றுள்ளனர். கணித, வணிகத்துறைகளில் விஷேச பயிற்சி பெற்று பொதுநிருவாக துறைக்கு சேவையாற்றுகிறார்கள். சிலர் வெளிநாடுகளுக்குச் சென்று தனிப்பட்ட அனுபவம் பெறுகிறார்கள். உயர்மட்ட நிருவாகிகளோ அரசியல் தலைவர்களோடு தொடர்பு கொண்டு பணியாற்றுசிறார்கள். அதனால் அரசியல் சிக்கல்களையும் நிருவாக பிரச்சினைகளையும் எளிதில் விளங்கிக் கொள்ளுகிறார்கள்.

அபிவிருத்தி என்பது சமூக, அரசியல், பொருளாதார வளர்ச்சியை குறிப்பதாகும். பொருளியல் சிந்தனையில் கூறுவதாயின் நிலைத்த வளர்ச்சியை Sustainable Growth அது குறிக்கும். வளர்ச்சி என்பது பொருளாதார வளர்ச்சியை அநேகமாக குறிக்கும். ஏனெனில் வளர்முக நாடுகள் பலவும் ஏழ்மையில் உழல்கின்றது, வறுமையில் வாடுகின்ற இந்நிலையைப் போக்க பொருளாதார அபிவிருத்தி அடிப்படையாகக் கருதப்படுகிறது. அதன் மூலம் மக்கள் வாழ்க்கை தரத்தை வளம்படுத்தலாம். பொருளாதார அபிவிருத்தி ஏனைய சமூக, அரசியல் அபிவிருத்திகளை உண்டு பண்ணும் என்று நம்புகிறார்கள்.

சகல விதமான அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் நாட்டின் நிருவாகத்துறை நடுநாயகமாக விளங்குகிறது. உயர்நிலை அதிகாரிகள் அரசியல் தலைமைத்துவத்துக்கும் சாதாரண சிவில் உத்தியோகத்தவர்களுக்கும் நடுவில் நிறகின்றனர். உயர் அதிகாரிகள் தமது அனுபவம், பயிற்சி முதலியவை காரணமாக அபிவிருத்திப் பணிகளில் முக்கிய பங்கினை வகிக்கிறார்கள் வளர்முக நாடுகளான இந்தியா, இலங்கை, மலேசியா, நைஜீரியா போன்ற நாடுகளில் உயர்நிலை அதிகாரிகளின் சேவை நன்கு உணரப்படுகிறது. இவர்கள் நீண்டகால அனுபவம் வாய்ந்தவர்கள், அதற்கு ஏற்ப செல்வாக்கும் பெற்றவர்கள்.

விவசாய அபிவிருத்தி

வளர்முக நாடுகள் பலவும் பின்தங்கிய சமுதாய அமைப்பைக் கொண்டுள்ளன. பெருபான்மையான ஏழை வறிய மக்கள் விவசாயத்தினை நம்பி வாழ்கிறார்கள். அவர்களை அபிவிருத்தி நிருவாகிகள் சென்றடைவது சிரமமான காரியமாகவே உள்ளது. என்று உலக அபிவிருத்தி அறிக்கை 1983 கூறுகிறது. காரணம் என்னவென்றால் அரச நிருவாகிகளுக்கு இவர்களின் நிலைமையை உணர்ந்து கொள்ள முடிவதில்லை மேலும், ஏழை விவசாயிகளுக்கு நேரகாலத்திற்கு உதவுவது என்பது அதனிலும் சிரமமானதாகும் என்று உலக உணவு ஸ்தாபனம் கூறுகிறது. இவை எல்லாம் உலக வறுமை நாடுகள் எதிர்கொள்ளும் அபிவிருத்தி பிரச்சினைகள் இது நான்கு தசாப்தங்களின் பின்பும் பரவலாக உணரப்படுகிறது.

வறுமை ஒழிப்பினை அடிப்படையாகக் கொண்ட விவசாய அபிவிருத்தியில் கிராமிய மட்டத்திலான அரச அலுவலர்கள் சூழ்நிலைக்கு ஏற்ப உதவிகள், மானியங்களை வழங்க வேண்டும், பாரம்பரிய நடைமுறைகளை மாற்றி விஞ்ஞானம், தொழில்நுட்ப துறைகளில் முன்னேற்றம் காண வேண்டும். இந்தியாவில் பசுமைப் புரட்சி மூலம் 1960 – 70 களில் கோதுமை உற்பத்தியில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டது. தாய்லாந்து, சீனா, இந்தியா ஆகிய நாடுகளில் நெல் உற்பத்தி பெருகியது. 1980 களில் இந்தியாவில் வெண்மை புரட்சி என அழைக்கப்பட்ட பால் உற்பத்தி பெருகியது. பருப்பு வகைகள், எண்ணை மற்றும் சிறுதானிய வளர்ச்சி காணப்பட்டது. கிராமங்களில் போக்குவரத்து பெருகி நெடுஞ்சாலைகள் அமைக்கப்பெற்று கிராமங்களோடு தொடர்புகளை உண்டாக்கினார்கள். கிராமமக்களுக்கு மின்சாரம். குடிதண்ணீர் வசதிகள், அடிப்படைக் கல்விச்சாலைகள் ஏற்படுத்தப்பட்டன.

கிராமங்களில் வேலை வாய்ப்புக்கள் மூலம் குடும்ப வருவாய் ஒரளவு வளர்ச்சி கண்டது. பஞ்சாயத்து அமைப்புகள் மூலம் சனநாயகமும் அரசியல் சமூக பொருளாதார அபிவிருத்தியும் உணரப்பட்ட. இந்தியாவிலும் ஏனைய அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் பலவற்றிலும் அதிகாரப் பரவலாக்கல் முறை மூலமாக கிராமங்கள் பயன்பெறுகின்றன. அரச நிருவாகிகள் பல்துறைகளிலும் பயிற்சி அளிக்கப்பெற்று ஏழை மக்களோடு இணைந்து செயலாற்ற பணிக்கப்படுகிறார்கள். இதற்காக சங்கப் பொது நிருவாக ஆய்வு நிறுவனங்களும் பயிற்சி நிலையங்களும் தோற்றியுள்ளன.

அதனால் உயர் நிலை அதிகார வர்க்கம் தமக்கே உரித்தான சில பண்புகளையும் வளர்த்துக் கொண்டுள்ளார்கள். அவர்கள் அரசியல் அதிகாரத்திற்குள் தனியானதொரு அதிகார வர்க்கமாக உருவெடுத்துள்ளனர். தங்களது அதிகார தோரணையில் பொது மக்கள் தொடர்பினைச் சில சமயம்

உதாசீனம் செய்கிறார்கள். ஆனால் அபிவிருத்தியோடு தொடர்புடைய அதிகாரிகள் சிறந்த மக்கள் தொடர்பினையும் பேண வேண்டும். அப்பொழுதுதான் சமூக அரசியல் மற்றும் பொருளாதார அபிவிருத்திகளை மக்கள் அனுபவிக்க முடியும். திருவாகம் என்பது மக்களுக்காவே என்பதை யாரும் உதாசீனம் செய்துவிட முடியாது.

கொழுப்புடல் - விஞ்ஞானத்தோற்றம்

பெரும்பான்மையான மனிதர்களிலும், அனைத்து விலங்குகளிலும் உடலமைப்பியல் ஆனது செயற்பாட்டு வினைத்திறன் கூடிய கட்டமைப்புள்ள உடற்கூட்டமைப்புகளில் தங்கியுள்ளன.

"மட்டுமீறிய கொழுப்புடல்" (obesity) எனும் சொற்பதம் ஆனது Latin மொழி மூலத்திலிருந்து உணவு உட்கொள்ளலினை வர்ணிப்பதாகவும், உரோமர்களின் பழக்கவழக்கங்களில் இவ்விடயமானது மீதூண் விருப்புடைய பண்பாகவும் கொள்ளப்பட்டது. மேலும் Shakespeare தன் கவிதைகளிலும் இத்தகய ஒரு விளக்கத்தினை கொண்டிருந்நதார்.

இம்மீதூண் விருப்புடைய பண்பானது உடலில் மேலதிக கொழுப்புப் படிவும் நிகழ்வு என இலகு முறையில் வரையறுக்கலாம். பல்வேறு வகையான உலகப் புகழ் பெற்ற கொழுப்புப் படிவற்ற மனித உடற் பருமன் அளவுகள் உலக சான்று புத்தகத்தில் (World Guinnex Records) பதிவு செய்யப்பட்டும் உள்ளன.

இப்பண்பானது வெவ்வேறு மனித சமுதாயங்களுள் அவர்களது சமூகக் கலாச்சார பண்பியல்களுக்கு அமைய ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. ஆதிகால மருத்துவ பதிவுகளின்படி 20% க்கும் அதிகமான மேலதிக உடற் கொழுப்புக் கொள்ளளவு ஆண்களிலும், 28% க்கும் அதிகமான அளவு பெண்களிலும் இப்பண்பின் அடையாளங்கள் என கருதப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் இதனை நேரடியாக உடற்கூற்றுக்களின் மூலமோ (Dissection) அன்றி மறைமுகமாக சிக்கலான உடற்றொழிலியல் கணிப்பீடுகள் மூலமாகவோ துணிவது சாத்தியமற்றது. மேலும் உடற்பயிற்சி விளையாட்டுகளில் ஈடுபடுவோர் தமது உடற்பருமன் அதிகரிப்பினை கொழுப்பற்ற மெலிந்த தசையின் வளர்ச்சி அதிகரிப்பின் (lean muscle increment) மூலம் உடல்நிறை அதிகரிப்பினை பெற்று வளமுறுகின்றனர். மேற்குலக நாடுகளில் இப்பண்பானது நிகழ்கால பாரிய போசணைப் பிரச்சினையாகக் காணப்படுகின்றது. இருப்பினும் இவ்விடயம் Shakespeare காலந்தொட்டு வலியுறுத்தப்படும் ஆரோக்கியமான சுகவாழ்வுக்குரிய முக்கிய அம்சமாகவுள்ளது.

பண்டைய காலந்தொட்டு இம் மீதூண் விருப்புப் பண்புள்ள சமூக மனிதர்களிடையே பொதுவாக நீரிழிவு, ஈரலரிப்பு, உயர்குருதி அமுக்கம், தொடர் இதயக் கோளாறுகள், பரிமாணம் குறைந்த நுரையீரல் காற்றூட்டல் (Asthma) போன்றனவும் ஏனைய இருதய சுற்றோட்டக் கலன் தொகுதிக்கான சிறுநீரக நோய்கள் போன்றனவும் கண்டறியப்பட்டுள்ளன. பொதுவாக மனிதனிலும் விலங்குகளிலும் உடலின் கொழுப்பு கொள்ளடக்கமானது சக்தியின் சேமிப்பாக பரிணமிக்கின்றது. வெப்ப இயக்கவியல் விதிகளின்படி சக்தி செலவினங்களானது உயிரினத் தொழிற்பாட்டின் சக்தி உட்கொள்ளளவிற்கு சமனாக விளக்கப்படுகின்றது. எனவே எம்முள் சிலர் இத்தகையதொரு பண்புடைமைக்கு எளிதில் ஆளாகி விடுகின்றார்கள். இக்குணாதிசயம் சில தேர்ந்தெடுக்கப்படக்கூடிய குடும்பங்களிலும், தனிநபர்களிலும் தலைமுறையுரிமை அடையும் இயல்பாகச் சந்ததிகளினூடாகக் கடத்தப்படுகின்றது.

இத்தலைமுறையுரிமையும் பண்புக் காரணிகளானது நிகழும் சுற்றாடல் காரணிகளின் தாக்கங்களினால் மேலும் வலுவுறுகின்றது. அல்லது தோற்றவமைப்பின்றி (Phenotype) விளங்குகின்றது.

மேலும் இப்பண்பானது ஏனைய உடற்கூற்றியல், உடற்றொழிலியல் உடல்நிலைக் கோளாறுகளுடன் மனிதர்களிடையே சிக்கலான அசாதாரண தோற்றவமைப்புப் பெறுகின்றது. (Syndroms) இத்தகையான மிகையான நிலைகள் மருத்துவப் பதிவுகளிலிருந்து அறியப்பட்டுள்ளன. எனினும் வளர்ந்து வரும் மருத்துவ விஞ்ஞானத்தின் ஆய்வின் அடிப்படையில் எந்தவொரு அனுசேப மாற்றமும் நேரடியாக இப்பண்பினைத் தூண்டுவதில்லை. ஆனால் தலைமுறையுரிமைக் காரணியின் முற்பரிவு சுற்றாடல் தாக்கங்கள் இதனை ஊக்குவிக்கின்றன.

இப்பண்பினது தொடர் விஞ்ஞானக் கற்றல்களில் கால இடைவெளிக்கான உடற்பரிமாண அளவீடுகளும், உணவு உட்கொள்ளல் அளவுகளும், பரிமாறும் வாயு, உடல் வெப்பம், உடல் வேலை போன்றவற்றின் அளவுகளும் அவற்றின் சக்திப் பங்கீட்டிற்கன பொருட்படுத்தல்களும் மற்றும் உடற்கூட்டமைப்பு (Composition) மறைமுக மதிப்பீடுகளும் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளன.

பொதுவாக விலங்குகளில் மெண்டலின் கருதுகோட்பாட்டின் பல் பிற்பபு மூலத்திற்குரிய காரணிகளின் (Psyganic) தலைமுறையுரிமை அடைதல் காணப்படுகின்ற போதிலும் மலட்டுத்தன்மை போன்ற அறிகுறிகளும் இப்பண்புடன் இணைந்து ஒவ்வாத உயிர் மரபுப் பெற்றார்களின் பெறுதி சந்ததிகளில் அறியப்பட்டுள்ளது. மேலும் உணவுப் பழக்கவழக்கங்களில் உயர் கொழுப்புள்ள உணவுகளை வலிந்து உட்கொள்ளச் செய்வதன் மூலமும், கட்டுப்படுத்தப்பட்ட உடற்செயற்பாடுகளை அனுமதிப்பதன் மூலம்ம் விலங்குகளில் மீதூண் விருப்புடைய நிலை ஆய்வுகளில் அறியப்பட்டுள்ளது.

உடற்றொழிலியியல் ஆய்வு வரலாற்றில் இப்பண்பானது அகஞ்சுரப்புயியலில் பரிவகக்கீழ்கட்டமைப்பின் வயிற்றுப்புற நடுப்பகுதி வரையிலான கருப்பகுதி ஆனது gold thiro slucose, mono sodium slutamate ஆகிய இரசாயன பதார்த்தங்களினால் பாதிப்புற்று, மேல்வரும் நிலைக்குள்ளாகியது. இங்கு கொழுப்பு அனுசேப மாற்றங்களும், உடல் அனுசேப மாற்றங்களும் இப்பண்பின் இயல்பினை தோற்றுவித்து மாறுபாடடையச் செய்கின்றது.

கொழுப்புக்கலங்களில் (Adipoutes) தனியான பாரிய கொழுப்புத்துளி குழியவுருவினை வெளிப்புறமாக ஒதுக்கியுள்ளது. இக்கலங்களின் இழைய அங்கம் ஆனது முலையூட்டிகளின் வியத்தத்தில் பாரியதொரு சேமிப்பு அங்கமாக உருவெடுக்கின்றது.

உயர்தர விஞ்ஞான ஆய்வின் இழையவியல் அறிவும், கொழுப்பிழைய விருத்தி பற்றி கண்டுபிடிப்புகளும் பல புதிய விளக்கப் பாதைகளை இந்நூற்றாண்டின் பெறுதிகளாக பெற்றுள்ளன.

R.Schoenheimer and D.Rittenberg ஆகியோரின் முதன்முதலான கட்டுரைகள் (1935, 1936) கதிர்வீச்சுச் சமதானி ஐதரசன் கொண்ட நீரைப் பயன்படுத்தி கொழுப்பு இழைய உருவாக்கலும், அழிவும் பற்றிய ஆய்வுகளை முன்னுரைத்துள்ளன.

மேல்வரும் பண்பு நிலையில் கொழுப்பின் உயிரிசாயன பெறுமதி இனது படிவு, அசைவு, ஒட்சியேற்றம் ஆகியன அறியப்பட்டுள்ளது. Trislyceride இன் மூலமானது சுயாதீன கொழுப்பமிலங்களிலும், குளுக்கோசிலும், எசுத்தராக்கப்பட்ட இளிசரோல் - 3 – பொசுபேற்று என்பனவற்றினால் நிர்ணயிக்கப்படுகின்றது.

தற்போதைய மருத்துவ விஞ்ஞானப் பயன்பாட்டில் மிகவும் பிரபல்யம் பெற்றுள்ள அகஞ்சுரப்பு இன்சுலீன் (Insulin) ஆகும். இது இலங்கைகான் தீவுகள் உருவாக்கப்பட்ட போதிலும் (Langerhann's Islets) கொழுப்பமிலத் தொகுப்பிலும், எசுத்தரரக்கத்திலும், நேரடி பங்கு வகிக்கின்றது என அறியப்பட்டுள்ளது.

Trislyceride களின் தொழிற்பாடு ஆனது கொழுப்பு இழைய அமைப்புத் தூண்டலில் Cyclic AMP என்னும் நொதியத்தினூடு தொழிற்படுகின்றது. மறுபுறம் கொழும்புடைதல் (Lipolysis) ஆனது உடல் உணவற்ற நிலையில் தூண்டப்படுகின்றது. (உ+ம் குளிர்காலத்தூக்கம்) இதனால் இச்சேர்வைகளின் நடத்தை கொழுப்பு இழையத்தின் பருமன் அதிகரிப்பில் விளைவாகின்றது. இதன் மூலம் மிகை ஊட்டத்தால் ஏற்படும் உறுப்புப்பொருமல் எனும் நிலை (மருத்துவப் பதிவுகளில் Hyperplasia நிலை) உடற்கொழுப்பு அதிகரிப்பினால் ஏற்படுகின்றது.

எனினும் இந்நிலையில் பல்வேறு முக்கிய அனுசேப நடவடிக்கைகளும் மறுசீரமைக்கப்படுகின்றன. குறிப்பாக குருதிப்பாய இன்சுலீன் அளவு, குளுக்கோசு ஒட்சியேற்றம், கொழுப்பமில உற்பத்தி, கொழுப்படைதல் அகஞ்சுரப்பு தொழிற்பாடு, இன்சுலீன் எதிர்ப்புத்தன்மை ஆகியனவற்றில் அதிகரிப்பு அல்லது மாறுபாடு உண்டு.

எவ்வாறாயினும் வளர்ந்து வரும் விஞ்ஞான ஆய்வுகளின் படி, வெப்பவியக்க விதிகளில் பூரணமாக உடற்சக்தி அனுசேபங்கள் ஒழுகுகின்றன. இதனால் அதிகரிக்கும் கொழுப்புடலை சக்தியின் சேமிப்பிடங்களாக கருத நேரிடினும் நடைமுறையில் சக்தி ஊட்டம் உணவு ஊட்டலின் பெறுமானமாகவும், அகந்துறிஞ்சப்படும் சமிபாடற்ற உணவின் பெறுமானமாகவும், குறிப்பிட வாய்ப்புள்ளது.

சக்தி வெளிப்பாடானது மேற்கொள்ளும் உடற்பயிற்சி வகைகளிலும், அடிப்படை அனுசேப வேகத்திலும், (Basic Mutabolic Rate) (ஓய்விலும், 12 மணித்தியால உணவூட்டலின் பின்னரும்) தங்கியுள்ளது. இவை Na+ K+ ATPase நொதிய அமைப்பின் 20-25% பூரண கால வெப்பத் தோற்றத்திலும், (Dietary Induced) உணவுத்திட்ட தூண்டலுக்கான வெப்பத்தோற்றத்திலும், நீடித்த அல்லது நாட்டப்பட்ட அதி உணவூட்டல் சத்தி செலவினத்திலும் வெளிப்படையாகத் தங்கியுள்ளது.

இவை அனைத்தும் செயற்பாட்டு ரீதியான மனிதனின் ஒரு சீர்த்திட நிலையிலுள்ள சீரான உடற்றொழிலியலில் மையமாக் கொண்டு செயற்படினும் அவற்றின் கோளாறுகள் உடற்கூற்றியலில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துவதோடு, அனுசேபச் சீர்கேடு, உடற்றொழிலியல் சீர்கேடு, உடற்பரிமாண ஒழுங்கீனங்கள், மேலும் நோயுறல் ஆகியன அசௌகரியங்களையும் வேதனைகளையும் ஏற்படுத்துகின்றன. மறுபுறத்தே இயற்கையின் பராமரிப்பில் விலங்குகளில் கால பாதையில் அதிகரித்த கொழுப்பு படிவு அவற்றின் இனப்பெருக்க வீரியத்தை அதிகரித்தும் சந்ததி விருத்தியை உறுதி செய்தும் உள்ளது.

(இக்கட்டுரை Science Progress 1981 இனை தழுவி அமையப்பெற்றுள்ளது)

Mr. W. வெங்கடேஷ் லக்ஷ்மன்
(MSC NORMAN OKLAHIMA USA)
(B.Sc. Sp 2001, Hons, Jaffna SL)
சிரேஷ்ட விரிவுரையாளர், விலங்கியல் துறை,
யாழ்ப்பாண பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம், இலங்கை.

தந்திரோபாய உருவாக்கற் செய்முறையில் வெளிச்சூழல் ஆய்வின் பங்கு
The Role of the External Environment Analysis in the Strategy making process

1.0 அறிமுகம்

தனிநபர்களால் எதிர்நோக்கப்படும் சூழலானது எவ்வாறு ஒவ்வொரு தனிநபருக்கும் தனித்துவமானதாகக் காணப்படுகின்றதோ, அதேபோன்று ஒவ்வொரு நிறுவனங்களால் எதிர்நோக்கப்படும் சூழலும் தனித்துவமானவையாக உள்ளன. இதனாலேயே சூழல் ஆய்விற்கென பொதுவான அணுகுமுறையொன்றினை உருவாக்குவது சிரமமாகக் காணப்படுகின்றது. நிறுவனங்களின் பரிசோதனை, ஆராய்ச்சி திட்டமிடலாளர்கள் சூழல் ஆய்வினை மேற்கொள்ள மூன்றுகட்ட அணுகுமுறை ஒன்றினை முன்வைத்துள்ளனர். இம்மூன்றுகட்ட அணுகுமுறை மூலம் சூழலால் நிறுவனத்திற்கு ஏற்படக்கூடிய தாக்கங்கள் பற்றிய வினைத்திறனான மதிப்பீடு ஒன்றினை மேற்கொள்ள முடியும் என விளக்கியுள்ளனர். சூழல் ஆய்வு என்பது வெளிச்சூழல் ஆய்வு, உள்ளக ஆய்வு என்பனவற்றை உள்ளடக்குவதோடு இம்மூன்று கட்ட அணுகுமுறையானது இவை இரண்டிலும் பிரயோகிக்கப்படக் கூடியதாகும். எனினும் இக்கட்டுரையில் வெளிச்சூழல் ஆய்வும், அவை நிறுவனத்தின் தந்திரோபாய உருவாக்கற் செய்முறையில் வகிக்கும் பங்கு என்பனபற்றியே ஆராயப்படுகின்றது.

2.0 மூன்றுகட்ட அணுகுமுறை *(Three stages approach)*

சூழல் ஆய்வில் பிரயோகிக்கப்படும் மூன்றுகட்ட அணுகுமுறை என்பது பின்வரும் 3 படிமுறைகளைக் கொண்டதாகக் காணப்படும்.

கட்டம் 1 :- சூழலைக் கூறுகளாகக் வகைப்படுத்தல்

பொதுவாக நிறுவனங்களுக்கு முக்கியமாக அமைகின்ற அடிப்படையில் சூழலானது தனித்தனி கூறுகளாக வகுக்கப்படும்.

கட்டம் 2 :- சூழற்கூறுகளை ஆய்வு செய்தல்

ஒவ்வொரு சூழல் கூறும் விரிவாக ஆய்வு செய்யப்படுவதுடன் குறிக்கப்பட்ட சூழல் காரணிகளால் நிறுவனத்திற்கு ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள், ஆபத்துக்கள் என்பனவும் மதிப்பிட்டுக் கொள்ளப்படும்.

கட்டம் 3 :- ஒவ்வொரு சூழற்கூறுக்கும் நிறையளித்தல்

மூன்றாவது கட்டத்தில் ஒவ்வொரு சூழற் காரணிக்கும், அவற்றினால் நிறுவனத்திற்கு ஏற்படக்கூடிய தாக்கத்தினை பிரதிபலிக்கும் வகையில் நிறையளிக்கப்படும். அதாவது வாய்ப்புக்களாயின் நிறுவனம் அவற்றைப் பயன்படுத்தத் தக்கவாறும் ஆபத்துக்களாயின் அவற்றை முறியடிக்கத்தக்கவாறும் அவற்றின் முக்கியத்துவத்தின் அடிப்படையில் நிறையளிக்கப்படும்.

இச்சூழல் ஆய்வின் மூன்று கட்டங்களும் இங்கு விரிவாக ஆராயப்படுகின்றது.

3.0 சூழல் கூறுகள் *(Environment segment)*

இங்கு சூழலானது பின்வரும் காரணிகளை உள்ளடக்கியுள்ளது எனக் கொள்வோம்.

1. போட்டிச்சூழல்
2. சந்தைப்படுத்தல் சூழல்
3. பொருளாதாரச் சூழல்
4. அரசாங்க / சட்டச்சூழல்
5. சமூக கலாச்சாரக்கூறு
6. தொழில்நுட்பக்காரணி
7. புவியியல் காரணி
8. ஏனையவை

மேலே காட்டப்பட்டவாறு இவை பிரிக்கப்பட்டாலும் கூட, இக்காரணிகளுக்கிடையில் உள்ள தொடர்புகள் காரணமாக, வேறுபாடுகள் எப்பொழுதும் தெளிவாகக் காணப்பட மாட்டாது. உதாரணமாக பொருளாதாரக் காரணியையும் அரசாங்க, சட்டச்சூழலையும் வேறுபடுத்துவதனைக் குறிப்பிடலாம். இது சூழல் ஆய்வு மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பத்திற்கேற்ப மாறுபடும்.

இவ்வாறு சூழற் காரணிகள் வேறுபடுத்தப்பட்ட பின் ஒவ்வொரு சூழற் கூறுகளும் தனித்தனியாக கட்டம் 2இல் மதிப்பிடப்படும்.

3.1 போட்டிச்சூழல் *(Competitive Environment)*

ஒரு கைத்தொழில் நிலவுகின்ற போட்டிச் சூழலில் பின்வரும் ஐந்து அடிப்படைப் போட்டிச் சக்திகள் காணப்படுகின்றன என பேராசிரியர் மைக்கல் போடர் கூறுகின்றார். அவையாவன,

1. புதிய உள்நுழைவோரின் ஆபத்து
2. பிரதியீடுகளின் ஆபத்து
3. விநியோகஸ்தர்களின் வலு
4. கொள்வனவாளர்களின் வலு
5. தற்போதுள்ள போட்டியாளர்களுக்கிடையிலான போட்டி எதிர்ப்புணர்வு

இந்த ஐந்து போட்டிச் சக்திகளின் கூட்டு வலுவினாலேயே குறிக்கப்பட்ட நிறுவனத்தினுடைய எதிர்கால இலாபம் என்பது நிர்ணயிக்கப்படுகின்றது. இந்தக் காரணிகளின் வலுவானது நிறுவனத்திற்கு நிறுவனம் வேறுபட்டுக் காணப்படலாம். எனினும் எந்தவொரு நிறுவனத்தினதும் தந்திரோபாய நிலைமையினையும், எதிர்காலத்தையும் மதிப்பிட்டுக் கொள்வதற்கு நிறுவனம் எந்த வகையான போட்டிச்சூழலில் இயங்குகின்றது என்பதனை அறிந்துகொள்வது அவசியமானதாகும்.

3.2 சந்தைப்படுத்தல் சூழல் *(Marketing Environment)*

சந்தைப்படுத்தல் காரணி என்னும் போது நிறுவனத்தினுடைய பொருட்கள் சேவைகளுக்கான எதிர்காலக் கேள்வி பற்றி கருத்திற்கொள்ள வேண்டும். இது போட்டிச் சூழலுடன் இணைந்ததாகவும் காணப்படுகின்றது. இங்கு பொருட்கள் சேவைகள் என்பது பாவனையாளர் பொருட்களாகவோ அன்றி கைத்தொழில் பொருட்களாகவோ காணப்படலாம்.

எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய கேள்வி பற்றி கருதும்போது கேள்வியை ஏற்படுத்தும சனத்தொகை பற்றி ஆராயப்படவேண்டும். இங்கு சனத்தொகை என்பது புள்ளிவிபர ரீதியாகக் கருதப்படுவதுடன் குறிக்கப்பட்ட பொருட்கள் சேவைகளை நுகரும் நுகர்வோர்களின் மொத்த எண்ணிக்கையைக் குறிக்கின்றது. (பொதுமக்கள் அல்லது ஏனைய நிறுவனங்கள்)

குறிக்கப்பட்ட பொருட்கள் சேவைகளுக்கான எதிர்கால கேள்வி மட்டத்தினை நிர்ணயிக்கின்ற சூழல் குறிகாட்டிகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. சந்தையின் அளவும் அதன் வளமான தன்மையும்
2. சந்தையில் நிலவும் போக்கு. அதாவது மொத்த சனத்தொகை வளர்ச்சிப் போக்கு, மொத்தக் குடிசனத்தில் குறிக்கப்பட்ட சந்தைத் துண்டங்களின் போக்கு, வருமான போக்கு என்பன.
3. நிறுவன அல்லது உற்பத்திப் பொருள் வாழ்க்கை வட்ட நிலை

ஒரு சந்தையின் எதிர்கால வாய்ப்பானது சந்தையாராய்ச்சி, எதிர்வுகூறல் என்பவற்றின் மூலம் மொத்த சனத்தொகை, குறிக்கப்பட்ட சந்தைத் துண்டத்தின் அளவு, வளர்ச்சி வீதம் மற்றும் விலை நெகிழ்ச்சி என்பனவற்றை கண்டுகொள்வதன் மூலம் அறியப்படும்.

3.3 பொருளாதாரக் காரணி

அநேக நிறுவனங்களைப் பொறுத்தவரை சூழலின் பொருளாதாரக் கூறானது அடிப்படையானதும் விரிவான ஆய்வுக்குரியதொன்றாகவும் காணப்படுகின்றது. ஏனெனில் தேசிய பொருளாதார இலக்குகளை விளங்கிக் கொள்வதற்கும், இந்த இலக்குகள் கொள்கைகளாக மாற்றப்படும்போது, அவை நிறுவனங்களை எவ்வாறு தாக்கமுடியும் என்பதனை விளங்கிக்கொள்ளவும் இவ்வாய்வு அவசியமானதாகும்.

தந்திரோபாய ஆய்வு நோக்கத்திற்காக பொருளாதாரச் சூழலானது உலகப் பொருளாதாரம், தேசியப் பொருளாதாரம் என இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றது.

3.3.1 உலகப் பொருளாதார நிலை

உலகப் பொருளாதார நடவடிக்கைகளின் செல்வாக்குக் காரணமாக (உதாரணமாக மசகெண்ணையின் உலக விலை) வழமையாக தேசிய பொருளாதாரக் கொள்கைகளை வகுக்கும்போது, பரந்த உலகப் பொருளாதார அமைப்பினை கருத்திலெடுக்க வேண்டியது அவசியமாக உள்ளது. இந்த உலகப் பொருளாதார அமைப்பு ஆய்வு, பிரதான கைத்தொழில் நாடுகளின் செயற்திறனைச் சுட்டிக்காட்டும் அடிப்படைக் குறிகாட்டிகள் பற்றிய மதிப்பீடொன்றினையும் உள்ளடக்கும். இக்குறிகாட்டிகளாவன.

1. பணவீக்க வீதம்
2. மொத்தத் தேசிய உற்பத்தியின் உண்மையான வளர்ச்சி வீதம்
3. நடைமுறைக்கணக்கு மீதிகள்
4. வேலைவாய்ப்பு மட்டங்கள்
5. வட்டிவீதங்கள்

இவற்றினை குறிப்பிட்ட நிறுவனம் காணப்படும் நாட்டின் குறிகாட்டிகளுடன் ஒப்பிட்டு அவற்றின் சாதக, பாதக நிலைமைகளுக்கேற்ப தந்திரோபாயங்களை உருவாக்க வேண்டியது அவசியமாகும்.

3.3.2 தேசியப் பொருளாதாரத்தின் நிலை
(State of National Economy)

உலகப் பொருளாதார ஆய்விலிருந்து தேசியப் பொருளாதாரக் கட்டமைப்பை மதிப்பீட முடியும். இது பின்வரும் படிமுறையமைப்பில் மேற்கொள்ளப்பட முடியும்.

1. அதிகாரத்திலுள்ள அரசின் பொருளாதார இலக்குகளும் பொருளாதாரக் கொள்கைகளில் அதன் தலையீடுகளும், இங்கு அரசியல் உயர் பொருளாதாரக் கொள்கைகள் மதிப்பிடப்படும். உதாரணமாக, அரசாங்கம் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தல், வேலைவாய்ப்பை அதிகரித்தல் என்பவற்றுக்கு முன்னுரிமை அளிக்கக்கூடிய வகையில் செயற்படலாம்.
2. குறிப்பிட்ட இலக்குகளை அடைவதற்காக அமைக்கப்பட்டு அமுலாக்கப்படும் விசேடமான கொள்கைகள். இவை பின்வருமாறு காணப்படும்.

1. இறைக் கொள்கைள்
2. நாணயக் கொள்கைள்
3. பணவீக்கக் கொள்கைகள்
4. நாணயமாற்று மற்றும் சென்மதி நிலுவைக் கொள்கைகள்
5. வேலையின்மை பற்றிய கொள்கைகள்
6. தனியார் மயப்படுத்தல் பற்றிய கொள்கைகள்
7. பிரதேசக் கொள்கைகள்

3.3.3 பணவீக்க நிலைமை

பணவீக்க வீதமானது நிறுவனச் செயற்பாட்டில் குறிப்பிடத்தக்க அளவு சூழல் செல்வாக்கைச் செலுத்தக்கூடும். உயர் பணவீக்க வீதமானது பொதுவாக நிறுவனங்களுக்கு பாதகமாகவும் அதாவது சூழல் ஆபத்தாகவும், குறைந்தளவான பணவீக்க நிலைமையானது நிறுவனங்களுக்கு சாதகமாகவும் அதாவது சூழல் வாய்ப்பாகவும் கொள்ளப்படும். எனினும், வேறுபட்ட நிறுவனங்களும், கைத்தொழில்களும் பணவீக்கம் காரணமாக வேறுபட்ட தாக்கத்தைக் கொண்டிருக்கலாம். அதாவது உயர் பணவீக்க காலம் சில நிறுவனங்களுக்கு சாதகமாகவும் காணப்படலாம். குறிப்பாக வங்கிகள் சில காலப்பகுதிகளில் இந்தவகையான சூழல் வாய்ப்புக்களைக் கொண்டிருக்கலாம்.

3.4 சட்ட / அரச சூழல் *(Legal/Government environment)*

அரசானது பிரதேச, தேசிய, சர்வதேச ரீதியில் சமூகத்தின் எல்லா மட்டங்களிலும் அதனது செயற்பாடு அதிகரித்து வருகின்றது. சூழல் ஆய்வு மேற்கொள்ளப்படும் போது அரச செல்வாக்கின் அளவினைக் கருத்திற்கொள்ள வேண்டியது அவசியமாகும். உதாரணமாக கீழ்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

பிரதேச ரீதியாக :- உள்ளூர் வியாபார முயற்சியை ஆரம்பிப்பதற்கு
தேசிய ரீதியாக :- வரிவிதிப்பு மட்டத்தினை தீர்மானிப்பதில் மத்திய அரசின் பங்கு
சர்வதேச ரீதியாக :- வெளிநாட்டு இறக்குமதிகள் மீதான தீர்வை மட்டத்தை நிர்ணயிப்பதில் ஐரோப்பிய சமூகத்தின் பங்கு

இங்கு சூழல் ஆய்வு நோக்கத்திற்காக, அரசின் பங்கானது இரண்டு விடயங்களாக பிரிக்கப்படுகின்றது.

1. அரச செயற்பாடுகள் நிறுவனங்களுக்கு உதவியாக அமைதல்
2. அரச செயற்பாடுகள் நிறுவனங்களுக்கு தடையாக அமைதல்

பின்வரும் வழிகளில் அரச செயற்பாடுகள் நிறுவனங்களுக்கு உதவியாக காணப்படும்.

1. நிறுவனத்தின் பொருட்கள் சேவைகளை அரசு கொள்வனவு செய்தல். உதாரணமாக கட்டிடம் அல்லது பாலம் என்பவற்றை அமைப்பதற்கு ஒப்பந்தக்காரர்களை ஏற்படுத்தல்.
2. அரசு ஆராய்ச்சி அபிவிருத்தியில் ஒரு பங்காளராக செயற்படுதல்
3. கூலிச்செலவுகளைக் கட்டுப்படுத்தும் நிலையில் அரசு செயற்படுதல்
4. பயிற்சியளித்தலில் அரசினால் வழங்கப்படும் உதவி
5. வியாபார முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு அரசினால் வழங்கப்படும் உதவி
6. புதிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்குபவராக அரசு செயற்படுதல்

பின்வரும் வழிகளில் அரச செயற்பாடுகள் நிறுவனத்திற்கு தடையாக காணப்படலாம்.

1. புதிய ஒழுங்கு விதிகளினை உருவாக்குதல்
2. விலைக்கட்டுப்பாட்டாளராக அரசு செயற்படுதல்
3. சூழல் பாதுகாப்பாளராக அரசு செயற்படுதல்
4. வேலையின் ஊழியர்களது பாதுகாப்பு நலன் போன்றவற்றிற்கு உத்தரவாதமளிப்பவராக அரசு செயற்படுதல்
5. சமவாய்ப்புக்களை உத்தரவாதப்படுத்துவதாக அரசு செயற்படுதல்
6. தனியுரிமைக்கெதிரான போட்டியை உறுதிப்படுத்துபவராக அரசு செயற்படுதல்
7. நுகர்வோரின் உரிமைகளைப் பாதுகாப்பவராக அரசு செயற்படுதல்
8. கைத்தொழில் அமைவிடத்தை தீர்மானிப்பவராக அரசு செயற்படலாம்.

3.3.5 சமூக கலாச்சார சூழல்

சமூக கலாச்சாரச் சூழல் என்பது வரையறுக்கப்பட முடியாது எனக் கருதப்படுகின்ற போதிலும், மக்கள் தங்களுடைய வாழ்க்கை நடவடிக்கைகளில் வெளிப்படுத்தும் பொதுவான எண்ணங்கள், நம்பிக்கைகள், விழுமியங்கள் என்பன சமூக கலாச்சார காரணி என வரையறுக்கப்படலாம்.

சூழலின் சமூக கலாச்சார காரணியானது இரண்டு விரிவான பரப்புக்களில் நோக்கப்படலாம். அதாவது,

1. நிறுவனங்களின் பொருட்கள் சேவைகளை சமூக கலாச்சார காரணி எவ்வாறு பாதிக்கின்றது.
2. ஊழியர்கள் தங்கள் வேலை தொடர்பாக கொண்டுள்ள எண்ணங்களை சமூக கலாச்சார காரணியானது எவ்வாறு பாதிக்கின்றது.

3.5.1 நிறுவனத்தின் பொருட்கள் சேவைகளில் சமூக கலாச்சார காரணியின் பாதிப்பு

சூழல் ஆய்வில் இக்காரணிக்கு கொடுக்கவேண்டிய முக்கியத்துவத்தின் அளவு நிறுவனத்தின் தொழிற்பாட்டில் தங்கியிருக்கின்றது. உதாரணமாக நிறுவனத்தின் உற்பத்திகள் விரைவாக மாற்றமடையும். சமூக உணர்வுகளுடன் தொடர்புடையனவாக இருந்தால் இக்காரணிகளின் முக்கியத்துவம் அதிகமாக இருக்கும். உதாரணமாக,

ஒலிப்பதிவு நாடாக்கள், இசைத்தட்டுக்கள், தொலைக்காட்சி போன்றவற்றை உற்பத்தி செய்பவர்கள் இக்காரணிக்கு கூடியளவு முக்கியத்துவம் அளிக்க வேண்டியிருக்கும்.

செல்வாக்கு செலுத்துகின்ற எல்லாச் சமூக, கலாச்சார காரணிகளையும் பட்டியலிடுவது சூழல் ஆய்வாளர்களுக்கு கடினமாக இருக்கின்ற போதிலும் பின்வரும் காரணிகளைக் கருத்திற்கொள்ள வேண்டியனவாகக் குறிப்பிடலாம்.

1. கல்வி அதாவது கல்வித்தரம், கிடைப்பனவு, கல்விகற்றோர் வீதம் என்பன.
2. சுகாதாரம், போசாக்கு
3. குடும்ப அளவு
4. குடும்ப அலகுகளின் அளவு
5. சமயம்
6. புவியியல் ரீதியான போக்குவரத்து வசதி
7. உள்நாட்டுப் போக்குவரத்து வசதி
8. சமூகத்தில் பெண்களின் பங்கு

3.5.2 ஊழியர்களது வேலையில் சமூக கலாச்சாரக் காரணியின் தாக்கம்

நிறுவனங்களில் நிலவுகின்ற முகாமை, செயற்பாட்டு நிலைமைகளில் வேலை பற்றி எண்ணங்களில் பரந்தளவான வேறுபாடு காணப்படுகின்றது. இது சர்வதேச ரீதியாக ஒப்பிடும் போது மிக இலகுவாகக் கண்டுகொள்ளப்பட முடியும். மேலும் ஒரு நாட்டின் பல்வேறு பிரதேசங்களுக்கிடையிலேயும் இதனைத் தெளிவாக அவதானிக்கலாம். உதாரணமாக யப்பானிய வேலை ஒழுங்கினையும், மேற்கு ஐரோப்பிய வேலை ஒழுங்கையும் ஒப்பிடும் போது இதனை இலகுவாக அடையாளம் கண்டுகொள்ள முடியும்.

யப்பானிய வெளிநாட்டு வர்த்தக அமைப்பின் அறிக்கையொன்று இதனைச் சுட்டிக்காட்டுகின்றது. மேற்கு ஐரோப்பிய நிறுவனங்களில் 75% மானவை மேலதிக வேலை நேரத்திற்கு ஊழியர்களை கேட்டுக்கொள்வதுடன் அவர்களை ஒப்புக்கொள்ள வைக்க வேண்டியுள்ளது. இந்நிலைமை யப்பானிய நிறுவனங்களில் காணப்படுவதில்லை.

மேலதிக நேரவேலை செய்ய உத்தரவிடுவதில் சிக்கல்கள் உள்ளதாக மேற்கு ஐரோப்பிய நிறுவனங்கள் கருதுகின்றன. ஏனெனில் அவர்கள் வேலையினை விட தங்களுடைய தனிப்பட்ட வாழ்க்கைக்கு கூடுதலான முக்கியத்துவம் கொடுக்கின்றார்கள். அவர்கள் வாழ்வதற்காக வேலை செய்தால் போதுமானது என்ற கருத்தினைக் கொண்டுள்ளார்கள். எனவே, 40% நிறுவனங்களின் கூற்றுப்படி அவர்கள் மேலதிக நேரவேலை செய்யுமாறு உத்தரவிடப்படும் போது அவர்கள் கட்டளைக்கு கீழ்ப்படிய மறுக்கின்றார்கள். ஏனெனில் அவர்கள் யப்பானியர்களைப் போன்று வேலையை வாழ்க்கையின் மையமாகக் கொள்ளவில்லை.

எனவே, சூழலின் ஏனைய கூறுகளைப் போலவே தந்திரோபாய திட்டமிடலாளர்களால் கவனத்திற் கொள்ளப்படவேண்டிய ஒன்றாக சமூக மாற்ற கூறுகளும் காணப்படுகின்றன.

3.6 தொழில்நுட்ப காரணி *(Technical factor)*

தந்திரோபாய திட்டமிடலாளர்கள் தங்களுடைய ஆய்வின் தொழில்நுட்ப மாற்றத்தினையும் சூழலில் இதனது பரிமாணத்தையும் உள்ளடக்க வேண்டியுள்ளது. ஏனெனில் இன்று தொழில்நுட்ப மாற்றம் என்பது எங்கும் பரவியுள்ளது. உதாரணமாக அநேக நிறுவனங்கள் நுண்கணனிகள், மற்றும் தகவல் தொழில்நுட்பப் புரட்சி என்பவற்றினால் பாதிக்கப்பட்டுள்ளன. சில நிறுவனங்கள் தொழில்நுட்ப மாற்றம் காரணமாக ஏனைய நிறுவனங்களை விட மிக அதிகளவில் பாதிக்கப்பட்டுளளன என்பது முக்கியமான விடயமாகும்.

சூழலில் ஏற்படும் இத்தகைய மாற்றங்களின் செல்வாக்கினால் உற்பத்திக் கைத்தொழில்கள் மட்டுமல்ல சேவைத்துறைத் தொழில்களும் பாரிய மாற்றங்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.
உதாரணம் 1, இலத்திரனியல் தகவல் தரவுகள், தகவல் பரிமாற்றங்கள் என்பவை பரந்தளவில் கிடைக்கக்கூடியதாகவும் ஒப்பீட்டு ரீதியில் செலவு குறைந்ததாகவும் மாறி வருவதால் கணக்காய்வு ஆலோசனை நிறுவனங்கள் இந்தப் புதிய தொழில்நுட்ப மாற்றத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன.

உதாரணம் 2 : நிறுவனங்கள் பிந்திய பக்ஸ் கருவிகளைப் பயன்படுத்துதல், பக்ஸ் கருவிகளின் பரவலான உபயோகம் புதிய தொழில்நுட்ப மாற்றத்தில் ஒரு முக்கியமான காரணியாகும். முன்னர் பாவனையிலிருந்த குழு – 1 வகையைச் சேர்ந்த பக்ஸ் கருவிகள் மிகவும் செலவு உயர்ந்தவையாகவும், தனிப்பக்கச் செய்தியொன்றை அனுப்புவதற்கு ஏறத்தாழ 6 நிமிடங்கள் எடுத்துக் கொள்வதாகவும் காணப்பட்டன. ஆனால் பிந்திய குழு – 3 வகையைச் சேர்ந்த பக்ஸ் கருவியானது மிகவும் சிறியதாகவும், செலவு குறைந்ததாகவும் A4 அளவுள்ள ஒரு பக்கத்தினை ஊடுகடத்த 60 வினாடிகளுக்கும் குறைவான நேரத்தை மட்டுமே எடுப்பதாகவும் காணப்படுகின்றது. இந்தி நிலமை குழு – 1 வகை பக்ஸ் கருவிகளை பெருமளவில் கொண்டுள்ள நிறுவனத்திற்கு பாதகமானதாகும்.

3.7 புவியியல் சூழல் *(Geographical environment)*

1960 களிலிருந்து குறிப்பாக நிறுவனங்கள் சர்வதேச மயமாக்கப்பட்டதிலிருந்து நிறுவனங்களின் சூழலில் புவியியல் காரணி முக்கியத்துவம் பெறத் தொடங்கியுள்ளது. மேலும் இன்று நிறுவனங்களின் உற்பத்திகள் உலகளாவிய ரீதியில் ஓரினமாக இருப்பதுடன், உலக சந்தைகளில் விற்பனை செய்யப்படுவதுடன் உலகளவில் பரந்து காணப்படும் உள்ளீடுகளைக் கொண்டு அவை உற்பத்தி செய்யப்படுவதனையும் அவதானிக்கலாம்.

நிறுவனங்களின் சர்வதேச மயமாக்கல் போக்கினால் சந்தைப்படுத்தல், உற்பத்தி, நிதி, ஆளணி தந்திரோபாயங்கள் திட்டமிடப்படும் போது தொடர்ந்து நிலவக்கூடிய உலகளாவிய பரிமாணம் கவனத்திற்கொள்ளப்பட வேண்டும். உலகளாவிய ரீதியில் தெளிவாக அறியப்பட்ட கைத்தொழில்களில் சர்வதேச நோக்கங்களின் முக்கியத்துவத்தை தெளிவாக இனங்காண முடியும்.

உதாரணமாக தொலைக்காட்சிப் பொருட்கள் உற்பத்தியாளர்கள், வாகன உற்பத்தியாளர்கள், விமான உற்பத்தியாளர்கள் போன்றோர் சுருக்கமாகக் கூறின் இன்று

பெரும்பாலான நிறுவனங்களில் தந்திரோபாயத் திட்டமிடலாளர்கள் கடந்த காலத்தை விட எதிர்காலத்தில் குறிக்கப்பட்ட நிறுவனம் எதிர்நோக்கக்கூடிய ஆபத்துக்களையும் வாய்ப்புக்களையும் கவனத்திற் கொள்ளவேண்டும்.

மேலே கூறப்பட்டவாறு சூழலின் ஒவ்வொரு கூறுகளும் தனித்தனி ஆய்வு செய்யப்பட்ட பின்னர் அவை கட்டம் 3 இல் நிறையளிப்புக்கு உட்படும்.

4.0 சூழற் காரணிகளுக்கு நிறையளித்தல் *(Weight for environmental factors)*

சூழல் ஆய்வின் முதலாவது கட்டத்தில் கூறுகளாக்கப்பட்டு இரண்டாவது கட்டத்தில் ஆய்வு செய்யப்பட்ட சூழல் கூறுகளுக்கு மூன்றாவது கட்டத்தில் அவை ஆய்வின்படி நிறுவனத்துக்கு ஏற்படுத்தக்கூடுமென எதிர்பார்க்கப்படும் தாக்கத்தின் அடிப்படையில் நிறையளிக்கப்படும். ஒவ்வொரு கூறுகளுக்கும் அளிக்கப்படும் நிறையானது பின்வருமாறு கணிக்கப்படும்.

ஆய்வு செய்யப்பட்ட ஒவ்வொரு சூழற் கூறுகளுக்கும் நிறுவனத்தில் அவற்றின் முக்கியத்துவத்தின் அடிப்படையில் 0 தொடக்கம் 5 வரையான முழு எண்களின் அடிப்படையில் நிறையளிக்கப்படும். இவ்வாறு ஒரு சூழற் கூறானது நிறுவனத்திற்கு மிக முக்கியமானது எனக் கருதப்பட்டால் 3 புள்ளிகளும் குறிப்பிட்ட காரணி எந்தவித முக்கியத்துவமும் அற்றது எனக் கருதப்பட்டால் 0 புள்ளியும் அளிக்கப்படும்.

ஒவ்வொரு காரணியினதும் முக்கியத்துவம் ஒரு முறை தீர்மானிக்கப்பட்ட பின்னர் ஆய்வுக் காலப்பகுதியில் ஒவ்வொரு காரணியினதும் பலத்திற்கேற்ப -5 இலிருந்து +5 வரை முழு எண்களின் அளவில் நிறையளிக்கப்படும். -5 என்பது இயலுமானவரை பலமான எதிர்க்கணியச் செல்வாக்கினை செலுத்தும் என்பதனைக் குறிக்கின்றது. மாறாக புள்ள +5 என்பது குறிப்பிட்ட சூழல் கூறு மிகப்பலமான நேர்க்கணியச் செல்வாக்கினை நிறுவனத்தில் செலுத்தும் என்பதனைக் குறிக்கின்றது. உதாரணமாக கம்பனியொன்று இலாபகரமான உற்பத்திப்பொருள் ஆக்கவுரிமையைக் கொண்டிருக்கின்ற போது அந்தப் பொருள் மிகைக் கேள்வியையும் கொண்டிருக்குமாயின் சந்தைப்படுத்தற் சூழல் கூறுக்கு +5 புள்ளி சேர்க்கப்படும். இறுதியாக 0 புள்ளி என்பது குறிப்பிட்ட காரணி நிறுவனத்தில் எந்தப் பலத்தையும் கொண்டிருக்கவில்லை என்பதனையும் குறிக்கின்றது.

ஒவ்வொரு காரணியினதும் முக்கியத்துவமும் பலமும் தீர்மானிக்கப்பட்ட பின்னர் தொடர்புடைய ஒவ்வொரு சூழற் காரணியுடனும் தொடர்புடைய இரண்டு இலக்கங்களும் பெருக்கப்பட்டு மொத்தப் புள்ளிகள் பெறப்படும். பெறப்படும் ஒவ்வொரு பெறுமதியும் தொடர்புடைய சூழற்காரணி நிறுவனத்தில் கொண்டுள்ள மொத்த தாக்கத்தினைக் குறிக்கும். இறுதியாக இவ்வாறு பெறப்பட்ட ஒவ்வொரு சூழற்காரணியினதும் மொத்தப் புள்ளிகள் சூழல் மதிப்பீட்டு வரைபடம் ஒன்றில் காட்டப்பட முடியும். வரைபடரீதியான விளக்கம் ஒன்றின் மூலம் குறிப்பிட்ட சூழல் ஆய்வானது உயிரோட்டம் உள்ளதாக ஆக்கப்படுவதுடன் மிக இலகுவாக விளங்கிக்கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

சூழல் ஆய்வினது கட்டங்கள் எவ்வாறு மேற்கொள்ளப்படுகின்றது என்பது தொடர்பான கருதுகோள் ரீதியான உதாரணம் ஒன்று வருமாறு.

சூழலைக் கூறுகளாக்குதல்

இங்கு சூழல் ஆய்வினை மேற்கொள்வதற்கென திட்டமிட்டுள்ள நிறுவனம் ஒன்றுடன் தொடர்புடைய சூழல்களாக பின்வரும் சூழற்கூறுகளை அல்லது சூழற் காரணிகளைக் கருதுவோம்.

1. பொருளாதாரச் சூழல்
2. அரச சூழல்
3. போட்டிச் சூழல்
4. சந்தைப்படுத்தல் சூழல்
5. தொழில்நுட்பச் சூழல்

5.0 சூழல் கூறுகளை ஆய்வு செய்தல்
(Analysis of each segment)

இங்கு கட்டம் 1இல் தெரிவு செய்யப்பட்ட ஐந்து சூழற் கூறுகள் பற்றிய விரிவான ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்படும். இங்கு ஆய்வுத் திகதிக்கு முந்திய காலப்பகுதியும், அடுத்த திட்டமிடல் காலப்பகுதியும் கருத்திற் கொள்ளப்படுவதுடன் இக்காலப்பகுதியில் ஒவ்வொரு சூழற்காரணியினதும் தாக்கமும் எதிர்காலப் போக்கும் ஆய்வு செய்யப்படும்.

கட்டம் 3 :- ஒவ்வொரு சூழற்கூறுகளுக்கும் நிறைகளைச் சேர்த்தல்

உதாரணமாக கட்டம் இரண்டில் ஒவ்வொரு சூழற்காரணியையும் நன்கு ஆய்வு செய்த பின்னர் கீழ்வரும் நிறைகள் சேர்க்கப்படுகின்றன எனக் கொள்வோம்.

சூழற்கூறு (Segment)	முக்கியத்துவம் (Importance)	பலம் (Strength)	மொத்தப்புள்ளிகள் Over all score (Importance x strength)
போட்டிச்சூழல் காரணி	4	+1	4
சந்தைப்படுத்தல் காரணி	1	+3	3
பொருளாதாரக் காரணி	5	-2	-10
தொழில்நுட்பக் காரணி	2	-3	-6
	3	-4	-12

மேலே அட்டவணையில் காட்டப்பட்டுள்ள நிறையளிப்புக்களை பின்வரும் சூழல் மதிப்பீட்டு வரைபடத்தில் தெளிவாகக் காட்டலாம்.



மேலே தரப்பட்டுள்ளன நிறையளிப்புக்களின் கருத்து பின்வருமாறு :

1. போட்டிச்சூழற்கூறு :-

குறிப்பிட்ட நிறுவனத்தின் போட்டிச் சூழலானது மிகவும் முக்கியமானதாகக் காணப்படுகின்றது. எவ்வாறெனினும் இந்நிறுவனம் அதனுடைய போட்டியாளர்களைவிட பலமான நிலையில் காணப்படுகின்றது. இதிலிருந்து அடுத்த திட்டமிடல் காலப்பகுதிக்கான நிறுவனத்தின் போட்டிச் சூழலானது சாதகமாக, அதாவது நேரானதாக காணப்படுவதனை உணரலாம். குறிக்கப்பட்ட இந்நிறுவனம் தன்னுடைய போட்டி அனுகூலத்தை உச்சப்படுத்துவதற்கு முயல வேண்டும்.

2. சந்தைப்படுத்தல் சூழற்கூறு :-

நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் கூறானது இங்கு முக்கியமானதொன்றாக காணப்படவில்லை. மேலும் நிறுவனம் இச்சூழற் காரணியின் தாக்கம் அடுத்த திட்டமிடல் காலப்பகுதி முழுவதும் நேரானதாக இருக்கும் என நம்புகின்றது. குறிப்பிட்ட நிறுவனம் தற்போது சந்தைப்படுத்தல் சூழலில் காணப்படும் பெரும்பாலான வாய்ப்புக்களையும் பயன்படுத்திக்கொள்ள முயற்சிக்க வேண்டும்.

3. பொருளாதாரக் காரணி :-

பொருளாதாரச் சூழ்நிலையானது நிறுவனத்திற்கு மிக முக்கியமானதாக் காணப்படுவதுடன், அடுத்த திட்டமிடல் காலப்பகுதியில் இது சாதகமாகக் காணப்படவும் மாட்டாது. இங்கு தொடர்புடைய பொருளாதாரக் காரணி ஒரு ஆபத்தாக் காணப்படுவதுடன் இந்த ஆபத்தினைக் குறைப்பதற்கு எத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட முடியும் என்பதனைக் கருத்திற்கொள்ள வேண்டும்.

4. அரச சூழற் காரணி :-

அரச காரணியும் அடுத்த திட்டமிடல் காலப்பகுதிக்கு ஒரு ஆபத்தாகவே காணப்படுகின்ற போதும் இதனுடைய முக்கியத்துவமானது பெரியளவாகக்

காணப்படவில்லை. ஆகவே, இந்த ஆபத்தைக் குறைப்பதற்கான முயற்சிகள் ஏனைய இரு ஆபத்துக்களுடன் ஒப்பிடும் போது குறைவாகவே இருக்கும்.

5. தொழில்நுட்பக் காரணி :-

அரச காணியைப் போலவே குறிக்கப்பட்ட நிறுவனத்தின் தொழில்நுட்பச் சூழலும் மிக முக்கியமானதாகக் கருதப்படாத போதிலும் அடுத்த திட்டமிடல் காலப்பகுதியில் நிறுவனம் பிரதான தொழில்நுட்ப ஆபத்துக்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும். எனவே, தொழில்நுட்ப ஆபத்தினைக் குறைக்கக்கூடிய வகையில் நிறுவனத்தின் நடவடிக்கைகள் அமையவேண்டும்.

6.0 முடிவுரை *(Conclusion)*

சிறந்த தந்திரோபாயங்களை உருவாக்கிக் கொள்வதற்கு சூழலுடன் நிறுவனம் சிறந்த பொருத்தத்தைப் பேணவேண்டியது அவசியமாகும். வினைத்திறன் வாய்ந்த வெளிச்சூழல் ஆய்வொன்றின் மூலம் சூழல் காரணிகளால் நிறுவனத்திற்கு ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள், ஆபத்துக்கள் என்பதனைக் கண்டுகொள்வதுடன் வாய்ப்புக்களாயின் அவற்றைப் பயன்படுத்தத்தக்கதாகவும் ஆபத்துக்களாயின் அவற்றை முறியடிக்கத் தக்கவாறும் தந்திரோபாயங்களை உருவாக்கிக் கொள்ள முடிகின்றது. இவ்வாறான வெளிச்சூழல் ஆய்வினை மேற்கொள்வதற்கான சிறப்பான ஒரு அணுகுமுறையாகவே மூன்று கட்ட அணுகுமுறையென்பது காணப்படுகின்றது. இம்மூன்று கட்ட அணுகுமுறையானது உள்ளக ஆய்விலும் பிரயோகிக்கப்படக் கூடியதாகும்.

Reference:-

1. *Patrick Mc., :Management Accounting Strategic Planning and Marketing"., CIMA Publication 1988.*
2. *R.Jauch, William F Clueck, "Business Poicy and Strategic Management" Mc Graw Hill Book Company 1988.*
3. *Alan J.Rowe, Kari E.Dickel, Richard Mason "Stratebic Management", A Methodological Approach", Wesley Publishing Company 1989.*
4. *Nankervis, A Compton.R and Mc Carthy.T, "Strategic Human Resource Management", Nelson Sustralia Publishing (Private) Ltd, 1988.*

K.Thevarajah,
Head,
Department of Commerce,
University of Jaffna.

பாடசாலை அதிபர் ஒரு சமூகத்தலைவர்

பாடசாலைகள் தான் சமூகத்தின் உயிர்ப்பை பேணத்தக்க நிறுவனம். இன்று சமூகம் பாடசாலையை புரிந்து கொள்ளவில்லை. இதனால் சமூகம் சின்னாபின்னமுற்றுள்ளது. சமூகம் தான் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க முடியாது சிக்கித் திணறுகிறது. குடும்ப ஒழுங்கமைப்பு சீர்குலைந்து விட்டது. சமூக ஒழுக்க நலன் குன்றிவிட்டது. எங்கும் கலாச்சார சீரழிவு பாடசாலைகளின் இயல்பான நிலையைப் பேண அதிபர்கள், ஆசிரியர்கள் அவாவுகின்றனர். இந்நிலையில் தோல்வி காண்பதால் அவர்கள் செயலிழக்கின்றனர். இது ஒரு பெரும் தீமையான விளைவு. இதிலிருந்து விழிப்புணர்வு பெறுவது எவ்வாறு என நீண்டநாள் தனது அனுபவத்தில் பிறந்த உணர்வுகளை கட்டுரையாக ஆசிரியர் வடித்துள்ளார். இது சிந்திப்பதற்காகவே தரப்படுகிறது. மனிதன் ஒரு சிந்திக்கும் விலங்கு – (ஜோன்டூயி)

பாடசாலை அதிபர் ஒரு சமூகத்தலைவர்

ஒரு பாடசாலையின் முழுமையான செயற்பாடு அதிபரின் ஆளுமையிலேயே தங்கியுள்ளது. பாடசாலை ஒரு சமூக நிறுவனம். சமூகம் எதிர்பார்க்கும் தேவைகளை அடைவதற்காக அச்சமூகத்தினால் உருவாக்கப்பட்டதே பாடசாலை. பாடசாலை வழங்கும் கல்வி என்பது பரீட்சை மையமான பாட அடைவோ, அடைவைக் குறிக்கும் தராதரப் பத்திரங்களோ அல்ல. சமூகம் எதிர்பார்க்கும் ஆளுமை மிக்க உறுப்பினர்களை உருவாக்கிச் சமூகத்திற்கு அளிக்கும் பாரிய பொறுப்பு பாடசாலையினுடையது. இவ்வெதிர்பார்ப்பை நிறைவு செய்யும் வகையில் ஆசிரியர், பெற்றோர், சமூக அக்கறையுள்ளோர். இவர்களை ஒன்றிணைத்துச் செயற்படும் ஒரு சமூகத் தலைவரே பாடசாலை அதிபராவார்.

பல தசாப்தங்களுக்கு முன்னர் தலைமை ஆசிரியர் (Head Master) என்று அழைக்கப்பட்ட பாடசாலை அதிபர் சமூகத்தலைவராக மதிக்கப்பட்டார். இன்று அந்நிலை அருகி விட்டது. சமூகம் கல்வி நோக்கங்கள் பற்றிக் கொண்டிருக்கும் தெளிவின்மை, குழப்ப நிலையே இதற்கு காரணம். பாடசாலை தனது சமூகச் செல்வாக்கை இழந்துள்ளது. இதனால் பாடசாலை அதிபர்களும் சமூகத் தலைவர்களாக மதிக்கப்படுவதில்லை. இவ்விழிநிலை கல்வி வளர்ச்சிக்கு பெரும் பாதகமான நிலையை உருவாக்கியுள்ளது.

பாடசாலைகள் வேண்டிய வழிகாட்டுதல்களை வழங்கும் நிறுவனமாக ஒரு காலத்தில் செயற்பட்டன. மீண்டும் அந்நிலையைத் தோற்றுவிக்கும் வகையில் வழிகாட்டல் ஆலோசனைச் சேவை நிகழ்ச்சித் திட்டத்தை ஒழுங்கமைக்குமாறு கல்வியமைச்சு வலியுறுத்தும் சுற்று நிருபத்தை 2003ல் வெளியிட்டுள்ளது. பாடசாலைகள் முழுமையான ஆளுமைமிக்க மாணவர்களை உருவாக்கத்தக்க வழிகாட்டுதல்களை வழங்குவதே கல்வி எனக் கொள்ளப்படுகிறது. இன்றைய சமூகம் மிகவும் சிக்கலடைந்துள்ளது. சிக்கலடைந்த, குழப்பமான ஒரு சமூகத்திலிருந்து வரும் மாணவர்களை கல்வியினால் உருப்படுத்தி, நல்ல சமூக உறுப்புரிமை பெற்றுக்கொடுப்பது பாடசாலையின் கடமை. உள வலுமிக்க ஒரு நல்ல சமுதாயத்தை உருவாக்கும் பாரிய பொறுப்பு பாடசாலை அதிபருக்குரியது.

பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர் ஒவ்வொருவரும் ஆலோசகராக செயற்பட்டு, மாணவர் நலனோம்பும் வகையில் செயற்பட வைக்கும் திறன் அதிபரைச்

சார்ந்தது. ஒரு சமூகம் எதிர்பார்ப்பது உள, உடல் வலுவுள்ள, சமநிலை ஆளுமை (Balance Personality) கொண்ட உறுப்பினரையே சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கும் ஆற்றலைப் பாடசாலையே வழங்கவேண்டும். "பாடசாலை என்பது ஒரு முன்மாதிரிச் சமூகம்" School as a Model society என்று ஒட்டாவே என்ற சமூகவியலாளர் கூறியுள்ளார். வெறும் நூலறிவை மட்டும் பாடசாலை வழங்கும் நிலை நடைமுறையில் நீங்க வேண்டும். இவ்வகையில் எத்தகைய திறன்களைப் பாடசாலை வழங்கவேண்டும் என்பதை கருத்திற் கொண்டு பாடசாலைக் கலைத்திட்டம் உருவாக்கப்பட வேண்டும். இத்தகைய கலைத்திட்டத்தை உருவாக்கி வழிநடாத்தும் பொறுப்பை ஏற்றுள்ளதால் அதிபர் சமூகத் தலைவராகிறார்.

சமூகத்திற்கு வேண்டிய பல்வேறு துறைசார் ஆற்றல்கள், தொழில்நுட்பத் திறன்கள், கலைத்திறன்கள், தலைமைத்துவ ஆற்றல்கள், சமூக உறவாடல், ஆன்மீக வெளிப்பாடுகள் போன்ற இன்னோரன்ன திறன் விருத்திக்கான வாய்ப்புக்களைக் கொண்ட செயற்றிட்டமே பாடசாலைக் கலைத்திட்டமாகும். அத்தகைய ஒரு கலைத்திட்டத்தை தோற்றுவித்து, அதற்கமைவாகச் செயலாற்றும் ஆசிரிய வாண்மையை விருத்தி செய்து வழிநடாத்தி மாணவரது பயன்பாட்டுத் தன்மையை (Effectiveness) துலங்கச் செய்பவரே அதிபராவார்.

பாடசாலையின் பௌதிக வளவிருத்தி, பௌதிக வளத்தின் உச்சப்பயன் விருத்தி, மனிதவள விருத்தி என்பன அதிபரின் ஆளுமையிலேயே தங்கியுள்ளது. மாணவ ஒழுக்கம், பாடசாலையுடன் இணைந்த கருமமாற்றும் மனிதவளம், பாடசாலை அதன் அயற் சமூக இணைப்பு இவையனைத்திற்கும் மூலகாரணம் அதிபரே.

ஆனால் இன்று பாடசாலைக்கும் சமூகத்திற்குமிடையே முரண்பாடுகள் தோன்றியுள்ளன. இந்நிலை அதிபரது சமூகத் தலைமைக்கு பெரும் சவாலாகும். இத்தகைய முரண்பாட்டிற்கான காரணங்கள், அம்முரண்பாட்டினை நீக்குவதற்கான வழிவகைகள் பற்றிக் கல்விச் சமூகம் சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளது.

இன்று பாடசாலைகளைத் துச்சமாக மதிக்கும் சூழ்நிலை எவ்வாறு உருவானது? இன்று கல்வி ஒரு சீவனோபாய சுகபோக வாழ்க்கைக்கான கருவியாக சமூகம் கருதுகிறது. ஆனால் நடைமுறையில் இது சாத்தியமற்றதொன்று. பல்கலைக்கழக அனுமதி 2 வீதமானவர்களே பெறமுடிகிறது. ஏனையோர் நிர்க்கதியில் விடப்படுகின்றனர். பிரபல்ய பாடசாலைகளின் (Popular School) தோற்றம், பாடசாலைகளுக்கிடையிலான ஏற்றத்தாழ்வை உருவாக்கியுள்ளது. இந்நிலை பாடசாலைகள் பற்றிய சமூக மதிப்பீட்டை கீழ்நிலைக்கு தள்ளியுள்ளது. கல்வியைப் பெறுவதில் ஏற்பட்டுள்ள போட்டி நிலைமை, மாணவர்களிடையே மன அழுத்தத்தை (Mental Stress) வளர்க்கிறது. இதனால் பாடசாலை மீது அவநம்பிக்கை வளர்ந்துள்ளது. கல்வியில் ஏற்பட்டுள்ள போட்டி நிலை தனியார் போதனை நிலையங்கள் மீதான அபார நம்பிக்கை என்ற குருட்டுத்தனத்தை வளர்த்துள்ளது. பழைய மாணவர் சங்கங்கள் அதிபர் மீது மேலாண்மை செலுத்தும் நிறுவனங்களாக இயங்குகின்றன. அதிபர்களை நியமிக்கும், நீக்கும், கைப்பொம்மையாக மாற்றும் தந்திரோபாய நடைமுறைகளில் பழைய மாணவர் சங்கங்கள் ஈடுபட்டுள்ளன. வெளிநாடுகளில் வதியும் பழைய மாணவர்களது உதவிகளை நிதி வளங்களைப் பாடசாலைக்கென சேர்த்து அதைத் தவறாகக் கையாளும் சூழ்நிலை வளர்ந்துள்ளது. இந்நிதியைக் கையில் வைத்துள்ளமையால் அதிபரைப் பணிய வைக்கும் மந்திரக் கோலாக அதைக் கையாளுகின்றனர். இவ்வமைப்பு அதிபரின் சமூகத் தலைமைக்குப் பெரும் சவாலாக உள்ளது. இவையனைத்தும் பாடசாலைகள் செயலிழந்தமைக்கான வலுவான காரணங்களாகும்.

கல்வியமைச்சு இதனை நன்குணர்ந்தே பழைய மாணவர் சங்கங்களின் தலைவராக அதிபரே இருக்கவேண்டும் என்பதை வலியுறுத்தும் யாப்பினைத் தயாரித்துள்ளது. ஆனால் அதனை நடைமுறைப்படுத்த முடியாதளவு குறுக்கீடுகள் வளர்ந்துள்ளன. இந்நடைமுறை சரியானது தானா என்பது ஆராய்வுக்குரிய விடயமல்ல. ஆனால் அதிபரின் சமூகத் தலைமை மறுக்கப்படுகிறது. இத்தகைய இழிந்த சூழ்நிலை பாடசாலைக்கு பின்னடைவைத் தருகிறது.

ஒரு பாடசாலையின் செயற்பாடு என்பது மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், அதிபர் தொடர்பானது. இவர்களே மாணவர் கல்வியில் நேரடித் தொடர்பு பெறுபவர்கள். நிதியுதவி வழங்கும் காரணத்தால் பழைய மாணவர்கள் கல்விக்கு எவ்வகையிலும் பொறுப்பானவர்கள் ஆகமுடியாது. கல்வி வழங்குதல், கலைத்திட்ட அமுலாக்கல் என்பது அதிபரது தலைமைக்குரியது. பாடசாலை அபிவிருத்திச் சங்கம் என்பது பாடசாலை நிருவாகத்திற்குட்பட்டது. இதன் தலைவர் அதிபரே. கல்வி நிர்வாகம் பற்றி அறியாத அதிகார மனோபாவம் கொண்டவர்கள், பாடசாலை நிர்வாகத்தில் அபிவிருத்திச் சங்கத்தின் பங்கினை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர். இவர்கள் பழைய மாணவர்களது அநாவசிய குறுக்கீடுகளை ஏற்றுக் கொள்கின்றனர். இது அதிபரது சமூகத் தலைமைக்குப் பெரும் சவாலாக உள்ளது.

(S.B.M – School Base Management) பாடசாலை மட்ட முகாமை என்பது புதிய கல்விச் சீர்திருத்தத்தின் புதிய முனைப்பு. இதன் குறிக்கோள் அதிபரது சமூகத் தலைமையை உறுதி செய்வன் மூலம் பாடசாலைகளைப் புத்துயிர்ப்பூட்டுவதாகும். கல்வியமைச்சு இதனை நடைமுறைப்படுத்த விரைகிறது. ஆனால் சமூக நாசசக்திகள், பாடசாலையின் செயற்பாட்டிற்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் அதிபரது தலைமை ஏற்க மறுக்கும் வகையில் இச்செயற்பாட்டினை அமுலாக்குவதில் காலதாமதம் விளைக்கின்றனர்.

கல்வி ஒவ்வொரு சிறாரதும் அடிப்படை உரிமை. Education as a fundamental rights of Every Child இதனால் கல்வியை வழங்குவது அரசின் கட்டாய கடமை என்றார் பிளேட்டோ. அவ்வாறெனில் அக்கல்வியை வழங்கும் பாடசாலையின் முதல்வர் ஒரு முழுமையான சமூகத் தலைவர் அல்லவா? இன்றைய அதிபர்கள் பலர் அத்தகைய ஆளுமையுடையவர்களாக விளங்கவில்லை என்பது பகிரங்கமான குற்றச்சாட்டு. ஆனால் ஆளுமையுள்ள அதிபர்களை உருவாக்கும் சகல வாயில்களையும் மூடிவைத்துக் கொண்டிருக்கிறோம் என்பதை மறந்துவிடக் கூடாது.

ஒரு சமூகத் தலைவர் மற்றையோர் முன்னிலையில் கூனிக்குறுகிக் கைகட்டி வாய்பொத்தி நிற்கும் சூழ்நிலைக்கு யார் காரணம்? அதிபர்களது சுயாதீனமான செயற்பாட்டிற்றும், வழிநடாத்தலுக்கும் நியாயமான சந்தர்ப்பங்களை வழங்குவது சமூகக் கரிசனையுள்ள ஒவ்வொருவரதும் கடமை.

ஒரு சமயத் தலைவரையோ, அரசியற் தலைவரையோ விட உயர்ந்த தலைமையே பாடசாலைத் தலைமையாகும். இவ்வாறு கொள்ளப்பட்ட காலங்களில் பாடசாலைகளின் பணி மகத்தானதாக விளங்கியதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். திணைக்கள வாயிலில் கால் பதிக்காத அதிபர்களின் காலம் பாடசாலைகளின் உன்னத காலமாயிருந்தது. அதிபர்களது சமூகத்தலைமை வெற்றிகரமானதாக செயற்பட்டது. இன்று ஆசிரியர்களினதும் அதிபர்களினதும் பயன்பாடு பற்றி வெறும் பேச்சளவில் ஒலிப்பதை சமீப காலங்களில் அடிக்கடி கேட்கிறோம்.

ஆனால் அதிகாரப் பரவலாக்கல் என்ற கருத்து வளர்ந்த காலச் செயற்பாடுகள் அதிபர்களை அங்கவீனர்களாக மாற்றிவிட்டது. பழைய மாணவர் சங்கங்கள் அதிபர்களை நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்கின்றன. நீதிமன்றிற்கு அழைப்போம் என்று அச்சுறுத்திச் செயலற்றவர்களாக ஆக்கமுனைகிறது. இதன் தீய விளைவுகளைப் பலரும் நன்குணர்ந்திருந்தும் வாளாவிருக்கின்றனர். கல்வி பற்றித் தெளிந்த சிந்தனையுடன் ஒரு அதிபர் செயலாற்ற முனைந்தால் அவர் பல இழப்புக்களை எதிர்கொள்ள நேரிடுகிறது. நல்ல செயற்றிறனுள்ள அதிபரைச் சமூகம் புரிந்து கொள்கிறது. அவருக்குத் தலைவணங்குகிறது. உளமார வரவேற்கிறது, வாழ்த்துகிறது. ஆனால் அதிபரது செயற்பாட்டிற்கு எதிராகக் குந்தகம் விளைவிப்போரைத் தூரத் தள்ளும் வகையற்று வாளாவிருக்கிறது.

ஒரு அதிபரது சமூகத்தலைமையை ஏற்றுக் கொண்டு செயற்பட்டால் மட்டுமே, பாடசாலைகள் உயிர்த்துடிப்புள்ளவையாக மாறமுடியும். பாடசாலைகள் தனது தூய பணியை முழுமையாக நிறைவேற்ற முடியும். நல்ல ஆளுமையுள்ள மாணவர்களை உருவாக்க முடியும். நல்ல குடிமக்களைக் கொண்ட சமாதான தேசமொன்றினை பாடசாலைகளினாலேயே தோற்றுவிக்க முடியும். கல்வி வளர்ச்சியில் நாம் பின்னடைகிறோம் என்று கவலைப்படுபவர்கள், பாடசாலைகளை சுயாதீனமாகச் செயற்படவும் அதிபர்களைச் சுயாதீனமுள்ள சமூகத் தலைவராகச் செயற்படவும் வாய்ப்புக்களை அளிப்பதொன்றே தகுந்த மாற்று என்பதைச் சற்று சிந்திப்பது நல்லது.

குமாரசாமி சண்முகநாதன்
அதிபர்
மானிப்பாய் இந்துக் கல்லூரி

இந்துக்களின் வாழ்வில் பக்தி

இந்துவாக பிறந்த ஒவ்வொரு மனிதனும் இறைவனிடத்தில் கொண்டுள்ள ஈடுபாடு சாதாரண வழக்கில் பதி என அழைக்கப்படுகின்றது. இது இறையருள் பெறும் பொருட்டு பயன்படுத்தப்பட்ட போதும் சாதாரண வாழ்வில் பெற்றோர், ஆசிரியர், முதியோர், தாய், தந்தை, குரு போன்றோரிடையேயும் தொடர்புகளை ஏற்படுத்துவற்கேற்ற சாதனமாக பயன்படுத்தப்படுகின்றது. இந்துமரபில் இவர்கள் தெய்வமாகவே போற்றப்படுகின்றனர். மேலும் ஒரு செயலை முழுமனதுடன் ஈடுபாட்டுடன் செய்தலை ஒருவன் பதியோடு செய்தான் என்பதும் சிரத்தையுடன் (நம்பிக்கை) செய்தான் என்பதும் பதியின் தனித்த இயலை எடுத்தியம்பக் காரணமாகின்றது.

பத்தியானது வாழ்வில் துன்பச்சுமையை சுமக்கும்போது ஏற்படுத்தப்படுவது. சிறப்பாக நாயன்மார்கள், ஆழ்வார்களின் பாடல்களில் இது உயர்வாக சித்தரிக்கப்பட்டுள்ளது. இப்பாடல்களை சிறிது ஊன்றிக் கவனித்தால் அவற்றை பாடியவர்கள் துன்பமில்லாதவர்கள் என்று எவ்வகையிலும் கூறிவிட முடியாது. அடியார்கள் படும் துயராயினவெல்லாம் கண்டு அந்த ஒளியிலே நாமும் வைராக்கியத்தோடு உள்ளொன்றிலே திடமான பற்றுதல் ஏற்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. மாணிக்கவாசக சுவாமிகள் வாழாப்பத்து அடைக்கலப்பத்துப் பாடி தன் நிலையை புலப்படுத்துகின்றார்.

"ஆரொடு நோகேன் ஆர்க் கெடுத்துரைக்கேன்
ஆண்ட நீ அருளில்லையானால் வார்கடல்
உலகில் வாழ்கிலேன் கண்டாய் வருக
என்றருள் புரியாயே"

என்று தன்னை நொந்து இறைவனைக் குழைவிக்கின்றார். அடியார் படும் துன்பங்கள் ஒன்றை வந்து போக்குபவர் இறைவன். அவரை சிக்கனப்பிடித்து தம் பக்தி வலையில் அகப்படுத்தியவர் மாணிக்கவாசகர். இவரது பாடலிலே பக்தி மனித மனதின் உணர்வு வானத்தை தொடும் அற்புத சக்தியாக பரிணமிக்கத் தொடங்குகின்றது. அவ்வகையில் அவரது மனப் போராட்டங்களையும் இறையனுபவத்தையும் ஞான நிலையையும் ஆன்மத் துடிப்பையும் காட்டுவதாக அமைவது திருவாசகம். இங்கே பத்திச் சுவை சொட்டும் பாசுரங்களை படிப்பதனால் உண்டாகும் அனுபவங்கள் நீடித்து இருக்க வேண்டின் இசை மட்டும் போதாது. அவற்றில் பொதிந்துள்ள அரிய கருத்துக்களையும் நாம் உணர வேண்டும். இதனாலேயே

"சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து
சொல்லுவார் என்றார் மாணிக்கவசாகர். இதனூடாக பக்தி அனுபவமானது எம்மை விட்டு நீங்காது இருக்கவேண்டுமானால் அது உள்ளத்தை தொட்டதாக இருக்கவேண்டும்.

இத்தகைய பத்தியினாலேயே தான் இந்துவாக பிறந்த ஒவ்வொரு மனிதனும் மறு மையில் பேரானந்த பெருவாழ்வு பெறமுடியும். இதற்கு முன் இவ்வுலக வாழ்வில் மனக்கவலையற்றவராக, பொறுமையுள்ளவர்களாக, தன்னம்பிக்கையுடையவர்களாக, மனஒருமைப்பாடு உடையவர்களாக, சமரசமுறைடவர்களாக நம்வாழ்வை அமைத்துக்கொள்ள முடியும். இதன் தனித்து திறன் போக்குகள் எல்லாம் மாணிக்கவாசகன் திருவாசகத்திலே எடுத்தியம்பிய நிலையில் "பத்தி நெறி அறிவித்து பழவினைகள் பாறும் வண்ணம்" என எடுத்துக்காட்ட அதே நிலையில் "நற்றதும் புரியும் நம்மிட திருநாளை போவார் பத்தியிற் கரை கண்டவன்" என கோபால கிருஷ்ண பாரதியாரும் கூறியிருப்பவை குறிப்பிடத்தக்கன.

பக்தி என்பது பகிர்தல், பங்குகொள்ளுதல், வணங்குதல், ஏற்றல், புகலிடமாக கொள்ளுதல், அனுபவித்தல், காத்திருத்தல், செபித்தல், காதலித்தல், வைத்திருத்தல், ஈடுபடல் எனப்படும் நிலையில் இறைவனிடம் ஒருவர் கொண்டுள்ள இயல்பான ஒப்பற்ற அன்பினையும் ஈடுபாட்டினையும் இது குறிக்கின்றது எனலாம். அதேவேளை இறைவனும் அன்பு மயமானவன். ஆன்மாக்களிடத்து இயல்பான அன்புடையவன். எனவே இவ்வன்பு ஒருதலை சாய்வாக அன்றி இருதலை சாய்வாக விளங்குவதைக் காணலாம். இவ்வாறாக இருப்பதனால் தான் இறைவனை ஆன்மா நாட இறைவனும் ஆன்மாவை நாடுகின்றான். எனவே இரு சாராரும் ஒருவர் அன்பின் மற்றவர் பங்காளியாகி ஒன்றுபடுகின்றனர். எனவே தான் இந்துவின் வாழ்வில் இறைவன் ஆன்மா தொடர்பினை பக்தி என்ற தொடர் இணைத்து நிற்கின்றது.

இறைவன் மீது நாம் கொள்ளும் அன்பே பக்தியெனவும் அது அமுத வடிவானது எனவும் அதனை அடைந்தவர் சித்தராகி அழியாத நிலைபெற்றவராக திருப்தியடைகின்றார் என நாரத பக்தி சூத்திரம் கூறும். இதனாலே சாண்டில்யரும் இறைவனிடத்து ஒருவர் கொண்டுள்ள முழுமையான அன்பே பத்தி எனவும் அதனாலேயேற்படும் அழியாத நிலை முதலியனவற்றை எடுத்துக்கூறியுள்ளார். பிற்காலத்தில் நவரசங்களைப் போல் பக்தியையும் ஒரே ரசமாக ஞானிகள் சிறப்பித்துள்ளனர். கலியுகத்திலே பக்தி மார்க்கமே மிகச்சிறந்ததெனவும் கூறப்படுகின்றது. இறைவனுடைய பெருமைகளை கேட்டல், அவன் புகழ் பாடுதல், அவரைத்தியானித்தல், அவன் திருவடிகளைத் தொழுதல், அவனை அர்ச்சித்தல், வணங்குதல், அவனுக்கு அடிமையாக இருத்தல், நண்பனாயிருத்தல், அவனுக்கு தன்னை அர்ப்பணித்தல் என பத்தியின் ஒன்பது அமிசங்களைப் பற்றி பாகவதம் கூறுகின்றது. பக்தி ஒரு தனி மனித உணர்வாயினும் அது பதினொரு வடிவங்கள் கொண்டதென நாரத பக்தி சூத்திரம் கருத்து கூறுகின்றன. அவையாவன

1. இறைவனுடைய குணங்களிலும் வடிவங்களிலும் மிகுந்த ஈடுபாடு
2. இறைவனை பூசித்தல், இடையறாது தியானித்தல், தன்னையே அர்ப்பணித்தல், இறைவனிடம் அடிமையாகுதல், நண்பனாகுதல், பிள்ளையாக காதலியாக ஈடுபடல்
3. கடைசிக்கட்டத்தில் தெய்வீக அன்பு உச்சநிலையுற்று தன்னிலையற்ற இறைமயமாதல், அதன் விளைவாக இறைவனை பிரியமுடியாதிருத்தல் என்பனவாகும்.

இத்தகைய நெறியில் சென்ற தன் மூலம் ஆரம்ப காலத்தில் காணப்பட்ட இஸ்லாமிய ஆதிக்கப் படர்ச்சியை ஒரு சவாலாக ஏற்று இந்து சமயத்திற்கும் இந்துக்களின் வாழ்வுக்கும் அவ்வப்போது தேவைப்பட்ட ஆன்மீக பலம் உத்வேகத்தையும் சகிக்கும் மனப்பான்மையினையும் சிறப்பாக புதிய நம்பிக்கையினையும் மனித நேயத்தையும் மக்கள் மொழியில் அளித்து அதனை கனம் பற்றியது பக்திநெறிப் போக்கென்றே கூறலாம்.

தற்போதைய சூழலில் இது உன்னத நிலையில் வளர்க்கப்பட்டுள்ளது மட்டுமன்றி மக்களின் நாளாந்த வாழ்வுடன் பின்னிப்பிணைக்கப்பட்டதாகவே காணப்படுகின்றது. அவ்வகையில் ஆலயங்களை மையமாகக் கொண்டு எழுச்சிக்கான தோத்திரங்களாக நாம பஜனைகளாக ஆடல் பாடல் மரபு கொண்டு ஞானிகளின் போதனைகளாக ஊர்கள் தோறும் மனிதநேய மரபுகளினூடாக பரப்பப்பட்டு வருவதுடன் கூட்டு வழிபாடுகளாகவும் உயர்வு தாழ்வு அற்ற முறையில் அடிமட்ட மக்களையும் ஒன்றுபடுத்தி ஆன்மீகம் மட்டுமன்றி மனித நேயத்தையும் சகோதரத்துவத்தையும் ஜீவகாருண்ணியத்தையும் வலியுறுத்தும் மாபெரும் சக்தியாக பரிணமித்து இந்துக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளுக்கும் சீர்கேடுகளுக்கும் வெளிப்பிரச்சினைகளுக்கும் தீர்வு காணும் ஓர் சக்தியாக இன்று வளர்ந்து பல்விதமான பண்பாட்டு அமிசங்களையும் அது பேணிவருகின்றது. இதனூடாக மனித சமுதாயம் முன்னேற்ற பாதையில் செல்லுவதற்கு ஏற்ற ஒரு கருவி பக்தி எனப்படுகின்றது.

இப்பத்தியானது இந்துக்களின் வாழ்வியலில் சமயம், தத்துவம், கலை என்ற அம்சங்கள் பலவற்றையும் வளர்த்துக்கொடுத்த நிலையில் சமயத்தில் மூர்த்தி, தலம், தீர்த்தம் பெருமைகள் போற்றி தல யாத்திரைகளை மேற்கொள்ளவும் அதனூடாக "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்ற முதுமொழியை நினைவூட்டவும் வழிகாட்டியதுடன் சிவசின்னங்கள் எனப்படும் விபூதி உருத்திராக்கம் ஐந்தெழுத்து மந்திரத்தின் பெருமை காட்டவும் மந்திரங்களின் உச்சாடனத்தினூடாக பக்தியை வளர்க்கவும் கோயில் தொண்டுகள் புரிந்து உள்ளத்தை தெளிவுபடுத்தி நிலைப்படுத்தவும் திருமுறைகளையோதி ஆண்டவனின் பெருமை போற்றவும் அதனால் பற்றுறுதி கொண்டு அதனைக் காக்க ஆலயங்களில் உற்சவங்கள் சிறப்பாக மகோற்சவங்களை வருடந்தோறும் முறைமையாக நடாத்துவதற்கு வழிகாட்டியதுடன் ஆலயங்களை மையமாகக் கொண்டு மடங்களை அதில் தங்கவைக்க நாட்டுக்கு சேவையாற்றும் மனப்பாங்கினை வளர்க்க வழிகாட்ட காரணமாகும். அதே நேரம் தத்துவ நிலையில் குரு, லிங்க, சங்கம வழிபாட்டின் சிறப்பு தனித்துவப் போக்கு அவற்றின் பெருமைகளை சமய வரலாற்றில் நின்று நிலைத்திடவும் அதனூடாக "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற உயர்ந்த குறிக்கோளை பின்பற்றிச் செல்லவும் இடரினும் தளரினும் இறைவனே துணையாவர் என்ற நம்பிக்கைகளை வளர்த்தெடுக்க வழிகாட்டும் அதேநேரம் கலைகளின் தனித்துவத்திலே ஆடல் அழகன் நடராசனின் தோற்றப்பொழிவைக் கண்டு நாவுக்கரசர்

மெய்மறந்து "குனித்த புருவம் கொவ்வைச் செவ்வாய்" எனப் பாடவும் அதன்பேறாக உண்மை விளக்கம் என்ற சித்தாந்த தத்துவ நூலில் "தோற்றம் துடியதனில் தோயும் திதியமைப்பில்" என எடுத்துக்காட்டவும் ஆடல் அற்புதமாக இருக்க ஏற்ற முறையில் இசையுருவாக அதன் பேறாக "இசையாலம் வசமாக உலகமிது" என்ற கூற்று உருவாகவும் இசையால் இறைவனை மகிழ்வித்து வேண்டியதை பெற்றுக்கொள்ள வழிகாட்டியதும் இசைவரலாற்றின் பெருமைதனை நாயன்மார்கள் பலரும் போற்றிப்பாடவும் "தமிழோடு இசைபாடல் மறந்தறியேன்" என அப்பர் பெருமானும் "நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞான சம்பந்தன்" என சுந்தரர் போற்றவும் அதனை அடியாகக் கொண்டு பிற்பட்ட காலங்களில் இசைப்பாமலைகளோடு நாடக, நடனப் பெருவிழாக்கள் கொண்டாடி பத்தியியக்கம் மக்களிடம் செல்வாக்குப் பெறவும் இப்பக்தியானது வழிகாட்டியமையின் பேறாகவே இந்துக்களின் வாழ்வியலில் பக்தி ஒரு தனித்த இடம் பெற்றுள்ளதனை காணமுடிகின்றது.

சி.சோதிலிங்கம்
வலய ஆளுகைச்சாலை

Trees.....

Trees are of many kinds and are of very remote past
Those salubarious rain forests where green is so vast
The spread of the grasslands where time is never fast
They fill the earth's history and for aeons they'll last....

Man of this earth is only ninety thousand in age
From Yang-tse to Inca he had danced on the stage!
Ventured out to space – earth no longer his cage
The most intelligent bi-ped, who fills history's page....

Many are the branches that sprout from a tree
They reach out to the sky out – stretched and free
Those fruits, grains and shade are gifts almost free
Food stuff in tonnage – service fresh and clean!

Religions of man are limbs of a single one tree
Virtue is the bottom line – they basically preach
A life full of righteousness is all what they do teach
Well... serving the poor is within anybody's reach!

Don't chop off the branches and leave a tree bare
Love forms the branches, the shade we must share
Unselfish pure service is all what we should care....
Serve the helpless, needy – in heaven you're there!

Siva Wimaleswaran

மரங்கள் ...!

மரங்கள் செடிகள் கொடிகள் - இவை
புவியின் இயற்கை அணிகள்
அறுகம்புல்லில் இருந்து – வியக்கும்
ஆலமரம் வரை உயர்வு
தரையிற் பச்சை அரங்கு – அந்தத்
தாவர அழகோ விருந்து!
இவற்றின் கதை மிகப் பழசு – ஆனால்
இனத்தால் அனைத்தும் ஒன்று!

உயிரின் பரிணாமச் சிறப்பு – அதன்
ஒளியில் மனிதனின் பிறப்பு
வியக்கும் விஞ்ஞான அறிவு – அவனின்
விண்வெளி ஏகிடும் துணிவு!
அவனின் கதை மிகச் சிறிது – ஆனால்
ஆக்கச் செயல்களோ பெரிது
உரைக்கும் மொழிகள் பலது – ஆனால்
உடம்புள் இரத்தம் ஒன்று!

தழைத்திடும் ஒரு மரக்கிளைகள் - அவை
தனியொரு மரத்தின் முளைகள்
அவைதரும் சுவையுறு பழங்கள் - மரங்கள்
ஆதவன் வெம்மையில் நிழல்கள்
வயல்களில் விளைவன பயிர்கள் - அவை
வழங்கிடும் அளவற்ற பயன்கள்
தரையின் கொடி செடி மரங்கள் - தரும்
தன்னலமற்ற பெரும் பணிகள்!

உலகினிற் சமய நெறிகள் - இவை
உன்னத வாழ்வின் துறைகள்
பலபெயரில் நிலவும் இவைகள் - புனித
பக்தியின் ஒருமரக் கிளைகள்!
நன்னெறி வழிகளின் விதைகள் - மனித
நலத்தை உரைத்திடும் உரைகள்
பல பெயரில் அவற்றின் இறைவன் - அப்
பரம்பொருள் இறைவன் ஒருவன்!

இனத்தால் தாவரம் ஒன்று – அதுபோல்
இப்புவிவாழ் மனிதனும் ஒன்று
மனத்தால் போற்றிடும் பண்பு
தனக்கென வாழா வாழ்வு - இதனில்
தனியொரு மனிதனின் மலர்வு
மனித இனத்தின் இணைவு – அதுவே
மானிட சாதியின் நிறைவு

சிவம் விமலேஸ்வரன்
ஸ்காபரோ – கனடா
முன்னாள் ஆசிரியர் ஸ்கந்தவரோதயா கல்லூரி

பண்டைத் தமிழர் இலக்கியங்களும் நவீன கல்விச் சிந்தனைகளும்

"யாதுமூரே யாவரும் கேளிர்" என்பது புறநானூற்றுப் பாடல். ஒன்றின் முதலடி உலகம் யாவையும் ஒன்றாகக் கண்ட, உலக மக்கள் எல்லோரையும் உறவினராகக் கொண்ட இவ்விழுமிய கருத்து பண்டைத் தமிழர் தம் சிந்தனையில் முகிழ்ந்தது. அவர் சிந்தனையின் சிறப்பை அரண் செய்வது போன்றது. பின்வரும் முதுரை

"ஆலும் வேலும் பல்லுக்குறுதி
நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி"

இங்கு நாலு என்பது நான்கு அடிகளால் அமைந்த நானூறு பாடல்களைக் கொண்ட நாலடியார். இரண்டு என்பது இரு அடிப் குறளால் அமைந்த திருக்குறள், ஆம், ஏதாவது ஒரு விடயத்தை எடுத்துச் சொல்கின்ற போது அதனை உறுதி செய்ய நாலடியாரோ அன்றி திருக்குறளிலோ மேற்கோள் காட்டுகின்றோம். அவ்வாறு அரண் செய்தாலே நாம் கூறிய கருத்து உண்மைத் தன்மை பெறும். உலகம் ஏற்கும் இவ்வாறாக உறுதிபயக்கும் இலக்கியங்கள் பண்டைக் காலத் தமிழரிடையே அதிகம் தோன்றின. பண்டைக்காலம் என்பதன் மூலம் உணர்த்தப்படுவது வடமொழிச் செல்வாக்கு அருகி இருந்த கி.பி. 1 – 3 ம் நூற்றாண்டு வரையான காலப்பகுதியைக் கொண்ட சங்க காலமும் கி.பி. 4 – 6ம் நூற்றாண்டு வரையான காலப்பகுதியைக் கொண்ட சங்கமருவிய காலமுமாகும்.

வாழ்வாங்கு வாழ வழிகாட்டும் தெய்வ நூலாகிய திருக்குறளில் இன்று உலக சமுதாயத்திற்கு தேவையான நடைமுறைச் சாத்தியமான கல்விச் சிந்தனைகள் பெரிதும் பொதிந்து கிடக்கின்றன. அவ்வாறு எக்காலத்திற்கும் பொருந்தக் கூடிய கருத்துக்கள் கொண்டதால் தெய்வ நூல் எனப்படுகிறது. பைபிளுக்கு அடுத்ததாக மொழி பெயர்க்கப்பட்ட நூலாக அது பெருமையும் பெற்றது. ஏனைய நாட்டவர்களை வள்ளுவனும் ஒளவையும் கவர்ந்த அளவு நம்மவர்களைக் கவரத் தவறிவிட்டார்களா? எனச் சிந்திக்கத் தோன்றுகின்றது. "புத்தம் புதிய கலைகள் மேலை நாட்டு இலக்கியங்களில் கூறப்படுகிறது அந்த மேலைக் கலைகள் தமிழில் இல்லை. "சொல்லவும் கூடுவதில்லை – அவை சொல்லும் திறமை தமிழ் மொழிக்கில்லை" என அறிவிலி கூறினானே என பாரதியும் வருந்தினானே. பண்டைத்தமிழ் இலக்கியங்களில் காணப்படும் கல்விக் கருத்துக்கள் தமிழ் மொழியின் வல்லமையை உலகுக்கு எடுத்தியம்பும். ஜே.பி.கொனன்ட்டின் "கல்வி நாட்டுக்கு நாடு கலாசாரத்துக்கு கலாசாரம் வேறுபடுவது மட்டுமல்லாமல் காலத்துக்குக் காலமும் வேறுபடுகின்றது" எனும் கருத்தினையும் பொய்ப்பித்து விடும். பண்டைத்தமிழர் இலக்கியங்களில் காணப்படும் விழுமிய கருத்துக்களுள் சிலவான "வாழ்க்கை முழவதும் கல்வி" "கட்டாயக்கல்வி", "வாழக்கற்றல்", "கற்றற் சமூகம்", "அறிவைப் பெறக் கற்றல்" போன்ற கருத்துக்கள் இன்றும் முக்கியத்துவம் பெற்று விட்டதை நாம் எல்லோரும் அறிவோம்.

ஆரம்ப கால கல்விச் சிந்தனைகள் பற்றிப் பின்வரும் குற்றச்சாட்டு பொதுவானதாக இருந்தது. எழுதுதல், ஆரம்ப கணிதம் ஆகிய பாடப்பரப்புகளில் அறிவைப் பெறுதல், வளர்ந்தோர் சமூகம் ஏற்றுக்கொண்ட அல்லது அவர்களுக்கும் அவர்களது முன்னைப் பரம்பரையால் ஒப்படைக்கப்பட்ட அறிவு, திறன், நம்பிக்கைகளை இளம் வயதினருக்கு ஒப்படைத்தலே கல்வி என சிந்திக்கப் பழக்கப்பட்டிருந்தனர். ஜோன் டூயியும் "மரபு முறைக்கல்வி செயற்பாடற்ற கற்பித்தலை காரணமாக மாணவர் பெற்ற

அனுபவங்கள் அர்த்தமுள்ளவையாக இருக்கவில்லை" என்கின்றார். ஆனால் பண்டைய கல்வி சிந்தனை பற்றிய இக்குற்றச் சாட்டுக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியவையல்ல. பண்டைய கல்வி முறைகளில் குருகுலக்கல்வி முறை தலை சிறந்தது. மெய்யறிவையோ உலகியல் அறிவையோ போதிக்கும் இடங்கள் ஆடம்பரமும் ஆரவாரமும் பொருள் விரயமும் பொல்லாங்குமின்றிப் பொறுப்புணர்ச்சியுடன் ஆன்ற அறிவையும் அன்பு வாழ்வினையும் சமூகத்திற்கு அளித்து வந்தன. செல்வர் வறியவர் வேறுபாடின்றி ஆண்டி மகனும் அரசனின் மகனும் ஒரே பாங்கில் கருதப்பட்டனர். அனைவரும் பணி செய்தல் வேண்டும். பெண்களுக்கும் குருகுலம் இருந்தது. இக்கல்வி முறையில் மாணவர் குருவின் இருப்பிடம் சென்று அவர் சொல்லும் காரியங்களை முடித்து கல்வியும் கற்கின்றான். குரு சான்றாண்மை மிக்கவராக இருந்தார். அவரையே அவன் தன் வாழ்க்கைக்கு முன்மாதிரியாகக் கொண்டு பழக்கவழக்கங்களை கற்றுக் கொள்கின்றான். இன்றும் ஆசிரியர் மாணவர்க்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகின்றது. குரு அவனது அறிவை மாத்திரம் மதிப்பீடு செய்யாது அவன் செயல்களையும் கணிப்பீடு செய்வார். எனவே வெறும் மனனம் தான் பண்டைய கல்வி முறை செயன்முறைக் கல்வியைத் தருவதில்லை என்ற குற்றச்சாட்டு ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒன்றல்ல. எதைச் செய்கின்றோமோ அதைக் கற்கின்றோம். எதைச் செய்யவில்லையோ அதைக் கற்கவில்லை. என்ற முதுமொழி அக்காலக் கல்வியின் செயல் நடவடிக்கையை சுட்டி நிற்கின்றது. கல்வியின் நோக்கம் என்ன என்பதை வள்ளுவனின் பின்வரும் குறள் எடுத்துக்காட்டுகிறது.

"கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்கு தக"

இக்குறளில் கற்க வேண்டியவற்றை கசடறக்கற்று, கற்பவை என்பதன் மூலம் கால, தேச வேறுபாடுகட்கு ஏற்ப கற்கவேண்டியதைத் தெரிந்து சந்தேகம் நீங்கக்கற்று என்பதாகும். கண்டது கற்கப் பண்டிதனாவான் எனும் பழமொழியும் கால மாறுபாட்டிற்கு ஏற்புடையனவற்றை நன்கு ஆராய்ந்து கண்டு கற்க வேண்டியவற்றை ஒருவன் கற்பானாயின் அவன் புலமை பெறுவான் என்கிறது. அவ்வாறு புலமை பெற்றவன் நிற்க அதற்குத் தக' கற்றுக் கொண்டதற்கேற்ப வாழ்க்கையில் நிலைபெற்று ஒழுக வேண்டும. எனவே தேவைக்கு ஏற்பக் கற்ற கல்வி அவனில் நடத்தை மாற்றத்தை ஏற்படுத்தி நல்வழிகாட்டும். பண்டைத்தமிழர் இலக்கியங்கள் ஆதாரமாகக் கொண்டு தோன்றிய நன்னூலும்

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையினானே"

எனும் சூத்திரமும் கால வேறுபாட்டிற்கு ஏற்ப தேவையற்றவற்றை கழித்து புதியவற்றை சேர்த்து கொள்ளல் குற்றமல்ல என்று கூறுவதும் மரபுமுறைக் கல்வியில் ஒரே விடயத்தை மட்டும் கற்று வந்தார்கள் எனும் கருத்தை மறுப்பதாக அமைகிறது.

"யாண்டுபல வாக நரையில் வாகுதல்
யாங்காகிய ரென வினவுதிராயின்" எனத் தொடங்கும்

பாடலில் புலவர் பல்லாண்டு வாழ்ந்தும் முதுமையின் வெளிப்பாடான நரையின்றி தான் வாழ்ந்ததற்கு தான் வாழ்ந்த சமூகம் கற்றற் சமூகமாய் இருந்ததே காரணம் எனக் காட்டுகிறார். இவ்வாறு இயற்கையின் நியதியாகிய முதுமையை வெற்றி கொள்ள வைக்கும் அக்கல்விதான் எத்தகையது? இளங்கோவின் சிலப்பதிகாரத்தில் பாண்டிய மன்னன் தான் நீதியில் பிழைத்தேன் என்பதனை அறிந்ததும்

"யானோ அரசன் யானே கள்வன்..... கெடுக என் ஆயுள்". என் மன்னவனே உயிர் நீக்க வைத்த அத்தகைய கல்வி இன்று கிடைத்திருந்தால் முதியோர் முக்கியத்துவத்தை எடுத்துரைக்க "முதியோர் தினமும்" சிறுவர் சிறப்புக்களை எடுத்துக்காட்டும் சிறுவர் தினமும் மகளிர் முக்கியத்துவத்தை மதியுணர வைக்க 'மகளிர் தினமும்' ஆசிரியரின் அறிவுடைமையை அறிவிக்க 'ஆசிரியர் தினமும்' தேவையற்றுப் போயிருக்கும்.

பண்டைக்காலம் தொட்டு தமக்கென் ஒரு தனித்துவமான பாரம்பரியம் கொண்டவர்கள் தமிழர்கள். கல்விச் சிந்தனைகளிலும் தமக்கென ஓர் ஒப்பற்ற பாரம்பரியத்தை வளர்த்து வந்தவர்கள். வாழ்வாங்கு வாழ வழிவகுத்த வள்ளுவனின் திருக்குறளிலும் ஔவையாரின் பாடல்களிலும் நாலடி கொண்ட நாலடியாரிலும் பவனந்தி முனிவரின் நன்னூலிலும் பாமர மக்களும் விளங்கிய பயன்படுத்தும் வகையில் அமைந்த வாய்மொழி இலக்கியமாகிய பழமொழிகளிலும் காணப்படும் கல்விச் சிந்தனைகள் பண்டைத் தமிழர் கல்விப் பாரம்பரியத்தை ஓரளவு கோடிட்டு காட்டும்.

"வாழ்க்கை முழுவதும் கல்வி", "கட்டாயக்கல்வி", கல்வி மனிதனின் உரிமை', 'எல்லோர்க்கும் கல்வி' போன்ற கல்விச் சித்தாந்தங்கள் இன்று வலுப்பெற்று உலகின் எல்லாத்திசைகளிலும் பட்டிதொட்டியெல்லாம் உரக்க ஒலிக்கத் தொடங்கி விட்டன. இவற்றை மனித சமுதாயத்தை உணரவைக்க உலகத் தொண்டு நிறுவனங்கள் பல மும்முரமாக செயற்பட்டுக் கொண்டு இருக்கின்றன. நவீன யுனெஸ்கோ அறிக்கை 'தொடர்ச்சியாக மாறுகின்ற' உலக சமுதாயத்திற்குப் பொருத்தமான வகையில் கல்வி மாற வேண்டுமெனக் கூறுகின்றது. 1970ல் யுனெஸ்கோவால் கல்வி விருத்தி பற்றி ஆராய அமைக்கப்பட்ட சர்வதேச கல்வி ஆணைக்குழு தனது அறிக்கையில் கல்வி பற்றிய வரைவிலக்கணத்தில் கல்வி எக்காலத்துடனும் தொடர்புபடுத்தி 'வாழ்வதற்காகக் கற்றல்' (Learning to be) எனக் கூறுகிறது. இதன்மூலம் வாழ்வதற்கு பொருத்தமான அதற்கு அன்றாடம் பயன்படுத்தப்படுகின்ற தேவைப்படுகின்ற அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றைச் சேகரிக்கும் பயன்படுத்தும் செயன்முறை எனக் குறிப்பிட்டுள்ளது. கல்வியின் மூலம் அறிவு, திறன், மனப்பாங்கு வளர்க்கப்படுகின்றன என்பதற்கு பண்டைத்தமிழ் இலக்கியங்கள் சான்று பகர்கின்றன.

"தொட்டனைத்து ஊறும் மணற்கேலை மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு"

என எவ்வளவிற்கு கற்கின்றோமோ அவ்வளவுக்கவ்வளவு அறிவு வளர்கின்றது என்கிறார் வள்ளுவர்.

"விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனையவர்"

எனும் குறளில் கற்றவர்க்கும் கல்லாதவர்க்கும் உள்ள வேறுபாடு விலங்குக்கும் மனிதனுக்கும் உள்ள வேறுபாடு என்கின்றார். மனிதனை மனிதப் பண்புள்ளவனாக வினைத்திறன் மிக்கவனாக்க மனப்பாங்கு விருத்தியையும் தருவது கல்வி என்பது புலனாகின்றது.

" .....நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்
கல்வியழகே அழகு"

என நாலடியார் ஒருவன் உள்ளத்தால் தான் நல்லவன் என நினைக்கும்படி மனப்பாங்கு விருத்தியைத் தருவது கல்வி. எனவே கல்வியே உண்மையா அழகு என்கிறது. இவற்றைக் கொண்ட பார்க்குமிடத்து கல்வியானது அறிவு, திறன், மனப்பாங்கு விருத்தியைத் தருவதன் மூலம் மனிதனை மனிதனாக முக்காரணங்களாலும் வாழ வைப்பது என்பதே நம் முதாதையரின் கருத்து என்பது தெளிவாகத் தெரிகின்றது.

முதல் கூறிய அதே யுனெஸ்கோ அறிக்கை தற்காலக் கல்வியுடன் தொடர்புடைய இரு புது எண்ணக்கருக்களை முன்வைத்துள்ளது. (1) வாழ்க்கை முழுவதும் கல்வி (Life – Long Education) (2) கற்றல் சமூகம் (Learning Society)

'வாழ்க்கை முழுவதும் கல்வி' பற்றிய எண்ணக்கரு கற்றலில் ஈடுபட்டுள்ள சமூகத்தினது அடிக்கல்லாகும் வாழ்க்கை முழுவதும் கல்வி ஒருவனுக்கு அவசியம் என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு எண்ணக்கரு. மகாத்மா காந்தியும்

ஆதாரக்கல்வியானது கருவில் குழந்தை உருவாகும் நாள் முதல் மரண பரியந்தம் பரந்திருக்கிறது எனக் கருதியதன் மூலம் வாழ்க்கை முழுவதும் கல்வி பயில வேண்டும் எனக் கருதினார் என்பது தெளிவு. கால மாற்றத்திற்கு ஏற்ப கல்வியும் மாறும் எனவே முதியோருக்கும் இளஞ்சந்ததியினருக்கும் தலைமுறை இடைவெளி வராது தடுக்க வாழ்நாள் கல்வி அவசியம். ஒருவர் சமுதாயத்தில் தொடர்ந்து ஒன்றி வாழ வாழ்நாள் கல்வி அவசியம். கற்றவர்கள் தன் நாடு போலவே சென்ற இடம் எல்லாம் சிறப்பைப் பெறுவர். அவ்வாறான கல்வியை ஒருவன் சாகும்வரை ஏன் தல்லாது விடுகிறான் என பின்வரும் குறளில் வள்ளுவன் அங்கலாய்க்கின்றான்.

"யாதானும் நாடாமல் ஊராமல் என்னொருவன்
சார்துணையுங் கல்லாதவாறு"

ஔவைப்பிராட்டியும் ஆத்திசூடியில் 'ஓதுவதொழியேல்' எனக் கட்டளையிடுவதும் இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே 'வாழ்க்கை முழுவதும் கல்வி அவசியம் என்ற எண்ணக்கரு தமிழர் சிந்தனையில் தோன்றிவிட்டது என்பதைக் காட்டுகிறது. 'பாடை ஏறினும் ஏடது கைவிடேல்' எனும் பழமொழியும் இதனையே எடுத்தியம்புகிறது. கற்றல் சமூகம் (Learning Society) எனும் எண்ணக்கருவும் தமிழர் சமூகத்தில் இரண்டாயிரம் ஆண்டு பழமை வாய்ந்ததே என்பதற்கு புறநானூற்றில் பாடல் ஒன்றை எடுத்துக்காட்டல் பொருந்தும். பல்லாண்டு இவ்வுலகில் வாழ்ந்தும் நரை தோன்றாமைக்குக் காரணமாகக் கூறுமிடத்து படித்த சமூகமாக தன் ஊர் அமைந்ததே அதன் அடிப்படை என்கிறார்.

"மாண்டவென் மனைவியொடு மக்களுநிரம்பினர்
யான் கண்டமையரென் னிளையரும் வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும்"

மாட்சிமை பொருந்திய மனைவியும் பிள்ளைகளும் அறிவு நிரம்பியவர்கள். ஏவலாளியும் நுண்ணிய அறிவுடையவராய் என் கருத்தறிந்து நடப்பவர்கள் அரசனோ வெனில் அவன் பெற்ற அறிவினால் தீயவை நீக்கி குடிகளைக் காப்பவன். எனவே அவரின் இக்கூற்று மூலம் பெண்கள் தொட்டு சிறுவர் வரையும் அரசன் தொட்டு ஏவலாள் வரை எல்லோருமே அறிவு நிரம்பியவர்கள் என்பது தெரிகிறது. எனவே சங்கத்துச் சான்றோர் உண்மையன்றி வேறு கூறாத கள்ளமற்ற உள்ளம் கொண்டவர். எனவே பண்டைத்தமிழ் சமுதாயம் கற்ற சமுதாயம் என்பதற்கு இதைவிட வேறு சான்றுமுண்டோ. சமுதாயம் முழுக்க உலகியல் கல்வியுடையதாக இருக்க அதற்கும் மேலாக ஆன்மீகக் கல்வியில் சிறந்த பலரும் அக்காலத்தில் வாழ்ந்தார்கள் என்பதற்கு அப்பாடலின் கடைசி அடிகள் சான்றாகும்.

"ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர் யான் வாழுமூரே" எனப் பெருமிதம் அடைகின்றார் பிசிராஞ்தையார்.

நவீன உலகில் நிலவுகின்ற உலகமயமாக்கற் செயன்முறை (Globalization) 'உலகக்கிராமம்' (Global village) ஆகிய தொனிப் பொருள்களும் கல்விக்குப் புதிய இலக்குகளை அளித்துள்ளன. பண்டைத்தமிழர் பெற்ற கல்வியும் உலகம் முழுமையும் தனது ஊராகவும் உலக மக்கள் அனையும் உறவினராகவும் கொள்ளவைத்தது. புறநானூற்றின் 192வது பாடல் 'யாதுமூரே யாவரும் கேளிர்' என்ற தொடங்குகிறது. கணியன் பூங்குன்றனாரின் இவ்வடிகள் 'உலகக்கிராமம்' 'உலகமயமாக்கல் செயன்முறை' என்பவற்றின தொனியைக் கொண்டுள்ளது. வள்ளுவனும் பின்வரும் குறளில்

"யாதானும் நாடு ஆமால் ஊர் ஆமால் என்ஒருவர்
சார் துணையும் கல்லாதவரது"

இக்கருத்தையே புலப்படுத்துகிறார்.

இருபத்தோராம் நூற்றாண்டில் கல்வி எவ்வாறு அமைய வேண்டும் என ஆராய்ந்த சர்வதேச கல்வி ஆணைக்குழு தனது அறிக்கையை "Learning : The treasure within" என 1996ல் வெளியிட்டது. இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்ட கல்வி எண்ணக்கரு மிகவும் பண்பு சார்ந்ததாக இருந்தது. கல்வி மீது இரு தேவைகள் சுமத்தப்பட்டன. (1) அறிவைச் செலுத்தல் (2) தனியாள் விருத்தியையும் சமூக விருத்தியையும் உறுதிப்படுத்தல் என்பனவாகும். அறிவைப் பெருக்கல் என்பதே முதலில் கூறப்பட்டது. அடுத்து தனியாள் விருத்தி, சமூக விருத்தி இரண்டும் பண்டைக்காலத் தமிழரிடையே முக்கியமாக கருதப்பட்டது என்பதற்கு பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனின் கல்வி பற்றிய பாடலை எடுத்துக்காட்டலாம்.

"பிறப்போரன்ன உடன் வயிற்றுள்ளும்
சிறப்பின் பாலாற் தாயுமனந் திரியும்" எனும் அடிகள் குடும்ப நிலையில் ஒரு தாய் தன் வயிற்றுப் பிள்ளைகள் எல்லோரிடமும் ஒத்த அன்புள்ளவனானாலும் கற்றவனிடம் அவன் கற்ற கல்வியில் பண்பு வளர்ச்சி கூடியிருக்குமாகையால் அவள் அன்பு அதிகரிக்கும் எனக் கூறுகின்றார். தனியாள் விருத்தி எனும் எண்ணக்கரு இங்கு தொனிப்பதைக் காணலாம். அதேபோன்று ஒருவன் கற்ற கல்வி நாட்டு விருத்திக்கு அரசால் பயன்படுத்தப்பட வேண்டியது. இதன்மூலம் சமூக விருத்தியடையும். இப்பொருள்படும் அவரது அடிகள் இதோ

"ஒரு குடிப்பிறந்த பல்லோருள்ளும்
மூத்தோன் வருக வென்னா தவருள்
அறிவுடை யோனாறரசுஞ் செல்லும்"

பண்டைத்தமிழர் தம் சமூகத்தில் வாழ்க்கை முழுவதும் கல்வி என்ற கருத்து வலுப்பெற்றிருந்தாலும் இன்றுபோல் அன்றும் இளமைக்காலமே சிறப்பாக கல்விக்குரிய காலமாகக் கருதப்பட்டது. வாழ்க்கைகையைக் கொண்டு செல்ல, ஏனையவர்களுடன் சேர்ந்து வாழ, செயலில் ஈடுபடுவதற்காக கற்க வேண்டிய காலம் அது என 'இளமையில் கல்' என்றார்கள். இளமையிற் கல்வி சிலையில் எழுத்து எனும் பழமொழி இளமைக்காலம் சூதுவாது அறியாத காலம். அப்போது கற்றுக்கொண்டால் கல்லில் எழுதிய எழுத்துப் போல் அது நிலைபெற்று நிற்கும் எனக் காரணம் சொல்கின்றது. 'தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்' எனும் பழமொழியும் குழந்தைப் பருவத்திலேயே சிறந்த கல்விச்செயன்முறைகளை பிள்ளைக்குக் கற்றுக் கொடுத்தலின் அவசியத்தை எடுத்துக்காட்டுகிறது.

"கற்கை நன்றே கற்கை நன்றே, பிச்சை புகினும் கற்கை நன்றே" என இரக்க வேண்டிய அளவு வறுமை உற்ற இடத்தும் ஒருவன் கற்கவேண்டும் என கட்டாயப்படுத்தியது. "நாற்பாலுள்ளும் கீழ்பாலொருவன் கற்பின், மேற்பாலொருவன் மவன்கட்படுமே" எனும் அடிகள் சாதிவேறுபாடின்றி எல்லோருக்கும் கல்வி என்னும் நிலை பண்டைய காலத்தில் இருந்ததை எடுத்துக்காட்டுகிறது.
"மேற்பிறந்தார் ஆயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும், கற்றார் அனைத்தும் இலர்பாடு" எனும் திருக்குறளும் கல்வியாலே உயர்வு எனக்காட்டுகிறது.

பண்டைத்தமிழரின் சிந்தனைகள் நவீன உலகின் கல்விச் சிந்தனைகளுடன் ஒத்திருந்ததல்லாமல் அவற்றுக்கும் மேலான எண்ணக்கருக்களையும் உள்ளடக்கியன வாயுள்ளன. அன்று தமிழர்கள் இந்துக்களாயிருந்தனர். கன்மம் மறுபிறப்புக் கொள்கையில் நம்பிக்கை கொண்டவர்கள். 'உயிரானது விதிவழிப்படும் என்கிறது புறநானூறு. 'ஊழ்' எனும் அதிகாரத்தில் வள்ளுவனும் கன்மம் பற்றிப் பேசுகின்றார். "உயிர் உடலை விட்டு வெளியேறும்போது அது செய்த கன்மம், அது பெற்ற அறிவு,

சில நிறைவுகள் பின்செல்லும் என்கின்றது உபநிடதம். ஒருவன் ஒரு பிறவியில் கற்ற கல்வி ஆனது அவன் எடுக்கின்ற எல்லாப் பிறப்புக்கும் தொடர்ந்து செல்லும் என்பதனை பின்வரும் குறள் எடுத்தியம்புகிறது.

"ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்புடைத்து" கன்மம் மறுபிறப்பை ஏற்பவர் அல்லாத மற்றவர்களால் இக்கருத்து ஏற்றுக்கொள்ளமுடியாதது. இவ்வெண்ணமே சங்க காலத்தில் "ஆன்றவிந்து அடங்கிய சான்றோர் பலர் தோன்றக் காரணமாயிருக்கலாம். கற்கக் கற்க நிறைகுடம் போன்று அறிவு நிறைந்த நிலையில் அவர்கள் ஆராய்ந்து தெளிந்து ஆசைகளை அவித்து ஐம்புலன்களையும் அடக்கிய சான்றோராக வேண்டுமே ஒழிய 'நான் மெத்தப் படித்து விட்டேன்' எனச் செருக்கடையக் கூடாது என எண்ணியே ஔவைப் பிராட்டியும்,

"கற்றதுகைம் மண்ணளவு கல்லா துலகளவவென்
நுற்ற கலைமடந்தை யோதுகிறாள் - மெத்த
வெறும்பந்தயம் கூற வேண்டாம் புலவீர்
எறும்புந்தன் கையாலெண் சாண்"

இவ்வாறாக கல்வி தொடர்ந்து வரும் ஏன்பதும் நாம் கற்றது கை அளவே என்ற கருத்துக்களும் நவீன உலகுக்கும் புதியவையே.

இக்கட்டுரையில் நன்னூல் பற்றித் தனியே சொல்வது அவசியம். ஏனெனில் இலக்கியம் கண்டு இலக்கணம் கூறுதல் மரபு. இலக்கியம் முந்தியது இலக்கணம் பிந்தியது. 9ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியுடன ஆரம்பிக்கும் சோழர் காலத்தில் பவணந்தியார் இந்நன்னூலை ஆக்கியுள்ளார். பவணந்தியார் தான் வாழ்ந்த காலத்திற்கு முந்தைய கால இலக்கியங்களை நன்கு கற்றே தமிழ்மொழிக்கு இலக்கணம் வகுத்துள்ளார். அந்நூலின் பொதுப்பாயிரத்தில் 44 சூத்திரங்களிலும் முழுக்க முழுக்கக் கல்வி பற்றியே கூறப்பட்டுள்ளது. நன்னூல் தோன்றிய காலத்துக்கு முந்தைய பண்டைத் தமிழ் இலக்கியங்களில் உள்ள கல்விக் கருத்துக்கள் எல்லாம் தொகுக்கப்பட்டே பொதுப்பாயிரத்தில் இடம்பெற்றிருக்கலாம். எனவே பண்டைத்தமிழரின் சிந்தனையில் உதித்த கல்விச் சிந்தனைகளை அறிய நன்னூலின் பொதுப்பாயிரம் ஓரளவு போதுமானதாக இருக்கும் எனலாம். நூலின் வரலாறு, ஆசிரியனது வரலாறு அவ்வாசிரியன் மாணாக்கருக்குச் சொல்லும் வரலாறு மாணாக்கரது வரலாறு, அவன் கேட்டலின் வரலாறு என ஐந்து பிரிவில் எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய எல்லாக் காலத்திற்கும் பொருந்தக்கூடிய பல விழுமிய கருத்துக்கள் அமைந்துள்ளன. பண்டைத்தமிழ் இலக்கியங்களை இயற்றும்போது சொற் சுருக்கம் பொருட் செறிவுடையதாக அமைத்தனர். அதனை பின்பற்றி நன்னூலும் மிகச் சுருங்கிய சூத்திர வடிவில் அமைந்துள்ளது. ஒவ்வொரு சூத்திரத்தையும் விரித்துப் பார்க்குமிடத்து ஒவ்வொன்றுமே ஒவ்வொரு அத்தியாயம் போல் ஆகக்கூடிய அளவிற்கு விரிந்த பொருள்களை உள்ளடக்கியுள்ளன. சுருங்கச் சொல்லி விளங்க வைத்தலை நோக்கமாகக் கொண்டதால் அவர் பெரிதும் உவமைகளைக் கையாண்டு செல்கிறார். ஒவ்வொரு உவமைகளும் உணர்ந்து நயக்கத்தக்கவை. அதிலுள்ள விழுமிய கருத்துக்கட்கு சில உதாரணங்கள் மாணவன் ஆசிரியனிடம் பாடம் கேட்கும்போது

'சித்திரப் பாவையினத்த வடங்கிச்
செவிவாயாக நெஞ்சு களனாகக்
கேட்டவை கேட்டவை விடாதுளந் தமைத்துப்....."

கீறப்பட்ட ஓவியம் எவ்வாறு சலனமின்றி ஒரே பார்வையுடன் இருக்கிறதோ அதே போன்று மாணவனும் தன் புலன்களை அடக்கி வெளிவிடயங்களால் சலனமடையாது ஒருமுகப்படுத்தி செவி வாயாகவும் நெஞ்சே கொள்ளிடமாகவும் கொண்டு கேட்டதை மீண்டும் கேட்டு அவற்றை மறந்து விடாது உள்ளத்தில் நிறுத்த வேண்டும் என்பதே இச்சூத்திரத்தின் பொருள். வள்ளுவனும் செவிக்குணவில்லாத போழ்து சிறிது வயிற்றுக்கும்

ஈயப்படும்" என்கிறார். இன்றைய கல்வி முறை பல மாணவர் நிலையுடன் நாம் இதனை ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

நூலைக் கற்றலின் பயனைக் கூறுமிடத்து "அறம், பொருளின்பம் வீடடைதனூற் பயனே" என்கின்றார். அறத்தைக் கற்று அதன் வழி நின்று பொருளையீட்டி தானும் மற்றவர்க்கும் இன்பத்தை அனுபவிக்க மோட்சம் கிட்டும் கற்பதன் பயனை மிகச் சுருக்கமாகச் சொல்லியிருக்கிறார். மன வளைவை நீக்கும் நூலைக் கற்பிக்கும் ஆசிரியரை நிலத்திற்கும் மலைக்கும் நிறைகோலும் மலருக்கும் உவமிப்பதன் மூலம் ஆசிரியனின் சிறப்பியல்புகள் கூறும் தன்மை நயக்கத்தக்கது. ஆசிரியன் கற்பிக்குமிடத்து

'விரையான் வெகுளான் விரும்பி முகமலர்ந்து
கொள்வோன் கொள்வகையறிந்தவனுளங் கொளக்' கொடுத்தல் வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

மாணவர் திறன் கருதி (1) மீத்திறன் மிக்கவர் (2) சாதாரணமானவர் (3) மெல்லக்கற்போர் என மூவகையாகப் பிரித்துள்ளனர் கல்வியியலாளர். மீத்திறன் குழந்தைகள் அறிவுத்திறன் மிக்கவராய் தாங்களாகவே படிக்கும் முறை அமைத்துக் கொண்டு பாடசாலை கடமைகளை விரைவாகவும் சிறப்பாகவும் செய்து வெற்றி பெறுவர். இவர்களை தலை மாணாக்கராகக் கொண்டு நீரிலிருந்து பாலை பிரித்துக் உண்ணும் அன்னத்துக்கும் நிறைய உண்டு, பின் ஆறுதலாக அவற்றை வாயிற்கு கொண்டு வந்து அசைபோடும் பசுவுக்கும் நன்னூலில் உவமிக்கப்பட்டுள்ளது. சாதாரண மாணாக்கரோ ஆசிரியர் சொல்லிக் கொடுப்பதை மட்டும் விளங்கிக் கற்பவர்கள் இடை மாணாக்கரான இவர்களுக்கு வயலும், கிளியும் நன்னூலில் உவமிக்கப்படுகின்றன. மெல்லக்கற்போர் ஆசிரியரின் பெரும் முயற்சியின் பின் கற்பவர்கள். இடை மாணாக்கரான இவர்களுக்கு உவமையாக இல்லிக் குடம், எருமை, ஆடு, பன்னாடை என்பன நன்னூலில் சொல்லப்பட்டுள்ளது. உவமையை கூறுவதன் மூலம் இவர்கள் தன்மையை விளங்க வைக்கும் முறை சிறந்ததாகவுள்ளது. மாணவர் தன்மையைக் கூறும் நன்னூல் சூத்திரம் இதுவாகும்.

"அன்னமாவே மண்ணோடு கிளியே
இல்லிக் குடமா டெருமை நெய்யரி
அன்னர் தலையிடை கடை மாணாக்கர்"

பண்டைத்தமிழர் தம் கல்விக் கருத்துக்களை சொல்வதற்கு இச்சிறு கட்டுரை இடம்தராததால் சொன்ன அளவில் போதும் என விட்டுவிடுகிறேன்.

"மாட்சியிற் பெரியோரை வியத்ததுமிலமே, சிறியோரை இகழ்தல் அதனிலும் இலமே" எனத் தலைநிமிர்ந்து வாழ்ந்தவர் பண்டைத் தமிழர். அவர் பெற்ற கல்வி ஆன்று அவிந்த சான்றோரை உருவாக்கி உலகம் முழுவதையும் தன் ஊராகவும் உலகமக்களை உறவினராகவும் கொள்ளவைத்தது. தேவாமிர்தமாயினும் இனியது எனத் தணிந்து உண்ணார். கோபத்தைத் தவிர்த்தனர். அஞ்சக் கூடாததற்கு அஞ்சார். புகழுக்காக உயிரையே கொடுப்பர். பழிதரும் காரியங்களை உலகமே பெரிசாக கிடைத்தாலும் செய்யாதவர். தமக்கென முயலாது பிறர்க்கென முயலுவர். பண்டைத்தமிழர் தம் சிந்தனையில் மகிழ்ந்த விழுமிய கல்விக்கு அவர்களை இவ்வாறெல்லாம் இயங்க வைத்தது. இன்னும் அதே எண்ணக்கருக்கள் அதே கல்வி இலக்குகள் ஆனால் இன்று ஊருக்கு ஒரு அன்று அவிந்து அடங்கிய சான்றோரை தானும் காணமுடியவில்லை. விஞ்ஞானத்தில் உச்ச நிலை அடைந்த செல்வந்த நாடான அமெரிக்காவில் மாத்திரம் இருபத்தொரு இலட்சம் குற்றவாளிகள் இனங்காணப்பட்டு இன்று சிறையிலுள்ளனர் என்றால் உலகெங்கும் எவ்வளவோ? மறைந்திருக்கும் குற்றவாளிகள் எவ்வளவோ? பெற்ற

மகளையே பாலியல் இம்சை செய்யும் தந்தை, பெற்ற பிள்ளையை வெட்டிக்கொல்லும் தந்தை, கருவிலிருக்கும் குழந்தையின் உடறுப்புக்களை ஏலமிடும் தாய், மானுடம் எங்கே போகிறது என்ற அவலம் ஒருபுறம். இன்றைய இந்நிலை மாறவேண்டும் தீதும் நன்றும் பிறர் தரவரா என பகையுணர்ச்சி நீங்கி வாழும் சமுதாயமே மீண்டும் மலரவேண்டும். எங்கும் சமாதானம் என்பது கேட்க நன்றாகவே உள்ளது. ஆனால் அதனை நடைமுறையில் ஏற்படுத்தும் கல்வி இன்றைய தேவை, வாழ்க்கை முழுவதும் கல்வி, எல்லோருக்கும் கல்வி, கட்டாயக்கல்வி என எல்லோருக்கும் பொது நிறுவனங்கள் சிலவும் பெருமளவு பணத்தை செலவு செய்து போட்டி போட்டுக்கொண்டு எழுத்தறிவு வீதத்தை வளர்க்க பிரயத்தனம் செய்கின்றன. அம்முயற்சியில் ஓரளவு வெற்றி பெற்று விட்டன என்றே சொல்லவேண்டும். ஆனால் அதன் முயற்சி மூலம் மனிதன் எழுத வாசிக்கத் தெரிந்த விலங்காக மட்டுமே வாழ்கிறான். பிறருடன் தொடர்பு கொள்ளவும் விஞ்ஞான கண்டுபிடிப்புக்களை வளர்க்கவும் பெரும் செல்வத்தை சேர்க்கவும் பட்டம் பதவியை பெறவுமே கல்வி என்ற மனப்பாங்கு இன்றை மக்களிடம் காணப்படுகின்றது. ஆனால் மனித குண மேம்பாடுகளை வளர்த்தெடுக்கபடாத வரை ஏனைய விருத்திகள் பயனற்றவை. மனிதனை தெய்வ நிலைக்கு கொண்டுபோக பண்டைத்தமிழர் எண்ணினர். மனிதன் தெய்வீக நிலை பெறாவிட்டாலும் பறவாயில்லை. மனிதன் மனிதனாக வாழா இன்றைய கல்வி வழிகாட்டினால் போதுமானது. குற்றஞ் செய்த பின் தண்டிப்பதை விட குற்றம் செய்யவிடாது பாதுகாக்கும் கல்வியே இன்றைய தேவை. ஒரு தனிமனிதனையோ சமுதயாத்தையோ உயர் பண்பு கொண்டதாக உயர்த்துவது உண்மைக்கல்வியே. அவ்வாறான கல்வியை தெரிவு செய்து திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவது அரசு நாட்டுக்கு நலம்மிக்க நற்பிரஜைகளை உருவாக்க தவறிவிட்டதோ என ஐயுறு வைக்கும் நவீன கல்வி முறையை ஆராய்ந்து தவறுகளை களைய வேண்டியது அரசு. அதன் பின்னர் ஒருவன் குற்றம் செய்வானேயானால் அதன் பின் அக்குற்றவாளியை அரசு தண்டிக்கலாம் என்பது வள்ளுவன் கருத்து.

"தன் குற்றம் நீங்கி பிறருக்கும் காண்கினர்ற்பின்
என்குற்றம் ஆகும் இறைக்கு"

இன்றைய சந்ததியினருக்கும் திருத்தமான கல்வியைப் பெற்று 'யாதுமூரே யாவரும் கேளீர்' என ஒற்றுமையுடனும் தமக்கென வாழா பிறர்க்கென முயலுனராகி தலைநிமிர்ந்து வாழ வைப்பது கல்வியின் கடனே.

திருமதி. பி. கதிர்காமநாதன்
B.A (Hons.)
ஆசிரியர்
மானிப்பாய் மகளிர் கல்லூரி

Choosing a Healthy diet

The essence of a healthy diet is simply making good choices from the foods that are available what we eat or drink will sooner or later have an effect on our health and well being. People with healthy eating habit, good life style and regular exercises have an average life expectency combined with a higher standard of health.

It is very important to eat a nutritionally balanced breakfast if you dont take the breakfast it is like to run a vehicle without fuel. Balanced diet should contain all food components components, carbohydrates, proteins and fats followed by a fruit for extra vitamins minerals and fibre.

Lunch also should be taken in time with proper balanced diet. If the diet is not obtained at proper time this will lead to over weight an erratic blood glucose level, Dinner should be the lightest meal of the day and best taken 3 hours before we go to sleep. This prevents weight gain gastric reflex and ensuring better sleep.

The digestion of complex carbohydrates is a gradual process of metabolising carbohydrates into glucose which is longer lasting and beneficial for hours than simple carbohydrates which may lead to early diabetes. Eating large amounts of proteins does not improve or increase muscle tissue as many tend to believe. Muscle tissue increases through physical activity and training. We can't sustain life without the in take of fat because fats contain essential vitamins A,D,E,K 10-15% of fat intake is sufficient. Saturated fat contains cholesterol which is found in animals fat that promotes heart disease. Minerals and vitamins are also essential. Minerals and vitamins deficiency causes many deficiency diseases.

There is a strong and consistent evidence that a high intake of fruit and vegetables protects against various cancers Vitamin A, E Vitamin B, C Carotene reduce the risk of cancer. Soya, tea, yog hurt, whole grains, carrots, green leaves and fruits intake prevent cancer.

Adequate intake of fluid not less than 2.5 litres for a day for an average weight adult in a country with a topical climate is essential water at room temperature is a perfect thirst quencher. Soft drinks are not a good choice as they contain excessive sugar artificial flavouring and colouring.

Don't wait until you are thirsty to have a drink. Feeling thirsty indicates that you are already slightly dehydrated so we can try to maintain a measure of good health by making healthy choices from the foods that are available to us.

Mrs. M. Thiruganasambanthar
Sp.Trd. (Home Science)
Staff
Manipay Ladies' College

பண்ணிசையின் சிறப்பும் பெருமையும்

இசை இறைவன் வடிவமாகும். கலைகள் யாவும் இறைவனிடமிருந்தே தோன்றியவை. மேலும் இறைவனை அடைவதற்கு ஏற்ற சிறந்த சாதனமும் இசையேயாகும். சுந்தரமூர்த்தி சுவாமிகள் "ஏழிசையாய் இசைப்பயனாய்" என இறைவனை விளிக்கின்றார். ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளும் "நாதத்தையே சரீரமாக உடையவன் இறைவன்" என தமது கிருதியில் குறிப்பிடுவதோடு "சப்த ஸ்வரங்களும் இறைவனின் ஐந்து முகங்களிலிருந்தும் பிறந்தன எனவும் குறிப்பிடுகின்றார். இசைக்கு காந்தர்வ வேதம் எனவும் பெயருண்டு. காந்தர்வ வேதம் நான்கு உபவேதங்களில் ஒன்று. சிவபெருமான் கையில் டமருகமும், கண்ணபிரான் கையில் குழலும், சரஸ்வதி தேவியின் கையில் வீணையும் இருப்பது, இசைக்கலையின் தெய்வீகத் தன்மையைப் புலப்படுத்துகின்றது.

இத்துணைச் சிறப்புள்ளம் இசைக்கலையை மனிதன் தனது அறிவினாலும், புத்தி சாதுர்யத்தினாலும் இன்று கால வரை வளர்த்து வந்திருக்கின்றான். அக்கால பண்பட்ட சமுதாயத்திலிருந்து எழுந்தவையே பண் இசை வடிவங்கள். மூங்கிற்கழியினிடத்திலிருந்து வந்த இசையை உணர்ந்த மனிதன் நாளடைவில் அதனையே ஒரு வாத்தியமாக அமைத்தான். அவ்வாத்தியமே இன்று வழங்கும் புல்லாங்குழல் வாத்தியமாகும். இது ஓர் இயற்கை வாத்தியமாக விளங்குகிறது. குழலும் யாழும் சங்க காலத்தே சிறப்புற்றிருந்தமையை சங்கப் பாட்டால் அறியக் காணலாம். தெய்வப் புலவர் திருவள்ளுவரும் தமது திருக்குறளில் இவ்விரு வாத்தியங்களையும் குறிப்பிடுவது குறிப்பிடத்தக்கதாகும். இன்று வெளிநாடுகளில் இசையைப் பற்றி ஆராய்ச்சி செய்து இசை மூலம் நோய்கள் தீருவதையும் பயிர்கள் வளர்வதையும் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

தமிழகத்தில் மிகப் பழங்காலத்தில் இருந்தே இராக முறையைப் பண்முறை என்றும் இராகங்களைப் பண் என்றும் அழைத்து வந்திருக்கின்றார்கள். தமிழ் நாட்டில் நெடுங்காலமாக வழங்கி வந்துள்ள இராகங்களின் ஒலி வரலாற்றை ஆராய்வோமாகில் தேவாரப் பாசுரங்கள் தோன்றிய காலத்திற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பண்கள் என்று அழைக்கப்பெற்ற இராகங்கள் தமிழ் நாட்டில் வளர்ந்து வந்தமையை அறியலாம். சங்கீத மும்மூர்த்திகள் முதலான இசை மேதைகள் தமிழகத்தில் மரபு வழியாக வழங்கி வந்த இராக இசை மரபைக் கையாண்டே தங்கள் கிருதிகளை அமைத்துச் சங்கீத உலகிற்கு வழங்கினர். தேவாரப் பாடல்களும் திவ்விய பிரபந்த பாசுரங்களும் இந்த அடிப்படையிலேயே எழுந்தவையாகும்.

'பண்' எனும் பதம் பண்ணுதல் எனும் வினையடியாகப் பிறந்து பெருந்தானமாகிய நெஞ்சு, மிடறு, நாக்கு, மூக்கு, அண்ணாக்கு, உதடு, பல், தலை ஆகிய எட்டினாலும் கிரியையாகிய எடுத்தல் (ஆரோகணம்), படுத்தல் (அவரோகணம்) நலிதல், கம்பிதம், குடிலம், ஒலி, உருட்டு, தாக்கு ஆகிய எட்டினாலும் (அட்டகிரியாம்சம்) பண்ணிப்டுத்தலாற் பண் என்று பெயராயிற்று. "பண்" என்பது நிறைந்த நரம்புள்ளது எனவும் ஏழு ஸ்வரங்களுமுள்ள சம்பூர்ண இராகமெனவும் அழைக்கப்பெறும்.

திருமுறைத் தீந்தமிழ்ப் பாடல்கள் ஏனைய பாடல்களைப் போல அல்லாமல் பண்முறையாகவும், கட்டளை முறையாகவும் நம்முன்னோர் நமக்கு அமைத்து தந்தருளியது. நம்முன்னோரால் பெரிதும் போற்றத்தக்கதாகும். இம்முறை, இசைமுறை அல்லது சங்கீத முறை என அழைக்கப்பெறும். இசையுடன் ஓதி

அன்பு செலுத்தினால் தான் இறைவன் அருள் செய்வானோ? என்று சிலர் வினவலாம். இறைவன் திருவருளைப் பெறுவதற்கு வழிகள் எண்ணிலவாயினும் அவை எல்லாவற்றிலும் மிக மேலாகக் கொள்ளப்படும் நெறி "இசைச் சாதனமே" என்பது பெரும்பாலார்க்கும் ஒப்ப முடிந்த தொன்றாகும்.

ஐம்புலன்களையும் அடக்கி மனத்தை இறைவன் பால் வழிபடச் செய்து, மக்கள் இறைவன் அருள் பெறுவதற்கு இசைமுறையே மேலானதென்று கருதியன்றோ நம்மூவர் பெருமக்கள் இறைவன் மீது திருவாய் மலர்ந்தருளிய தேவாரப் பாக்களைப் பண்முறைப்படுத்தியும், கட்டளைமுறைப்படுத்தியும் நமக்கு அமைத்துத் தந்திருக்கிறார்கள். தேவாரச் செந்தமிழ்ப் பனுவல்களின் பல இடங்களிலும் இசையின் சிறப்புப் பற்றி பேசப்படுவதைக் கொண்டு பண்ணிசையின் சிறப்பை நாம் அறியலாம். ஒலி வடிவாகிய நாதத்தை முறையாகவும், கால அளவினதாகவும் அமைத்துப் பாடுவதற்கே "இசைமுறை" எனப்படும் இம்முறை ஒரு மொழிக்கு மாத்திரம் உரித்துடையனவல்ல. பண்முறையில் கண்ட இராகங்கள் சுருதியைச் சேர்ந்தும் அதாவது ஒலி வடிவாகிய சுரங்களைச் சேர்ந்தும், கட்டளைமுறை என்பது கால அளவைச் சேர்ந்தும் அதாவது தாளத்தைச் சேர்ந்தும் இருக்கின்றன.

இக்காலத்தே சங்கீத சம்பந்தமாக வடமொழியில் வழங்கும் ஸ்வரப் பெயர்களாகிய ஸட்ஜம், ரிஷபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் எனும் ஏழு ஸ்வரங்களும் தமிழில் முறையே குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பனவற்றிற்குச் சமமானவையாகும். இவற்றிலிருந்து உண்டானவையே பண்களும், திறங்களும். பண்கள் ஏழு சுரங்களோடு கூடிய இராகங்கள். இந்த இராகங்கள் சம்பூர்ண இராகங்கள் எனவும், மேள இராகங்களெனவும் வடமொழியில் வழங்கப்பெறும் திறங்கள் பண்களுள் ஒவ்வொன்றிலிருந்தும் உண்டாகிப் பலவகைப்பட்டு வேறுவேறு பெயர் பெற்று வழங்கும். இவை ஏழிற் குறைந்த சுரங்களையுடையனவெனவும் ஜன்னிய இராகங்களெனவும் கூறப்படும். ஏழு சுரங்களாலான இராகங்களை பண்ணியல் என்றும், ஐந்து சுரங்களாலான இராகங்களைத் திறம் என்றும், நான்கு சுரங்களாலான இராகங்களைத் திறத்திறம் என்பதும் மரபாகும். மேலும் தமிழிசை மரபில் கீதத்தின் முதலெடுக்கும் ஸ்வரம் முதல் என்றும், கீதத்தை முடிக்கும் ஸ்வரம் முடிவு எனவும் வழங்கும். வடமொழி இசையாசிரியர் இராகங்களுக்குக் கூறிய பத்து லட்சணங்களும் தமிழில் முதல், முடிவு, நிறை, குறை, கிழமை, வலிவு, மெலிவு என்னும் ஏழினுள் அடங்கும்.

"நிறை நரம்பிற்கே பண்ணெனலாகும். குறை நரம்பிற்கே திறமெனப்படுமே" என்னும் திவாகரத்தால் பண்ணியல்பும், திறனியல்பும் நன்கு விளங்கும். பண்ணின் சிறப்பிற்கு எடுத்துக்காட்டாக ஓர் குறமகள் குறிஞ்சிப் பண்ணைப்பாட ஓர் யானை தினைக்கதிரை உண்ணாமலும், புடைபெயராமலும் அப்பண்ணைக் கேட்டு மனமுருகி நின்று உறங்கியதென்பது கீழ்வரும் அகப்பாட்டால் அறியக்கிடக்கின்றன.

"ஒலியல் வார்மலியுளரிளன் கொடிச்சி
பெருவரை மருங்கிற் குறிஞ்சி பாட
குரலுங் கொள்ளாது நிலையினும் பெயராது
படா அப்பைங்கண் பாடு பெற்றோய்யென
மறம் புகன் மழகளி றுறங்கு நாடன்"

திருச்சிற்றப்பலத் தேசிகர் என்னும் பெரியார் தமது நாட்டில் பயிர்கள் அழிந்து மக்கள் உணவில்லாமல் வருந்துவதைக் கண்டு தமது பூசையில் மேகராகக் குறிஞ்சிப் பண்ணமைந்த திருப்பதிகத்தை ஓதுவிக்கச் செய்தபொழுது உடனே நாட்டில் மழைபெய்யத் தொடங்கித் துன்பத்தை நீக்கியதென்றும், இதனை அறிந்த சேதுபதி வேந்தனொருவன் அவரிடம் நன்றி பாராட்டித் தமது சமஸ்தானத்திலுள்ள வெள்ளக்குளம் போன்ற சில கிராமங்களை அளித்தனவென்றும், அங்ஙனமளித்த காலத்தில் எழுதப்பெற்ற பட்டயம் வாயிலாக அறியக்கிடக்கின்றது. இதிலிருந்து தமிழ்ப்பண்களின் சிறப்பை அறியலாம்.

திருமுறை இசைப்பாடல்களைப் பண்ணோடு பாடினால் அவை கல் மனதையும் கரையச் செய்யும் என்பதற்கு சிறிதளவும் ஐயமில்லை. திருத்தருமபுரத்தில் சம்பந்த சுவாமிகள் பாடியருளிய யாழ்முரி எனும் பண்ணைத் திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் தமது யாழில் அமைத்து வாசிக்க இயலாது யாழை உடைக்கச் சென்றமை பண்ணின் சிறப்பிற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். எடுத்த இயலும் இசையும் இடையே முறிந்து மாறுபடுமியல்புடையதாய் அமைந்த இசைப்பாடல் முறி (முரி) என அழைக்கப்படும். இத்தகைய முறிப்பாடலாக அமைந்து விளங்குவது "மாதர் மடப்பிடி" எனும் முதற்குறிப்புடைய இத்திருப்பதிகமாகும். "எடுத்த இயலும் இசையும் தம்மின் முறித்துப் பாடுதல் முறியெனப்படுமே" என்பது சிலப்பதிகாரம்.

செல்வி. சந்திரிக்கா கணேஸ்பரன்
ஆசிரியர்
யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி
இசைக்கலைமணி
பண்ணிசை கலாவித்தகர்
சங்கீத கலாவித்தகர்.

பச்சைத்தாவரத்தின் பெறுமதி

பச்சைத்தாவரங்கள் தாமே தமக்கு வேண்டிய உணவைத் தயாரிப்பதில் உற்பத்தியாக்கி என்றும் தற்போசணி என்றும் அழைக்கப்படும். தாவரங்கள் புவிக்கோளத்தில் மண்ணிலும் நீரிலும் பரந்து காணப்படுகின்றன. நிலத்தில் வாழும் தாவரங்கள் மண்ணிலிருந்து வேர் மயிர்களால் பிரசாரண மூலம் உறிஞ்சப்படும் நீர் தண்டிலுள்ள காழ் மூலம் கடத்தப்பட்டு தொடர்ந்து இலைக்காம்பினூடாகவும் இலை நரம்புகளினூடாகவும் இலைக்கலங்களை வந்தடையும். வளிமண்டலத்திலுள்ள காபனீர் ஒட்சைட்டு வாயு இலைவாய்களினூடாக பரவிச் சென்று இலைக்கலங்களை வந்தடையும். இலைக்கலங்களாகிய வேலிக்காற் புடைக்கலவிழையத்திலும் கடற்பஞ்சுப் புடைக்கலவிழையத்திலும், காவற்கலங்களிலும் காணப்படும் பச்சைய உருமணிகள் என்னும் தொழிற்சாலையில் மூலப்பொருட்களாகிய காபனீரொட்சைட்டையும் நீரையும் பயன்படுத்தி சூரிய ஒளிச்சக்தியின் உதவியால் பிரதான விளைவாகிய குளுக்கோசையும், பக்கவிளை பொருளாகிய ஒட்சிசனையும் உற்பத்தியாக்கும். இச்செயற்பாட ஒளித்தொகுப்பு என்றும் அழைக்கப்படும். உற்பத்தியான குளுக்கோசு உரியக் கலனின் ஊடாக தாவரத்தின் ஏனைய பகுதிகளுக்கு கடத்தப்படும். ஒட்சிசன் வாயு இலைவாயினூடு பரவலால் வளிமண்டலத்தை அடையும்.

தாவரத்தில் குளுக்கோசு சக்தியைப் பெறுவதற்கு பயன்படுத்தப்படுகிறது. மேலதிக குளுக்கோசு மாப்பொருள் உணவாக கிழங்குகளிலும் தானியங்களிலும் வெல்லமாக சேமிக்கப்படுகிறது. சில தாவரங்களில் வேர்களினால் மண்ணிலிருந்து அகத்துறிஞ்சப்படும் கனியுப்புக்களைப் பயன்படுத்தி குளுக்கோசு தாவரப் புரதமாக தொகுக்கப்படுகிறது. புரதம் தாவர வளர்ச்சிக்கு பயன்படுத்தப்படுவது போக மேலதிக புரதம் அவரை இனத்தாவரங்களின் வித்துக்களில் சேமிக்கப்படுகிறது. குளுக்கோசானது வெல்லமாக, மாப்பொருளாக, புரதமாக மாற்றப்படுவது போல கொழுப்பாகவும் மாற்றப்படுகிறது. எள்ளு, தேங்காய், இலுப்பை நிலக்கடலை போன்ற வித்துக்களில் கொழுப்பாக சேமிக்கப்படுகிறது. பச்சை நிறத்தாவரங்கள் உயிர்க்கோளத்திலுள்ள எல்லா உயிர் உள்ளவற்றுக்கும் நேரடியாகவோ மறைமுகமாகவோ உணவை வழங்கிவருகின்றன.

முருங்கை, வேம்பு, துளசி, தூதுவளை போன்ற பல ஆயிரக்கணக்கான தாவர மூலிகைகள் மருந்தாக பயன்படுத்தப்படுகின்றன. தாவரங்கள், சில பறவைகள் கூடுகட்டி வாழும் வாழிடமாக விளங்குகின்றன. ஏனைய பறவைகளின் தற்காலிக தங்குமிடமாகவும் அமைகின்றன. தாவரங்கள் அடர்ந்து வாழும் காடுகள் விலங்குகளின் புகலிடமாக அமைகின்றன. தாவரங்கள் வளிமண்டலத்திலுள்ள காபனீரொட்சைட்டை ஒளித்தொகுப்புக்கு பயன்படுத்தி ஒட்சிசன் வாயுவை வெளிவிடுவதால் வளியைத் தூய்மை அடையச் செய்கின்றன. அதேவேளை வளிமண்டலத்திலுள்ள ஒட்சிசன் காபனீரொட்சைட்டு ஆகிய வாயுக்களின் சமநிலையைப் பேணுவதில் பச்சை நிறத் தாவரங்களின் செயற்பாடு போற்றத்தக்கது என்றே சொல்லலாம்.

அவரை இனத்தைச் சேர்ந்த தாவரங்களின் வேர்ச்சிறு கணுக்களில் உள்ள இரைசோபியம் பற்றீரியங்கள் வளிமண்டல நைதரசனை நைத்திரேற்றாக மாற்றி மண்ணில் பதிக்கின்றன. இதனால் மண் வளமாக்கப்படுகிறது. அத்துடன் நைதரசனின் சமநிலை பேணப்படுகிறது என்பதில் தாவரங்கள் முக்கியத்துவம் பெறுகின்றது. மண்ணரிப்பைத் தாவரங்கள் தடுத்து நிறுத்துவதால் மண்வளத்தைப் பேணுகின்றன. அதேநேரம் நிலத்தினுள் கீழிறங்கி விரைவாக நீர் வற்றிப்போகாது தடுக்கும் செயற்பாட்டையும் செய்கின்றன. இறப்பர் மரத்திலிருந்து பெறப்படும் இறப்பர் பாலில் இருந்து டெனிஸ்பந்து, பலூன் போன்ற விளையாட்டு உபகரணங்களும், துடைப்பம், மெத்தை, தூரிகை, இறப்பர்க்குழாய்கள் போன்ற வீட்டு உபகரணங்களும், கையுறை, பனிக்கட்டிப்பை போன்ற வைத்திய உபகரணங்களும், ரயர், ரியூப், றப்பர், தகட்டுப் பூண் போன்ற வாகன உதிரிப்பாகங்களும், பூச்சாடி, பொம்மைகள் போன்ற அலங்காரப் பொருட்களும், சப்பாத்து, செருப்பு, இலாஸ்ரிக், மழை மேலங்கி போன்ற ஆடை அணிகளும் ஒட்டுப்பசை, அழிஇறப்பர், றப்பர் போன்ற பொருட்களும், விசையை ஊடு கடத்தும் பட்டிகள் போன்ற பொருட்களும் செய்யப்படுகின்றன.

பெண்களை அழகுபடுத்த தலை அலங்காரத்துக்கு தாவரங்களில் இருந்து பெற்ற மலர்கள் பயன்படுத்தப்படுகின்றன. இறைவனாக வணங்கும் விக்கிரகங்களை அலங்கரித்து அழகுபடுத்தும் மலர்மாலைகளும், கோவில் மண்டபங்களை அலங்கரிக்க மாவிலை, வாழை தோரணங்களும் பயன்படுத்தப்படுகின்றன. மாடிக்கட்டிடங்களின் கூரைகள் குடிசைகளின் கூரைகள் யாவும் அமைப்பதற்கு தாவரங்களே உதவுகின்றன. மேசை, கதிரை, கட்டில் போன்ற தளபாடங்கள் அமைப்பதற்கும் தாவரங்களே உதவுகின்றன. மனிதனின் பருத்தி உடைகள் பருத்தித்தாவரத்தின் பஞ்சில் இருந்தே பெறப்படுகிறது. டெரிலின், பொலியஸ்டர், நைலெக்ஸ் போன்ற செயற்கைத் துணிகளும் பெற்றோலியப் பொருட்களின் பிரித்தெடுப்பின் போது தோன்றும் பக்கவிளைவுகளைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டவையாகும். பண்படுத்தி எண்ணெய்யை பிரித்தெடுக்கும் போது

பக்கவிளைவுப் பொருட்களில் இருந்தே பிளாஸ்ரிக், பொலித்தீன், மின் உபகரண காவலிப் பொருட்கள், P.V.C குழாய்கள், மருந்துகள், துப்பரவாக்கிகள் போன்றவை செய்யப்பட்டன. இதற்கெல்லாம் மூலகாரணமானது பச்சைத்தாவரங்களே ஆகும். தாவரங்கள் காய்ந்தது எரிபொருளாகப் பயன்படுத்தப்படுகிறது. பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் புவியினுள் புதையுண்ட தாவரங்கள் அமுக்கத்திற்கு உள்ளாகியதன் விளைவே நிலக்கரி, பெற்றோல், டீசல், மண் எண்ணெய் போன்ற எரிபொருட்கள் உண்டானது எனின் விந்தையன்றோ. நிலத்துக்கு அடியில் இருந்து பண்படுத்தா எண்ணெய் பெறப்பட்டு பகுதிபடக் காய்ச்சி வடித்து பெற்றோலியப் பொருட்கள் பெறப்படுகின்றன. இதன்போது உண்டாகும் பக்கவிளைவுப் பொருட்களின் பயன்கள் பற்றி முன்னர் கூறப்பட்டது.

கடதாசி செய்வதற்கு வேண்டிய மூலப்பொருள் வைக்கோலாகும். தாவரங்களில் இருந்து ஒட்டும் தன்மை வாய்ந்த பிசின்களும் பெறப்படுகிறது. தாவரங்கள் நிலத்திலிருந்து உறிஞ்சிப்பெற்ற நீரின் ஒரு பகுதி இலைகளால் ஆவியுயிர்ப்பு மூலம் நீராவியாக வளிமண்டலத்திற்கு செல்கிறது. இந்தச் செயற்பாட்டிற்கு சூழலில் குளிர்ச்சி அடைகிறது. வளிமண்டலத்தை அடைந்த நீராவி பின்னர் மழையாக மீண்டும் நிலத்தை அடைகிறது. தாவரங்கள் நீர்ச் சக்கரத்திலும் பங்குஎடுக்கின்றன என்றால் மிகையாகாது. மனிதனின் அத்தியாவசியத் தேவையான உணவு, உடை, உறையுள், வளி, நீர் எல்லாவற்றுக்கும் பச்சைத் தாவரங்களே மூலகாரணமாய் அமைந்துள்ளன என்றால் அதன் பெறுமதி எவ்வளவு முக்கியத்துவமானது.

விஞ்ஞானம் அதீத வளர்ச்சி அடைந்துவிட்டது. சந்திர மண்டலத்தில் மனிதன் கால் பதித்துவிட்டான். கணனி, இயந்திர மனிதன் என பல வியக்கத்தக்க விந்தைகளை விஞ்ஞானம் செய்தபோதும் உணவு உற்பத்தி செய்வதில் தாவரத்தில் மட்டுமே தங்கிஇருக்க வேண்டும். உணவு உற்பத்தியில் தாவரத்திற்கு பிரதியீடாக ஒன்றை விஞ்ஞானத்தால் கண்டுபிடிக்க முடியவில்லையே. உயிரினங்களுக்கு உணவை வழங்க தாவர உற்பத்தியையே பெருக்க வேண்டும். தாவரம் உணவு செய்யும் வீதத்தை அதிகரிக்க உரத்தைக் கண்டுபிடித்த விஞ்ஞான உலகம், பீடைகளை ஒழிக்க மருந்துகளை அறிந்த விஞ்ஞானயுகம் உணவுற்பத்தியை அறியமுடியாதது பச்சைத்தாவரத்தின் பெறுமதியை உயர்த்தியுள்ளது.

தாவரங்கள் அழியுமாயின் உலகில் உள்ள உயிரினங்கள் யாவும் அழியும் என்பதில் சந்தேசம் இல்லை. தாவரங்கள் பச்சைப் பசேலென்று இருப்பதோடு பூத்துக்குலுங்கும் போது கண்ணுக்கு அழகாகவும் மனத்தைப் பரவசமூட்டும் காட்சிப் பொருளாகவும் சூழலை அலங்கரித்துக்கொண்டிருக்கிறது. இவ்வாறாக உயிரினங்களின் வாழ்க்கைக்கு பல்வேறு நிலைகளிலும் அத்தியாவசியமான மரங்களை பாதுகாப்பதன் மூலம் எமது சூழலை பாதுகாத்தல் எமது அனைவரினதும் கடமையாகும். அரசாங்கமும் சூழல் பாதுகாப்பில், அனுமதியின்றி மரங்களைத் தறிப்பதை குற்றமாக்கி இருப்பதுடன் மரங்கள் வளர்ப்பதிலும் கவனம் செலுத்துகின்றது. தனிமனிதராகிய நாமும் ஒரு மரம் தறிக்கும் போது இரு மரங்களை நட்டு நாமும் எமது வருங்கால சந்ததியினரும் நல்வாழ்வு பெறுவோமாக.

திருமதி. தி. நாகேந்திரன்
Special Trained Science
ஆசிரியர்
மானிப்பாய் மகளிர் கல்லூரி

கணக்குப் பதிவிற்கான முதன்மையேட்டுத் தொகுதியும் பேரேடும்

நிறுவனங்கள் தம் நடவடிக்கைகளின் பெறுபேறுகளை அறிந்து கொள்வதற்கான தரவுகளைப் பெற்றுக் கொள்வதற்கான மூல ஆதாரங்களாகப் பயன்படுபவை நடவடிக்கைகளின் பதிவுகளாகும். நிறுவனங்களில் நாளாந்தம் பல்வேறு கொடுக்கல் வாங்கல் நடைபெறுகின்றன. இவ்வாறான நடவடிக்கைகள் எல்லாவற்றையும் முறையாகப் பதிந்து வைப்பதன் மூலம் தேவையான போது வேண்டிய தகவல்களை எளிதாக அறிந்து கொள்ளலாம்.

"நிறுவனம் ஒன்றின் நிதித்தன்மை வாய்ந்த கொடுக்கல் வாங்கல் நிகழ்வுகள், நிலை மாற்றங்கள் பதிவு செய்தல் கணக்குப் பதிவு ஆகும். இவ்வாறு கணக்குகளைப் பதிவு செய்தல், வகைப்படுத்தல், சுருக்குதல், பகுப்பாய்தல், வியாக்கியானஞ் செய்தல் கணக்கியலாகும்" இக்கருத்தின்படி கணக்கீட்டுச் செயற்பாடு கணக்குப் பதிவியல், கணக்கியல் என இரு பிரிவுகளாக விபரிக்கப்படுகின்றன.

நிறுவனம் ஒன்றின் உள்ளீடுகளை (கொடுக்கல் வாங்கல் நிகழ்வுகள், நிலை மாற்றங்கள்) மூல ஆவணங்களுக்கேற்பவும் அவற்றின் நிதிப்பெறுமானங்களுக்கு ஏற்பவும் பொருத்தமான கணக்கீட்டு முறைகளுக்கமைய உரிய ஏடுகளில் பதிவுகள் மேற்கொள்வது கணக்குப் பதிவாளர் பணியாகும்.

கணக்கீட்டு உள்ளீடுகள்

கொடுக்கல் வாங்கல்கள்	நிலைமாற்றம்	நிகழ்வுகள்
இருகட்சியினரிடையே நிகழக்கூடிய பணப்பெறுமானம் உடைய நிகழ்வுகள்	நிறுவனத்தின் செயற்பாடு காரணமாகச் செயற்படும் மாற்றம் உ-ம் :- மூலப்பொருள் முடிவுப்பொருளாக்கல்	1. அக நிகழ்வு 2. புற நிகழ்வு

ஐந்தொகைச் சமன்பாடு

கணக்கீட்டின் இரு முதன்மைக் காரணிகள் சொத்து (வளம்) பொறுப்பு என்பனவாகும். உரிமையாளர் வழங்கியுள்ள வளங்களுக்கான உரிமைத்துவம் (உரிமையாண்மை) மூலதனம் எனவும் வெளியாட்கள் வழங்கியுள்ள வளங்களுக்கான உரிமைத்துவம் பொறுப்பு எனவும் கணக்கீட்டுச் சமன்பாட்டில் பயன்படுத்தப்படுகின்றன. இதற்கமையக் கணக்கீட்டுச் சமன்பாட்டை மூலதனம் (Capital) பொறுப்பு (Liabilities) சொத்து(வளம்) (Asset) என்ற குறியீடுகளால் பின்வருமாறு அமைத்துக் கொள்ளலாம்.

பொறுப்பு = வளம் (சொத்து) $L = A$
மூலதனம் + பொறுப்பு = சொத்து $C + L = A$

இரட்டைப்பதிவு

ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களும் நடைபெறும் பொழுது நிறுவனத்தின் சொத்துப் பொறுப்பு என்பவற்றில் ஏற்படும் தாக்கம் இரு வகைப்படும். அவ்விருவகைத் தாக்கங்களையும் ஒரே நேரத்தில் பதிவு செய்ய வேண்டும் என

இரட்டைப் பதிவுத் தத்துவம் கூறுகிறது. இக்கருத்தை முதன்முதலில் லூகா பெசியோலி என்பவர் சமர்ப்பித்து இரட்டைப் பதிவுக் கோட்பாட்டுக்கு வரவு (Debt), செலவு (Credit) என்ற பதங்களைப் பிரயோகித்தார். இதற்கமைய ஏதாவது கொடுக்கல் வாங்கல் நிகழ்வு ஏற்படும் பொழுது நிறுவனத்தின் வளங்களில் ஏற்படும் பாதிப்பை ஒரே நேரத்தில் வரவாகவும், செலவாகவும் இரு பதிவுகள் பதியப்படும்.

1. சொத்துப் பற்றிய தத்துவம் - சொத்துக் கணக்கு
   சொத்து அதிகரித்தல் + வரவு சொத்து குறைதல் - செலவு
2. பொறுப்புப் பற்றிய தத்துவம் - பொறுப்புக் கணக்கில்
   பொறுப்பு குறைதல் - வரவு பொறுப்பு அதிகரித்தல் +செலவு
3. செலவு பற்றிய தத்துவம் - செலவுக்கணக்கில்
   செலவு கூடுதல் + வரவு செலவு குறைதல் - செலவு
4. வருமானம் பற்றிய தத்துவம் - வருமானக்கணக்கில்
   வருமானம் குறைதல் - வரவு வருமானம் அதிகரிப்பு + செலவு
5. மூலதனம் பற்றிய தத்துவம் - மூலதனக்கணக்கு
   வருமானம் குறைதல் - வரவு வருமானம் அதிகரிப்பு + செலவு

(சுருக்கம்)

சொத்து செலவு	- அதிகரிப்பு வரவு	குறைதல் செலவு
பொறுப்பு, வருமானம் மூலதனம்	- குறைதல் வரவு	அதிகரிப்பு செலவு

முதன்மையேட்டுத் தொகுதியும் பேரேடும்

நிறுவனத்தில் நடைபெறும் கொடுக்கல் வாங்கல்கள் நடந்தேறியவுடன் பதிவதற்குப் பயன்படுத்தப்படும் ஏடுகள் முதன்மை ஏடுகள். இதனை மூல ஏடுகள், துணையேடுகள், முதற்குறிப்பேடுகள் எனப் பல பெயர்களால் வழங்குவர். நிறுவனக் கொடுக்கல் வாங்கல்களால் மூல ஆவணங்கள் தோன்றுகின்றன. அம்மூல ஆவணங்களிலுள்ள விபரங்களுக்கேற்ப முதன்மையேடுகளில் பதிவுகள் மேற்கொள்ளப்படும். பின்னர் முதன்மையேடுகளில் இருந்து பேரேட்டுப் பதிவுகள் மேற்கொள்ளப்படும். இது கணக்கீட்டு அமைப்பு விதியொன்றாகும்.

நிறுவனங்களின் கொடுக்கல் வாங்கல் தன்மைகளுக்கும், மூலதனம், நிறுவன அமைப்பு என்பவற்றிக்கேற்ப பேண வேண்டிய முதன்மையேடுகளை நிறுவனங்கள் தீர்மானித்துக் கொள்ளும். இவ்வாறு பேணப்படும் முதன்மையேடுகள் பின்வருமாறு

1. காசேடு
2. ஒருநிரல் காசேடு
3. இருநிரல் காசேடு
4. மூன்றுநிரல் காசேடு

ஒருநிரல் காசேடு – காசுக் கொடுக்கல் வாங்கல் நடந்தேறியவுடன் பதியப்படும் ஏடு, காசுப் பெறுவனவு காசேட்டின் வரவு காசுக் கொடுப்பனவு காசேட்டில் செலவு – காசேடு

காசு நடவடிக்கையின் ஒரு பதிவைப் பூர்த்தி செய்வதால் பேரேடாகவும் இரட்டைத் தொழிற்பாட்டையாற்றுகிறது. காசேடு எப்பொழுதும் வரவு மீதியையே காட்டும்.

இருநிரல் காசேடு – காசு, காசோலை மூலச் கொடுக்கல் வாங்கல்களைக் காசு, வங்கி என இருநிரல்கள் மூலம் பதிவு செய்யலாம். வங்கியில் நடைமுறைக் கணக்கினை வைத்துள்ள ஒருவர் பேணும் காசேடு இருநிரல் காசேடாக அமையும்.

மூன்றுநிரல் காசேடு – காசு, வங்கி நடவடிக்கைகளுடன் கழிவு பதிவு செய்தலுக்கு ஒரு ஞாபக நிரலாகக் கழிவு நிரல் அமைக்கப்படும். காசேட்டின் வரவுப் பக்க கழிவு நிரல் கொடுத்த கழிவையும் செலவுப்பக்கக் கழிவு நிரல் பெற்ற கழிவுத் தொகையையும் அறிய உதவுகிறது. இக்கழிவு நிரல் கூட்டுத்தொகை உரிய பேரேடுகளுக்கு மாற்றப்படும்.

சில்லறைக்காசேடு – பாரிய நிறுவனங்கள் பெரும்தொகையில் கொடுக்கல் வாங்கல் செய்யும் பொழுது நிறுவனத்தில் ஏற்படக்கூடிய சிறுசெலவுகளை மேற்கொள்வதற்கு சில்லறைக் காசாளரை நியமித்து அவர் மூலம் சிறு செலவுக் கொடுப்பனவுகளைச் செய்தல். இச்சில்லறைச் செலவுகளைப் பதியப் பேணும் காசேடு சில்லறைக் காசேடாகும். இது பெரும்பாலும் நிரல் முறையில் பேணப்படுவதை அவதானிக்கலாம்.

கொள்வனவேடு – மீள் விற்பனைக்கான பொருட்கள் கடனுக்குக் கொள்வனவு செய்யும் போது பதியப்படும் நாளேடு

விற்பனவேடு – நிறுவனத்தின் (மீள்) விற்பனைப் பொருட்களைக் கடனாக விற்பனவு செய்யும் போது பதியப்படும் ஏடு

வெளித்திரும்பலேடு (கொள்வனவுத் திருப்பல் நாளேடு)

மீள் விற்பனைக்கான பொருட்கள் கடனாகக் கொள்வனவு செய்த பின் அப்பொருட்களின் ஒரு பகுதி திருப்பி அனுப்ப நேரிடலாம் அவ்வாறு திருப்பி அனுப்புபவற்றைப் பதியும் நாளேடு.

உட்திரும்பலேடு – விற்பனைத் திரும்பல் நாளேடு

நிறுவனத்தின் மீள்விற்பனைப் பொருட்களின் சில பகுதிகளை கடன் விற்பனையாளர் (கடன்படுனர்) சிலவேளைகளில் திருப்பி அனுப்ப நேரிடலாம். அவ்வாறு திருப்பி வந்த விற்பனைப் பொருட்கள் பற்றிப் பதியும் நாளேடு.

பொதுக்குறிப்பேடு - இதுவரை கூறப்பட்ட முதன்மையேடுகளில் பதிய முடியாத கொடுக்கல் வாங்கல்களைப் பேரேட்டுக் கணக்குகளுக்கு மாற்றுவதற்குப் பயன்படுத்தப்படும் முதன்மையேடு பொதுக்குறிப்பேடு எனப்படும். பொதுக்குறிப்பேட்டுப் பதிவுகளைப் பின்வரம் ஆறு வகைகள் அடக்கலாம்.

1. தொடக்கப்பதிவுகள்
2. நிலையான சொத்துக்களின் கடன் கொள்வனவு, கடன் விற்பனை
3. வழுக்களைத் திருத்தம் செய்தல்
4. செம்மையாக்கல்கள்
5. மாற்றீடு செய்தல்
6. பதிவுகள் முடித்தல் (மூடும் பதிவுகள்)

பேரேடு

முதன்மையேடுகளில் பதியப்படும் நடவடிக்கைகள் யாவும் பேரேட்டுக்கு மாற்றப்பட்டு இரட்டைப் பதிவு பூர்த்தி செய்யப்படும். இவ்வாறு இரட்டைப் பதிவு முறையில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்யும்போது நடவடிக்கைகளின்

இரட்டைத்தன்மையை அறிந்து கொள்ளும் ஆற்றல் மாணவர்களிடம் இருத்தல் அவசியம்.

பேரேடு கணக்குகளின் தொகுதி என்பதோடு வியாபார நிலையம் சம்பந்தமான நிதித் தகவல்களைத் திரட்டி வைத்திருக்கும் நிலையமுமாகும். பேரேடுகள் வரவு செலவு ஆகிய இரு பகுதிகளாக பகுக்கப்பட்டுப் பதிவுகள் இடம்பெறும்.

பேரேட்டின் அமைப்பு

வரவு

திகதி	விபரம்	பே ப	தொகை	திகதி	விபரம்	செலவு பே ப	தொகை



பேரேட்டில் இடம்பெறும் கணக்குகள் யாவும் பின்வருமாறு குறிப்பிடலாம்.

1. உரிமைக்கணக்கு	வரவு	செலவு
2. சொத்துக்கணக்கு	குறைவு	அதிகரிப்பு
3. பொறுப்புக்கணக்கு	அதிகரிப்பு	குறைவு
4. வருமானக்கணக்குகள்	குறைவு	அதிகரிப்பு
5. செலவுக்கணக்குகள்	அதிகரிப்பு	குறைவு

கணக்கியல் கற்க ஆரம்பிக்கும் மாணவர் ஒருவருக்கு அதன் அடிப்படை அம்சங்களைத் தெளிவுபடுத்தி பாடத்துள் கவனம் செலுத்த வேண்டிய கணக்கீட்டு விடயங்கள் தொகுத்து வழங்கப்பட்டுள்ளது. இது கணக்கியலை அறிமுகம் செய்து கொள்ளும் மாணவர்களுக்கு உதவும் எனும் நோக்குடன் ஆக்கப்பட்டு முக்கிய அடிப்படை விடயங்கள் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது. பாட வளர்ச்சியின் போது விரிவாக இவ்விடயங்களை மாணவர்கள் அறிந்து கொள்வர்.

முதன்மை ஏடுகளும் கொடுக்கல் வாங்கல்கள் எழுதுதலும் - சுருக்கம்



திருமதி. வி. சற்குணரட்ணம்
Sp. Trd (Commerce)
ஆசிரியர்
மா. மகளிர் கல்லூரி

உலகை உலுக்கும் உக்கிர நோய்

'சார்ஸ்'

"அங்கு இங்கு எனாதபடி எங்கும் பிரவாகமாய் ஆனந்த மூர்த்தியாகி அருளோடு நின்றது எது" என்ற ஆனந்தக் கூத்தனின் அருளோ, ஊழிக்காலம் உதயமாகி விட்டதா எனத் திடுக்கிடும் வகையில் தோன்றி மர்ம நோய்கள் சரித்திரம் படைத்து விடுகின்றன. பாரெல்லாம் புகழோங்கி பரந்து விரிந்து கிடக்கும் சீன தேசத்திலே கடந்த வருடம் நவம்பர் மாதம் "குவங்டொங்" எனும் பிரதேசத்திலே மிக வேகமாகப் பரவிய பயங்கர ஆட்கொல்லி வியாதியே சார்ஸ். இந்நோய் சீனாவை மட்டுமல்ல ஏனைய பல நாடுகளையும் தன் பிடிக்குள் ஆக்கிரமித்துக் கொண்டுள்ளது.

நோயின் ஆரம்பம் :-

வியட்நாம் 'ஹனோய்' நகரில் உள்ள பிரான்ஸ் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட 48 வயதுடைய சீன – அமெரிக்க வர்த்தகர் ஒருவர் இம் மூச்சுத்திணறல் நோய்க்கு உட்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அவ்வர்த்தகர் அப்பொழுது ஹாங்கொங்கில் இருந்து ஹனோய்க்கு வந்திருந்தார். சுகவீனமுற்ற நிலையில் கடந்த பெப்ரவரி மாதம் 26ம் திகதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு கடும் காய்ச்சல், இருமல், வயிற்றுவலி மற்றும் மூச்செடுப்பிற்கு சிரமம் ஆகிய அறிகுறிகள் ஏற்பட்டிருந்தன. இவர் அண்மைக்காலங்களில் 'குவாங்டொங்', 'மாகோஓ' ஆகிய பிரதேசங்களில் தங்கியிருந்தமை தெரிய வந்துள்ளது. இந்நோயின் தன்மை கொண்ட பல ஊழியர்கள் அவ்வைத்தியசாலையில் இனங்காணப்பட்டனர். இவர்களுக்கு சீன – அமெரிக்க வர்த்தகர் மூலமே நோய் தொற்றியிருக்க வேண்டும் என கருதப்படுகின்றது. இந்நோயின் குணவியல்புகள் கொண்ட நோயினால் பாதிப்புற்று அதுவரையில் சீனாவில் 'குவாங்டோங்' மற்றும் ஹாங்கொங் ஆகிய பிரதேசங்களில் பலர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு இருப்பது டாக்டர் கார்லோ உர்பானி எனும் வைத்தியர் ஆய்வுகள் மூலம் கண்டறிந்தார்.

உலக சுகாதார நிறுவனத்திற்குட்பட்ட குழு சீனாவின் குவாங்கடொங் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட வைத்திய ஆய்வுகள் மூலம் இவ்வகை மூச்சுத் திணறல் நோய் சார்ஸ் நோய்த் தாக்கமே என இவ்வாண்டு மார்ச் மாதம் 26ம் திகதியே உறுதி செய்யப்பட்டது.

இந்நோய்க் கிருமி தொடர்பாக ஆய்வுகளில் ஈடுபடுகின்ற வேளையில் டாக்டர் கார்லோ உர்பானியும் அந்நோய்த் தாக்கத்துக்கு உட்பட்டார். வியட்நாமுக்கு சார்ஸ் நோயினை காவிச் சென்ற சீன – அமெரிக்க வர்த்தகர் மார்ச் மாதம் 13ம் திகதி, ஹாங்கொங்கில் மரணமடைந்தார். டாக்டர் கார்லோ உர்பானி மார்ச் மாதம் 29ம் திகதி பாங்கொங்க் நகரில் சார்ஸ் நோயினால் மரணமடைந்தார். நோயை இனங்கண்டவரையே பலி கொண்ட கொடிய நோய் 'சார்ஸ்'.

SARS என்றால் என்ன?

SARS என்பது **S**evere **A**cute **R**espiratory **S**yndrome என்பதின் சுருக்கமாகும். கடுமையான குறுகிய கால நுரையீரல் நோய் என்பது இதன் அர்த்தமாகும். இந்த நோயால் பீடிக்கப்பட்ட நோயாளிகள் மூச்சுத் திணறல் ஏற்பட்டு இறக்கின்றனர். நோயின் குணங்குறிகளைக் கொண்டு இப்பெயர் சூட்டப்பட்டுள்ளது.

நோயின் அறிகுறிகள்

- அதியுயர் காய்ச்சல் (38C / 100.4 F க்கு மேல்)
- காய்ந்த இருமல் (2 – 7 நாட்களின் பின்)
- மூச்சு விடுவதில் அசௌகரியம் / திணறல்
- நெஞ்சறையின் எக்ஸ்ரேயில் அசாதாரணமான பொருட்கள் தெரிதல் / அசாதாரண மாற்றங்கள்
- கடும் தலையிடி
- தசைநார்களில் இறுக்கம்
- பசியின்மை
- தேக அசௌகரியம்
- தடுமாற்றம்
- வயிற்றோட்டம்
- உடல் முழுவதும் கடி
- மூக்கடைப்பு
- தொடர்ச்சியான தும்மல்
- குருதிச் சிறுதட்டுக்களில் குறைவு (Low Platelet Count)
- மூச்சு விடும் போது நெஞ்சு நோ அதிகரிப்பு

SARS நோய்க்கான காரணம்?

சார்ஸ் நோயானது முன்னெப்போதும் அறியப்படாத ஒரு வகை குறோனா (Corana) வைரசினால் உருவாவதை ஆய்வுகள் நிரூபித்ததுடன் குறோனா வைரஸ் என்பது வைரசுக்களில் ஒரு குடும்பத்தின் பெயர். இதன் அங்கத்தவர்களை இலத்திரன் நுணுக்குக் காட்டியினூடாக பார்க்கும் போது பண்டைய அரசர்களின் முடி (Crown like) போன்று தோன்றும் இதனாலேயே இப்பெயர் ஏற்பட்டது.

இக்குறோனா வைரஸ் மனிதர்களுக்கு புதியவையல்ல. சாதாரணமாக தடிமனை உருவாக்குபவை இவையே. சாதாரணமாக மூன்று மணித்தியாலங்கள் வரை உலர்வளியில் தொற்றுத் தன்மையுடன் காணப்படக்கூடியவை. புற ஊதாக் கதிர்களினால் (UV rays) இவற்றின் தொற்றுத் திறன் அழிக்கப்படும். இதனால் சூரிய ஒளி இவற்றை அழித்து விடும். இவற்றின் முக்கியமான இயல்பு என்னவெனில் இலகுவில் பிறப்புரிமை விகாரம் (Gene mutation) அடையக் கூடியவை.

குறோனா வைரஸ் கிருமிகள் சுவாச மற்றும் குடல் சம்பந்தமான நோய்களை ஏற்படுத்துகின்றன. இது மனிதரில் சாதாரண தடிமனையும் கோழிகளில் மார்புச் சளியையும் உருவாக்குகின்றன. மனிதரில் காணப்படும் குறோனா வைரசும், பறவைகளில் காணப்படும் குறோனா வைரசும் தமக்குரிய வேறுபட்ட மரபணுக்களை (Genetic code) கொண்டிருக்கின்றன. சம காலத்தில் இவ்விரு வைரசுக்களும் மனிதரில் / விலங்குகளில் தொற்றுதலடைந்து தத்தமது மரபணுக்களை பரிமாற்றிக் கொள்கின்றன. இதன் விளைவாக உருவாகும் புதிய குறோனா வைரசு புதிய மரபணுக்களை கொண்டிருப்பதுடன் புதிய விருந்து வழங்கி கலத்தை தொற்றுதலடையும் ஆற்றலைக் கொண்டிருக்கின்றன. புதிதாக உருவாகும் இந்த வைரசு அதிக வீரியத் தன்மை கொண்டதாயும் மருத்துவ சிகிச்சைக்கு எதிர்ப்பு சக்தி கொண்டதாகவும் காணப்படுகின்றது.

இப்புதிய வைரசு வழமைக்கு மாறான நியூமோனியாவைத் (Atypical Pneumonia) தோற்றுவிக்கின்றது. நியூமோனியா கிருமியின் தொற்றுக் காரணமாக பாதிக்கப்படும் காற்றுச் சிற்றறைகள் சுரப்புகளால் நிரம்புகின்றன. அதனால் ஒட்சிசன் (O_2), காபனீரொட்சைட் (CO_2) பரிமாற்றம் தடைப்படுகின்றது. ஆனால் வழமைக்கு மாறான நியூமோனியாவில் சிற்றறைகளைச் சூழவுள்ள இழையங்கள் (Tissues) வீங்குதல் காரணமாக சிற்றறைகள் சுருங்கிப் போகின்றன. அத்துடன் அவற்றிற்கான குருதி விநியோகமும் தடைப்படுவதால் கலங்கல் (Cells) இறக்கின்றன. காற்றுப் பரிமாற்றம் தடைப்படுகிறது. இதுவே SARS இல் அவதானிக்கப்பட்ட நோய் நிலையாகும்.

பரவும் காலம்

- தொற்று ஏற்படும் காலம்
  02 – 10 நாட்கள் வரை சில நோயாளிகளுக்கு 13 நாள்கள் வரை நீடிக்கும்
- ஆரம்ப அறிகுறிகள் தோன்றும் காலம்
  01 – 02 நாட்களுக்குள், காய்ச்சல், உடல் அலுப்பு, காய்ந்த இருமல், தலையிடி
- இறுதிக்கட்டம்
  03 – 04 நாட்கள் (பயங்கரமாக தொற்றும் காலம்)
  இக்கட்டத்தில் மூச்சுவிடுவதில் அசௌரியம், மூச்சுத் திணறல் ஏற்படும். இக்கட்டத்தில் 90% மான நோயாளிகள் தப்பிவிடுவர். 10% மான நோயாளிகள் மரணத்தை தழுவுகின்றனர்.

எவ்வாறு பரவுகின்றது?

- SARS நோயால் பாதிக்கப்பட்ட ஒருவர் தும்மும் போது / இருமும் போது வளியில் விடப்படும் துணிக்கைகளை இன்னொருவர் உள்ளெடுக்கும் போது இந்நோய் பரவுகின்றது.
- நேரடியான தொடுகை / மறைமுகத் தொடுகை (Direct or Indirect contact) மூலமாகவும் பரவலாம்
- தும்மல், மூக்கு நீர் ஆகியவற்றில் இருந்தும்
- நோயாளி பாவித்த பொருட்கள் என்பவற்றில் இருந்தும்
- மூச்சுக்காற்று (குறிப்பாக குளிரூட்டப்பட்ட விமானம் / கப்பல்களில் பயணம் செய்வோர் இதற்கு ஆளாகின்றனர்)

சார்ஸ் நோயாளியின் சில பொது இயல்புகள்

- நெஞ்சக எக்ஸ்ரேயில் அசாதாரண மாற்றங்கள் காணப்படுதல்
- சுவாசக் குழாய்களும் நுரையீரல்களும் சந்திக்கும் இடத்திலும், நுரையீரல்களிலும் புள்ளிகள் தோன்றல்
- 5 – 6 நாட்களுக்குப் பின் 90% நோயாளிகள் தப்பிக் கொள்வர்
- 10% மான நோயாளிகள் மாத்திரம் சுவாசச் சிக்கலுக்கு உள்ளாகி மரணிப்பர்.

பாதுகாப்பு நடவடிக்கை

- சுகாதார பாதுகாப்பு தொழிலாளர்கள், நோயாளிகள், குடும்ப அங்கத்தவர்கள், அண்மித்த சிநேகிதர்கள் ஆகியோரை உடனடியாகத் தனிமைப்படுத்தி சகல பரிசோதனைகளையும் செய்து வியாதி இருந்தால் நோயாளிகளுக்கு என விசேடமாக அமைக்கப்பட்ட தொற்று நோய் தவிர்க்கும் வைத்தியசாலைக்கு அனுப்ப வேண்டும்.

- வியாதி தோன்றியதாகச் சந்தேகிக்கப்படுபவர்களை 20 நாட்களுக்கு தீவிர கண்காணிப்பில் வைத்திருத்தல் வேண்டும்.
- சாதாரண பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டால் நோயாளியை மற்றைய நோயாளிகளுக்கு அண்மையில் இல்லாது தூர வைத்திருந்து விசேடமாக பயிற்சி பெற்ற தாதிமார்களின் மேற்பார்வையில் இருக்க வேண்டும்.

வைத்தியர் மேற்கொள்ள வேண்டிய ஆரம்ப நடவடிக்கைகள்

- அவருக்கு காய்ச்சல் உண்டா
- காய்ந்த இருமல் மூச்சுத்திணறல் ஆகியன உண்டா
- அவர் பயணம் செய்திருப்பின் 14 நாட்களுக்கு முன் எங்கிருந்து வந்தார்
- நோயாளி தெரிந்தோ தெரியாமலோ சார்ஸ் நோயாளியுடன் சேர்ந்து இருந்தாரா போன்ற விடயங்களை அறிதல் வேண்டும்.
- நோயாளியைத் தனிமைப்படுத்தல்
- ஏனையோர்கள் அவருக்கு அண்மையில் போவதை நிறுத்தல்
- அவரை பராமரிப்பவர்கள் Nas என்னும் விசேட முகமூடி அணிதல்

இந்நோயிலிருந்து நம்மை பாதுகாத்துக் கொள்ள .....

- சுவாசிக்கும் காற்றை வடிகட்டி அனுப்பும் முகக்கவசத்தை அணிந்து கொள்ளல்
- மற்றவர்களிடம் பேசும் போது 2, 3 அடி தள்ளி நின்று பேசுவது உசிதம்
- அடிக்கடி கைகளைக் கழுவுதல்
- SARS நோயாளி பயன்படுத்தும் கழிப்பறை (toilets) தாழி (sink) என்பவற்றை அடிக்கடி தொற்று நீக்க வேண்டும்.
- SARS நோயாளியின் உணவுத்தட்டு, துவாய், போர்வை போன்றவற்றை பகிர்ந்து கொள்ளக்கூடாது
- நோயாளிகளை பராமரிப்பவர்கள் கையுறைகளை பயன்படுத்த வேண்டும். (Disposable gloves)

சார்ஸ் நோய்க்கான வைரசைக் கட்டுப்படும் மருந்துகள் ஆராயப்பட்டு உபயோகிக்கப்படுகின்றன. விரைவில் இந்த நோய்க்கான தடுப்பூசி கண்டுபிடித்து விடலாம் என்ற நம்பிக்கையில் உலக சுகாதார ஸ்தாபனம் ஆய்வுகளை நடத்துகின்றது.

தற்போதைய மருத்துவ தொழில்நுட்பம் இந்த நூற்றாண்டின் பயங்கர சார்ஸ் நோயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் என உலக மக்கள் நம்புகின்றனர். நோய் பற்றி அறிந்தால் அச்சம் கொள்ள வேண்டியதில்லை.

செல்வி. எஸ். சுப்பிரமணியம்
ஆசிரிய மாணவர்
கல்வியியற் கல்லூரி

Z – புள்ளி
ஓர் கண்ணோட்டம்

2000 ஆண்டுக்கு முன்னர் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு மாணவர்களினுடைய உயர்தரப் பரீட்சை மொத்தப் புள்ளிகளை அடிப்படையாக வைத்து அவர்களை பல்கலைக்கழகத்திற்கு அனுமதித்தது. அப்பரீட்சையில் எந்த ஒரு பாடப்புள்ளியும் மற்றைய பாடப்புள்ளிகளுடன் ஒப்பிடப்படுவதில்லை.

உதாரணமாக ஒரு மாணவன் பொருளியல் பாடத்துக்கு 80 புள்ளிகளும், புவியியல் பாடத்துக்கு 80 புள்ளிகளும் பெற்று இருக்கிறான் என்றால் நாம் இவ்விரண்டு பாடப் புள்ளிகளையும் சமமானது என்று கூறமுடியாது. ஏன் எனில் ஒவ்வொரு வினாத்தாளினது தராதரம் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டது (முரண்பட்டது). **இவ்வேறுபாடுகளை நீக்கி வெவ்வேறு வினாத்தாள்களின் மொத்தப்** புள்ளிகளை சமன் செய்வதற்காக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் உருவாக்கப்பட்ட ஒரு முறையே Z-புள்ளி ஆகும். இத்தெரிவு முறை ஏற்கனவே பல நாடுகளில் நடைமுறையிலுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

எமது நாட்டைப் பொறுத்தவரை இம்முறை பொருத்தமற்றது என ஒரு சாராரும் பொருத்தமானது என ஒரு சாராரும் பலதரப்பட்ட கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

எனவே ஒவ்வொரு மாணவரும் இத்திட்டம் பற்றி அதாவது Z-புள்ளி எனும் கருதுகோள் பற்றி அறிந்திருப்பது அவசியமாகும். முதலில் Z-புள்ளி என்றால் என்ன? இது எவ்வாறு கணிக்கப்படுகிறது. இதன் மூலம் மாணவர் எப்படியான நன்மையைப் பெறுகின்றனர் என்பது பற்றிய ஓர் விளக்கத்தை ஆராய்தல் வேண்டும்.

இடைப்புள்ளி ($\overline{X}$)

இடைப்புள்ளி என்பது மொத்தப்புள்ளிகளின் சராசரியாகும்.

$$\overline{X} = \frac{\text{புள்ளிகளின் கூட்டுத்தொகை}}{\text{புள்ளிகளின் எண்ணிக்கை}}$$

உதாரணம் :- 84, 86, 90, 60, 66 எனும் புள்ளிகளின் இடைப்புள்ளி X ஆனது பின்வருமாறு கணிக்கப்படும்.

$$\overline{X} = \frac{84 + 86 + 90 + 60 + 66}{5}$$

$$= 77.2$$

$\therefore \overline{X} = 77.2$, $\therefore$ இடைப்புள்ளி = 77.2 ஆகும்.

நியமவிலகல் (σ)

நியம விலகல் என்பது ஒவ்வொரு ஈட்டும் இடைப் புள்ளியிலிருந்து சராசரியாக விலகியிருக்கும் அளவாகும்.

$$\sigma = \frac{\sqrt{\sum(x-\bar{x})^2}}{\sum f}$$

உதாரணம்

84, 86, 90, 60, 66 எனும் புள்ளிகளின் நியமவிலகல் σ ஆனது பின்வருமாறு கணிக்கலாம்.

$$= \frac{\sqrt{(84-77.2)^2 + (86-77.2)^2 + (90-77.2)^2 + (60-77.2)^2 + (66-77.2)^2}}{5}$$

$$= \frac{\sqrt{46.24 + 77.44 + 163.84 + 295.84 + 125.44}}{5}$$

$$= 11.88$$

நியம விலகல் = 11.88 ஆகும்.

Z - புள்ளி

ஒரு மாணவன் பெற்ற வெவ்வேறு பாடத்தின் மொத்த புள்ளியை நியமப்படுத்தி ஒருநிலைப்படுத்துவதற்காக உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு முறை Z - புள்ளி
ஆகும். இது ஒரு அடிப்படை நியமப்புள்ளி ஆகும். இம்முறை மூலமாக புள்ளிகளை வெளியிடும் போது மொத்தப் புள்ளிகளை இன்னொரு வடிவத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மூலப் புள்ளிகளின் தொடையிலுள்ள ஓர் புள்ளியின் Z - புள்ளி என்பது அப்புள்ளியின் இடையிலிருந்தான அதிகரிப்பின், நியமவிலகலின் மடங்காகும். எனவே,

Z - புள்ளியானது பின்வரும் சமன்பாட்டின் மூலம் கணிக்கப்படுகிறது.

$$z = \frac{x - \bar{x}}{\sigma}$$

$\bar{x}$:- புள்ளிகளின் இடையாகும்
σ :- புள்ளிகளின் நியமவிலகலாகும்
x :- Z - புள்ளி காணவேண்டிய புள்ளியாகும்.

உதாரணம் :-

84, 86, 90, 60, 66 எனும் புள்ளிகளில் 86 என்னும் புள்ளியின் Z - புள்ளியைக் காண்போம்.

$$z = \frac{x - \bar{x}}{\sigma}$$

$\bar{x} = 77.2$

$\sigma = 11.8$

$x = 86$

$$Z = \frac{86 - 77.2}{11.88}$$

$$= 0.7407$$

∴ இத்தொகுதியில் 86 எனும் புள்ளியின் Z - புள்ளி 0.7407 ஆகும்.

எனவே ஒவ்வொரு பாடத்திற்கும் அகில இலங்கை ரீதியாக மாணவர்கள் பெற்ற புள்ளிகளின் இடை $\bar{x}$, நியமவிலகல் σ என்பன கணிக்கப்பட்டு அதன் மூலம் ஒவ்வொரு மாணவனும் ஒவ்வொரு பாடத்திலும் பெற்ற Z - புள்ளி அவன் பெற்ற புள்ளிக்கமைய,

$$z = \frac{x - \bar{x}}{\sigma}$$ எனும் சமன்பாட்டின்

மூலம் கணிக்கப்படுகிறது. இவ்வாறு க.பொ.த (உ/த) பரீட்சையில் மாணவன் தோற்றிய மூன்று பாடத்திற்குமுரிய Z - புள்ளிகள் வெவ்வேறாகக் கணிக்கப்பட்டு, இம்மூன்று Z - புள்ளிகளினதும் இடைச் Z - புள்ளியாக, மூன்று Z - புள்ளிகளின் கூட்டுத்தொகையை 3ஆல் வகுத்துப் பெறப்படுகிறது. இதுவே மாணவனுக்குரிய Z - புள்ளியாக வெளியிடப்படுகிறது.

Z - புள்ளி முறை மொத்தப் புள்ளி முறை எவ்வாறு பாதிக்கிறது.

1. ஒரே பாடத்தெரிவுள்ள மாணவரிடையே உள்ள பாதிப்பு

குறித்த ஓர் வருடத்தில் நடைபெற்ற உயர்தரப் பரீட்சையில் உயிரியல், பௌதீகவியல், இரசாயனவியல் ஆகிய பாடங்களுக்கான இடை, நியம விலகல் என்பன பின்வருமாறு காணப்பட்டன.

பாடம்	*இடை*	*நியமவிலகல்*
உயிரியல்	55.54	7.44
பௌதீகவியல்	50.57	5.53
இரசாயனவியல்	49.74	5.75

இப்பரீட்சையில் **A** என்ற மாணவர் பெற்ற புள்ளிகள் பின்வருமாறு

உயிரியல் = 81 புள்ளிகள்
பௌதீகவியல் = 72 புள்ளிகள்
இரசாயனவியல் = 65 புள்ளிகள்

தற்போது A பெற்ற Z புள்ளியைப் பார்ப்போம்.

உயிரியலில் பெற்ற Z புள்ளி $= \frac{81 - 55.54}{7.44}$

$= 3.4220$

பௌதீகவியலில் பெற்ற Z புள்ளி $= \frac{72 - 50.57}{5.53}$

$= 3.8752$

இரசாயனவியலில் பெற்ற Z புள்ளி $= \frac{65 - 49.74}{5.75}$

$= 2.6539$

$\therefore$ A பெற்ற Z புள்ளி $= \frac{3.4220 + 3.8752 + 2.6539}{3}$

$= 3.3170$

ஆனால் A பெற்ற மொத்தப்புள்ளி $= 81 + 72 + 65$

$= 218$

இப்பரீட்சையில் B எனும் மாணவர் பெற்ற புள்ளிகள் பின்வருமாறு

உயிரியல் = 75 புள்ளிகள்
பௌதீகவியல் = 77 புள்ளிகள்
இரசாயனவியல் = 65 புள்ளிகள்

தற்போது B பெற்ற Z புள்ளியைப் பார்ப்போம்.

உயிரியலில் பெற்ற Z புள்ளி $= \frac{75 - 55.54}{7.44}$

$= 2.6155$

பௌதீகவியலில் பெற்ற Z புள்ளி $= \frac{77 - 50.57}{5.53}$

$= 4.7793$

இரசாயனவியலில் பெற்ற Z புள்ளி $= \frac{65 - 49.74}{5.75}$

$= 2.6539$

$\therefore$ B பெற்ற Z புள்ளி $= \frac{2.6155 + 4.7793 + 2.6539}{3}$

$= 3.3495$

B பெற்ற மொத்தப் புள்ளி $= 75 + 77 + 65$

$= 217$

எனவே இங்கு பெறப்பட்ட முடிவுகளின்படி நோக்கும் போது மொத்த புள்ளி முறையில் A என்பவர் முதன் நிலையிலும், Z புள்ளிப்படி B என்பவர் முதல் நிலையிலும் உள்ளார்.

2. வேறுபட்ட பாடத்தெரிவுகளிலுள்ள பாதிப்பு

குறித்த ஓர் காலப்பகுதியில் நடாத்தப்பட்ட உயர்தரப் பரீட்சையில் பின்வரும் பாடங்களின் இடை, நியமவிலகல்கள் அட்டவணையிலுள்ளவாறு காணப்பட்டது எனக் கருதுவோம்.

பாடம்	$\overline{x}$	σ
தமிழ்	63.7	9.3
வரலாறு	51.9	5.8
புவியியல்	45.4	5.6
பொருளியல்	54.6	4.6

M என்ற மாணவன் பின்வருமாறு புள்ளிகளைப் பெறுகின்றான் எனக் கொள்வோம்.

வரலாறு = 65 புள்ளிகள்
புவியியல் = 78 புள்ளிகள்
பொருளியல் = 55 புள்ளிகள்

V என்ற மாணவன் பின்வருமாறு புள்ளிகளைப் பெறுகின்றான் எனக் கொள்வோம்.

வரலாறு = 68 புள்ளிகள்
பொருளியல் = 55 புள்ளிகள்
தமிழ் = 80 புள்ளிகள்

மொத்தப்புள்ளி முறைப்படி

M பெறும் மொத்தப்புள்ளி = 198
V பெறும் மொத்தப்புள்ளி = 203

இதன்படி மொத்தப்புள்ளி அடிப்படையில் V என்ற மாணவன் M என்ற மாணவனை விட கூடிய நிலையிலுள்ளான்.

தற்போது **M** பெற்ற **Z** புள்ளியைப் பார்ப்போம்.

வரலாறு பாடத்தில் பெற்ற Z புள்ளி $= \frac{65 - 51.9}{5.8}$

$= 2.2586$

புவியியல் பாடத்தில் பெற்ற Z புள்ளி $= \frac{78 - 45.4}{5.6}$

$= 5.8214$

பொருளியல் பாடத்தில் பெற்ற Z புள்ளி $= \frac{55 - 54.6}{4.6}$

$= 0.0869$

$\therefore$ மாணவன் M பெறும் Z புள்ளி $= \frac{2.2586 + 5.8214 + 0.0869}{3}$

$= 2.7223$

தற்போது V பெற்ற Z புள்ளியைப் பார்ப்போம்.

வரலாறு பாடத்தில் பெற்ற Z புள்ளி $= \frac{68 - 51.9}{5.8}$

$= 2.7758$

பொருளியல் பாடத்தில் பெற்ற Z புள்ளி $= \frac{55 - 54.6}{4.6}$

$= 0.0869$

தமிழ் பாடத்தில் பெற்ற Z புள்ளி $= \frac{80 - 63.7}{9.3}$

$= 1.7526$

$\therefore$ மாணவன் V பெறும் Z புள்ளி $= \frac{2.7758 + 0.0869 + 1.7526}{3}$

$= 1.5384$

ஆனால் Z புள்ளி முறைப்படி மாணவன் M மாணவன் V யை விட கூடிய நிலையில் உள்ளான்.

எனவே Z புள்ளி முறையை எடுத்து நோக்கும் போது பாடச்சேர்மானம் இடையிலிருந்து பெற்ற புள்ளி விலகியிருக்கும் தன்மை என்பதற்கேற்ப, மொத்த புள்ளி முறையில் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற போதிலும் இம்முறையினால் பாடங்களின் கடினத்தன்மை தவிர்க்கப்பட்டுள்ள ஓர் நிலையே காணப்படுகிறது.

தற்போது நாங்கள் ஒரே பாடச்சேர்மானமுள்ள A,B எனும் இரு மாணவர்களையும் வேறுபட்ட பாடச்சேர்மானமுள்ள M, V எனும் இரு மாணவர்களையும் எடுத்து நோக்கினோம். இதிலிருந்து நாம் எடுக்கும் முடிவு என்னவெனில், வழமையான மொத்தப் புள்ளி முறையை இச் Z புள்ளி முறையானது, மாணவர் A க்கும், மாணவர் Vக்கும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்றே கூறவேண்டும். இருந்தபோதும் எமது நாட்டிலுள்ள வேறுபட்ட பாடச்சேர்மானங்களிலுள்ள பாடங்களின் இலகுத்தன்மை முற்றிலும் வேறுபட்டதாகவே உள்ளது. ஆனால் Z புள்ளி முறையானது இப்பிரச்சினைக்குத் தீர்வழிக்கிறது.

செல்வி. பீ. கணேசராசா
ஆசிரிய மாணவர்
கல்வியியற் கல்லூரி

கணனி பற்றிய ஓர் நோக்கு
Introduction to Computer

புதிய நூற்றாண்டில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் முன்னைய நூற்றாண்டின் அதி உன்னத படைப்பான கணனி (Computer) பற்றி தெரிந்து கொள்வது மிகவும் அவசியமானதும் அத்தியாவசியமானதுமாகும். இன்று உலகத்தையே கையுக்குள் அடக்கிய சக்தியை கொண்டுள்ள இந்தக் கணனி இன்று இல்லையென்றால் அகிலமே நின்றுவிடும் நிலையேற்பட்டுள்ளது. கணனி இவ்வளவு தூரம் புகழ்பெற அதன் வேகமும், நுணுக்கமாக அதன் கணித்தல் செயல்முறை நுட்பங்களுமே காரணமாகும்.

கணிப்பானை (Calculater) அடிப்படையாகக் கொண்டு மனிதனால் மனிதனுக்காக உருவாக்கப்பட்ட அமைப்புத்தான் கணனி. பதினேழாம் நூற்றாண்டில் 1617 ஆம் ஆண்டு ஜோன் நேப்பியர் (John Napier) என்பவர் நில இரும்புக்கம்பிகளை பல்வேறு வேறுவிதமாக வடிவமைத்து ஒரு கணக்கிடும் எந்திரம் செய்தார். இதை நேப்பியர் போண் (Napier bone) என்பர். பின் 1640ல் பஸ்கால் (Pascal) என்ற 16 வயதுச் சிறுவன் தன் தந்தை கணக்குச் செய்வதற்காக ஒரு இயந்திரத்தைச் செய்தான். இதன் பின் சாமுவேல் மோலண்ட் (Samuel Moreland) என்பவர் நேப்பியர் போனின் உதவியுடன் ஒரு கணிப்பானை உருவாக்கினார். இதைவிட ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த காட் ∴பிரைட் வொன் லீப்நிட்ஸ் (Gott Friend Von Leibnitz) என்பவரால் பல்காலின் அமைப்பு போன்ற கணிப்பான் உருவாக்கப்பட்டது. இதுவே தானாக கூட்டல், கழித்தல் போன்ற கணக்கிடுதலை செய்ய முடியும் எந்திரம் என்பதை உலகிக்கு நிரூபித்தது.

1828ம் ஆண்டு சாள்ஸ் பபேஜ் (Charles Baggage) என்பவர் உலகின் முதற் பொறிமுறைக் கணனிக்கான ஒரு பகுப்பாய்வு இயந்திரத்தைச் செய்தார். இந்த எந்திர அமைப்பின் வரைபடத்தை வைத்து IBM (International Business Machine) நிறுவனம் ஒரு முழுமையான கணனியை உருவாக்க முன்வந்துள்ளது. இதனால் கணனியின் தந்தை (Father of Modern Computer Science) என சாள்ஸ் பபேஜ் போற்றப்படுகின்றார். சாள்ஸ் பபேஜின் கணனி அமைப்புக்கான துவித எண்ணை (Binary Number) அளித்தவர் லேடி அடா லவ் லேஸ் (Lady Ada Lovelace) என்ற பெண்மணி அவரே முதல் கணனி நிரலர் (The first Programmer in the World) என்ற பெருமைக்குரியவராவார்.

1930களில் ஹவார்ட் ஐகன் (Haward Aiken) கிரேஸ் ஹோப்பர் (Grace Hopper) என்ற இருவரும் இணைந்து மார்க் - 1 (Mark - 1) என்ற கணனியை தயாரித்தனர். இதன் பின் உலகப் போரிலே பல கணனிகள் உருவாகின. கொசார்ட் ஜீசி (Kozard Zuse) என்ற ஜேர்மனியர் Z_1, Z_2, Z_3 Z_4 போன்ற கணனிகளை

உருவாக்கினார். Z தொடர் கணனிகளே முதல் டியிற்றல் (Digital) கணனியாகும். இவையாவும் போரினால் அழிக்கப்பட்டுவிட்டன. இதன் பின் ENIGMA என்ற இரகசிய குறியீடுகளை சங்கேத மொழியில் தயாரிக்கக் கூடிய கணனியை ஜேர்மனியர் தயாரித்தனர். இதற்கு எதிராக இரகசிய குறியீடுகளைத் தகர்க்க பிரித்தானியா கொலாசஸ் என்ற கணனியைத் தயாரித்தது. இது இரகசியக் குறியீட்டை கண்டுபிடிப்பதற்காக மட்டும் உபயோகிக்கப்பட்டதால் இதனை Dedicated Computer என அழைத்தனர். இவ்வாறே அமெரிக்கா புதிய ஆயுதங்களை பரிசோதிப்பதற்காய் 1944ல் ASCC (Automatic Sequence Controlled Calculator) என்ற கணனியை உருவாக்கியது. இதுவே முதல் Electro Mechanical Computer ஆகும். இவ்வாறு கணனியின் வளர்ச்சி தலைமுறைவாயிலாக விரிவடைந்துள்ளது.

முதலாம் தலைமுறைக் கணனிகளில் (The First Generation Computer) வெற்றிடக் குழாய்கள் (Vacum Tubes) பயன்படுத்தப்பட்டன. ENIAC (Electronic Numerical Integrated And Calculater), EDVAC (Electronic Discrete Variable Automatic Computer) UNIVAC (Universal Automatic Computer) போன்றன முதல் தலைமுறைக் கணனிகளாகும். இவை அளவில் பெரிய அளவிலானவையாகவும், வேகம் குறைந்தனவாகவும் காணப்பட்டதுடன் இவற்றின் தொழிற்பாட்டுக்கு அதிகளவு மின்சக்தியும் தேவைப்பட்டது. இதனால் வெற்றிடக் குழாய்க்குப் பதிலாக திரான்சிஸ்ரர் (Transister) பயன்படுத்தப்பட்டது. திரான்சிஸ்ரர்கள் அளவில் சிறியனவாகவும், செயற்றிறன் கூடியனவாகவும், உள்ளதால் திரான்சிஸ்ரர் பயன்படுத்தப்பட்ட கணனிகள் குறைந்த மின்சாரத்தில் இயங்கியதுடன் முதல் தலைமுறைக் கணனிகளை விட மிகச் சிறப்பாக செயற்பட்டன. இவை இரண்டாம் தலைமுறைக் கணனிகளாகும் (Second Generation). Honey well 400 என்பது இரண்டாம் தலைமுறைக் கணனியாகும்.

Taxas Instrument என்ற நிறுவனம் 1959 ஆம் ஆண்டு IC (Integrated Circuit) ஐத் தயாரித்தது. பல திரான்சிஸ்ரர்கள் வயரில்லாமல் இணைக்கப்பட்டு வடிவமைக்கப்பட்ட பொருளே IC என அழைக்கப்பட்டது. IC பயன்படுத்தப்பட்ட கணனிகள் மூன்றாம் தலைமுறைக் கணனிகளாகும் (Third Generation). 1963ல் Digital Equipment Co-operation எனும் நிறுவனம் அறிமுகம் செய்த PDP – 8 என்ற கணனியே முதலாவது வெற்றிகரமான சிறு கணனியாகும் (Mini Computer).

1969ல் Intel நிறுவனம் 1 Kilo bits கொண்ட நினைவக Chip ஐ அறிமுகப்படுத்தியது. இந்தச் சாதனையே Intel ஐ Computer Chip செய்யத் தூண்டியது. இது மிகப் பெரிய வெற்றியாக அமைந்தது. VLSIC (Very Large Scale Integreated Circuit) என்பதை அடிப்படையாகக் கொண்டவை நான்காம் தலைமுறைக் கணனியாகும் (Fourth Generation). இவ்வாறு தரத்திலும், செயற்பாட்டிலும், கணனியின் படிமுறை வளர்ச்சி முன்னேறிக் கொண்டு வருகின்றது.

முன்கூட்டியே இடப்பட்ட அறிவுறுத்தல்களைக் கொண்டு விரும்பிய கட்டளைப்படி இயக்கக் கூடிய ஒரு இயந்திரமே கணனி என பொதுவாக

வரையறுக்கப்படுகின்றது. வேலைப்பழுவினைக் குறைத்தல், வேலை ஒன்றை திருத்தமாகச் செய்தல், வேகமாகச் செய்தல், ஓய்வின்றிச் செய்தல் போன்ற மனித வளத்தினால் மட்டும் நிறைவேற்ற முடியாத தேவைகளுக்காக கணனி உருவாக்கப் பெற்றது. ஆரம்ப காலத்தில் குறிப்பிட்ட ஒரு வேலையைச் செய்வதற்கென பிரத்தியேகமான கணனிகள் வடிவமைக்கப்பட்டன. இருப்பினும் அவற்றைத் தொடர்ந்து எந்த விதமான தேவைகளுக்கும் பயன்படுத்தக் கூடிய வகையிலான கணனிகள் பொதுவான இயல்புத் தன்மையுடன் உருவாக்கப்படுகின்றன. தற்போதைய கணனிகள் வங்கி ஒன்றில் வாடிக்கையாளர்களின் கணக்குப் பதிவுகளை மேற்கொள்ளவோ விற்பனை நிலையமொன்றில் பற்றுச்சீட்டை உருவாக்கவோ, விமான பயணக் கட்டுப்பாட்டை மேற்கொள்ளவோ அல்லது எந்த ஒரு தேவைக்குமே பயன்படுத்துவதைத் தவிர இன்றைய உலகின் ஒரு நவீன பொழுதுபோக்கு சாதனமாகவும் உருவெடுத்துள்ளது. கணனி தொழில் நுட்பம் ஒவ்வொரு நிமிடமும் மாறிக்கொண்டே இருக்கிறது. வேகத்தில், திறனில், அமைப்பில், செயன்முறைகளில் என்று கணனியின் ஒவ்வொரு பக்கமும் தினமும் முன்னேறிக் கொண்டு வருகிறது. கணனியின் முக்கிய பகுதிகளாக உள்ளீட்டுப்பகுதி, செயற்பாட்டுப்பகுதி, வெளியீட்டுப் பகுதி என அமைகிறது. கணனிப்பாவனையாளர்களால் கணனியினுள் உட்புகுத்தப்படுகின்ற சகல வகையான தரவுகளும், தகவல்களும் உள்ளீட்டுப்பகுதியில் (Input Device) அடங்குகின்றன. உள்ளீட்டுப்பகுதிக்கு உதாரணமாக Keyboard, Mouse, Magnetic Ink Character, Scanner, Micro Phone, Light Pen என்பவற்றை குறிப்பிடலாம். பாவனையாளரால் உட்புகுத்தப்படும் தரவுகளுக்கமைய பாவனையாளர்களால் எதிர்பார்க்கப்படுகின்ற முடிவுகளை வெளியிடுவதற்காக கணனியால் மேற்கொள்ளப்படுகின்ற கணித செயற்பாடுகள் யாவும் மேற்கொள்ளப்படும் பகுதி Central Processig Unit (CPU) ஆகும். இந்த CPU வை கணனியின் மூளை என குறிப்பிடலாம். கட்டளைகளை ஏற்பதும், கட்டளைகளை பிறப்பிப்பதும் கணனி அமைப்பின் எல்லாப் பாகங்களையும் ஒன்றிணைப்பதும், அவற்றினை வழி நடாத்துவதும் இதன் முக்கிய செயற்பாடுகளாகும். ஒரு கணனியின் திறன், வலு, வேகம் போன்றன CPU விலேயே தங்கியிருக்கிறது. கணனியின் வேகம் என்பது அது ஒரு செக்கனில் எத்தனை வேலைகளைச் செய்யக் கூடியது என்பதைக் குறிக்கும். இதனை கேட்ஸ் (Hertz) என்னும் அலகில் அளப்பர். பொதுவாக இது KHz, MHz, GHz அளவுகளிலேயே அளவிடப்படுகிறது.

நினைவகம் (Memory) என்பது கணனியில் தகவல்களை சேமித்து வைக்கும் ஒரு சேமிப்பிடமாகும். கணனி தனக்கு தேவையான ஒரு தற்காலிகமான தகவல்களை சேமித்து வைப்பதற்கு RAM (Random Access Memeory) எனும் பகுதியை பயன்படுத்துகிறது. RAM இன் அளவு அதிகரிக்கும் போது தகவல் பரிமாற்றத்தின் வேகம் அதிகரிக்கும். நிரந்தர சேமிப்பகமான ROM (Read Only Memeory) வாசிப்பதற்கு மட்டும் பதியப்பட்ட தரவுகளைச் சேமித்து வைத்திருக்கும் ஒரு பகுதியாகும். ROMல் விபரங்கள் நிலையாக வைக்கப்பட்டிருக்கும். இதில் மாற்றங்கள் செய்யவோ, அழிக்கவோ முடியாது. பெரும்பாலும் உள் நினைவகங்களில் பயன்படுத்தப்படும் உற்பத்தியாளர்களினால் அளிக்கப்பட்ட தகவலை மட்டும் கொண்ட பகுதியாகும்.

கணனியின் நினைவகம் கொள்ளளவு அதிகரிக்க அதிகரிக்க செயல்முறைகள் வேகமாகவும், திறமையாகவும் தடையின்றியும் செயல்புரியும். இன்று வழக்கத்திலுள்ள செயன்முறையங்களிற்கு குறைந்தது 32 MB நினைவகம் தேவையாகும். இவற்றைவிட கணனிகளில் சிறிய அளவிலான தகவல்களை சேமித்து வைப்பதற்கும், ஒரு கணனியில் இருந்து வேறொரு கணனிக்கு இலகுவாக தகவல்களை எடுத்துச் செல்வதற்கும் சிறிய அளவிலான, பாரமற்ற, விலை குறைந்த புளப்பி டிஸ்க் (Floppy Diskette) பெரிதும் உதவுகின்றன. இந்த புளப்பி டிஸ்க் மின்காந்த முலாம் பூசப்பட்ட, மெல்லிய கடதாசி மாதிரியிலான ஒரு வகை சேர்க்கையினால் செய்யப்பட்ட ஒரு தட்டு ஆகும். இது இலகுவாக வளையக்கூடியதாக அமைந்துள்ளது. இது அதிக வெப்பம், வெளிச்சம், போன்ற காரணிகளால் பழுதடையக்கூடியதாக இருப்பதனால் ஒரு கடினமான பிளாஸ்டிக்கிலான பாதுகாப்பு கவசத்தினால் உறையிடப்பட்டிருக்கும். ஒரு கணனி அமைப்பின் மிக முக்கிய பாகங்களில் ஒன்று மதபோர்ட் (Motherboard) ஆகும். கணனி அமைப்பின் அனைத்துப் பாகங்களையும் ஒருங்கிணைத்து அவற்றுக்கிடையிலான தொடர்பை ஏற்படுத்திக் கொடுப்பதே இதன் முக்கிய தொழிற்பாடாகும்.

Motherboard ஆனது CPU, Memory போன்ற முக்கிய பாகங்களை தன்னகத்தே கொண்ட ஒரு பிரதான பகுதியாகும். இதனுடன் இணைக்கப்பட்டிருக்கும் அனைத்துப் பாகங்களும் ஒன்றோடு ஒன்று மின்னியல் வலையால் இணைக்கப்படுகின்றன. இவற்றை இணைக்கும் பிரதான தகவல் பரிமாற்ற இணைப்பே பஸ் (Data Bus) என்று அழைக்கப்படும் இந்த Bus இனூடாகவே பாகங்கள் எல்லாம் தமக்கிடையிலான தகவல் பரிமாற்றத்தை செய்து கொள்கின்றன. ஒரு கணனி அமைப்பின் மொத்த வேகத்தை நிர்ணயிப்பதில் இந்த Bus ன் வேகமும் முக்கிய காரணியாகும். Bus இன் வேகத்தை நிர்ணயிப்பது அதன் தொழில் நுட்பமாகும். கணனியின் தொழிற்பாடு முடிவடைந்ததும் பாவனையாளருக்கு வழங்கப்படும் முடிவுகள் வெளியீட்டுப்பகுதியால் (Output Device) பெறப்படும். கணனி வெளியீட்டுக் கருவியாக Monitor, Printer, Data Projector, Speaker போன்றவற்றை பயன்படுத்தலாம்.

ஒரு கணனி அமைப்பானது வன்தட்டு (Hardware), மென்தட்டு (Software) என இரு முக்கிய பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளது. ஒரு கணனியில் பௌதிக ரீதியாக அமைக்கப்பட்ட அனைத்து பகுதிகளும் வன்பொருள் அமைப்பாகும். இவை இலத்திரன் அமைப்புக்களாகவும், தொடுகையினால் உணரக்கூடியதாகவும் இருக்கும். உதாரணமாக Keyboard, Mouse, Monitor, CPU, Printer போன்றவற்றை குறிப்பிடலாம். கணனியை இயக்குவதற்குரிய புறோக்கிறாம், நெறிமுறைகள் என்பவற்றை மென்பொருள் Software எனப்படும். மென்பொருள் ஒரு கட்புலனாகா அமைப்பாகும். உதாரணமாக Windows XP, Windows 95/98/2000, Ms Office, PageMaker போன்றவற்றை குறிப்பிடலாம்.

விலைமதிப்பற்ற உணர்வுகளைக் கொண்ட மனிதனைவிட கணனி சிறந்தது என்று கூறமுடியாது. ஏனெனில் இக்கணனியை உருவாக்கியதும் அதனை இயங்கவைப்பதும் மனிதனே. மனிதன் இயக்கினால் இயங்குவதும், அவன் கொடுக்கும் கட்டளைகளைச் சரியாக செவ்வனே நிறைவேற்றுவதும், ஓய்வு என்பதே இல்லாமல் தொடர்ந்து வேகமாகவும், சீராகவும் இயங்குவதும் கணனியின் தனிச் சிறப்பாகும். கணனியின் தனிச்சிறப்புக்கள் எண்ணிலடங்காதவை. மின்னல் வேகத்தில் கடிதங்களை பரிமாறிக் கொள்ள மின்னஞ்சல் (e-mail) உதவுகிறது. இது 1971ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. தொலைத் தொடர்பு ஊடகங்களில் சமீபகால கண்டுபிடிப்பு இணையமாகும். உலகின் எப்பாகத்தில் நிகழும் எந்த விடயமாயினும் உடனுக்குடன் தொடர்பாடல் மூலம் அறிந்து கொள்ள முடியும். இதற்கான வழிகாட்டியே இணையம் (Intrenet) ஆகும். இன்று இணையத்தில் பெரும்பாலானவர்கள் விரும்பிப் பயன்படுத்தப்படுவது மின்னஞ்சல் என்றால் மிகையாகாது. பல்வேறு கணனிகளை இணைத்து தகவல் பரிமாற்றம் செய்து கொள்ளும் அமைப்பு வலைப்பின்னல் (Network) எனப்படும். பல்வேறு கணனிகளின் வலைப்பின்னல் அமைப்பு ஒன்றினைக்கப்பட்டு தகவல் பரிமாற்றம் செய்து கொள்ளும் அமைப்பே இணையம் என அழைக்கப்படுகிறது. இணையத்தின் மூலம் கல்வி அறிவை விருத்தி செய்யலாம். மல்ரிமீடியா என்ற ஒளி ஒலி அமைப்பு கொண்ட கணனிகளில் சங்கீதம் கேட்கலாம். அதற்காக கணனிகளில் Video Card, Sound Card மற்றும் தொலைத்தொடர்பு கொள்ள Modem என்பவை தேவையாகும். இன்று எல்லாவற்றையும் CD (Compact Disk) யில் பதிந்து கொள்கிறார்கள் காரணம் இது லேசர் கதிர் மூலம் தொழிற்படுவதால் நீண்ட பாவனையை உடையதாலும் ஆகும். கணனியை இயக்குவதற்காக பாவிக்கப்படும் Program ஒப்பறேற்ரிங் சிஸ்டம் Operating System ஆகும். Operating System முதலில் இயங்கத் தொடங்கி பின் கணனியின் ஏனைய அனைத்து Application Programs இயங்குவதற்குரிய சகல சேவைகளையும் அளிக்கிறது. இந்த Operating System ஆனது வன்பொருளுக்கும், மென்பொருளுக்கும் இடையில் ஒரு பாலமாகத் தொழிற்படுகிறது. இதற்கு உதாரணமாக Ms Dos, Windows 95, 98, 2000, XP, UNIX போன்றவற்றை குறிப்பிடலாம். இவ்வாறு கணனியைப் பற்றி மேலும் கூறிக்கொண்டே செல்லலாம். வள்ளுவனின் கூற்றுப்படி "கற்றவனுக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு" என்பது மாறி இன்று "கணனி கற்றவனுக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு" என்று கூறினால் அது மிகையாகாது.

ஒரு கணனி (CPU) யில் காணப்படும் மிக முக்கிய பகுதிகள்

Processor
Mother Board
RAM
Hard Disk
Floppy Disk Drive
VGA Card
Modem
CD Rom Drive
Sound Card

பொ.கிருபானந்தன்
விரிவுரையாளர்
முறைசாரா கல்விப்பிரிவு (கணனி)
மானிப்பாய் மகளிர் கல்லூரி.

மரணமில் அரங்கம்

அம்மா

அன்பிலும் அம்மா
அரவணைப்பிலும் அம்மா
கண்ணீரிலும் அம்மா
கண்காணிப்பிலும் அம்மா
வள மூட்டுவதிலும் அம்மா
வழிநடத்துவதிலும் அம்மா
நம்மை உருவாக்கியது அம்மா
நாம் உணர வேண்டியது அம்மா
அன் பெனும் தீபத்தை தந்தவள் நீயே அம்மா

நான் யார்

1. நான் மானிப்பாய் மகளீர் கல்லூரியில் படிக்கிறேன்
2. **எனது ஊர் சங்கானை**
3. **எனது வகுப்பு ஆசிரியர் என்னுடன் அன்பாக இருக்கிறார்**
4. நான் யார் தெரியுமா? நான் இக்கல்லூரியில் ஆண்டு 1 இல் படிக்கும் சிறு மாணவன் சு. சுவர்ணன்
5. எமது கல்லூரி வாழ்க என்றும் வளர்க

ஒட்டுவோம்

வண்ண வண்ணத் துண்டு
வடிவான துண்டு
பூக்கள் போல ஒட்டலாம்
பூனை போல ஒட்டலாம்
மாலை போல ஒட்டலாம்
கூடை போல ஒட்டலாம்
ஆடை போல ஒட்டலாம்
ஆலங்கரித்து வைக்கலாம்

சு.சுவர்ணன்
தரம் 1

மல்லிகை

மண்த்தை வீசும் மல்லிகை
எனக்கு பிடித்த மல்லிகை
வெள்ளை நிறத்து மல்லிகை
விரும்பிச்சூடும் மல்லிகை
கொள்ளை கொள்ளும் அழகுடன்
மாலையாகும் மல்லிகை
நீல வான நிலவு போல்
ஒளிரும் சுகந்த மல்லிகை

எனது செல்லப்பிராணி

1) நான் வளர்க்கும் செல்லப்பிராணி பூனை.
2) அதற்கு பாபி என்று பெயர்.
3) நான் பாபி என்றால் என் காலருகே நிற்கும்.
4) பாபி விரும்பி உண்ணும் உணவு மீன், பால்.
5) பசித்தால் என்னுடன் விளையாடும்.
6) அதன் உடம்மை தொட்டால் பஞ்சு போல இருக்கும்.

மாலைக்காட்சி

1) அன்று ஒருநாள் வானம் கறுத்தது
2) இடி இடித்தது மின்னல் மின்னியது
3) குளிர்காற்று வீசியது மரங்கள் ஆடி அசைந்தன
4) மழை பெலத்து எங்கும் வெள்ளம் பாய்ந்தன.

இ.நிர்த்தனா
தரம் 1

உயிர் எழுத்துக்களை உணர்ந்திடு

அ, ஆ – அன்பு செய்து வாழ்ந்திடுவோம்
இ, ஈ - இறைவனை அன்பு வேண்டிடுவோம்
உ, ஊ – உண்மை பேசி வாழ்ந்திடுவோம்
எ, ஏ – எண்ணும் எழுத்தும் படித்திடுவோம்
ஐ, ஐ – ஐயம் இட்டு உண்டிடுவோம்
ஒ, ஓ – ஒற்றுமையாக வாழ்ந்திடுவோம்
ஒள, ஃ - ஒளவியம் பேசி உயர்ந்திடுவோம்

ஸ்ரீ.ஐஸ்வர்யா
தரம் 1

அன்பு உயிர்கள்

மியாவ், மியாவ் பூனைக்குட்டி
மீசை உள்ள பூனைக்குட்டி
வள், வள் நாய்க்குட்டி
வாலைச் சுலட்டும் நாய்க்குட்டி

கொக், கொக் கோழிக்குஞ்சு
கொத்தித் திரியும் கோழிக்குஞ்சு
ம்ஆ, ம்ஆ பசுக்கன்று
துள்ளி ஓடும் பசுக்கன்று



Grade 1



Grade 2



Grade 6A

Grade 6B

Grade 1

Grade 2

Grade 3A

Grade 3B

ம்மே, ம்மே ஆட்டுக்குட்டி
மேய்ந்து திரியும் ஆட்டுக்குட்டி
எங்கள் வீட்டுச் செல்வங்கள்
இவையே அன்பு உயிர்களே

இ.கீர்த்திகா
தரம் 2

அம்மா

அம்மா நல்ல அம்மா
அருமையான அம்மா
'அ' சொல்லித் தந்தே
அறிவையூட்டும் அம்மா

பள்ளி செல்ல வைத்து
படிக்கச் சொல்லும் அம்மா
பட்சணங்கள் பலசெய்து
பரிந்து ஊட்டும் அம்மா

சின்னப்பிள்ளை எந்தனுக்கு
சிறந்த கதைகள் கூறியே
நல்ல பிள்ளையாக்கவே
நாளும் எண்ணும் அம்மா

வைஷ்ணவி கிருஸ்ணகுமார்
தரம் 1

My Pet

1. *My pet is a puppy.*
2. *Its Name is Spotty.*
3. *It is brown and white in colour.*
4. *It has a white spot on its head.*
5. *It wages its tail on seeing me.*
6. *It is very play ful.*
7. *It likes to eat meat and rice.*
8. *It likes to play ball with me.*
9. *It has a long tail.*
10. *It barks at people.*

S.Navanetha
Grade 2

எங்கள் அதிபர்

1) அதிபர் எங்கள் அதிபராம்
மானி மகளிர் அதிபராம்
சிறந்த சேவை பலவாற்றி
நல்ல மாணவரை உருவாக்கி

2) நன்றே எம்மை வழிநடத்தும்
அன்புத் தெய்வம் அவர்தான்
என்று எங்கும் அவர்காட்டும்
உயர்ந்த நெறிகளை நாம் மறவோம்

3) எங்கள் அழகிய நல்லதிபர்
உயர்ந்த மிடுக்கும் புன்சிரிப்பும்
சிவந்த நிறமும் நல்லறிவும்
பிறர் போற்றும் நற்குணமும்

4) எங்கும் அமைந்த எமது அதிபர்
வாழ்க வாழ்க வாழியவே
மானி மகளிர் வாழியவே
பாரினில் என்றும் வாழியவே

கி. கௌதமி
தரம் 6A

எங்கள் அதிபர்

அன்பின் இருப்பிடம் எங்கள் அதிபர்
பண்பின் உறைவிடம் எங்கள் அதிபர்
பாசத்தின் தீபம் எங்கள் அதிபர்
பல கலைகள் கற்றவர் எங்கள் அதிபர்

பாடசாலைகளில் முதன்மையானவர் எங்கள் அதிபர்
கற்றோர் மத்தியில் கல்விமான் எங்கள் அதிபர்
கல்லூரி மாணவிகளின் கற்பகதரு எங்கள் அதிபர்
காலத்தால் அழியாத கல்வியை கற்றவர் எங்கள் அதிபர்
கடமையை கண்ணை இமை காப்பது போல் காப்பவர் எங்கள் அதிபர்

நா வன்மை நிறைந்தவர் எங்கள் அதிபர்
நாட்டில் நல்லோரை உருவாக்கியவர் எங்கள் அதிபர்
ஆயிரம் ஆயிரம் அதிபர்களின் அறிவுச்சுடர் எங்கள் அதிபர்

சகல கலா வல்லியின் தோற்றம் எங்கள் அதிபர்
மகளிர் கல்லூரி மாணவிகளின் கல்வித் தெய்வம் எங்கள் அதிபர்

மாணவிகளின் மணி விளக்கு எங்கள் அதிபர்
மங்கயர்க்கரசி எங்கள் அதிபர்

வாழ்க எங்கள் அதிபர்
வளர்க எங்கள் கல்வி

இ. பிரமிலா
தரம் 6^{A}

நாளை மலரும் பூக்கள்

நாளை மலரும் பூக்களே
நல்ல பிள்ளைச் சிறுவரே
நாளை பூமி உம்மிடம்
நல்லாய்ப் படித்து வாருங்கள்

உண்மை என்றும் பேசிடு
உலகைக் காக்கத் துணிந்திடு
அழிவை விட்டு வந்திடு
ஆக்கத்தோடு உழைத்திடு

தந்தை தாயைப் பேணிடு
தாத்தா சொல்வதைக் கேட்டிடு
நாளை இந்த உலகிலே
நல்ல புகழ் சேர்ந்திடு

அறிவை நீயும் வளர்த்திடு
ஆசானை நீயும் மதித்திடு
அன்பை நீயும் பெருக்கிடு
அடைவாய் உயர்ச்சி நீயுமே.

கு.எமில்டா
தரம் 6^{B}

மூடனின் சாதனை

இரவு நேரம் நிலவு பால் போல் எறிந்தது. வீட்டுக்குள்ளே படுத்திருந்த மூடனுக்குத் தூக்கம் வரவில்லை. தாகமாக இருந்தது. குடத்தில் பார்த்தான். தண்ணீர் இல்லை. சோம்பலுடன் எழுந்து நீர் அருந்துவதற்காக கிணற்றடிக்குச் சென்றான். வாளியை எடுத்துத் தண்ணீர் அள்ளிக் குடித்தான். என்ன ஆச்சரியம்? கிணற்றுக்குள் சந்திரனைக கண்டு வியந்தான்.

"எங்கள் வீட்டுக் கிணற்றுக்குள் சந்திரன் வீழ்ந்து விட்டான். ஐயோ பாவம் அவனை மீட்க வேண்டும்" என்று கத்தியவாறு கப்பிக் கயிற்றில் இரும்புக்கம்பி ஒன்றை வளைத்துக் கொழுவி கிணற்றில் விட்டான். சந்திரனை அதன் மூலம்

வெளியே எடுக்க நீண்ட நேரம் முயன்றான். அவனால் முடியவில்லை. திடீரென அக்கம்பி கிணற்றின் அடியில் உள்ள கற்பாறையில் கொழுவிக் கொண்டது.

கயிற்றை இழுத்து இழுத்துப் பார்த்தான் மூடன். அது அசையவே இல்லை.

சந்திரன் அதில் சிக்கி விட்டதாக எண்ணி மூடன் மகிழ்ச்சி அடைந்தான். எப்படியாவது சந்திரனை வெளியே எடுத்து விடவேண்டும் என உறுதி கொண்டான். தனது பலம் முழுவதையும் சேர்த்துக் கயிற்றை இழுத்தான். அந்தோ! கயிறு திடீரென அறுந்தது. மூடன் பிடரி அடிபட தரையில் மல்லாந்து விழுந்தான். ஆகாயம் அவன் கண்முன்னே தெரிந்தது. அங்கே வட்டவடிவான சந்திரன் மிதப்பதை மூடன் கண்டான்.

கயிற்றை இழுத்து ஒருவாறு சந்திரனை மீட்டு விட்டேன். இழுத்த இழுப்பில் அவன் கிணற்றில் இருந்து ஆகாயத்திற்கே சென்றுவிட்டான் என எண்ணிய மூடன் தனது சாதனையை நினைத்து பெருமிதம் கொண்டான்.

பு.துசிதா
தரம் 6^B

நான் விரும்பும் புலவர் சுப்பிரமணிய பாரதியார்

தென்னிந்தியாவில் எட்டயபுரத்திலே சின்னச்சாமி ஐயர் என்பவர் வாழ்ந்து வந்தார். அவரின் மனைவியாரின் பெயர் இலக்சுமி அம்மையார் அவர்களுக்கு 1882 இல் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அதற்கு சுப்பிரமணியன் எனப் பெயரிட்டனர். சுப்பிரமணியன் இளமையிலே கவி பாடும் ஆற்றல் பெற்றிருந்தான். அப்போது அவனுக்கு வயது பதினொன்று. ஒரு நாள் அவன் தந்தையுடன் எட்டயபுரத்து அரசனது சபைக்குச் சென்றான். அங்குள்ள புலவர்கள் அவரது கவி பாடும் ஆற்றலைக் கண்டு வியந்தனர். அவருக்கு பாரதி என்னும் பட்டத்தை வழங்கினர். சுப்பிரமணியன் சுப்பிரமணிய பாரதியார் ஆனார். பாரதியார் எத்தனையோ வகையான பாடல்களைப் பாடி இருக்கின்றார். எல்லாமே இனிமையானவை எல்லாம் பொருள் விளங்கக் கூடிய பாடல்கள் ''அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே. உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதினும் அச்சமில்லை அச்சமில்லை அச்ச மென்பது இல்லையே'' எனப் பாடித் துணிவை ஊட்டுகின்றார். ''அச்சம் தவிர் ஆண்மை தவறேல்'' எனப் புதிய ஆத்தி சூடிகளையும் பாடி நீதிகளை விளக்குகின்றார். ''ஓடி விளையாடு பாப்பா நீ ஓய்ந் திருக்கலாகாது பாப்பா'' எனப் பாப்பாப் பாட்டிலே நாங்கள் எவ்வாறு வாழ வேண்டும் என்று எடுத்துக் காட்டுகின்றார். இந்தப் பாடல்களின் ஓசைக் கருத்தும் உணர்ச்சியும் என்னை வெகுவாகக் கவர்கின்றன. அதனால் நான் விரும்பும் புலவர் பாரதியாரான சுப்பிரமணிய பாரதியார் ஆவார்.

நன்றி

பீ.சியானி
தரம் 7^A



Grade 7A

Grade 7B

Grade 8A



Grade 8B

வியப்புமிகு உலகச் செய்திகள்

- ஐரோப்பிய நகரங்களில் முதன் முதலாக தெரு விளக்குகள் அமைக்கப்பட்டது பாரிஸில் தான் இதனால் திசிட்டி ஒப் லைட்ஸ் (The city of lights) என்று பாரிஸ் நகருக்கு ஒரு பெயர் இருந்தது.
- மக்கள் வசிக்காத கண்டம் உலகிலுள்ளது. அதன் பெயர் அண்டார்டிக்கா என்பதாகும்.
- ஒன்பது கோள்களிலும் மிக வேகமாகச் சுற்றி வருவது புதன் கோள் ஆகும். புதனில் ஓர் ஆண்டிற்கு மொத்தமே 88 நாட்கள் தான்.
- நேபாள நாட்டில் மாலை நேரத்தில் மட்டுமே மழை பெய்கிறது.
- உலகம் முழுவதும் இரண்டு இலட்சத்து முப்பதாயிரம் வகை பூக்கும் தாவரங்கள் உண்டு.

பீ. பத்மசூரியா
தரம் 7A

உங்கள் பொது அறிவு எப்படி?

1. பட்டு நெசவுக்கு உலகில் புகழ் பெற்ற நகரம் எது?
   காஞ்சிபுரம்
2. கோப்பிப் பயிர் செய்கையை முதலில் ஆரம்பித்த நாடு எது?
   அபசீனியா
3. உலகில் மிகப் பெரிய நன்னீர் ஏரி எது?
   சுப்பீரியர் ஏரி
4. எந்த நாட்டின் தேசிய கீதம் உலகிலே மிகப் பெரியது?
   கிரேக்கம், கிறீஸ் - 128 வரிகள்
5. பெர்லின் சுவர் எப்போது கட்டப்பட்டது?
   1961ம் ஆண்டு
6. உலகில் பரப்பில் கூடிய நாடு எது?
   லண்டன்
7. உலகில் மிகப்பெரிய வைரக்கல் எத்தனையாம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது?
   1905ம் ஆண்டு
8. முதல் கம்யூட்டர் மொழியின் பெயர் என்ன?
   பிளான் கால்கள்
9. ஒரே நாளில் அதிக ரன் குவித்த வீரர் யார்?
   டான் பிரட்மன்
10. பாரசிகக் கொள்கையின் சிற்பி என்று வர்ணிக்கப்படுபவர் யார்?
    முசோலினி
11. அணுக்கதிர் வீச்சு உடலில் பட்டால் முதலில் பாதிக்கப்படும் உறுப்பு எது?
    எலும்பு மச்சை (Bonemarrow)
12. மிகப்பெரிய முட்டையிடும் உயிரினம் எது தெரியுமா?
    வேல் சுறாமீன்
13. பனிச் சிறுத்தைகள் எந்தக்கண்டத்தில் அதிகம் காணப்படுகின்றன?
    ஆசியா
14. பாக் ஜல சந்தியை முதன் முதலில் நீந்திக் கடந்தவர் யார்?
    மிகிர் சென்

15. மனித உடலில் கண், காது, கை, கால், நுரையீரல், சிறுநீரகம் இந்த உறுப்புக்களுக்கு உள்ள பொதுவான ஒற்றுமை என்ன?
இந்த உறுப்புக்கள் எல்லாமே உடலில் இரண்டு உள்ளன.

வி.கீர்த்தனா
தரம் 8[A]

நூலகம் தோன்றிய வரலாறு

பல்வேறு துறைகளிலுள்ள புத்தகங்களை வாசகர்கள் எடுத்துப் படிக்க வசதியாக வகைப்படுத்தி, ஒழுங்காக, வைக்கப்பட்டிருக்கும் இடமே, நூலகம் எனப்படும். லத்தீன் மொழியில் புத்தகம் என்ற பொருள் தரும் வைபர் என்ற சொல்லிருந்து ஆங்கிலச் சொல் லைப்ரரி பிறந்தது.

அஸீரியாவிலும் பாபிலோனிய நாட்டிலும் கி.மு 2000 ஆண்டில் நூலகங்கள் தோன்றின. கி.மு.600ல் மொசபோடோமியாவில் களிமண் மீது கூரான குச்சிகளால் எழுதும் வழக்கம் இருந்தது. அந்தக் களிமண் பட்டைகளை உலையில் காய வைத்து கோயில்களிலும் அரண்மனைகளிலும் நூலகங்கள் போல காப்பாற்றி வந்தனர். இம்மாதிரியான களிமண் பட்டைகளே அக்காலத்தில் புத்தகங்களாக பயன்பட்டன. கி.மு 300ல் எகிப்து நாட்டின் அலெக்ஸாந்திரியாவில் பிரசித்தி பெற்ற ஒரு நூலகம் அமைக்கப்பட்டது. இந்நூலகத்தில் 'பேப்பைரஸ்' என்ற ஒரு வகைக் காகிதத் தாளான ஏழு லட்சம் சுருள்கள் பாதுகாக்கப்பட்டன. தற்காலத்திய நூலகத்தைப் போலவே இந்தக் காகிதச் சுருள்கள் வகைப்படுத்தி பாதுகாக்கப்பட்டன. இந்நூலகத்தில் 120 பகுதிகள் இருந்தன.

ரோமில் ஜீலியஸ் ஸீஸர் தான் முதன் முதலில் நூலகத்தை பொது மக்களுக்காக ஆரம்பித்தார். ரோமாபுரியின் செல்வந்தர்கள் இந்நூலகங்களை நிறுவ பெரிதும் ஒத்துழைத்தனர். நான்காம் நூற்றாண்டில் ரோமில் இம்மாதிரியான 28 நூலகங்கள் இருந்தன.

கிறிஸ்தவ மதம் தோன்றிய பின்னர் ஒவ்வொரு மாதா கோயிலிலும் நூலகங்கள் அமைக்கப்பட்டன. இதன்பின் பல்கலைக்கழகங்களிலும் நூலகங்கள் ஆரம்பிக்கப்பட்டன. ஜேர்மனி பிரான்சு மற்றும் இத்தாலிய நாட்டின் பல்கலைக்கழகங்களிலும் விலை மதிப்பற்ற புத்தகங்களைப் பூட்டிப் பத்திரமாக காத்து வந்தனர். இந்தியாவிலும் புத்தகங்கள் பாதுகாக்கப்பட்டிருந்தன.

1400 வாக்கில் ஆக்ஸ்க் வோர்டு பல்கலைக்கழகம் சொந்த நூலகத்தை அமைத்துக்கொண்டது. சர்தாமஸ் போட்லியின் பெயரால் இதன் பெயர் 'போட்லியன் லைப்ரரி' என வழங்கியது. இன்று உலகிலேயே மிகப்பெரிய நூலகம் இது தான். பின்பு உலகமெங்கும் நூலகங்கள் வேகமாக வளர்ச்சி பெற்றன.

இப்போது பலதரப்பட்ட நூலகங்கள் உள்ளன. மாநகரங்களில் பொது மக்களுக்கான நூலகங்கள் இயங்குகின்றன. பல்கலைக்கழகங்களிலும் கல்லூரி மற்றும் பள்ளிகளிலும் நூலகங்கள் இயங்குகின்றன. இவை தவிர தனியார் நூலகங்களும் உள்ளன.

உலகின் இரு மிகப்பெரிய நூலகங்களுள் ஒன்று வாடிகள் நகரத்து நூலகமும் மற்றது வாஷிங்டங்னிலுள்ள (லைப்பரி) ஆகப் காங்கிரஜீம் ஆகும்.

வாஷிங்டனிலுள்ள மாபெரும் நூலகம் 1800 ஏப்ரல் 24ம் நாள் ஆரம்பிக்கப்பட்டது. இந்நூலகத்தில் 3.3 கோடி புத்தகங்கள், கையெழுத்துப் பிரதிகள், புகைப்படங்கள் ஆகியவை உள்ளன. இவற்றுள் புத்தகங்களின் எண்ணிக்கை மட்டும் ஒரு கோடி ஆகும். இங்குள்ள புத்தக அலுமாரிகளை ஒன்றன் பின் ஒன்றாக வைத்துக் கொண்டே போனால் 327 மைல் நீளும் மாஸ் கோவிலுள்ள லெனின் நூலகத்தில் 2 கோடி புத்தகங்கள் உள்ளன.

ற.சியானி
தரம் 8^{B}

தாய்மையைப் பேணுவோம்

பத்துமாதம் சுமந்து தாலாட்டிச் சீராட்டிப் பாலூட்டி எம்மைப் பெற்றெடுப்பவள் தாயே ஆவார். இந்த உலகத்தில் அம்மா என்று அழைக்காத உயிர் இல்லை. தாய் இரக்கம் கருணை பொறுமை உடையவர் பகலிரவு விழித்திருந்து எம்மைப் பெற்றெடுக்கின்றர் "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்று கொன்றை வேந்தனில் ஒளவைப் பிராட்டியர் சிறப்பித்துக் கூறுகின்றார் நாம் பிறந்த உடன் அன்னையைத்தான் முதலில் பார்க்கின்றோம் நாம் பிறந்த நாட்டை தாய் நாடு என்கிறோம் நாம் பேசும் மொழியை தமிழ் மொழி என்கிறோம் இவ்வாறெல்லாம் தாய்க்கு முதலிடம் கொடுக்கின்றனர் இத்தகைய தாய் போற்றப்பட வேண்டும்.

"தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை" என்றதற்கமைய தாயே சிறந்த தெய்வமாவார் பால் நினைந்தூட்டும் தாயினும் சால என்ற திருவாசகப் பாடலில் மணிவாசகர் சிறப்பித்துக் கூறியுள்ளார் குழந்தையை நினைத்தவுடன் பால் சுரக்கின்றது. "தாயோடு அறு சுவைப்போம் " என்பதற்கமைய தாய் எமக்கு தேவையான உணவை ஆக்கித் தருகினறார் "அள்ளிப் பொருளைக் கொட்டி அழிவு செய்த போதும் பிள்ளைத் தனத்தில் செய்தான் எனப்பொறுத்தாள்" தாய் எம்மை பாடசாலைக்கு செல்ல வைக்கிறார் நாம் நல்ல பிரஜையாக வர வேண்டும் என்று சிந்தித்துக் கொண்டிருப்பார்

இவ்வுலகத்தில் காணப்படும் மாயையிலிருந்து நம்மைப் பிரித்துக் காக்கும் தாயாக அன்னை பராசக்தி விளங்குகின்றார். இதனையே மாணிக்கவாசகரும் திருவெம்பாவை பாடலிலே அழகாக "போதித்து நம்மை வளர்த்த பெய்வளைதன் பாத்திறம் பாடி" எனப் பாடியுள்ளார். தாயின் ஆசியுடன் ஒரு செயலைச் செய்தால் அச் செயல் இடையூறு இன்றி நிறைவு பெறும். ஒரு நாட்டின் பெருமையும் மக்களின் சிறப்பும் தாயின் சிறப்பிலே தங்கியுள்ளது. அன்பின் ஊற்றாகவும் அணைக்கும் தெய்வமாகவும் வினங்குபவர் தாய் ஆவார் வணக்கம், அறிவு பொறை, நல்லோர் இணக்கம், வறியோர்க்கு ஈயும் இரக்கம், நிறைந்தகற்பு ஆகிய குணநலன்களைக் கொண்டு தாயானவள் விளங்குகின்றார்.

சமூக உருவாக்கத்தில் தாய்மார்களின் பங்கு இன்றியமையாததாகும். குழந்தையைப் பெற்றெடுத்து இச் சமூகத்திற்கு வழங்கும் பெண்ணின் பணி மிக மிக முக்கியத்துவம் வகிக்கின்றது. இக்குழந்தையே வருங்கால சந்ததியினரின் எல்லா வித வளர்ச்சிக்கு உந்து சக்தியாக விளங்குமானால், அவனது பங்கான சமூக உருவாக்கத்தில் பூரணத்துவம் அடைகின்றது தற்காலத்தில் தாய்க்குலம் பாரிய முன்னேற்றப்பாதைகளை வகுத்து முன்னேறிக் கொண்டிருப்பதனால் மிகவும் போற்றப்பட்டு வருகின்றது.

வீட்டுக்குள் முடங்கி இருந்த தாய்க் குலம் இப்போது அந்தக்கட்டுப்பாட்டை உடைத்தெறிந்து ஆணுக்கு சமமாக சமூகத்தில் பங்களிக்க தொடங்கியதன் மூலம் நாகரீகத்தை விரிவுபடுத்தியதோடு சமூக மேம்மாட்டின் வளர்ச்சிக்கும் உருவகம் கொடுத்தனர் என்று சொன்னால் மிகையாகாது மேலும் சமூகத்தில் நாகரீக விழுமியங்களில் தொடங்கி பொருளாதாரம், அரசியல், விஞ்ஞானத்துறைகள் ஈறாக சகல அம்சங்களிலும் தாய்க்குலம் தனது முத்திரையைப் பதித்து உயர்ந்து வருவது இன்று யதார்த்தமாகிவிட்டது குழந்தையாக இருந்தபோது எமை வழிநடத்தி சமூகத்திற்கு தந்தவள் ஒரு பெண் இந்தவகையில் சமூக உயிர்ப்புக்கு உயிர் கொடுத்து வழி காட்டியாக இருப்பவள் தாயே ஆவார் அத்தகைய தாயை நாம் போற்றுதல் வேண்டும்.

சமூக, சமய, சேவை இன்று அதிகரிக்கத்தக்க அளவு உயர்ந்து நிற்பதற்கு அன்னையரின் பங்கு முக்கியமாக உள்ளது இதற்கு உதாரணமாக அன்னை திரேசாவை குறிப்பிடலாம். ஒதுக்கப்பட்ட நோயாளர்கள், கைவிடப்பட்ட வயோதிபர்கள் இன்னும் அங்கவீனர்கள், ஏழைகள் என்று அனைவருக்கும் உலகம் முழவதும் சுற்றித் திரிந்து சேவை புரிந்து தரணியில் உயரந்தவர் அன்னை திரேசா ஆவார்.

இப்படிப் பல்வேறு துறைகளிலும் முன்னேறிய தாய்க்குலத்தைப் போற்ற வேண்டும். இருபத்தோராம் நூற்றாண்டில் காலடி எடுத்து வைத்து நாம் தாய்மையைப்போற்றக் கடமைப்பட்டவர்களாக இருக்கின்றோம் என்றால் மிகையாகாது.

கி. சோபிகா
தரம் 8A

Some facts about our Life

1. When men grow old, they become more refined and more wise.
2. Anger is sort of madness
3. Whatever begins in anger ends in shame.
4. When angry, count ten
5. A constant guest is never welcome
6. Half a truth is better than a whole lie
7. A deaf husband and a blind wife are always a happy couple
8. He that marries for wealth sells his liberty
9. The abundance of money ruins youth
10. The best out is not making money but in keeping it.
11. Better a near neighbour than a distant cousin
12. Praise a food and you will make him useful
13. Our reputation for wisdom depends much on our success.
14. A silent tonque and a true heart are the most admirable things on earth
15. Too much silence and too much talking belong to fool
16. Some rise by sin and some by virtue
17. Two in distress make sorrow less
18. With money you would not know yourself without it nobody would know you
19. Health, wealth and education create beauty
20. The bridge between joy and sorrow is not long

Grade 9A

Grade 9B

Grade 10A

Grade 10B

Appropriate words indicating comparisons

As loud as thunder
As old as the hills
As fearful as a ghost
As quick as lightning
As silent as a sheep
As steady as a rock
As sweet as sugar
As tricky as a monkey
As wise as Soloman
As sure as fate

A. Keerthika
Grade 9^{A}

Mother

M is for the million things she gives us
O means only that she's growing old
T is for the tears she shed to save me
H is for her heart of purest gold
E is for her eyes with love light shining
R means right and right she will always be

MY MOTHER

Some times she is a friend some times she is a sister
Teaching me all the good things
With love and kindness
All the created things in the world will abey you
Because of your great love and sensitive kindness
My dear mother you are my life and
You are my spirit. I can't estimate you and
Your value and finally. I tell you my dear mother
from my heart. I love you

N.Jenany
Grade 8^{A}

விந்தையே விஞ்ஞானம்

மனித சமுதாயம் பல துறைகளில் முன்னேறிச் செல்கின்றது. இதற்கு விஞ்ஞானத்தின் விந்தையே காரணமாகும். இந்த விஞ்ஞானம் மனிதனை பல வழிகளில் வளர்ச்சியடையச் செய்து அவனது வாழ்க்கையைப் புதுவழியிற் கொண்டு செல்கிறது. காட்டிலே மிருகத்தோடு மிருகமாய் வாழ்ந்த மனிதன் இன்று மாட மாளிகையில்

இந்திர போகங்களை அனுபவிக்கின்றான் என்றால் இதற்கு விஞ்ஞானத்தின் விந்தையே காரணமாகும்.

நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இன்றைய இருபத்தோராம் நூற்றாண்டில் இறுதிப் பகுதியில் விஞ்ஞானத்தின் வளர்ச்சி மனித வாழ்க்கையைப் பல துறைகளில் மாற்றி அமைத்துச் செல்கிறது. விஞ்ஞானத்திலே விருத்தியடைந்து செல்லும் மேலைத்தேய நாடுகள் மனித வாழ்க்கையை சிறப்பான நல்வாழ்வாக்க புத்தம் புதிய பல தொழில்நுட்ப அறிவைப் பயன்படுத்தி மின் சாதனங்கள் பலவற்றையும் இயந்திரங்கள் பலவற்றையும் உருவாக்கி சாதனை படைத்துள்ளது.

இந்த விஞ்ஞானத்தின் விந்தையினால் மனிதன் ஆகாயத்தில் பறக்கவும். ஆழ்கடலில் செல்லவும் பலவற்றை கண்டுபிடித்து அதனைப் பயன்படுத்தவும் கற்றுக் கொண்டான். இப்படிப் பல போக்குவரத்துச் சாதனங்களை அமைப்பதற்கு விஞ்ஞானமே உதவியளிக்கின்றது. மனிதனது வாழ்க்கையில் பீடிக்கும் நோய் மற்றும் பலவற்றைத் தடுப்பதற்கு விஞ்ஞானம் பெரிதும் பயன்படுகிறது.

நாம்வாழும் புதுயுகத்தில் இருக்கும் விஞ்ஞானம் எமது எதிர்காலத்தில் "விஞ்ஞானம் இன்றி மனிதன் இல்லை" எனும் கூற்றுக்கு இணையாகிவிடும். இந்த விஞ்ஞானம் இப்படியெல்லாம் நல்லவற்றுக்கு பயன்படுவது போல் தீயவற்றுக்கும் பயன்படுகின்றன. ஆனாலும் நாம் விஞ்ஞானத்தைக் குறை கூறமுடியாது. ஏனென்றால் அந்த விஞ்ஞானத்தைத் தீய வழிக்கு கொண்டு செல்வது மனிதனே! உலகிலேயே இந்தத் தீய மனிதர்களால் அமைதியின்றி ஆதிக்கம் நிலவுகிறது.

நாம் தீயவர் போல் இல்லாமல் விஞ்ஞானத்தை உரியமுறையில் ஆக்கப்பாதையில் பயன்படுத்தவேண்டும். விஞ்ஞான வளர்ச்சியை என்றும் நல்வழியில் கொண்டு செல்ல வேண்டும். அப்போது தான் மனித சமுதாயமே சிறிய நல்வாழ்வு பெறும். நாம் பொறாமை, தீய எண்ணம் என்பவற்றை நீக்கி விஞ்ஞானத்தை மனிதனது முன்னேற்றத்துக்காக மட்டும் பயன்படுத்துவதில் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும். விஞ்ஞானம் மேலும் வளர நாம்உதவி புரிய வேண்டும். விஞ்ஞானத்தின் விந்தையை சரியான முறையில் பயன்படுத்துதல் அவசியம். இந்த விஞ்ஞானத்தின் வாழ்க்கை கிடைத்தமைக்கு புதிய யுகத்துக்கு நன்றி கூற வேண்டும். மேலும் எமது எதிர்காலம் சிறப்பாக வாழ விஞ்ஞானத்தின் விந்தையைப் பாதுகாத்து வைத்தல் அவசியம். அத்துடன் அது எமது கடமையாகும்.

பா.தமயந்தி
தரம் 9^{A}

பள்ளி வாழ்க்கையிலே

காலை பள்ளிக்கு வருவோமே
கடவுளை வணங்கிப் படிப்போமே
மாலையில் ஆடி மகிழ்வோமே
மனதைப் பழக்கிக் கொள்வோமே

நாளும் பொழுதும் நல்லவற்றை
நயமாய்க் கேட்டு மகிழ்வோமே
வாழும் உலகின் வழிகாட்டி
வசந்தம் பொங்கும் பள்ளியென்போம்

உள்ளதை உண்மையை உணர்த்திடுமே
நல்லதை நளினமாய் வளர்த்திடுமே
வள்ளுவன் வாய்மொழி வாழ்ந்திடவே
வகையாய் பெறுவோம் அறிவுதனை

நிம்மதி பள்ளியில் தானுண்டு
திருந்தி வாழவும் வழியுண்டு
நம்பிக்கை ஒன்றே துணையாகும்
நல்லவை செய்து உயர்வோமே.

சங்கீதா
தரம் 9^{A}

பா(வே)ஷம்

பாசங் கொண்ட உள்ளங்கள்
பல உண்டு உலகினிலே
சிலர் பாசங் கொள்வதெல்லாம்
சில லாபம் பெறுவதற்கே.

பாசத்திற்கு இலக்கணமாய்
இலக்கியங்கள் பல உண்டு
பரதன் கதையுண்டு
படித்துச் சுவைத்ததுண்டு

படித்தும் பயனில்லை
பண்பு கெட்ட மனிதரிலே
பாசமென்ற வேஷமிட்டு
பல விதமாய் நடித்திடுவர்

நன்மை கருதி பழகிடுவர்
நண்பரென்று சொல்லிடுவர்
நாவால் மட்டுமே அன்றி
நல்ல உள்ளத்தால் அன்று

உள்ளொன்று வைத்து
புறமொன்று பேசும்
உள்ளமற்ற பேயினங்கள்
உயிரற்ற உருவங்கள்

இரத்தமற்ற பொய்முகங்கள்
இதயமற்ற பொய்முகங்கள்
இவை பாடும் பல்லவிகள்
பாஷமென்ற வேஷங்கள்

சு.கீதாஞ்சலி
தரம் 10^{B}

வாழ்க்கை

வாழ்க்கை என்பது
எதிர்பார்ப்பு
நினைப்பது எல்லாம்
கிடைப்பதில்லை
கிடைத்தது எல்லாம்
நினைத்ததில்லை
இது தான் - மனித வாழ்க்கை

மாணவப் பருவத்தை வெற்றி கொள்ள
மாணவர்களாகிய நாம்
"கல்வி" என்ற மூன்றெழுத்தைக் கற்று
"அறிவு" என்ற மூன்றெழுத்தைப் பெற்று
"அன்பு" என்ற மூன்றெழுத்தை ஏற்று
"பணிவு" என்ற மூன்றெழுத்தை போற்றி
கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டில் என்றும் நிலைதடுமாறாமல்
மூத்தோர் சொல்லை முத்தெனப் போற்றி
வையகம் போற்றி வாழ்வோம்.

என். கயானா
தரம் 10^{A}

நட்பு

நட்பு என்பது விலைமதிக்க முடியாத ஒன்று உள்ளங்களில் நட்பு சுயநலமிக்கது. ஒருமித்த இணைப்பால் உருப்பெறுவதே நட்பு. எனவே எம்மோடு பழகுகின்ற எல்லோரையும் நம் நண்பர்கள் என்று எண்ணிவிடக்கூடாது. அப்படி அவர்களை நாம் நண்பர்கள் ஆகவும் நினைக்கவும் கூடாது.

அவர்களின் குணங்களை நன்றாக ஆராய்ந்து அவர்கள் நட்புக்கு ஏற்றவர்கள் தாமா என்பதை தெளிவுபடுத்திக் கொண்டபிறகே அவர்களுடன் நட்புக் கொள்ள வேண்டும். அவ்வாறன்றி ஆராயாமல் நட்புக் கொண்டால் அந்த நட்பு துயரத்தில் தான் முடியும். அந்தத் துயரமோ மரணத்தை தரத்தக்க துயரமாகவும் ஆகிவிடலாம். ஆகவே ஒருவருடன் நட்புக் கொள்ளும் போது அவரைப்பற்றி எல்லா விபரங்களையும் ஆராய்ந்த பிறகே நட்புக் கொள்ள வேண்டும்.

இதனையே வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு வழிவகுத்த தெய்வப்புலவர் திருவள்ளுவரும் "ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறைதான் சார்ந்துயரம் தரும்" என்று கூறியுள்ளார். நமக்கு நண்பர்களாக இருக்கக் கூடியவர்கள் நாம் தீய வழியில் செல்லும் போது அதிலிருந்து நம்மை விலக்கி உலக நடைமுறைக்கு ஏற்றபடி புத்தி சொல்லி நல்ல பாதையில் அழைத்துச் செல்பவர்களாய் இருக்க வேண்டும். சிலர் ஆசைகாட்டித் தீய வழிகளுக்கு நம்மைத் தூண்டிவிடுவார்கள். அவர்களால் ஏற்படும் துன்பங்களுக்கு அளவில்லை. உலகத்தின் நடைமுறைப் போக்குகளை அறிந்து தீயவைகளை விலக்கி நல்ல பாதையில்

Grade 10C

Grade 11A

Grade 11B

Grade 11C

நம்மை அழைத்துச் செல்வதற்காக நம்மைக் கண்டிக்கின்ற நண்பர்களும் இருப்பார்கள். அவர்களுடைய செய்கை எமக்கு கோபமூட்டலாம். அவர்கள் எமக்கு வழிகாட்டக்கூடிய நல்ல நண்பர்கள் என்பதை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும்.

நமக்குக் கெடுதல் வரும்போது நம்மைக் கைவிட்டு விடுபவர்களின் நட்பானது நாம் மரணம் அடையும் காலத்தில் கூட நம்முடைய உள்ளத்தைச் சுட்டுக் கொண்டேயிருக்கும். நாம் நன்றாக வாழும்போது நம்மைச் சூழ்ந்து கொண்டு உறவு கொண்டாடுவார்கள். நட்புப் பாராட்டுவார்கள். ஆனால் நமக்கு கஷ்டம் வரும்போது அது பற்றிக் கொஞ்சமும் கவலைப்படாமல் எம்மை விட்டு விலகித் தூர ஓடிவிடுவார்கள்.

இப்படிப்பட்டவர்களின் நட்பு நெஞ்சத்தைச் சுடுகின்ற நட்பு. இவர்கள் சந்தர்ப்பவாதிகள். தடாகத்தில் நீர் வற்றியவுடன் தடாகத்தை விட்டுப் பறந்து செல்லும் பறவைகளைப் போன்ற இவர்களை எந்தக் காரணத்தைக் கொண்டும் அருகில் வைத்துக் கொள்ளக் கூடாது. ஆபத்துக் காலத்தில் உதவாதவர்களின் நட்பு சாகும் காலத்தில் நினைக்கும்போது கூடத் துன்பத்தையே தரும். ஒருவரைப் பார்க்கும்போது அவர் நம்மைப் பார்த்துச் சிரித்து பேசுகின்றார் என்பதாலேயே அவர் நமக்கு நண்பராகி விடமாட்டார் வாய் சிரிக்கலாம். மனதில் நட்பு இல்லாமலும் இருக்கலாம். ஆகவே சிரித்துப் பேசுகிறவர்கள் எல்லோரும் நண்பர்களாகி விடமாட்டார்கள்.

உள்ளத்தால் நேசிப்பவரே உண்மையான நண்பராவார். அத்தகைய நண்பர்கள் போலியாகப் பழக மாட்டார்கள். சிரித்துப் பேசி எம்மை ஏமாற்றமாட்டார்கள். நடிப்பின் மூலம் நண்பர்களாகி விடமாட்டார்கள்.

"உடுக்கை இழந்தவன கை போலாங்கே இடுக்கண் களைவதாம் நட்பு" என்ற சான்றோனின் கூற்றுக்கிணங்க நடந்து கொள்பவர்கள் உள்ளத்தால் நேசிப்பவரே உண்மையான நண்பராவார். அத்தகைய நண்பர்கள் போலியாகப் பழக மாட்டார்கள். சிரித்துப் பேசி எம்மை ஏமாற்ற மாட்டார்கள். நடிப்பின் மூலமும் ஏமாற்ற மாட்டார்கள். நடிப்பின் மூலம் நண்பர்களாகக் காட்டி நம் மனம் கவர முயற்சி செய்ய மாட்டார்கள். நண்பர்களைக் கண்ட மாத்திரத்தில் அவர்களுடைய உள்ளம் ஒட்டி உறவாடும் மனதால் நேசிக்கிறவர்கள் அவர்கள். அவர்களுடைய நட்பே உண்மையானதாக இருக்கும். நிலைத்து நீடிக்கும்.

ஆகவே சிரித்துப் பேசுவதால் ஒருவரை நண்பர் என்று எண்ணி விடக்கூடாது. அன்பாய் உள்ளங்கலந்து உறவாடுகின்றவர்களே உண்மையான நண்பர்கள். இதனையே வள்ளுவரும்; "முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து அகநக நட்பு" என்றார். அன்பாய் உள்ளங்கலந்து உறவாடுகின்றவர்களே உண்மையான நண்பர்கள் என்றார்.

ஒரு நல்ல புத்தகத்தை ஒரு முறைக்குப் பல முறை விரும்பிப் படிக்கிறோம். காரணம் என்ன? ஒவ்வொரு முறை படிக்கும் போதும் அதில் புதுப்புது விடயங்கள் தோன்றி நமக்கு இன்பமூட்டும். அதனால் மனதிற்கு உற்சாகம் தேவைப்படும் போதெல்லாம் அந்தப் புத்தகத்தை எடுத்துப் படிக்கிறோம். அதைப் போற்றிப் பாதுகாக்கிறோம். பண்புடையவர்கள் நட்பும் அது போன்றது தான். அவர்களோடு பழகப் பழக நமக்கு ஒரு நிம்மதி கிடைக்கிறது. மனமகிழ்ச்சி ஏற்படுகின்றது. அவர்களோடு மேலும் மேலும் பழகவேண்டும் என்ற அவா ஏற்படுகின்றது. அவர்களை நமக்கு நெருக்கமாக்கிக் கொள்ளத் துடிக்கின்றோம். எண்ணங்கள்

இணக்கமாக இருந்தால் நட்பு எந்த நிலையிலும் உறுதியாகவே இருக்கும். ஏனெனில் நட்பு என்பது நல்ல உள்ளங்களின் சங்கமமே. எனவே நாமும் அனைவருடனும் நட்புடன் வாழ முயற்சிப்போம்.

B.காயத்திரி
தரம் 10^{C}

எம் கல்லூரித் தாயே!
ஏற்றம் அளித்தாய் எழிலே எம் தாயே!

விண்ணும் மண்ணும் வீசும் காற்றும் வியக்கும் உன்னாலே
என்னுள் இருக்கும் ஏற்றம் முழுதும் என்னவள் உன்னாலே
கண்ணும் உந்தன் கவிதை முழுதும் கருத்தே என்தாயே
எண்ண வீச்சை எழுத்தில் முடிக்க என்னால் முடியாதே.

வாழ்வில் உயர வழிகள் சொன்னாள் வண்ணத் தாயவளே
ஊழ்வினை என்னை உறுத்திய போதும் உறுதுணையானாயே
தாழ்வு வரினும் தாயானவள் என் தங்கத் தாயவளே
ஏழ்மை அகற்றி ஏற்றம் தருவாள் எழிலே என்னவளே.

குணத்தில் மணியே குலத்தில் உயர்வே குங்குமத் தாயவளே
மனத்தில் மலரே மங்களச் சுடரே மதியாய் ஆனவளே
தனத்தில் தளைப்பே தலைமைச் சிறப்பே ஆனவளே
தினமும் உந்தன் நிகழ்ச்சி தன்னில் திண்மை பெற்றிடுவேன்

உருவின் திருவே உண்மை அன்பே உயர்வின் ஒளி நீயே
பெருமை உன்னால் பெற்றேன் என்தாய் பொறுமையின் பொக்கிசமே
கவியின் உயிரே கடவுளின் வடிவே காணும் என் தாயே
புவியின் வடிவே புலரும் பொழுதே புண்ணியஸ்தலம் நீயே.

தனிநகர் பேறவள் தரணியில் உயர்ந்தவள்
தளைத்திடும் இன்ப ஊற்றே
கனியுள்ளம் கொண்டவள் கடுமையின் எதிரவள்
காப்பாற்றும் அடைக்கலமே
கனிய நல்தாயவள் இமையாய் இருப்பவள்
இன்பமே தருபவள்
புனிதத்தின் புஸ்பமாம் புதுமையாய் நிதம்அவள்
புகழினைப் பாடுவேனே.

ஞ.டயானி
தரம் **10^{C}**

Some Good things we must follow

You must study well
To fulfil your dreams
You must play games
to become a strong man

you must tell the truth
to become a great man
You must obey elders
to set their blessings

you must eat good food
to become a healthy man
you must love other creature
to achieve God's will

you must help others
without expecting rewards
you must be friendly with others
To set a good name

you must be clean
to prevent deasese
you must do hard work
to become a richman

you must serve the country
to set the pupils will
you must enjoy nature
to be happy in your life

you must read books
to become a full man
if you do all these
you will become a great man

T. Piriyalatha
Grade 10^{A}

EDUCATIONAL TOUR

There are certain places to be visited for Education and for pleasure. So our school Deputy principal Mrs. V. Shanmugaratnam and other teachers arranged a tour to Mannar, Vavuniya, Kandy, Newaraeliya, Matale, Sigiriya and to Trincomale during August vacation.

We started our tour on 16.08.2003 composed of Fifty Six students and nine teachers. It was a memorable morning we all left from our school by tourist buses and we travelled through A9 route to Vavuniya and then to Mannar and spent one night at Thiruketheswaram which is one of the historical temples in Sri Lanka. Then we all worshiped at the temple. There after we followed our journey to Kandy. At Kandy we first visited DaladaMaligawa and we entered inside and witnessed several sculptural works enshrined there. We saw the traditional dress and other ornaments, Musical instruments furniture of ancient rules especially King Rajasinghe. From there we proceeded to Peradeniya University. This was the first time we all visited this University. There we saw the medical exhibition arranged by the Medical faculty students. Then we saw the buildings from there. Then we proceeded to the famous botanical garden we enjoyed ourselves roaming round this beautiful garden admiring different kinds of flowers, plants, trees on all sides grown up with salubrious climate and environments. Students of Biology took special interest in the study of various species of plants and flowers. Then we spent the night at Kandy Viharamahadevi School.

On the next day we proceeded our journey to Nuwaraeliya. Its natural beauty of mountains, water falls, rivers and tea plantations which salubriously welcomed us. There at first we visited the labookelle tea industry and saw the various processing units to get tea we all drank super cup of tea. There after we went to Sitairamman temple one of the historical temples where it is believed ancient king Ravana kept sita in prison. Then we went to Haggala botanical garden and Park. After that we reached Anchaneyan temple with a huge Hanuman sculptor and monuments. From there we went to Rampola water falls. I have never seen such a beautiful water falls before.

Then we proceeded our trip to Muthumari amman temple Matale. On the next day we proceeded through Dampulla to Sigiriya Rock where Kasyapa built a beautiful palace on the top of the rock. This is called Sigiriya because the entrance to the top of the rock is between the paws of the huge lion made of brick.

On the top we saw swimming pool, flower garden medicinal herbs and trees. The ancient sculptural works and technical works inspired me.

Our next visit was to Trincomale. At first we visited the hot springs of Kinniya. Then we went to Trincomalee Konesar Temple situated near the sea shore standing on the high cliffs near the king Ravana Rock.

Trincomalee was the last place of visit in our programme. We returned happily to our school on 21.08.2003 having learnt a lot about our Educational tour for the first time.

R.Thulasi
Grade 10^{B}

யாழ்ப்பாணக் குடிசைக் கைத்தொழிலின் இன்றைய நிலை
Present Situation of the Jaffna Slum Industries

முகவுரை (Introduction)

இன்று உலக நாடுகள் பலவும் கைத்தொழில் துறையில் கூடிய கவனம் செலுத்தி அதில் வளர்ச்சி அடைந்து வளர்ச்சி அடைந்த நாடுகள் என்ற நிலையை அடைந்துள்ளது. மேலும் வளர்ந்து வரும் நாடுகளில் கூட கைத்தொழில் துறையே முன்னெடுத்து செல்லப்படுவதை காணக்கூடியதாகவுள்ளது. இந்நிலையில் இக்கட்டுரையானது யாழ்ப்பாணக் குடிசைக் கைத்தொழிலின் கடந்த கால நிலை என்ன? இன்றைய நிலை என்ன? என்பதை ஆய்வு செய்து நிற்கும்.

யாழ்ப்பாண குடிசைக் கைத்தொழில்கள் (Jaffna Slum Industries)

யாழ்ப்பாணத்தில் நெடுங்காலம் தொட்டுக் காணப்படும் கைத்தொழில் குடிசைக் கைத்தொழில் ஆகும். இக்குடிசைக் கைத்தொழில்கள் யாழ்ப்பாணத்தில் பரவலாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இக் குடிசைக் கைத்தொழில்களாக உணவு உற்பத்தி, மட்பாத்திரம் செய்தல், கருவாட்டு உற்பத்தி, கைத்தறி நெசவு, தையல், தென்னை சார் உற்பத்திப்பொருட்கள், பனைசார் உற்பத்திப் பொருட்கள், நகைவேலை, உலோக வேலை போன்றவற்றைக் குறிப்பிடலாம். சாதாரணமாக போதிய வருமானத்தைப் பெற்றுக்கொள்ள முடியாதவர்கள் வீண்பொழுது போக்காமல் சொற்ப வருமான்தைப் பெறுவதற்காகத் தங்களை இத்தகைய தொழில்களில் ஈடுபடுத்திக் கொள்வர்.

ஆயினும் அண்மைக்காலத்தில் இக் கைத்தொழில் பல்வேறு கட்டுப்பாடுகள், தடைகளினால் மிகவும் கீழான நிலையிலேயே இயங்குகின்றது. உதாரணமாக உள்ளூர் போக்குவரத்துத் தடைகள் சில பரிசோதனைத் தடைகளில் கட்டாயமாக இறக்கி, ஏற்றல் தடைகள் காரணமாகத் தென்னந்தோட்டங்கள் உள்ள பிரதேசங்களான பளை, வடமராட்சி கிழக்குப் பகுதிகளில் கிடுகு பின்னும் செயற்பாடுகள் குறைந்துள்ளன. அத்துடன் ஆடம்பர பிளாஸ்ரிக் பொருட்கள் கொழும்பில் இருந்து தாராளமாக கிடைப்பதன் காரணமாக மட்பாண்ட, பனை உற்பத்திப் பொருட்களின் சந்தைப்படுத்தல் பாதிக்கப்பட்டுள்ளது. மேலும் எறிகணை வீச்சு, பாதுகாப்பு அரண்கள் காரணமாகவும், பாதுகாப்பு பதுங்குழிகளுக்காகவும் தற்பொழுது பெருந்தொகையான பனை, தென்னை மரங்கள் அழிக்கப்பட்டு விட்டன. இதனால் அழிக்கப்பட்ட, அழிக்கப்பட்டு வரும் வருமானத்தில் தங்கி உள்ள பல வறிய குடும்பங்கள் மிகவும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட குடும்பங்களிற்கு நட்டஈடு இன்னமும் வழங்கப்படவில்லை. சுமார் பதினைந்து இலட்சம்

பனை மரங்கள் கடந்த 10 வருடங்களில் தறிக்கப்பட்டுள்ளதாக பனை அபிவிருத்திச் சபை மதிப்பீடு செய்துள்ளது. அத்துடன் தறிக்கப்பட்ட பனை, தென்னை மரங்களுக்குப் பதிலாக மீள்நடுகைத் திட்டம் எதுவும் பெரிதாக மேற்கொள்ளப்படவில்லை. இதில் அரசோ, அரச சார்பற்ற பொதுஅமைப்புகளோ, தொண்டர் நிறுவனங்களோ அதிகளவு அக்கறை காட்டவில்லை.

எனவே இக்குடிசைக் கைத்தொழிலை மேன்மேலும் வளர்க்க வேண்டுமாயின் உள்ளூர் போக்குவரத்துத் தடைகள் முற்றாக நீக்கப்பட வேண்டும். இக்கைத்தொழில் உற்பத்திகளிற்குப் போட்டியாக கொழும்பில் இருந்து தருவிக்கப்படும் பொருட்களை கட்டுப்படுத்த வேண்டும். இத்தகைய உற்பத்திகளில் ஈடுபடுவோர்க்கான நட்டஈடுகள், கடன் திட்டங்கள் என்பவற்றை விரைவுபடுத்த வேண்டும். அத்துடன் அழிக்கப்பட்ட வரவளத்தை மீள்விப்பதற்கான மீள்நடுகைத் திட்டங்களை விரைவாக மேற்கொள்ள வேண்டும். இவ்வாறான முயற்சிகளில் ஈடுபடுவதன் மூலம் குடிசைக் கைத்தொழில்களை வளர்த்தெடுக்க முடியும்.

முடிவுரை (Conclusion)

யாழ்ப்பாண குடிசைக் கைத்தொழிலின் வளர்ச்சிப் போக்குகள் தற்காலத்தில் அவை சந்தித்த பின்னடைவுகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் போன்றவற்றையும் இவற்றில் இருந்து விடுபட என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பது பற்றியும் இக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டது. ஆயினும் யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை அவை அனுபவிக்கும் பிரச்சினைகள் மிகப் பல ஆனால் அந்த பிரச்சினைகளை தீர்க்க எடுத்த நடவடிக்கைகள் சொற்பம் என்பதோடு அவற்றைச் செயற்படுத்துவதும் ஆமை வேகத்திலேயே நடைபெறுகின்றது. (இதனால் இக்குடிசைக் கைத்தொழில்கள் பழையநிலையை அடைவதென்பதோ, வளர்ச்சிப் பாதையில் காலடி வைப்பதென்பதோ ஒரு எட்டாக்கனியே) எனவே இக்குடிசைக் கைத்தொழில்களை வளர்ப்பதற்கான புனரமைப்பதற்கான திட்டங்கள் விரைவாகவும் ஒழுங்காகவும் மேற்கொள்வதன் மூலம் யாழ்ப்பாணத்துக் குடிசைக் கைத்தொழில்களை வளர்ச்சிப் பாதையில் இட்டுச்சென்று பொருளாதார ரீதியான வளமிக்க துறையாக ஆக்கலாம்.

Reference:

1. யாழ்ப்பாண அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒன்றிய அறிக்கைகள்
2. சமூகஒளி – பொருளியற்துறை, யாழ் பல்கலைக்கழகம்

கர்ணிகா. உ
தரம் 10^B

சமூக சேவையில் பெண்களின் பங்கு

"மங்கையாய் பிறந்திடுவதற்கே நல்ல
மாதவம் செய்திடல் வேண்டுமம்மா"

என்று பெண்ணின் பெருமை பற்றி முழக்குகிறார் கவிமணி தேசியவிநாயகம்பிள்ளை பெண் பிறப்பே பெருமை மிக்க பிறப்பு.

"அரிது அரிது மானிடராதல் அரிது"

என்று ஔவை வாக்கைச் சிரமேற்றுக் கொள்ளும் தெய்வப் புதல்வன் திருவள்ளுவன்

"பெண்ணிற் பெருத்தக்க யாவுள"

என்று கேட்கிறார் இவ்வளவு பெருமைகளும் வாய்க்கப்பெற்ற பெண்களை அன்னையர் என்றும் தாய்க்குலம் என்றும் அன்புடனும் பாசத்துடனும், அழைக்கின்றோம்.

ஒரு சமூகத்தை உருவாக்குபவளும் பெண், சமூகத்தை வளர்ப்பவளும் பெண்ணே, சமூகத்தில் ஆணி வேராக திகழ்கின்ற பெண்கள் அச்சமூகத்திற்கு ஆற்றும் சேவைகள் அளப்பரியன.

"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்"

என்று பெண்களைப் போற்றினர் புரட்சிக் கலைஞர் பாரதி இன்று பெண்கள் சமூகத்தின் அடிமட்ட வேலைகள் தொடங்கி அரசாளும் பணிவரை அனைத்துத் துறைகளிலும் ஆண்களுக்கு சரிசமனாக முன்னேறி வருகிறார்கள்.

இன்று கிராமங்கள்தோறும் பெண்கள் தங்கள் சேவைகளை முன்னெடுத்துச் செல்வதற்காக நிறுவன ரீதியாக அணி திரண்டு வருகிறார்கள் புழுதிபடிந்த கிராமங்கள் தோறும் மகளிர் அணிகள் மாதர் முன்னேற்றச் சங்கங்கள் என்பவற்றை நிறுவித் தமது பணிகளைப் பரவலாக்கி வருகின்றனர்.

நமது நாட்டில் சமூகத்துக்கு ஆரம்பக் கல்வி புகட்டும் பணியில் பெண்கள் ஈடுபடுவதைக் காணலாம். அனைத்து கிராமங்களிலுமுள்ள பாலர் பாடசாலைகளில் பெண்களே குழந்தைகளுக்கு கல்வியூட்டும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். அரசாங்கப்பாடசாலைகளின் ஆரம்ப வகுப்புக்களில் கூட பெண் ஆசிரியர்களே பெருமளவில் கல்வி போதித்து வருவதைக்காணலாம். அன்பு, பொறுமை, கருணை, தியாகம், போன்ற நல்ல பண்புகள் பெண்களிடம் இயல்பாக அமைந்து காணப்படுவதால் கிராமங்களில் கோவணாண்டிகளாகப் புழுதி அழைத்து விளையாடித்திரியும் பாலர்களுக்கு கல்வியூட்ட வல்லவர்களாக பெண்கள் திகழ்கிறார்கள்.

இன்று கிராமிய பொருளாதாரக் கைத்தொழில் வளர்ச்சியிலும் பெண்களின் பங்களிப்பு அளப்பரியது. கிராமங்களில் கிடைக்கும் பனையோலை போன்ற பொருட்களைப் பயன்படுத்திப் பல்வேறு பாவனைப் பொருட்களைப் அவர்கள் உற்பத்தி செய்து வருகிறார்கள். ஆடு, மாடு வளர்த்தல், கோழி வளர்த்தல், போன்றவற்றின் மூலமும் வீட்டுத் தோட்டங்கள் செய்வதன் மூலமும் கிராமிய பொருளாதார வளர்ச்சிக்கு அவர்கள் ஆற்றும் பணி மதிப்பிட முடியாத ஒன்றாகும். இன்றும் சமூக பண்பாட்டுக் கலைத்துறை வளர்ச்சியிலும் பெண்கள் தமது பங்களிப்பைச் செய்து வருவதால் சமூக சேவையில் அவர்கள் பெரும் பணியாற்றி வருவதோடு சமூக விழிப்புணர்வுக்கும் வழிவகுத்து வருகின்றனர்.

என். யாழினி
Grade 10B

இசையின் வாழ்வு

இசை உயிரின் இயல்பாய் அமைந்தது. இசையின்றி உலகில் எதுவுமே நடைபெறுதல் இயலாது. இதனை அறிவியல் நெறி நின்று உணர்ந்து எமது முன்னவர்கள் - இயற்கையின் இசைவை – அது உயிர்களோடு கொண்டுள்ள தொடர்பை, இனிமை பயக்கும் நெறியில் அமைத்தனர். இசையின் வரலாறே உயிர்களின் வரலாறு. மனித இனத்தின் பண்பாட்டு வரலாறு எனக் கூறலாம். எனவே இசை என்பது, வாழ்வு முறை எனப் பொருள்பயப்பதைக் காணலாம். மனித இனத்தின் இன்ப துன்ப உணர்ச்சிகளை அழகுபட எடுத்தியம்பும் இயல்பு கலைகளுக்குண்டு. இதனை நன்கு ஆராயும் பொழுது அது உலகில் அமைந்த உயிரினங்களின் வாழ்வு தாழ்வுகளை நயம்பட எடுத்து விளக்குகின்றதெனலாம்.

தமிழ் மக்கள் வாழ்வில், கூத்தும் பாட்டும் இயைந்து நின்று அவர்களின் வாழ்வை நிறைவுபடுத்தியது. இறைவனை ஏழிசையாய் இசைப்பயனாகக் கண்டு இன்புற்ற சிறப்பு எமது முன்னவர்க்கேயுண்டு. ஓசை ஒலியெலாம் ஆன இயற்கையில் எழுந்த நாதவின்பத்தினை, ஆத்மானுபூதியில் ஒன்றே எனப் பெறப்படுகின்றது. அதற்கும் மேலாக, இந்த அண்டத்தின் விரிவு அனைத்துமே இசையின் அடிப்படையில் அமைந்திருத்தலை எமது முன்னோர் நன்கு உணர்ந்திருந்தனர்.

"நாத விந்து கலாதி நமோ நமோ" எனப் பாடி மகிழ்ந்தனர். "ஓம்" என்பதே பிரம்மம். அதுவே அனைத்தும் அந்த ஓம் தான் சாம கானமாக விரிந்து நிற்கின்றது. இந்த நாதப் பிரம்மத்திலிருந்தே பஞ்சபூதங்களும், தத்துவங்களும், தன் மாத்திரைகளும் பிரபஞ்சமும் விரிவடைந்தன. இறைவன் அதாவது நாதப்பிரம்மம் சீவனுடன் அதாவது உயிருடன் ஓங்கார வழிவில் உட்கலந்து ஆத்ம இன்பத்தினைக் கொடுக்கிறதெனலாம். அதனால் தான் ஓரளவு உயிர்களிலிருந்து வளர்ச்சி பெற்ற ஆறறிவுபடைத்த மனிதர் வரை இசையானது அனுபூதி இன்பத்தினைக் கொடுக்கின்றது.

கல்லையும் கனிய வைக்கும் இயல்பு இசைக்கு உண்டு என்பதனைத் தமிழர் சிற்பக்கலை மூலம் தமிழ் நாட்டு ஆலயங்களில் நிறுவியுள்ளனர். ஏழிசையின் நாத அமைப்பினைக் கல்லில் வடித்த திறன் கைவண்ணத்தால் ஆவதொன்றெனக் கூறல் இயலாது. அது உயிர் வண்ணத்தால் ஆனது என்பதே சரியானது. இசையியலின் நுணுக்கங்களைக் குருகுல முறையிலோ அன்றி வேறெந்த வகையிலோ கற்காத, மரஞ்செடி கொடிகளும் மிருகங்களும் இசையால் ஈர்க்கப்பட்டு இன்ப நிலையடைகின்றன.

மேல்நாட்டறிஞர்களான பிளாட்டோவும், அரிஸ்டோட்டலும் இசை ஆத்ம எழுச்சியினையூட்டவல்லது என்ற கருத்தினைக் கொண்டவர்கள். காண்ட் என்ற தத்துவ ஞானி இசையைக் கலைகளின் முடியென நவில்கின்றார். இத்தகைய இசைக்கு அதன் தோற்றத்திற்குக் கால எல்லை வகுத்துக் கூறுதல் இயலாது. உயிரின் தோற்ற வளர்ச்சி, என்று ஏற்பட்டதோ அன்றே இசையின் வெளிப்பாடும் தோன்றி விட்டது. உயிரினங்களைத் தோற்றுவித்ததே இசையெனக் கூறுவது பொருத்தமானது. இத்தகைய இசையை, உயிரில் இருந்து பிரித்துக் கூறுதல் இயலாது.

தமிழ் மக்கள், வாழ்வினை அகம், புறம் என வகுத்து அதற்கு இலக்கணம் கண்டு தம் வாழ்வையே இலக்கியமாக்கியவர்கள். அவர்கள் தமது வாழ்வுக்குரிய நிலத்தினை, ஐந்திணையாகப் பிரித்து, அத்திணைகட்கு இசையமைதி கண்டனர். குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல், பாலை ஆகிய ஐந்திணை மருவிய காதல்

வாழ்வுக்கு அவ்வவ் நிலத்திற்குரிய பண் அமைதியும் இசைக்கருவியமைப்பும் வகுத்துத் தமது காதல் வாழ்வுக்கு அதனைப் பெருந்துணையாகக் கொண்டனர்.

புறவாழ்வாக அமைந்த போர் – வணிகம் - அரசியல் போன்ற செயற்பாடுகட்கும் இசையைப் பயன்படுத்திக் கொண்டன. இத்தகைய பண்பாட்டினைக் கொண்டு அதன் உண்மையியல்பினை நன்குணர்ந்து வாழ்ந்த பெருமை எமது மன்னவர்களான தமிழர்க்குண்டு. கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு முன்றோன்றி மூத்த குடி" எனப் போற்றப்படும் பெருமை சால் உயர் குடி மக்களான தமிழர்களே இசைப்பயனை முழுதுணர்ந்து உலகுக்கு உணர்த்தியவர். அதற்கு இலக்கண அமைதி காண்பவர். எனவே நயத்தக்க நாகரிகத்தின் தொட்டிலாக அமைந்திருந்த குமரிக்கண்டமே இசையின் இயல்பினை உலகுக்கு உணர்த்தியது எனலாம்.

அ.கீதாஞ்சலி
தரம் 10^B

பற்றுதலும் வெறுப்பும் ஏன் உருவாகின்றன?

மனித வாழ்க்கை சச்சிதானத்தின் ஒரு வடிவம். மனிதன் தெய்வத்தன்மையுடன் இல்லாவிடினும் மனிதத் தன்மையுடனாவது வாழ்க்கையை நடத்த வேண்டும். ஆனால் இப்போது அவன் மனித விலங்கு போல வாழ்க்கையை நடத்துகிறான். மனம் ஆசைப்பட்டதற்கு விரோதமாக நடக்கும்போது வெறுப்பையும், ஆசையையும் இவன் வளர்த்துக் கொள்வதே இதற்கு காரணமாகிறது.

மனிதன் என்னவாறு ஆகிறான் என்பதற்குள்ள இரகசியமும் மனதிலேயே இருக்கிறது. மனம்போன போக்கில் நடப்பவன் பசுவாக (விலங்காக) இருக்கிறான். புத்தியை (விவேகத்தை)ப் பின்பற்றுபவன் பசுபதியாக (கடவுளாக) மாறுகிறான். மனிதனுக்கு உடல் இருக்கிறது. புலன்கள் இவ்வுடலை விட உயர்ந்தவை. மனம் புலன்களைவிட உயர்ந்தது. புத்தி மனத்தை விட உயர்ந்தது. புத்தி ஆத்மாவுக்கு அருகாமையில் இருப்பதால் ஆத்மாவின் ஒளியானது புத்தியில் பிரதிபலிக்கின்றது.

ஆகவே புத்தியைப் பின்பற்றுவதன் மூலம், ஒருவன் தன் வாழ்க்கையைப் புனிதமாக்கிக் கொள்ளமுடியும்.

பொறுமையின் பெருமை

"ஸஹமானவவது, ஸஹனென புனக்து
ஸஹ வீர்யம் கரவாவஹை "பொறுமையை ஒரு சக்தி வாய்ந்த ஆயுதமாகக் கருதுங்கள். தர்மராஜாவின் எல்லா வெற்றிக்கும் காரணம் பொறுமை தான். பொறுமையை விட பலம் வாய்ந்த ஆயுதம் எதுவும் கிடையாது என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.

இப்படிப்பட்ட பொறுமையையும் சொந்த நலனுக்காகப் பயன்படுத்தாதீர்கள். எல்லோருடன் சேர்ந்து பணியாற்றும் போது, சேவை செய்யும் போது பொறுமையை சந்தோஷமாக அனுபவியுங்கள். அதனால் தான் வேதங்களில் முதலில் கற்றுத் தந்தது "ஸஹானா வவது" இதன் உள்ளர்த்தம் என்ன?

"நாம் எல்லோரும் சேர்ந்து வாழ்வோம். நாம் சேர்ந்து வளர்வோம். சேர்ந்து கற்றுக் கொண்ட புத்திசாலித்தனத்தை வளர்த்துக் கொள்வோம். சண்டையும் தவறான நோக்கமும் நம் வாழ்க்கையில் வேண்டாம். ஒருவருக்கொருவர் பரஸ்பர அன்புடன் இருப்போம். நம்மிடையே சண்டை

வேண்டாம். ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகளாக வாழ்வோம். ஒருவருக்கொருவர் நன்கு புரிந்து கொள்வோம். கடவுள் எல்லாவற்றைக் காட்டிலும் சக்திமிகுந்தவர்.

கி. வாசுகி
தரம் 10^{A}

EDUGATION

E :- **E**nlightenment
D :- **D**iscipline
U :- **U**shering
C :- **C**ulture
A :- **A**meliorating
T :- **T**endencies
I :- **I**nstilling
O :- **O**norous
N :- **N**ation

1. Education should be taught from infancy
2. Education is an asset to uplift one's life
3. If one school is opened thousand prisons are closed
4. Education leaves one to perfection in life
5. Education widens one's horizon
6. Education gives distinct place in society
7. Education is key to one's progress
8. Education is a treasure to a man
9. Education is a basic right of every child
10. Education is knowledge and knowledge is education

Y. Agitha
Grade 11^{B}

கல்வி தந்த சாலை

சாலையோரம் ஆலைகள் பல கண்ட
நகர்தனிலே ஒங்கி வளர்ந்த ஓர்
சாலை தனிலே ஓராயிரம் கூட்டம்
அலை மோதுதாம் அதுவே எம் சாலையாம்
பலராக நாம் சென்று
நான்கு சுவரிற்குள் எம் அறிவைப்
பெருக்கி – நாளை
பட்டதாரி வைத்தியராய்
பொறியியலாளர் சட்டத்தரணி என
பட்டங்கள் பல பெற வைத்து
எம்மைத் தரணி போற்ற
உலவ வைக்கும் ஒரு கூடம்

நாட்டின் நடப்புக்கள்
சமூகத்தின் பல தாக்கங்கள்
குடும்பத்தின் பல சிக்கல்கள்
உறவுகளின் உபாதைகள்
இத்தனையின் மத்தியிலும்
மாணவன் என்ற ஒருவனின்
மனதினைப் பதனிட்டு
கல்வியினை ஊட்டி
கற்கக் கசடறக் கற்றவை யாவும்
கற்பித்து உலகின் உயரத்திற்கு
எமை ஏற்றிய ஓர் ஏணி
எம் சாலை
பள்ளிப் பருவத்தில்
பல ஊர்க் குருவிகளாய்
நாம் ஒன்று கூடி
கற்றது என்னவோ கல்வி தான்
கண்டது உலகளவு என
வியக்க வைத்த ஓர் கோபுரம்
எம் சாலை
சாதிகளும் மதங்களும்
அந்தஸ்தும் ஓர் சமூகத்தில்
மனிதனைக் கட்டம் போட்டு நிறுத்தினாலும்
கட்ட விழ்த்து ஓர் குடும்பமாய்
அரவணைத்த ஓர் மேடை
எம் சாலை
அந்தஸ்தும் பணமும் நசுங்க
நாம் என்ற பரந்த மனதில்
நட்பு மலர்களை அன்பென்ற உரமிட்டு
வளர்த்த ஓர் அற்புதத் தோட்டம்
எம் சாலை
அறிவுடன் கூடவே
நன் நடத்தை பலவும் விதைத்து
உமி நீங்கிய அரிசி போல்
அறியாமை போக்கி எமை
சுடர்களாய் உலகிற்கு ஒளிர வைத்த
ஓர் உயர்ந்த சாலையே
எம் பாடசாலை

த. தனுஜா
தரம் 11^{A}

THE IMPORTANCE OF TELEVISION

Day by day the world became modern. As a result of this, the T.V. came to our society in 1988 - 1946. This instrument was inv ented by John Logie Baird. From the date that this instrument came it made development until now.

Now a days T.V is the most popular medium in the community. Not only the children but also the youngsters and adults like to watch this. This is the reason for its popularity. Also the T.V is very important to our society because from this we can give thing to our community.

Vivid programs about vivid subjects, are telecast on television. Some of them are Educational programmes. Scientific programmes, cartoons, teledrama films, news views and adventure stories.

T.V can give a good message for many people at once. It can also gives a good education for the school students. And the TV gives a current news to the people quickly than the newspapers.

Things that happen in the vivid places in the world, we can know within a few minutes by the use of televisions so the people like to watch TV and get much pleasure from this.

On the other hand it gives beautiful and interesting cartoon programmes and adventure stories to the children. So most of childern gather around the TV to get pleasure.
On the other hand TV has many disadvantages TV telecast somethings the bad things. The small children watch TV and become bad. Through TV some people try to do bad things as a business. And also they telecasts, films, that can't be watched by the whole family so some people have now began to see that TV is not necessary for our society.

So I think that the TV must telecast only the good things for the children and also for the society. When the TV does this it will become very important and useful to our society.

S.Brinthy
Grade 11^{B}

THE COMPUTER

The Computer is an electronic device which is made of a monitor, central processing unit, keyboard, mouse and many other little parts. Computers come in various sizes. Micro computers and loatop computers are some of them. It is a very important machine for every kind of person.

The idea and devices developed by many engineers and scientists led to the invention of a computer. First man invented this machine

for calculating purposes. In 1642 B.Pascal a french scientist invented it. Gradually it changed and John V.Atana soff developed the first semi electronic computer in 1946 later it began to be used in offices at schools for educational purpose and in homes too.

The computer takes the main place in communication. It is used for satellites police work, war purpose, telephone exchanges etc. If we want to connect to the internet we need a computer.

In education it is used to obtain information about the world in offices they use it for data management and accounting. In other countries even film producers use computers for their work.

In the cities all most homes have a computer. People use them for entertainment like also used when programming robots. The computer is an intelligent machine and there are so many advantages. It is fast gives correct information and canbe used for various activities. The disadvantages of computers are that some of the children play computer games all the time or on to internet and neglect their lessions. In the internet, there are so many web sites which are not good for the children. Parents should not allow their children to watch those web site and films in the internet. Even elders lose their way by watching bad websites.

There fore when we do thing with a computer, we should choose the correct way we should not neglect our lesson and waste time.

S.Vinthuja
Grade 11^{B}

அறிவு

நாம் தேடுகின்ற மாடு, மனைவி, மக்கள், வீடு, நிலபுலம், வாகனம், ஆடை ஆபரணங்கள் முதலிய யாவும் நாம் மரணமடைந்து, இவ்வுடம்பை விட்டுப் புறப்படும்போது, உடன் கூடவரமாட்டா. உடன் கூட வராத இவைகளைத் தேடுவதிலேயே, நாம் வாழ்நாள் முழுவதையும் செலவழிப்பது தக்கதன்று.

நாம் உடம்பை விட்டுப் புறப்படும் போது எம்முடன் தொடர்வது, அறிவு என்ற ஒன்றேயாகும். அறிவு பிறவிதோறும் தொடரும். ஆதலின் நாம் அறிவைத் தேடிப் பெறுவது, வாழ்வின் முக்கிய அம்சமாகும். அறிவு என்ற உயர் ஞானம் இருந்தால். அவர்கள் சகலதும் உடையவராவர். சகல சௌபாக்கியங்கள் அனைத்தும் இருந்தாலும், அறிவு என்ற ஒன்று இல்லையானால் அவர்கள் அவமதிக்கப்படுகிறார்கள்.

"அறிவுடையார் எல்லாம் உடையார், அறிவிலார்
என்னுடையரேனும் இலர்"

என்றார் வள்ளுவனாரும். நாம் பலவகையான கருத்து வேற்றுமையுடையவர்களாக இருக்கிறோம். நாடு, மொழி, இனம், தொழில், சமயம், நடை உடை வழக்கவழக்கம், இவைகளில் ஒவ்வொருதரும் ஒவ்வொரு விதமாக இருப்பினும், ஒரு விஷயத்தில் மட்டும் கருத்து வேற்றுமை கிடையாது. அது எது?

"துன்பம் தொலைய வேண்டும்"
"இன்பம் பெருக வேண்டும்"

என்று யாவருமே எண்ணுகிறோம். துன்பம் நீங்கி இன்பம் பெருக யாது செய்யவேண்டும் என அறிய முயன்றாரில்லை.

துன்பத்திற்குக் காரணம் அறியாமை
இன்பத்திற்குக் காரணம் அறிவு.

அறியாமை தேயத் தேய துன்பம் தொலையும். அறிவு வளர, வளர இன்பம் பெருகும். இந்த உண்மையை அறியாது பலர் பொன், பொருளால் இன்பத்தை வளர்க்க நினைக்கிறார்கள். அது "நெருப்பை நெய்யினால் அவிக்க முயல்வதை நிகர்க்கும். மிகுந்த பொன்னும் உடையவர் சதா சிந்தாகுலத்து உழல்வதையும், ஆறுதல் இன்றி அல்லற்படுவதையும் காண்கிறோம். அறியாமையினாலே, துன்பம் வளர்வதற்கு ஓர் உதாரணம் :-

ஒரு விறகு வெட்டி, ஒரு மரத்துண்டைப் பாதி பிளந்துவிட்டுப், பிளந்த பிளப்பில் ஓர் ஆப்பை வைத்துவிட்டுச் சென்றான். மறுநாள் வந்து மற்றப்பாதியைப் பிளக்க, அனுகூலமாகவே; ஆப்பை வைத்தான். ஒரு குரங்கு அங்கு வந்து, அம்மரத்தின் பிளப்பில் காலை நுழைத்துக் கொண்டு, தான் பெரும் செயலைச் செய்வதாக நினைத்து, அந்த ஆப்பை அசைத்து அசைத்து, அரும்பாடு பட்டு பிடுங்கி எடுத்தது. மரத்தின் பிளப்பு நெருங்கி ஒன்றுபட்டதால், அதன் கால் அகப்பட்டு, நசிந்து அக்குரங்கு பெரும் துன்பப்பட்டது. அதன் அறியாமையே துன்பப்படக் காரணமாயிற்று.

"கவர் பிளந்த மரத்தொளையில் கால் நுழைத்துக் கொண்டே ஆப்பதனை அசைத்துவிட்ட குரங்குபோல் ஆனீர்" என அழகாகக் கூறுகின்றார் பட்டினத்தார். அறியாமையை அகற்றி, அறிவு வளர யாது வழி என்றால், சிறந்த அறிவு நூல்களைப் படிக்குந் தோறும் அறிவு வளரும்.

"தொட்டதனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு"

என்றார் வள்ளுவர். ஆதலால் நாம் அறிவு நூல்களைத் தேடிக்கற்று, ஓதி, அறிவு நிறை ஆன்றோருடன் சில நிமிடமாகிலும் பழக வேண்டும்.

"இனிது இனிது அறிவுள்ளோரைக்
கனவிலும் காண்பது தானே"

என ஔவையாரும் அருளிச் செய்தார். எனவே நாமனை நடந்தும், அறிஞர்களோடு பழகியும், அறியாமையை அகற்றி அறிவை நிரம்பப் பெற்று, துன்பம் நீங்கி இன்பமாக வாழ்ந்து உய்வோமாக.

கிருபானந்தவாரியார் அருளியது பிரசங்கத்தில் கேட்டவை

ப. இந்துஜா
தரம் 11[B]

கனிதப்புதிர்

1	2			3	4
			6		
			7		
		8			
	9				10
11			12		

இடமிருந்து வலமாக

1. 25^2
3. 60 இற்கும் 80 இற்கும் இடைப்பட்ட முதன்மை எண்
5. 6வது முதன்மை எண்ணின் 5மடங்கு
6. 47X5X4
8. (9X100) +(6X10)+ (1X1)
9. 300 –3X2
11. 11 இன் மடங்கு
12. x=5 ஆயின் x(x+1)

மேலிருந்து கீழ்

1. $10^4 - 3334$
2. 2. 65536
3. 2[{23x45)+ 1673}]
4. ..... X 99 = 100^2 -1 இடைவெளியில் வரவேண்டிய எண்
6. 10^3 - 1
9. 100 இன் ¼
10. ஒரு செவ்வக எண்
11. 8 இன் மடங்கு

விடைகள்

1	2			3	4
			6		
			7		
		8			
	9				10
11			12		

இடமிருந்து வலமாக

1. 625
3. -71
5. 65
6. 940
8. 294
9. 55
10. 8
11. 108

மேலிருந்து கீழகாக

1. 6666
2. 256
3. 7464
4. 101
6. 999
9. 50
10. 88
11. 3

த. தர்சிகா
தரம் 11[A]

SCIENCE AND TECHNOLOGY

Science feeds technology and technology helps science to uncover unexplored fields. So intertwined are these two fields of knowledge and skill that with out them the world would not be as what we see it today. The advancement of Science equips technology with new concepts which find their application in different technologies. These advances life styles.

The development of Science and technology is so rapidly changing the world that keeping pace has become a problem specially in societies of the third world countries. A product turned out to suit modern life becomes out dated even before it finds utility. With the introduction of yet another more advanced type. It is therefore necessary that we keep up with the standards of the developed countries in science and technology.

Advances in biological sciences has led to the development of bio technology which is today one of the major frontiers that lead us into the 21st century. Like wise nuclear and computer sciences have given us nuclear and computer technologies.

S.Shantharuby
Grade 10[B]

MY FRIEND

I have a lovely friend
Her name is serry
Her birthday is on June second
So I gave her a T.V game

She is always careful
And she is always cheerful
She never tells lies
And her voice is very nice

She is very beautiful
And she is very tall
She likes to play netball
And she loves her dad and mum

She likes to speak English
And plays table tennis
Her hobby is gardening
Her interest is playing games

Her mother calls her chutty
Her father calls her serry
She has a little brother
She loves him very much

She has a small garden plot
And she gets enough money from gardening
She helps her mother a lot
And daily she wakes up early in the morning

Serry comes to school by bus
She always love to play with us
When both of us go for walk
We hold each other hands and talk

I hope she will become a doctor
But not to be a money sucker
Our friendship will last for ever

R.Yalini
2005 Commerce

Some Interesting Sea Animals

Star fish



The arms of the starfish are like the points of a star. Some have only four arms but most of them have five arms.

The star fish has no head or eyes. It has a mouth in the centre where the arms meet along the arms is a large number of feelers called tentacles. Running through the centre of each arm is a tube. Water can enter and come out of these tubes. When water is withdrawn from the tubes, they become suckers using these suckers, a starfish can cling to rocks or shell fish. A star fish lives on shellfish such as oysters, mussels and cockles.

Jelly fish

The Jelly fish is not a fish at all as it does not breathe through gills. It takes in air through its skin.

A Jelly fish is made up of an umbrella shaped body and a large number of Feelerscalled tentacl around the pdge of the "umbrella" are fine hairs. The mouth is underheath the umbrella body and is square is shape.

The jelly fish has no special parts to help it to swim. It moves about rather slowly on the surface of the sea by opening and closing its umbrella body waves and currents also help it to move.

The jelly fish catches its food with its tentacles. When a fish or other sea creature is caught by the tentacles, the body sends out a number of fine threads. These threads contain poison which paralyse the creature. Then the tentacles slowly move so that it can swallow its feed .

There are many kinds of jelly fishes. Some are beautifully coloured. Some are dangerous, because of their poisonous threads. Do not handle a jelly fish when you see it drifting about in the water.

The Sea horse

The sea horse is another fascinating sea animal. The body is made up mostly of bones. The head with a long 'shout' looks very much like the head of a horse – hence its name. The snout is actually, a tube like sucking mouth. When it sees a small sea creature it brings its snout very close to it. Then suddenly it sucks, in the water and the creature with it.

The sea horse has a pair of small fins at the head part. These stick up like ears. Along the back of the body is a single fin. The sea horse drifts about feebly amoung sea weef using its tail to cling to the weed.

Bits of seaweed stick to its body, and thus form sort of disguise in this way it is protected from another sea creatures.



Grade 12 & 13 Commerce (A/L 2004& 05)



Grade 13 Science (A/L 2004)

A/L Union - 2003



Hindu Union - 2003

The male sea horse has a pouch infront of its body. The female lays her eggs in this pouch. After fourty days the eggs hatch into baby sea horses. These stay around the pouch with the father, until they are big enough to look for food.

K.Lavanya
2004 Science

இந்துக்களின் வாழ்வியலில் அறம் பற்றிய சிந்தனை

"திரிகரண சுத்தியும் காரண சித்தியும் தருவாய்"

மிகத் தொன்மையான நமது இந்துமதம் பலவகையில் சிறப்புடையது. சிவனை முழுமுதலாக கொண்டமைந்தது. இதனைச் சார்ந்தவர்களே இந்துக்கள். மனித நேயமே இந்துமதத்தின் இலட்சியம். பிற உயிர்கட்குத் துன்பம் செய்யாதிருப்பவன் எவனோ அவனே இந்து என்பது சுவாமி விவேகானந்தர் தரும் விளக்கம். இந்து மதத்தின் புராதன பெயர் "ஹிந்துதர்மம்" என்பது. பண்டுதொட்டே இந்துமதத்தோடு பின்னிப் பிணைந்திருப்பது அறம். "அல்லவை அகற்றுதலும் நல்லவை ஆற்றுதலும்" அறம் என்ற வரையறைக்குள் அடக்கப் பெறுகின்றது.

இந்து மக்களது வாழ்க்கை, அவர்களது நோக்கு, இலட்சியம் என்பன பற்றி பார்க்கும்போது மேலே குறிப்பிட்டது போன்று மனிதநேயமே இந்துமக்களின் இலட்சியம். அதாவது ஒவ்வொரு மனிதரும் இறைமையினை தம்மிடத்திலேயே விசுவாசித்து சகல உயிர்களிடத்தும் இயற்கைப் பொருள்களிடத்தும் அன்பு செலுத்துதலாகும். இதுவும் அறத்தின் வழியேயாகும். அற அடிப்படைகள் முப்பொருள் உண்மைகளை மையமாகக் கொண்டவை எனலாம். இறைவன், உலகம், உயிர்கள் போன்ற அடிப்படைப் பொருள்களில் முதற்கண் நம்பிக்கை வைத்து ஒழுகுதல், அன்புணர்வினைப் பேணும் சமூகமானது அவற்றின் ஆரம்பமாகத் தெய்வத்தை நம்புதல், கீழ்ப்படிதல், பிறருக்கு உதவுதல், அன்பு செலுத்துதல், வேற்றுமை பாராட்டாதிருத்தல், கொல்லாமை, பிறன்மனை நயவாமை போன்ற ஒழுக்கங்களைப் பேணுவதும் அவசியம் எனப்பட்டது. இதனை திருமூலர் "அன்பே சிவம்" என அழகாகக் கூறுகின்றார்.

மானிடத்துவம், சமத்துவம், சகோதரத்துவம் என்பவற்றினையும் அன்பு எடுத்துரைக்கின்றது. அன்பு செலுத்தலாவது அனைவரையும் சமநோக்குடன் நேசிப்பது, அறவழிக்குத் தீங்கு நேரும்போது அஞ்சாமையுடன் எடுத்துரைப்பது, தர்மமே இறைமை என எண்ணிப் பிறர்க்குதவுதல், சமுதாய சேவையே வழிபாடு என உணர்ந்து நடைமுறையிலே பின்பற்றி ஒழுகுதல், இவையே அன்பின் பரிமாணங்கள். இதிலிருந்து அற வழிப்பட்டதே அன்பு என்பது புலனாகின்றது.

இவ்வாறான நல்லொழுக்கத்தில் இருந்தே அறம் வடிவெடுக்கின்றது. அறத்திற்கு ஒழுக்கமே ஆதாரம். அற ஒழுக்கம் பேணுவோனை அந்த அறமே காப்பாற்றும். அது ஒரு போதும் அவர்களைக் கைவிடாது.

"தர்மம் தலைகாக்கும்"

என்ற முதுமொழிக்கும் இதுவே காரணமாயிற்று. அறவழியைக் கைவிட்டவனுக்கு அறமே கூற்றுவனாகும்.

"அல்லவை செய்தார்க்கு அறம் கூற்றமாகும்"

என சிலப்பதகாரம் அறத்தை மீறுவோருக்கு விதிக்கப்பட்ட எச்சரிக்கைகளாகும். ஒழுக்கம், அறம், தருமம் என்பன போன்ற சொற்கள் அடிக்கடி பல்வேறு பண்புகளில்

பயன்படுத்தப்படுகின்றது. அறமாவது பாவம் அனைத்தையும் பற்றறுப்பதும் இருமை இன்பம் எய்துவிப்பதும் அன்பு, அருள் ஆகிய இறைமைக் குணங்களை வளர்ப்பதாகும். மனத்தூய்மையுடன் இருப்பது ஒருவனுக்கு சிறந்த அறமாகும். ஏனைய சொற்களெல்லாம் வெற்று ஆரவாரங்களேயாகும். இதனை

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்
ஆகுல நீர பிற"

எனத் திருவள்ளுவர் சுட்டுகின்றார்.

புராணங்கள், இதிகாசங்கள், உபநிடதங்கள் என்பவற்றிலும் சிறந்த அறக்கருத்துக்கள் காணப்படுகின்றன. புராணத்திலே "மக்கள் ஆணவ மலம் என்னும் அகங்காரம் நீங்கி இறை உணர்வு எல்லோர் மனத்திலும் ஏற்படவேண்டும்" போன்ற அறக்கருத்து கூறப்பட்டுள்ளது. இதேபோல் இதிகாச இலக்கியங்கள் இரண்டு. அவை மகாபாரதம், இராமாயணம் ஆகும். இங்கு பெரியோரைக் கனம் பண்ணுதல், தாய்தந்தையைப் பேணுதல், இல்லற தர்மத்தை நிலைநாட்டுதல், செய்நன்றி மறவாமை போன்ற அறவழிக் கருத்துக்கள் சிறந்து விளங்குகின்றது.

மகாபாரதத்தை எடுத்து நோக்கும் போது இங்கு பெரியோரைக் கனம் பண்ணுதல், தாய்தந்தையரைப் பேணுதல், தர்மத்தை நிலைநாட்டல், அதர்மத்தை அழித்தல் ஆகிய உயரிய அறக்கருத்துக்களை பாரதம் பேணியிருப்பதைக் காணலாம். இப்பாரதத்திலே அவதார புருஷனான கிருஸ்ணர் பாண்டவருடன் கேண்மை பூண்டு அருச்சுனனுக்கு சாரதியாக யுத்த களத்திலே நின்று கொண்டிருந்தவேளை எதிரணியில் நின்று கொண்டிருந்த விஸ்மாச்சாரியார், துரோணர், விதுரர் ஆகியோரைக் கண்ட அருச்சுனன் பற்றுக்களினால் பீடிக்கப்பட்டு அவர்களை அழிக்க மனம் ஒருப்படாது தன் தேரைத் திருப்பும் படி கண்ணனிடம் கூறியபோது அதனைக் கேட்ட கண்ணன் அவ்அருச்சுனன் பற்றிலிருந்து நீக்கும் நோக்குடன் "சர்வம் பரியேச்சமாம் ஏவ சரணம் பிரபஞ்ச விஜய (விஜயனே எல்லாவற்றையும் விட்டுவிட்டு நீ என்னையே சரண் அடைவாயாக) எனக் கூறுவதன் மூலம் சரணாகதி மார்க்கத்தை உபதேசித்ததோடு கடமையைச் செய் பலனை எதிர்பார்க்க உரிமை இல்லை என்றும், துஷ்டர்கள் அழிக்கப்படுவது மட்டுமன்றி அத்துஷ்டத்தனத்துக்கு துணைபோகும் அத்தனை பேரும் அழிக்கப்படுவார்கள் என உபதேசிக்கப்பட்ட உபதேசங்கள் யாவும் பகவத்கீதையாகும். அம்மகாபாரதம் ஓர் சமய இலக்கியமாக மட்டுமன்றி அறவழி தழுவிய இலக்கியமாகவும் அமைந்து விளங்குகின்றது.

இதேபோல் இராமாயணத்திலே இலட்சிய புருஷனான இராமன் தெய்வாம்சம் பொருந்தியவனாக காணப்பட்டாலும் பெரியோரைக் கனம் பண்ணும் உயரிய பண்பைக் கொண்டு காணப்படுகின்றார். வசிட்டரைக் குருவாகக் கொண்டு ஆரம்பக் கல்வியைக் கற்ற இராமர் வசிட்டர் கூறிய அறிவுரைகள் யாவற்றையும் அறிவுரையாக கொண்டமையினாலே தாடகையை வதம் செய்வதற்கு கையிலே தாங்கிய வில்லை அவன் பெண்ணைக் கண்டதும் பெண்ணைக் கொல்வது பேதமை என்ற அப்பெரியோன் வாக்கை மனதில் கொண்டு வில்லைக் கைநழுவ விடவே அதனைக் கண்ட விசுவாமித்திரர் "ஆறி நின்றது அறம் நன்று" எனக் கூறி இவள் பெண்ணல்ல பேயாவாள் இவளைக் கொல்வதே தர்மமென கூறியது கேட்டு இராமர் தாடகையை வதம் செய்ததன் மூலம் பெரியோரைக் கனம் பண்ணியதோடு அறத்தில் காவலன் என்ற வாழ்த்துக்கு இலக்காகியமை போன்ற கருத்துக்கள் காணப்படுகின்றன. இதுமட்டுமல்லாது இராமன் யுத்த களத்திலே நிராயுத பாணியாக நின்ற இராவணனை "இன்று போய்ப் போர்க்கு நாளை வா" என்று கூறினான். அதாவது நிராயுத பாணியாக நின்ற இராவணனைக் கொல்வது சத்திரிய தர்மம் அன்று என்ற பெரியோர் வாக்கினைக் கனம் பண்ணிய காரணத்தால் இவ்வாறு கூறினான். இது இவனது அறிவழிப்



Grade 12 Science (A/L 2005)

Grade 12 Arts (A/L 2005)

Grade 13 Arts A (A/L 2004)



Grade 13 Arts B (A/L 2004)

போக்கினையே தெளிவுபடுத்தி நிற்கின்றது. மகாபாரதம், இராமாயணம் போன்ற இரண்டு இதிகாச நூல்களிலும் அறவழிக் கருத்துக்கள் நிறைவாகக் காணப்படுகின்றன. இதைவிட உபநிடதம், உண்மை பேசு, அறம்செய், தாயைத் தெய்வமாகப் போற்று, தந்தையைத் தெய்வமாகப் போற்று, குருவைத் தெய்வமாகப் போற்று முதலிய பல அறக்கருத்துக்களைக் கூறியுள்ளது.

பல்லக்கில் அமர்ந்திருப்பவனையும் அவனைத் தூக்கிச் செல்பவனையும் பார்த்து அறத்தின் பலன் அமர்ந்திருக்கிறான் என்று கூறக்கூடாது. பொறாமை, பேராசை, முன்கோபம், தீய சொற்கள் இவை அறவே இல்லாமல் இருப்பதே பிறவித்துயரை நீக்கி விரைவாக வீடுபேறு அடைய வழிவகுக்கும். ஒருவன் செய்ய வேண்டியது எல்லாம் அறம் தான். தப்பி ஒதுங்க வேண்டியதெல்லாம் பழிச்செயல்கள் தான். அறத்தை இயன்றவரை இடைவிடாமல் வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் செய்ய வேண்டும். இதனால் கேடு இல்லை. பிறகு பார்த்துக் கொள்ளலாம் எனத் தள்ளிப் போடாமல் செய்ய வேண்டும். சாகும்போது சாகாமல் உடன்வரும் துணை அ.்.து ஒன்றே. இவை இந்துக்கள் ஒவ்வொருவருடைய வாழ்வியலில் அடக்கங்கப் பெறுபவை.

இதுமட்டுமல்லாது ஒவ்வொரு இந்துவும் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய அறங்களும் காணப்படுகின்றன. சகல மனிதர்களிடத்தும் அன்பு செலுத்துவதுடன் எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கும் வகையில் அன்றாட வாழ்வினை எவ்வாறு அமைக்கலாம் என்பனை

"யாவார்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை
யாவார்க்குமாம் பசுவிற்கொரு வாயுறை
யாவார்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி
யாவார்க்குமாம் பிறர்க்கு இன்னுரைதானே"

என்ற நியதியிலே ஒவ்வொருவரும் வருவாராகில் உலகில் இல்லாமை என்பதே இல்லாத நிலை தோன்றிவரும் என திருமந்திரம் கூறுகின்றது. தன்னைப் போல பிறரையும் நேசிக்க வேண்டும்.

மேலும் இந்துக்களின் வாழ்வியலில் "வகுப்பு வாழ்க்கை நிலை அறம்" தொல்பழம் பெருகாலத்தில் இருந்து பயின்று வருவதை பலகாலுங் காண்கின்றோம். இவ்வறமானது அனைவர்க்கும் ஒருபடித்தன்று. எல்லோர்க்கும் பொதுவாய் எல்லோராலும் ஒப்பக் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க நியமமொன்று. உண்மையில் உள்ளது. அதனோடு ஒவ்வொரு நிலைக்கும் சிறப்பாகவுரியதோர் அறமும் வாழ்க்கை நெறியும் ஒதுக்கப்பட்டுள்ளன. வர்ணம் சமூகத்தைப் பாதுகாக்கும் நோக்கிலே சமூக நலன் கருதி வகுக்கப்பட்டதொரு கோட்பாடாகும். இதிலே பிராமணியன், சத்திரியன், வைசிகன், சூத்திரன் என்ற நால்வகை வர்ணங்கள் வகுக்கப்பட்டு இந்த நால்வகை வர்ணங்களுக்கும் தொழில்களை வகுத்து இதுவே அவரவர்க்குரிய கடமை என வலியுறுத்தப்பட்டு அந்தக்கடமை செவ்வனே ஆற்றப்படுவதன் மூலமே இல்லத்துக்குரிய அறம் கடைப்பிடிக்கப்பட்டுள்ளது என்ற முடிவுக்கு வரலாம். அந்த வகையிலே ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் ஆகிய ஆறும் பிராமணர்க்குரிய அறங்களாகும். குடிகாத்தலும், சமூக ஒழுங்கைப் பேணுதலும், சஸ்திரியர்க்குரிய அறங்கள். வணிகம் செய்தல், உழுது பயிரிடல், வைசிகருக்குரிய அறங்களாகும். மூன்று வர்ணத்தாருக்கும் ஊழியஞ் செய்தலே சூத்திரியனுக்குரிய அறம் ஒருவன் தனக்குரிய கடமையை சிறப்பாகச் செய்தல், மற்றவனுக்குரிய கடமையை திறம்படச் செய்தலிலும் சிறந்தது என மனுதர்ம சாஸ்திரம் எடுத்துரைக்கின்றது.

ஆகவே இவை யாவற்றையும் ஒன்று திரட்டிப் பார்க்கும்பொழுது ஒழுக்கத்திற்கும் சமயத்திற்கும் அறத்திற்கும் நெருங்கிய தொடர்புண்டு என்பதனை அவதானிக்கலாம். அறவழக்கங்களைத் தெரிந்தெடுத்து முன்னரே இந்துக்கள் தமது வாழ்வியலில் சமய அடிப்படையிலான ஒழுக்கங்களை மேற்கொண்டிருந்தனர். மக்கட்கு செய்யும் கடமைகள் இறைவனால் ஆணையிடப்பட்டவை என்றால் சமய நெறியும் அறநெறியும் இன்றுவரை ஒரே கடமைகளையே தம்முள் கொண்டுள்ளன என்பது புலனாகும். ஆகவே இந்துக்களின் வாழ்வியலை செம்மைப்படுத்த எழுந்தவையே அறங்கள்.

த. மைதிலி
2005 கலைப்பிரிவு

கணனி ஓர் அறிமுகம் (குறுகிய நோக்கு)

Computer an Introduction

நவீன விஞ்ஞான உலகில் முக்கியத்துவம் பெற்று விளங்குவதும் உற்பத்தி வர்த்தக சந்தைப்படுத்தல் தொழிற்பாட்டில் சிறப்பிடம் பெற்று விளங்குவதுமான கணனியின் வளர்ச்சியையும் அதன் பிரயோகத்தையும் நாம் அறிந்திருக்க வேண்டியதன் அவசியத்தையும் யாவரும் உணர்ந்ததே. விஞ்ஞான முகாமைத்துவத்தின் வளர்ச்சிக்கு உதவிய Charles Babbage என்பவரை தனது தந்தையாகக் கொண்ட கணனியின் வரைவிலக்கணம் யாதெனில் உள்ளீடு செய்யும் தரவுகளைத் தானாக ஏற்று அவற்றை சேமிப்பகத்தில் சேமித்து வைத்து அவற்றை செய்முறைக்குட்படுத்தி அச்செய்முறையின் முடிவான தகவல்களைத் தானாகவே மின்சாரத் துடிப்புக்கள் மூலம் கூடிய ஒரு இலத்திரனியல் கருவி என்பதாகும்.

தற்காலத்தில் பின்வரும் துறைகளில் கணனி தன்னாட்சி செலுத்துகின்றது. வேலைவாய்ப்பு வர்த்தகம், மருத்துவம், கல்வி போக்குவரத்துத் துறை, உற்பத்தித் துறை, வீட்டுத் தேவை, நுண்கலைகள், மனித ஆற்றலுக்கு நிகரான இத்தகைய கருவிகளால் நாம் பல நன்மைகளைப் பெறுகிறோம். (**COMPUTER** :- **C**ommonly **O**perated **M**achine **P**articularly **U**sed for **T**rade **E**ducation and **R**esearch)

கணனி அமைப்பை நாம் முன்பாக வகைப்படுத்தலாம்.

1. Hard ware :- வன் தன்னி
2. Soft ware :- மென் தன்மை
3. Live ware :- உயிர்த்தன்னி

கணனி ஒன்றில் சம்பந்தப்பட்ட பௌதீக மற்றும் இயந்திர சாதனங்கள் அனைத்தும் வன்தன்னி என்றழைக்கப்படும். இது மேலும் இரண்டு வகைப்படும்.

1. Central Process Unit :- மத்திய செயற்பாட்டு அலகு
2. Peripheral Devices :- புறநிலைச் சாதனங்கள்

கணனியின் உயிர்நாடியாக மத்திய செயற்பாட்டலகு மேலும் 3 பிரிவுகளை கொண்டது.

1. Memory Unit :- நினைவக அலகு
2. Control Unit :- கட்டுப்பாட்டு அலகு
3. Arithmetic Logic Unit :- கணித தர்க்க அலகு

Tamil Union - 2003



English Union - 2003



Chiristian Union - 2003



Geograpgy & Social Studies Union - 2003

நினைவகத்தில் சேமித்து வைக்கப்பட்டுள்ள செயற்திட்டத்தின் கட்டளைகளை முறைப்படி எடுத்து செயற்படுத்துவதை கட்டுப்பாட்டு அலகு செய்கின்றது. அதாவது கணனியின் சகல தொழிற்பாடுகளையும் கட்டுப்படுத்தி வழிநடாத்தும் பகுதி கட்டுப்பாட்டு பகுதியாகும். கணனியின் முறை என்றழைக்கப்படும் நினைவகமானது 1. RAM 2. ROM ஆகும். புறநிலைச் சாதனங்கள் என்பது கணனிகள் தரவுகளை உட்செலுத்தும் Input Devices ஐயும் கணனியின் தரவு நிரற்படுத்தல் மேற்கொள்ளப்பட்டு விளைவான தகவல்களை வெளியேற்றும் Output devices ஐயும் குறிக்கும். Input Devices என்பது தரவுகளையும் திட்டங்களையும் கணனி உணர்ந்துக் கொள்ளக்கூடிய வகையில் மாற்ற உதவும் சாதனம்.
Eg :- Punched card Reader, Key Board, Magetic Tape Unit

Output devices என்பது தரவுகளையும் தகவல்களையும் இயந்திர உணர்திறன் நிலையிலிருந்து மனித உணர்திறன் நிலைக்கு மாற்றும் சாதனமாகும்.
Eg :- Printer, Screen, Com Recorder, Computer

உலகில் முதன்முதலில் Program எழுதிய Lady Ada Love Lace இனைச் சேரும் முதல் Programer என்ற வகையில் இவரை கௌரவிக்கும் முகமாக "ADA" என்று உருவாக்கப்பட்ட ஒரு கணனி மொழிக்கு பெயரிடப்பட்டுள்ளது.

கணனி ஒன்றை இயக்கவும் தொழிற்பாடுகளை மேற்கொள்ளவும் பொறுப்பான ஆளணியினரை உயிர்த்தன்னி என அழைப்பர்.

ப. சுபாஜினி
2004 கலைப்பிரிவு

வள்ளுவன் வழியில் எமது கல்லூரி

"அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்து சால்பூன்றிய தூண்"

உலகம் போற்றும் உயர்ந்த படித்திறத்தின் உத்தமரான திருவள்ளுவப் பெருந்தகை எம் வையத்திற்கென அருளியது திருக்குறள் என்னும் நூலாகும். இப்பெருமை மிக்க நூலிலே சான்றாண்மையின் உயர்ந்த படித்திறத்தை மிகவும் சிறந்த முறையில் வள்ளுவப் பெருந்தகை இவ்வையகத்திற்கு வடித்து வைத்துள்ளார். இவர் அருளிய நூலிலே மக்கள் பால் அன்பு காட்டுதல், இழிவினைக் கண்டு அஞ்சுதல், உலகத்தவரோடு ஒட்டி உபகாரியாய் வாழ்தல், அனைத்து ஜீவராசிகளிடமும் மிகுந்த இரக்கம் காட்டுதல், உண்மை பேசுதல் ஆகிய தித்திக்கும் பஞ்சசிறப்பு அம்சங்களும் உலகின் உயர்ந்தோரான சான்றோரின் நல்வீட்டினைத் தாங்கி நிற்கும் தூண்கள் எனக் கூறியுள்ளார். இவ்வாறு வள்ளுவர் கூறிய நற்பண்புகள் பொன் எழுத்துக்களாற் பொறிக்கப்பட்டுப் பூஜிக்கப்பட வேண்டியவை.

இவ்வாறாகப் பூஜிக்கப்படவேண்டிய நற்பண்புகளைக் கொண்டு சிறப்பாக உயர்ந்து மிளிர்ந்து வருவதும் எமது மானிப்பாயின் மணிவிளக்காய் தேசம் எங்கும் அறிவொளி பரப்பி புத்தி ஜீவிகளை உருவாக்கி வருவதும், கலைகளின் கூடமாக விளங்கி நிற்பதும் மானிப்பாய் மகளிர் கல்லூரி ஆகும்.

இக்கல்லூரி வள்ளுவர் காட்டிய அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை ஆகிய சிறந்த குணங்களைத் தன்னகத்தே கொண்டு மிளிர்கின்றது. சிரித்த முகமும், சிறந்த சிந்தனை ஆற்றலும், சந்தர்ப்பச் சூழ்நிலைக்கேற்பச் சிறப்பாக நடந்து கொள்ளும் மனோபக்குவமும் சிறப்பு மிகு உயர்ந்த பண்புகளும் உடைய ஒருவர் எம் கல்லூரியின் பெரும் மதிப்பிற்குரிய அதிபர் ஆவர்.

எம்மைப் பண்போடும், ஒழுக்கத்தோடும் வளர்த்து வரும் ஆசான்கள் அன்பிற்கு இலக்கணமாய், அறிவிற்கு சரஸ்வதியாய் விளங்கிக் கல்லூரி வளர்ச்சியிலும், எழுச்சியிலும் தம்மை முழுமையாக அர்ப்பணிக்கும் ஆற்றல் கொண்டவர்களாக உள்ளனர். "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்னும் முதுமொழிக்கு அமைய ஒரு சிறந்த தலைமைத்துவத்தின் கீழ் சிறப்பு மிகு ஒரு சீரிய கட்டுக்கோப்புடைய நிர்வாகத்தின் கீழ் சிறந்த முறையில் சேவையாற்றி வரும் சிரோன்மணிகளே எம் இனிய ஆசான்கள்.

பாடசாலையும் அதன் வளர்ச்சியுமே தம் வாழ்க்கை என நினைக்கும் அதிபர், ஆசிரியர்கள் பாடசாலையின் முத்துக்களாய்த் திகழும் மாணவர்கள் அனைவரும் சேர்ந்து அன்பு நிறைந்த குடும்பமாக ஒரு சிறந்த சமூகமாக வாழ்ந்து வருகின்றோம். இவ்வாறான உயர்ந்த பண்பு சான்றாண்மையில் வள்ளுவர் கூறிய "அன்பு" என்னும் பண்பிற்கு அடிக்கல் எனக் கூறினால் அது மிகையாகாது.

எம் கல்லூரியின் சக மாணவர்கள் ஒழுக்கத்தின் உறைவிடமாய் ஒற்றுமையின் உயர்விளக்காய், அன்பும் அறனும் கொண்டு வாழ்பவர்கள். அடுத்து வள்ளுவன் வழியில் எம் கல்லூரியினைப் பார்க்கும்போது "நாணம்" என்னும் சொல்லிற்கு வள்ளுவர் பொருள் கூறும் பொழுதினிலே பிறர் செய்கின்ற பழிகளைத் தம்பழியென நினைத்து வெட்கித் தலைகுனிந்து பழிக்கு அஞ்சுதல் தான் என இயம்பியுள்ளார். இவ்வாறான நாணம் என்னும் சிறப்பு மிகு பண்பும் எம் கல்லூரிக்குப் பொருத்தமான சிறப்புக்களில் ஒன்றுதான். எமது கல்லூரியானது தமக்குப்புகழ்வருமாயின் தம்உயிரினைக் கொடுத்தாவது அப்புகழைத் தன்பால் ஈர்த்துக் கொள்ளும். மாறாகப் பழிவரும் என நினைத்தால் இவ்உலகமே தனதாக்கிக் கொள்ளும் சந்தர்ப்பம் கிடைத்தாலும் எத்தீய காரியத்தினையும் தம்சிந்தையில் கூட நினைக்காது. பழியினைக் கண்டு அஞ்சி நடுநடுங்கும் மனோபக்குவம் உடையதே எமது கல்லூரி என்றால் அது உண்மைக்கு மாறானது அன்று.

எமது கல்லூரியைச் சூழவுள்ள மக்கள், அருகில் அருள்பாலிக்கும் மருதடி விநாயகர், சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்மாள், கல்லூரி வளாகத்தில் இருந்து அருள் புரியும் முருகப் பெருமான் ஏனைய எம் சகோதர பாடசாலைகள், கழகங்கள், நிறுவனங்கள், அபிவிருத்திச் சங்கங்கள் முதலியவற்றுடன் ஒரு இனிய சமரச உறவினைக் கொண்டு மிளிர்கின்றது. சாதி, மத பேதம் இன்றி அனைத்து சமூகங்களையும் ஆதரிப்பதும் எமது கல்லூரியே.

கல்வியுடன் கலைகளையும், விளையாட்டினையும் கருத்தாக எமக்களித்து இனிதான முத்தமிழ் வித்தைகளையும் எமக்கு ஊட்டி வருகின்றது. "இரக்கம்" எனும் சொல்லிற்கு இலக்கணத்தை வடிவமைத்து உயிர்களிடத்தும், எளியவர்களிடத்தும் அன்பினை நல்குவதும் எமது கல்லூரியே.

எம் தமிழ் மண்ணின் புகழ் தரணியிலே வீசவேண்டும். தமிழ் மணம் பரவவேண்டும். தரணியிலே மாணவர் தரம் உயரவேண்டும். அடிமைத்தனம்

அழியவேண்டும். தித்திக்கும் கல்விதனைத் தேசமெங்கும் பெறவேண்டும். நாட்டின் நாளைய தலைவர்களாக மாணவர் சமூகம் மாறவேண்டும். ஒற்றுமைக் கொடிதனை உயரப் பறக்கவிடவேண்டும். மொழிப்பிரச்சினை ஒழியவேண்டும். சுதந்திரக் காற்றினைச் சுதந்திரமாகச் சுவாசிக்க வேண்டும். மக்கள் எல்லோரும் சுபீட்சமாக வாழவேண்டும் என்ற சீரியநோக்கோடு எம்மை வழிநடத்தி வரும் கல்லூரி, நூற்றாண்டு விழா கண்டு நித்திலத்தில் என்றும் நிலைத்து இருந்து சிறந்த மாணவசமூகத்தை உருவாக்கிச் சிறப்புறத்திகழவேண்டும். எம்கல்லூரி வாழ்கவென்று வாழத்துவோம் வணங்கிச்சென்னி தாழ்த்துவோம்.

எமது கல்லூரியின் வளர்ச்சிக்கு மாணவர்கள் ஆகிய நாம் என்றும் தோளொடு தோள் நிற்போம் என்று கூறுவதோடு எமது கல்லூரி பல் சிறப்பும் பெற்றுப் பல ஆண்டு காலம் புகழுடன் விளங்கவேண்டும் என வாழ்த்துகிறேன், வணங்குகிறேன். வாயாரப் போற்றுகின்றேன்.

க. இராஜேஸ்வரி
2004 கலைப்பிரிவு

சூழல் தொடர்பான அபிவிருத்தி

❋ நிலைத்து நிற்கும் அபிவிருத்தி என்பது தற்காலச் சூழல் தேவைகளைப் பூர்த்தி செய்யும், அதே போல எதிர்காலச் சந்ததியினரின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையிலும் எதிர்கால சந்ததியினரைப் பாதுகாக்கும் வகையிலும் மேற்கொள்ளக்கூடிய அபிவிருத்திகளே நிலைத்து நிற்கும் அபிவிருத்திச் செயற்பாடு எனப்படும்.

❋ பூமியில் இனங் காணப்பட்டுள்ள முக்கியமான ஐந்து சூழல் பிரச்சினைகளை இனங்கண்டு அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் "நிலைத்து நிற்கும் அபிவிருத்தி" ஆகும்.

I. புவிவெப்பமடைதல்
II. ஓசோன் படையில் துவாரம் ஏற்படல்
III. நச்சுக்கழிவு சூழலில் கலப்பதைத் தவிர்த்தல்
IV. உயிரினங்களின் பல்லினத் தன்மை அழிதல்
V. நில வளமும் நீர்வளமும் அழிதல் போன்றனவாகும்.

❋ இந்நிலையான அபிவிருத்திக் கொள்கையானது நவீன காலத்திற்கு உகந்ததாக உள்ளது.

- 1980 இல் இக்கொள்கையானது உருப்பெற்றது
- 1987 இல் புறூண்லென்ட் ஆணைக்குழுவின் அறிக்கை மூலம் இக்கொள்கையானது உலகில் முக்கியம் பெற்றது.
- 1992 இல் இலங்கையில் மிகிந்தலை மாநாட்டில் இக்கொள்கையானது ஏற்கப்பட்டு அறியப்பட்டது.

நிலைத்து நிற்கும் அபிவிருத்தியின் அவசியங்கள்

❋ அதிகரித்து வரும் குடித்தொகையானது எதிர்காலத்தில் எதிர்கொள்ளப்போகின்ற உணவு, உடை, சக்தி முதலியவற்றில் உள்ள நெருக்கடிகளைக் குறைக்க இவ்எண்ணக் கருவானது சிறந்த உபாயமாக உள்ளது.

- எல்லா நாடுகளிலும் வளங்கள் சமமாக பரந்து காணப்படாததுடன், இவ்வளங்கள் மூலம் உச்சப்பயன்பாட்டினை பெறும் நோக்கம் குறைவாக உள்ளது. இதனால் பெருமளவு வளம் விரயமாக்கப்படுகின்றது. நிலைத்து நிற்க கூடிய அபிவிருத்தி எண்ணக்கரு வலுப்பெறும்போது இவ்வளங்களின் விநியோகங்களை சிறப்புறச்செய்யவும், விரயங்களைத்தவிர்க்கவும் இக்கொள்கை காரணமாக உள்ளது.
- காடுகள், கால்நடைகள், நிலம், நீர் போன்றவற்றின் மீதான மனிதனின் தவறான நடவடிக்கைகளினால் அவ்வளங்கள் அழிக்கப்படுகின்றது. நிலைத்து நிற்கும் அபிவிருத்திக் கொள்கை வலுப்பெறும்போது இப்பிரச்சினைகள் தீர்க்கப்பட முடிகின்றது.
- புவிவெப்பமடைதல், ஓசோன்படை அருகிச்செல்லுதல், கடல்மட்ட உயர் துருவப்பனி போன்றவற்றைத் தவிர்க்க நிலைத்து நிற்கும் அபிவிருத்திக் கொள்கைகள் அவசியமாக உள்ளது.
- தற்போதைய நாடுகளின் அபிவிருத்தி நடவடிக்கைகள் பொருத்தமானதாகக் காணப்படவில்லை. இதனால் எதிர்காலத்திற்கு ஏற்ற வகையில் அபிவிருத்திக் கொள்கைகள் அவசியமாக இருப்பதால் இக்கொள்கை அவசியமாக உள்ளது.

நிலைத்து நிற்கும் அபிவிருத்திக் கொள்கைகளை விருத்தியடைந்து வரும் நாடுகள் கடைப்பிடிக்கும் போது எதிர்கொள்ளும் பிரச்சினைகள்

- விருத்தி அடைந்து வரும் துரித பொருளாதார அபிவிருத்தி வேண்டப்படுகின்றது. இதனால் அதிக வளங்களைப் பயன்படுத்தவேண்டிய தேவை உள்ளது. இதனால் இக்கொள்கைகளை பின்பற்றுவதில் பிரச்சினைகள் எதிர்கொள்ளப்படவுள்ளது.
- விருத்தியடைந்து வரும் நாடுகளில் குறைந்தளவிலான கல்வி அறிவு வீதம் காணப்படுவதால் அபிவிருத்தி நடவடிக்கைகளின்போது சூழல்பாதுகாப்பு குறைவான அறிவே காணப்படுகின்றது. இதனால் நிலைத்து நிற்கும் அபிவிருத்தி அடிப்படையில் செயற்பட முடியாதுள்ளது.

- அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் குடித்தொகையானது விரைவாக அதிகரித்து வருகின்றது. இதனால் அதிகநிலம், வளங்கள் போன்றன அவசியமாகின்றது. இந்நிலை காணப்படுவதால் நிலையான அபிவிருத்திக் கொள்கைளினை கடைப்பிடிக்க முடியாதுள்ளது.
- இக்கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு போதிய மூலதனம், தொழில்நுட்பம் போன்றன காணப்படாமை

விருத்தியடைந்து வரும் நாடுகள் நிலையான அபிவிருத்திக் கொள்கைகளைப் பின்பற்றுவதில் தடங்கல்களை எதிர்கொள்வதால் உண்டாகும் முக்கியமான சூழல் பிரச்சினைகள்

- இயற்கை காடுகள் அழிவு
- உயிரியல் பல்வகைத் தன்மை தரம் இழத்தல்
- நீர் மாசடைதல்
- கரையோர வளங்களின் அழிவு
- நிலம் வளம் இழத்தல்
- மணல் அகழ்வு காரணமாக கரையோரப் பிரதேசங்களில் ஆறுகள் பாதிப்படைதல்
- ஒழுங்கமைக்கப்படாத நகரமையங்களில் காணப்படும் கழிவுபொருட்களை அகற்றுதல் சம்பந்தமான பிரச்சினைகள்

நிலையான அபிவிருத்தியின் போது கவனத்தில் கொள்ளவேண்டிய நடவடிக்கைகள்

- வறுமையினையும் அதன் பாதகமான விளைவுகளையும் நீக்குவதற்கு ஏற்ப அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்தல்
- அபிவிருத்திச் செயற்பாடுகளின் போது சூழல் பாதிப்படையாது தாக்குப் பிடிக்கக் கூடிய நடவடிக்கைகளை கவனத்தில் கொள்ளுதல்
- விருத்தி அடைந்து வரும் நாடுகள் தமது அபிவிருத்தி நடவடிக்கைகளின் போது அடைந்த நாடுகளின் மாதிரிகளைப் பின்பற்றுகின்றன. இவ்வாறு மேற்கொள்ளாது புதிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
- ஏற்கனவே சூழல் மாசடைதலைக் கருத்திற்கொள்ளாது உருவாக்கப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளை ரத்துச்செய்வது, சில நடவடிக்கைகளைப் புதுப்பித்தல்
- எதிர்காலத் தேவைகளைப் பாதிக்காதவாறு நிகழ்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்தல்.

அ. சங்கீதா
2004 கலைப்பிரிவு

ஈழத்து இலக்கிய வரலாற்றில் யாழ்ப்பாண வேந்தர் காலம் பற்றிய ஓர் நோக்கு

ஆரியர் சக்கரவர்த்திகள் யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்ட காலம் யாழ்ப்பாண மன்னர் காலம் எனப்படுகிறது. கி.பி.1216 – 1621 வரையிலான காலமாகும். இக்காலப்பரப்பிலே ஆண்ட மன்னர்கள் தமிழ் பற்று மிக்கவர்களாக விளங்கினர். தமிழ் புலவர்களை ஆதரித்து வந்தனர். அரசர்களின் உறவினரான அரசகேசரி என்னும் புலவர் அரச சபைக் கவிஞராக இருந்து பணிபுரிந்தார். தமிழ்மொழியை வளர்த்தற் பொருட்டு இக்காலத்தில் நிறுவன ரீதியாக சங்கம் இருந்ததாகவும் அறியப்படுகிறது. ஈழத்திலக்கிய வரலாற்றிலே இக்காலமே துலக்கமான காலமாக விளங்குகிறது. இக்காலப்பகுதியில் இடம்பெற்ற இலக்கிய முயற்சிகளை வகுத்து நோக்கலாம்.

1. வரலாறு சார்ந்த இலக்கியங்கள்
2. அறிவியல் சார்ந்த இலக்கியங்கள் (சோதிடம், வைத்தியம்)
3. சமயம் சார்ந்த இலக்கியங்கள்
4. பொதுமக்கள் சார்ந்த இலக்கியங்கள்
5. காப்பிய இலக்கியங்கள்

யாழ்ப்பாண வரலாற்று மூலாதாரங்களாகக்கருதப்படும் வையாபுரி ஐயரின் வையாபாடல், முத்துக்கவிராசரின் கைலாயமாலை, கவிராசரின் கோணேசர் கல்வெட்டு என்பன குறிப்பிடத்தக்கன. இராச முறை, பரராசசேகரன் உலா ஆகியனவும் வரலாறு சார்ந்த இலக்கியங்களாகும். அவை எமக்கு கிடைக்கவில்லை.

இலங்கையை ஆண்ட மன்னர்களைப்பற்றியும், இலங்கைக்குப் பிறதேசங்களிலிருந்து குடிகள் வந்தேறிய முறைபற்றியும் பல்வேறு தகவல்களை தாங்கி நிற்கும் நூலாக வையாபாடல் விளங்குகிறது. இந்நூலின் கண் 104

விருத்தப்பாக்கள் இடம்பெற்றுள்ளன. யாழ்ப்பாணத்தில் பிரபலம் பெற்றுள்ள கைலாய நாதர் கோவிலை சிங்கையாரியன் என்ற தமிழ் மன்னன் கட்டி கும்பாபிஷேகம் செய்த வரலாற்றையும், யாழ்ப்பாணத்து அரசர்களின் வரலாற்றையும் தாங்கி நிற்கும் நூலாக கைலாயமாலை காணப்படுகிறது. இந்நூலின் கண் 310 கண்ணிகளைக்கொண்ட கலிவெண்பாக்கள் காணப்படுகிறது. திருகோணமலை மாவட்டத்தில் திருகோணமலைப் பகுதியில் வீற்றிருக்கும் கோணேசர் ஆலயவரலாற்றையும், குளக்கோட்டு மன்னரின் திருப்பணிகளையும் அம்மாவட்ட தமிழ் மக்களின் வாழ்வியல்களையும் சித்தரிக்கும் நூலாககோணேசர் கல்வெட்டு விளங்குகிறது. ஈழத்தில் தமிழில் தோன்றிய வரலாற்றுசார்புடைய நூல்களில் கோணேசர் கல்வெட்டு தனிச்சிறப்பிற்குரியது. ஆட்சியாளர்களின் பெயரால் அரசியல் ஒருமைப்பாடு காணும் பண்புகொண்ட நூலாக பரராஜ சேகரன் உலா அமைகின்றது.

குருநாகல் மாவட்டத்திலுள்ள தம்பதெனியாவில் 4ம் பராக்கிரமபாகு மன்னன் ஆட்சிக் காலத்தில் அவைக்களப்புலவராக விளங்கியவர், தேனுவரைப் பெருமாள். இப்பண்டிதரால் பாடப்பட்டது. சரசோதிமாலை என்னும் சோதிட நூலாகும். ஈழத்தில் எழுந்த முதல் தமிழ் சோதிட நூலாகும். 12 பாடல்களையும் 934 விருத்தப்பாக்களையும் கொண்டது. அடுத்து "சோமசன்மா" என்பவரால் பாடப்பட்ட சோதிட நூலே செகராசசேகரமாலையாகும்.

அடுத்து அறிவியல் சார்ந்த நூல்களாக வைத்திய நூல்கள் காணப்படுகின்றன. ஈழத்தில் முதலில் தோன்றிய வைத்தியநூல் செகராசசேகரமாகும். ஆயுள்வேத வைத்திய முறையை தழுவி எழுதப்பட்டது. அந்தாதித் தொடையினாலும் விருத்தப்பாவினாலும், வெண்பாவினாலும் ஆக்கப்பட்டது. ஈழத்து வைத்திய நூல் பரராச சேகரம். அடுத்து ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்தில் தோன்றிய பொதுமக்கள் சார்பு இலக்கியங்களில் கதிரமலைப்பள்ளும், கண்ணகி வழக்குரையும் விதந்து கூறத்தக்கன. ஈழத்தில் எழுந்த பள்ளுப்பிரபந்தங்களுள் காலத்தால் முந்தியது கதிரைமலைப்பள்ளு 130 செய்யுட்களைக்கொண்டது. விருத்தப்பாவும் சந்தப்பாவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. பள்ளுபிரபந்த இலக்கண மரபிற்கேற்ப அமைந்துள்ளது. கதிர்காமத்தில் எழுந்தருளியிருக்கும் முருகப்பெருமானை பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பள்ளன், மூத்தபள்ளி, இளைய பள்ளி, பண்ணைக்காரன் ஆகிய 4 சாதாரண பொதுமக்களை பாத்திரங்களாகக் கொண்டுள்ளது. இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரத்திலே பொதுமக்களுக்கேற்ற வகையில் நீக்க வேண்டியவற்றை நீக்கியும், சேர்க்க வேண்டியவற்றை சேர்த்தும் இந்நூல் ஆக்கப்பட்டது. இந்நூல் வழக்குரைகாதை என்று கிழக்கு மாகாணத்திலும், கோவலனார் கதை என்று யாழ்ப்பாணத்திலும் முல்லைத்தீவுப் பகுதியில் சிலம்புகூறல் எனப்படுகிறது. 2219 செய்யுட்களை கொண்ட இந்நூலை இயற்றியவர் சகவீரர் என்று கருதப்படுகிறது.

ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் எழுந்த காப்பிய இலக்கியம் அரசகேசரியால் ஆக்கப்பட்ட இரகுவம்சம் ஆகும். வடமொழியில் மகாகவி காளிதாசனால் ஆக்கப்பட்ட இரகுவம்சத்தின் மொழி பெயர்ப்பாக இந்நூல் பொதுக்காண்டம், சிறப்புக்காண்டம், பொது சிறப்புக்காண்டம் என 3 பிரிவுகளையும் 26 படலங்களையும் 2444 விருத்தப்பாக்களையும் கொண்டது. திலீபமகாராச காமதேனுவை வழிபட்டு இரகு என்பவனைப் புத்திரனாகப் பெற்ற கதையும், இரகுவின் கதையும் அவன் மகன் அயன் கதையும், அவன் மகன் இராமனது கதையும் அவன் மகன் குசன் கதையும் கூறுகின்றது. இக்காப்பியத்தின் செய்யுள் நடை எளிதில் பொருள் அறிந்து கொள்ளமுடியாத நடையாக அமைந்துள்ளது.

அடுத்து ஆரியச் சக்கரவர்த்திகள் கால இலக்கிய பண்புகளினை எடுத்து நோக்குகின்றபொழுது யாழ்ப்பாணத்தை ஆண்ட மன்னர்கள் தமிழ் பற்று மிக்கவர்களாக விளங்கியமையால் தமிழ்ப் புலமையாளர்களையும் தமிழையும் நன்க ஆதரித்தனர். தமிழருடைய சமயமாகிய சைவ சமயம் வளர்ந்தோங்க வாய்ப்பிருந்தது. தமிழ் மன்னர் ஆட்சியில் அவரது ஆளுமைக்கு உட்பட்ட மக்களின் வாழ்வியலும் உயிர்த்துடிப்புடையதாக விளங்கிற்றென்று அறியக்கிடக்கிறது. அக்காலத்தில் எழுந்த பன்முகப்பாடான இலக்கியங்களை ஆதாரமாகக் கொண்டு அவற்றின் பண்புகளை நோக்கலாம்.

வடமொழிச்செல்வாக்கு அரசர் புகழ்பாடும் பண்பு, செந்தமிழ், செறிவுடமை விருத்தப்பா செல்வாக்கும் பெற்றமை, பிரதேச உணர்வு வெளிப்படுதல், வரலாறு பேணும் முறை, மதக்கருத்துக்களை பதப்புரை செய்தல், பொதுமக்கள் சார்பான இலக்கியங்கள் தோற்றம், காவிய இலக்கணமரபு பேணப்படல், எளிதில் பொருளுணர்ந்து கொள்ளமுடியாத மொழிநடை முதலாய பண்புகள் விதந்து குறிப்பிடத்தக்கன. தமிழுக்கு வடமொழி செவிலித்தாய் உறவுடையது. இவ்வுறவு நீண்டகாலமாக நெருக்கமாக நிலவிவந்துள்ளது. காலந்தோறும் தமிழ் இலக்கியங்களில் வடமொழிச் செல்வாக்கு மிக்கே வந்துள்ளது. ஆரியச் சக்கரவர்த்திகள் கால இலக்கியங்கள் பல வடமொழி நூல்களின் மொழிபெயர்ப்புக்களாகவோ அன்றித் தழுவலாகவோ காணப்படுகிறது. வடமொழியில் எழுதப்பட்ட சோதிட நூல்களை பெரிதும் தழுவியே சரசோதிமாலை செகராச சேகரமாலை ஆகிய சோதிட நூல்கள் தோற்றம் பெற்றன.

"முந்நூல் உணர்ந்த முனிவோர்கள், முதலோர் மொழிந்த
சோதிடமாம், பன்னூல் விளங்கும் பொருளதனை
தமிழ்நூல் இதனை விளம்பலுற்றேன்" என்று சரசோதிமாலைச் செய்யுளும்

"வனைந்து மாமுனிவோர் சொன்ன வடகடலை
சோதிடத்தை, புனைந்து தென் கலையால்....."

என்பவரும் செகராச சேகரச்செய்யுளும் சிறந்த சான்றாகும். வடமொழியில் எழுந்த ஆயுள் வேத வைத்திய நூல்களை மொழிபெயர்த்து செகராச சேகரம், பரராச சேகரமாகிய வைத்திய நூல் தோன்றின.

"பிணிதந்கு வகையும் நோயின் பெயருடன் குணமுங் காட்டி
அணிதங்கு மருந்துங்காட்டு.....வேதங்கடந்த மாமுனிவன் செய்தான்"

என்று செகராச சேகரம் செய்யுள் குறிப்பிடுகின்றது. தன்வந்திரி என்பவரால் வடமொழியில் எழுதப்பட்ட ஆயுள்வேத நூலைத் தழுவியே பரராச சேகர வைத்திய நூலில் வரும் பாயிரச் செய்யுள் சான்றாகும்.

வரலாற்றுச் சார்பு பேணப்பட்டமை ஆரியச் சக்கரவர்த்திகள் கால இலக்கியங்களில் சிறப்பம்சமாக விளங்குகிறது. வையாபாடல் கைலாயமாலை ஆகிய குறிப்பிடத்தக்கவை. இலங்கை மாநகர் அரசு இயற்றிடு அரசன் தன்குலங்கள் ஆனதும் குடிகள் வந்திடு முறைதானும்" என வையாபாடலிலும் தேர் இலங்கு குளக்கோட்டன் என்றும் இரான் நாற்கால் மண்டபத்தில் இருந்தே எண்ணினான் என்று குளக்கோட்ட மன்னனின் திருப்பணியையும், மற்றும் கஜபாகு மன்னனின் பணியையும் கோணேசர் கல்வெட்டிலும் காணக் கிடக்கிறது. நல்லூரில் சிங்கை ஆரியனின் கைலாசநாதர் கோவிலை கட்டிய வரலாற்றை கைலாய மாலையிலும் கண்டுதெளியலாம். திருக்கரசை புராணம் முதலியவற்றிலும் வரலாற்று சார்பு காணப்பட்டது. அரசர்களையும் அவதார புருஷர்களையும் வள்ளல்களையும் வணிகப்

பெருமக்களையும் கடவுளரையும், கடவுள் தம் மெய்யடியார்களையும் பாராட்டிச்சென்ற தமிழ் இலக்கிய பாரம்பரியத்தில் சாதாரண பொது மக்களுக்கும் முதன்மை கொடுக்கும் பண்பு தமிழ் நாட்டில் நாயக்கர் கால பிற்பகுதி இலக்கியங்களிலே தோற்றம் பெறலாயிற்று. அப்பண்பு ஈழநாட்டிலே யாழ்ப்பாண மன்னர் காலத்திலே தோன்றிய கதிரைமலைப்பள்ளிலும் கோவலனார் கதையிலும் வெளிப்படுகின்றன. கதிரைமலைப்பள்ளில் பள்ளன், மூத்த பள்ளி, இளைய பள்ளி, பண்ணைக்காரன் போன்ற சாதாரண பொதுமக்களே சித்திரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். நாயக்கர் கால இலக்கியப் பண்புகளான சேர்க்கை அலங்காரம், கற்பனை, வரட்சி, வித்துவ செருக்கு முதலான பிற பண்புகளும் யாழ்ப்பாண மன்னர் கால இலக்கியங்களில் இளையோடிக் காணப்படுகின்றன.

உசாத்துணை நூல்கள்

1. ஈழத்து இலக்கிய வளர்ச்சி
   (கலாநிதி துரை மனோகரன்)
2. ஈழத்து இலக்கிய செல்நெறி
   (கலாநிதி சிவலிங்கராசா)

யோ.ஜனார்த்தினி
2004 கலைப்பிரிவு

நன்றியுடன் சில நிமிடங்கள் உங்களுடன் "கல்லூரி அன்னைக்கு அடியேனின் பிறந்தநாள் பரிசு"

கல்லூரி அன்னையிடம் விடைபெறும் வேளை
கல்லூரி மாணவியாய் இவ்வரங்கில் நான் செய்யும்
இறுதிக் கவியாரம்.
கண்ணில் நீருடன் கையில் கவியுடன்
கல்லூரி அண்னையே உன்னிடம் ஆசிவேண்டி
சமர்ப்பிக்கின்றேன் இதனை
எக்குற்றம் இருந்தாலும் தயைகூர்ந்து பொறுத்தருள்க

எம் உளம் வளர
ஞானம் வளர
சிறப்பான வாழ்வு மலர
தமை அர்ப்பணிக்கும்
தியாக தீபங்களாம்
ஆசான்களை உன்மீது சுமந்திருக்கும்
கல்லூரி அன்னையே
உன் பிறந்தநாளில் நான்வழங்கும்
நன்றிக்கவியாரம்.

பசுமை நிறைந்த கனவுகளாய்
ஒடி மறைந்த எம் கல்லூரி நாட்கள்
எண்ணித்தவித்து ஏங்கி நாம்
உன்னை விட்டுப் பிரிகின்றோம்
துள்ளித் திரிந்த பள்ளி வளாகம்

Dance Group



Music Group

Commerce Union - 2003

Home Science Union - 2003

அள்ளி அணைத்த ஆசான் கரங்கள்
சொல்லித்தந்த அறிவுரை
இவையெல்லாம் எம் நெஞ்சை விட்டகலா
இனிய நினைவுகள்

புரட்டப்படும் நாட்காட்டி
இனிவரும் 80 நாட்களில்
அன்னையே உன்னிலிருந்து
எம்மைப் பிரித்துவிடும்
விளக்க முடியா வேதனையால்
விடிமழை பொழிகின்றது
இது கவிதையல்ல
எம் துடிக்கும் இதயத்தின்
பிரிவாற்றாமையின் ஒலம்

தான் நினைந்தூட்டும் எம்தாயாம்
இக் கல்லூரியின் அன்னை
தேனினும் இனியவரே எம் அன்பான அதிபர்
எமை அன்புடன் வளர்த்தெடுத்த
அம்மா உம்பாதம் பணிகின்றோம்
நன்றியுடன் நல்லாசி வேண்டுகிறோம்

அர்த்தமற்று நடந்த எம் கால்களின்
நடந்தபாதை நடக்கும் பாதை
இதனை நின்று நிதானித்து சிந்தித்து
செயற்பட துணைசெய்தது அன்னையே
உன் மனதினில் தான்
மண்டியிட்டு நன்றி பகர்கின்றோம்

ஒற்றைக் கம்பத்தில் நீலத்துள் சிவப்பு விளக்காய்
கம்பிரத்துடன் அசைந்தாடும் எம் கல்லூரிக்கொடி
அன்னையே உன் நினைவைத்தாங்கி
எம் மனதின் இனிய நிழலாய் என்றும் அசைந்தாடும்

அறியாப் பருவமதில் ஆயிரம் தவறுசெய்தோம்
என்தனை குறும்புகள் எத்தனை பிழைகள் எத்தனை தவறுகள்
அத்தனையும் திருத்தி இன்றுவரை எமை நன்றே வளர்த்துவிட்ட
ஆசான்களே எம் ஆசிவேண்டி இறஞ்சுகின்றோம்
உம்மை நன்றி பகர்ந்து விடைபெறுகின்றோம்

அரை சோட்சும் பெனியனுமாய்
1500 ஒடிய மைதானம்
நான் முந்தி நீமுந்தி என்று அடிப்பட்ட
இல்லங்கள் கண்டோம்

கல்லூரியில் சந்தை கண்டோம்
வகுப்பறையில் சமையலறை கண்டோம்
கதிரை மேசை விறகாய்க்கண்டோம்

அன்னியன் போல் அன்றொருநாள் அயல் வீட்டில்
கருத்துடனே கல்விகற்றோம்
மதிப்பெண்கள் குறைந்தால் குட்டிய
ஆசிரியக் கரங்களின் சுகமான வேதனைகள்
எம் தலையில்பட்டு முறிந்து போகும்
வெண்கட்டிகளின் பரிதாப நிலைகள்
எம் நெஞ்சை விட்டகலா இனிய நினைவுகள்
என்றோ ஓர் நாள் எங்கோ ஓர் மூலையிலும்
எமை தாலாட்டும் பசுமையான நினைவுகள்

மானியின் திலகமாய் வீற்றிருக்கும் மானி மகளிர் கல்லூரியே
மாண்புடன் வீற்றிருக்கும் அதிபராம் எம் அன்னையே
நேசமுடன் கல்வி தந்த கண்ணான எம் குருவே
பசுமை நிறைந்த நினைவுகளுடன்
பழகி மகிழ்ந்த தோழிகளே சிறிய எம் தம்பிகளே தங்கைகளே
உமை நன்றியுடன் நோக்கி விடை பெறுகின்றோம்

சகோதர சகோதரிகளே
உங்கள் கைகளில் எமது கல்லூரியை
கண்ணீருடன் விட்டுச் செல்கின்றோம்
ஞாலமதில் கல்லூரி புகழ் என்றும் நிலைக்க
ஒளியேற்றும் தங்கைகளே
கல்வியை கைவிடாதீர்கள்
கல்லூரி அன்னையையும் மறவாதீர்கள்
அன்னையே

நாம் பிரிந்து போனாலும் என்றோ ஓர் நாள்
மீண்டும் வருவோம் உன் கீழ் சேவை செய்வதற்காய் அன்னையே
வளர்த்த பாலகர்கள் இன்று உனை விட்டுப்
பிரிந்து செல்கின்றோம் சென்று வருகின்றோம் அம்மா
விடைபெறுகின்றோம்

நன்றி

கு.ரசிகலா

2003 கலைப்பிரிவு

LEADERSHIP AT SCHOOL

At school principal, teachers and leaders of students called as prefects maintain dicipline. School leaders are selected from the academic, non academic field, their personality and the helping attitude found among the students. Including the head prefect, Athletic prefect the College leaders comprises of twenty five members at our school. They contribute their full support to maintain order and discipline for the smooth running of the school.

A real leader faces the music even when he/she does not like the tune. The very essence of leadership is that you have to have a vision. So a leader should remember the following facts.

1. Success of perserverance
2. The improvement of talent
3. The influence of example
4. The dignity of simplicity
5. The visdom of economy
6. The pleasure of working
7. The power of Kindness
8. The worth of character
9. The obligation of duty
10. The virtue of patience
11. The joy of originating
12. The value of time

If a leader follow the above facts she will achieve the goal of her duty.

The characteristic of a leadership are enabling, facilitating, consulting, collaborating, monitoring support and vision.

A leader has to deal with many complex situations and they carry out their duties with tack and efficiency. So a leader is one who knows where he wants to go and gets up and goes.

G. Tharsika
2005 Arts

கர்நாடக - ஹிந்துஸ்தானி சங்கீதங்களுக்கிடையிலான ஒற்றுமை – வேற்றுமை

இவ்விரு இசைக்குமான அடிப்படைத் தத்துவம் ஒன்றேயானாலும் பாடும் முறைகளில் அநேக வித்தியாசங்கள் உண்டு. 7 ஸ்வரங்கள், 12 ஸ்வரஸ்தானங்கள், இராகம், தாளம், 22 சுருதிகள், வாதி ஸம்வாதி, விவாதி, அநுவாதி என்பன யாவும் இவ்விரு இசைக்கும் பொதுவான அமிசங்களாகும்.

கர்நாடக சங்கீதத்தில் 72 மேளகர்த்தாக்கள் (தாய் இராகங்கள்) இருப்பது போன்றே ஹிந்துஸ்தானி சங்கீதத்தில் 10 தாட்கள் உண்டு. கர்நாடக சங்கீதத்தில் முதன் முதலாக ஆரம்ப அப்பியாச வரிசைகள் மாயாமாளவகௌளை இராகத்திலேயே கற்பிக்கப்படுகின்றன. ஆனால் ஹிந்துஸ்தானி சங்கீதத்தில் முதலாவதாக கற்பிக்கப்படும் இராம் பிலாவல் அதாவது சங்கராபரணமாகும். ஹிந்துஸ்தானி சங்கீதத்தில் ஒவ்வொரு இராகத்திலும் பலடாஸ் என அழைக்கப்படும் ஸ்வர அப்பியாச வரிசைகள் கற்பிக்கப்படுகின்றன.

கர்நாடக சங்கீதத்தில் உள்ளவாறு ஏராளமான உருப்படி வகைகளோ தாள வகைகளோ இராகங்களோ ஹிந்துஸ்தானி சங்கீதத்தில் கிடையாது. கான காலத்திற்கேற்ப இராகங்களைப் பாடும் முறை ஹிந்துஸ்தானி சங்கீதத்திலும் இன்னும் கடைப்பிடிக்கப் படுகின்றது. ஆனாலும் கர்நாடக இசையிலோ இம்முறை அருகி வருகிறது. கர்நாடக இசையில் கமகங்கள், பிருகாக்கள் என்பன மிக முக்கியமான

அம்சங்களாகும். கமகம் என்னும் அம்சம் ஹிந்துஸ்தானி சங்கீதத்தில் காணப்படுகின்ற போதும் அவை லேசான ஏற்றஜாரு, இறக்கஜாரு வகையிலான கமகங்களாகும்.

இராகம் பாடும் முறையில் இரு இசைக்கும் வேறுபாடு காணப்படுகின்றது. ஹிந்துஸ்தானி சங்கீதத்தில் ஆலாபனை விஸ்தாரமாக நீண்ட நேரம் பாடப்படுகிறது. பிருகாக்கள் துரித கால கமகங்கள் என்பன ஹிந்துஸ்தானி இராக அலாபனை முறையில் இல்லை. நீண்ட நேரம் மந்தரஸ்தாயியில் ஸஞ்சாரம் செய்த பின்னரே படிப்படியாக மத்தியஸ்தாயி, மேல்ஸ்தாயியில் சஞ்சாரம் செய்வர்.

சாதாரணமாக ஹிந்துஸ்தானி கச்சேரியில் 2, 3 இராகங்களே பாடப்படுகின்றன. (2,3 உருப்படி வகைகள்) ஆனால் கர்நாடக சங்கீதத்தில் 2 ½ - 3 மணி கச்சேரியில் 10-13 உருப்படி வகைகள் பாடப்படுகின்றன. ஆரம்பத்தில் வர்ணம், பஞ்சரத்தின கீர்த்தனை துரிதகால கீர்த்தனைகள் என்பன கச்சேரிகளை கட்டுவதற்கான பாடப்படுகின்றன. ஹிந்துஸ்தானி கச்சேரி பெரும்பாலும் ஆலாபனையுடனேயே ஆரம்பமாகின்றது. கர்நாடக சங்கீத கச்சேரியில் ஓர் இராகத்தில் ஓர் உருப்படி வகையே பாடப்படுதல் வழக்கமாகும். ஆனால் ஹிந்துஸ்தானி சங்கீதத்தில் ஒரே இராகத்திலேயே விளம்பலய உருப்படி, துரிதலய உருப்படி என்பன பாடப்படுகின்றன.

கர்நாடக சங்கீத வாய்ப்பாட்டு கச்சேரியில் பக்க வாத்தியமாக வயலினும் தாள வாத்தியங்களாக மிருதங்கம், கடம் மோர்சிங், கஞ்சிரா போன்ற வாத்தியங்களும் வாசிக்கப்படுகின்றன. பிரதானமான இராகம், கிருதி பல்லவி என்பன பாடப்பட்ட பின் தனி ஆவர்த்தனம் முக்கிய இடம் வகிக்கின்றது. ஆனால் ஹிந்துஸ்தானி சங்கீதத்தில் சுருதிக்காக தம்பூராவும் தானத்திற்காகத் தபேலாவும் மாத்திரமே வாசிக்கப்படுகின்றன. தனி ஆவர்த்தனத்திற்கு ஹிந்துஸ்தானி சங்கீத கச்சேரியில் இடமில்லை. கர்நாடக சங்கீதத்தின் செல்வாக்கினால் தற்போது ஹிந்துஸ்தானி இசை கச்சேரிகளிலும் பக்க வாத்தியமாக வயலின் வாசிக்கப்படுகிறது.

கர்நாடக சங்கீதத்தில் கையினால் தாளம் இடுவது போன்று ஹிந்துஸ்தானி சங்கீதத்தில் கையினால் தாளம் போடுவதிலலை. தபேலாவில் வாசிக்கப்படும் டேக்கா (ஜதிகளை) ஒட்டியே பிரதானமாகப் பாடுபவர் அல்லது பக்கவாத்தியம் வாசிப்பவர் பாட வேண்டும் அல்லது வாசிக்கவேண்டும். ஆகையினால் ஹிந்துஸ்தானி இசையில் தபேலா வாசிப்பு முறையை பாடகர், வாத்திய இசை விற்பன்னர் யாவரும் அறிந்திருத்தல் அவசியம்.

ஹிந்துஸ்தானி இசையில் கற்பனாஸ்வரம் பாடும் முறை மிகக் குறைவாகும். கீர்த்தனை, கிருதியில் உள்ள பல்லவி, அனுபல்லவி போன்ற அங்க வேறுபாடுகளை ஹிந்துஸ்தானி சங்கீதத்தில் ஸ்தாயி, அந்தரா எனக் கூறுவர் (ஸ்தாயி – பல்லவி, அந்தரா – அனுபல்லவி)

கஸல் என்னும் ஹிந்துஸ்தானி உருப்படி வகை கர்நாடக சங்கீதத்தில் ஜாவளிக்கு ஒப்பானது. தும்ரி என்பது பதத்திற்கும் தரானா என்பது தில்லானாக்கும் ஒப்பானது.

ஹிந்துஸ்தானி சங்கீதத்தில் பலவித கரானக்கள் அதாவது குருகுல முறைகள் உண்டு. ஒவ்வொரு கரானாவும் ஒவ்வொரு பாணியைப் பின்பற்றுவதாக அமைகின்றது.

உ-ம் :- கவாலியர். ஆக்ரா, ராம்பூர், பெனாரஸ்

தென்னிந்தியாவிலும் கேரளாபாணி, ஆந்திராபாணி என்றிருந்தாலும் ஹிந்துஸ்தானி சங்கீத கரானாக்களைப் போன்று அதிக வேறுபாடு இல்லை. ஒரே உருப்படி வகைகளே தென்னிந்தியா எங்கும் பாடப்படுகின்றது.

மந்திரஸ்தாயி, மத்தியஸ்தாயி, தாரஸ்தாயி என்னும் மூன்று ஸ்தாயிகளும் ஹிந்துஸ்தானி சங்கீதத்தில் மந்தர ஸப்தக, மத்ய ஸப்தக தாரஸப்தக என அழைக்கப்படுகின்றன.

தாய் இராகங்களை ஹிந்துஸ்தானி சங்கீதத்தில் "தாட்" என்று அழைப்பர். "தாட்" க்குரிய அம்சங்கள்

1. ஏழு ஸ்வரங்களையும் கொண்டிருத்தல்
2. ஸ்வரங்கள் கிரமகதியில் செல்லுதல்
3. ஒரே ஸ்வரத்தின் கோமள, தீவிர பேதம் இரண்டும் அடுத்தடுத்து தாட்டில் வரலாம்.
4. "தாட்" ஆரோகணத்தை மட்டும் கொண்டதாகும்.
   உ-ம் ஸ,ரி,க,ம,ப,த,நி,ஸ காவி (கரகரப்பரியா) தாட்டைக் குறிக்கும்.
5. தாட் ரஞ்சகத்தை அளிக்கவேண்டிய அவசியமில்லை
6. ஒவ்வொரு தாட்டும் அவ்தாட்டிலிருந்து பிறக்கும் ராகத்தின் பெயரைக்கொண்டிருக்கும். உ-ம் காபிதாட் அதிலிருந்து பிறந்த பிரபல்யமான ராகமான காபியின் பெயரைக் கொண்டு அழைக்கப்படுகின்றது.

ஹிந்துஸ்தானி சங்கீதத்தில் இவ்வாறான 10 தாட்கள் உண்டு. இவ்தாட்களிலிருந்தே இராகங்கள் பிறக்கின்றன.

கர்நாடக சங்கீதத்தின் உள்ளது போன்றே இராகங்கள் ஔடவ, வுாடவ சம்பூர்ண என்று இராகங்களில் உள்ள ஸ்வரங்களின் எண்ணிக்கையைப் பொறுத்து பிரிக்கப்படுகின்றன.
ஔடவ இராகம் (உ-ம்) பூபாலி, ஹிந்தோளம்
வுாடவ இராகம் (உ-ம்) மார்வா, பூர்யா
ஸம்பூர்ண இராகம் (உ-ம்) யமன், பிலாவல்

கர்நாடக சங்கீதம் போன்றே ஹிந்துஸ்தானி சங்கீதத்திலும் பாடகர் தம் குரலுக்கு உகந்த சுருதியை தேர்ந்தெடுப்பதற்கு சுகந்திரம் உண்டு (ஆனால் மேலைத்தேய சங்கீதத்தில் அவ்வாறில்லை. எந்த சுருதியில் பாட்டு இயற்றப்பட்டுள்ளதோ அவ்சுருதியிலேயே பாடவேண்டும். கர்நாடக சங்கீதத்தில் தம்புராவை சுருதி கூட்டும் போது பஸஸஸ என்று சுருதி கூட்டப்படுகிறது. ஹிந்துஸ்தானி சங்கீதத்திலும் தம்பூராவை பஸஸஸ சுருதி கூட்டுவர்.

கர்நாடக சங்கீதத்தைப் போல் ஹிந்துஸ்தானி சங்கீதத்திலும் 7 ஸ்வரங்களும் கோமள தீவிர பேதத்தினால் 12 ஸ்வரஸ்தானங்களாகின்றன. ஹிந்துஸ்தானி சங்கீதத்தில் 12 ஸ்வரஸ்தானங்களும் அழைக்கப்படும் விதம் பின்வருமாறு :-

கர்நாடக சங்கீதம்	**ஹிந்துஸ்தானி சங்கீதம்**
1. ஸட்ஜம்	ஸட்ஜம்
2. சுத்த ரிஷபம்	கோமள ரி
3. சதுஸ்ருதி ரிஷபம்	சுத்த ரி
4. சாதாரண காந்தாரம்	கோமள க

5. சுந்தர காந்தாரம்	சுத்த க
6. சுத்த மத்திமம்	சுத்த ம
7. பிரதி மத்திமம்	தீவ்ர ம
8. பஞ்சமம்	பஞ்சம
9. சுத்த தைவதம்	கோமள த
10. சதுஸ்ருதி தைவதம்	சுத்த த
11. கைசிகி நிஷாதம்	கோமள நி
12. காகலி நிஷாதம்	சுத்த நி

இரு சங்கீதத்திலும் மனோதர்மம் இன்றியமையாததாகும். ஹிந்துஸ்தானி சங்கீதத்தில் ஆலாபனையை ஆலாப் என்றழைப்பர். ஆலாப் 4 பிரிவுகளாகப் பாடப்படுகின்றது. 1. ஸ்தாயி 2. அந்தரா 3. ஸஞ்சாரி 4. ஆபோக் ஜோட் என்பது ஆலாபனையை மத்திம காலத்தில் பாடுவதாகும். இது ஓரளவு கர்நாடக சங்கீதத்தில் தானம் பாடும் முறைக்கு ஒத்ததாகும்.

வயலின் வாத்தியத்தை சுருதி கூட்டும் முறையிலும் இரு சங்கீதங்களிலும் வேறுபாடு உண்டு.

கர்நாடக சங்கீதம் - ஸ,ப,ஸ,ப
ஹிந்துஸ்தானி சங்கீதம் - ப,ஸ,ப,ஸ
மேலைத்தேய சங்கீதம் - ப ரி த க

தரம் 12 (2005 மாணவிகள்)
நுண்கலை)

கல்விச் சுற்றுலா

கடந்துபோன கல்விச் சுற்றுலாவின் இனிய நினைவலைகள் இன்றும் எம் நெஞ்சில் பசுமையாய் நிலைத்து நிற்கின்றன. கல்விச்சுற்றுலாக்கள் பொதுவாக அனுபவ அறிவை அதிகரிக்கின்றன. எமது சுற்றுலாவும் பயன் மிகுந்ததாக அமைந்தது. கூடவே மனமகிழ்ச்சி தருவதாகவும் இருந்தது.

அழகான ஒரு இளங்காலைப் பொழுதில் எமது பாடசலையான மானிப்பாய் மகளீர் கல்லூரி முன்றலில் நாம் அனைவரும் திரண்டிருந்தோம். எமது உபஅதிபர் திருமதி சண்முகரத்தினம் அவர்களின் தலைமையின் கீழ் எமது சுற்றுலா ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. ஐந்து நாட்களுக்கான பயணவிபரம் எமக்கு அறிவிக்கப்பட்டது. "எவ்வேளையிலும் பாடசாலைக் கௌரவத்தைப் பேணி நடப்போம்" என ஒவ்வொரு மாணவிகளும் உறுதி எடுத்துக் கொண்டோம். எமது பெற்றோரிடமும் ஏனைய ஆசிரியர்களிடம் விடைபெற்றுக் கொண்டு உடமைகள் யாவற்றையும் எடுத்துக் கொண்டு பேருந்தில் ஏறினோம். பேருந்து 7 மணியளவில் புறப்பட்டது. மாணவிகளின் உற்சாகக் கூச்சல் பெரிதாகக் கிளம்பியது.

எமது முதல் பயணமானது மன்னாரில் அமைந்துள்ள தேவாரப்பாடல், சிறப்புப் பெற்ற தலமும், மூர்த்தி, தீர்த்தம், விருட்சம் போன்றனவற்றில் சிறந்து விளங்குகின்ற தலமுமாகிய திருக்கேதீஸ்வர ஆலயத்தை நோக்கி ஆரம்பமானது. இதன்படி 16.08.2003 இரவு 9.30 மணியளவில் திருக்கேதீஸ்வரத்தைச் சென்றடைந்தோம். தென்பகுதி மக்களும் கோயில் மண்டபத்தில் தங்கி இருந்தனர். சமாதான புரிந்துணர்வு ஒப்பந்த அடிப்படையில் அவர்களை சந்தித்தமையை இட்டு நாம் பெரும் மகிழ்ச்சி

அடைந்தோம். மீண்டும் 17.08.2003 அன்று அதிகாலை 4.00 மணியளவில் கோயில் தீர்த்த பாலாவியிலே அனைவரும் நீராடி மகிழ்ந்தோம். பின்பு ஆலயத்தை மிகவும் பக்தி பூர்வமாக வழிபட்டு ஆலயத்தின் புராதன சிறப்பினைக் கண்குளிரக்கண்டோம். பின் காலைத் தேநீர், உணவு என்பனவற்றை அருந்தி விட்டு அங்கிருந்து 7.30 மணியளவில் புறப்பட்டோம். மடுமாதா ஆலயத்தை 9.45 மணியளவில் சென்றடைந்தோம். ஆலய சனத்திரளில் நாமும் ஒருவராகி மாதாவை வழிபட்டோம். அங்கே எமது அயல் பாடசாலையான மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை மாணவர்களும் கல்விச் சுற்றுலா வந்திருந்தனர். அவர்கள் எங்களைக் கண்டதும் மிகுந்த சந்தோசமடைந்து எங்களுடன் கூடிக்குலாவி மகிழ்ந்தனர். பின் அங்கிருந்து வவுனியாவை வந்தடைந்து 12.00 மணியளவில் மதிய போசனத்தை அருந்திவிட்டு மிகுதி நேரத்தை வீணே கழிக்காது வவுனியா கடைகளை பார்வையிட்டு எமக்கு விரும்பிய பொருட்களை வாங்கிக் கொண்டோம். பின் அங்கிருந்து கண்டி செல்ல தீர்மானித்துக் கண்டிக்குப் பயணமானோம். நாம் அனைவரும் மத்தியமலைப் பதிரதேசத்தினூடாகச் சென்றுகொண்டிருந்தோம். நாம் புவியியல் பாடத்தில் படித்துச் சுவைத்த மலைகள், குன்றுகள், மலைத்தொடர்கள், ஆறுகள், பள்ளத்தாக்கு போன்றவற்றை நேரிலே பார்க்கும் பாக்கியத்தை எமது கல்விச்சுற்றுலாவே எமக்கு அளித்தது என்றால் அது மிகையாகாது. மிகிந்தலையை சென்றடைந்த நாம் தேவநம்பிய தீஸனும், மகிந்ததேரரும் சந்தித்து உரையாடிய மிகிந்தலையை கண்டதும் அதிசயித்து விட்டோம். அந்தளவுக்கு உயரமான மலை என்றே கூறலாம். திட்டமிட்டபடி எமது கல்விச்சுற்றுலா அமைந்த காரணத்தினால் அம்மலையை சென்று பார்க்கும் சந்தர்ப்பம் எமக்கு கிடைக்கவில்லை. எனவே அங்கிருந்து புறப்பட்டு மாலை 5.15 மணியளவில் தம்புள்ள Golden Temple ஐ சென்றடைந்தோம். தம்புள்ள என்ற உடனேயே எமக்கு வரலாற்றுப் பாடம் தான் ஞாபகத்திற்கு வருகிறது எனலாம். நாம் வரலாற்றிலே கட்டடக்கலை ரீதியில் பிரசித்தி பெற்ற இடம் தம்புள்ளையிலுள்ள புத்தர்சிலைகள் என்று கற்றிருந்தாலும் அதனை நேரில் பார்த்து தெரிந்து கொண்டமை அதிசயத்திலும் அதிசயமே.

இவ்வளவு காலமும் மண்தரையிலே நடந்த எமக்கு தம்புள்ள மலையில் ஏறுவதற்கான பாறைப்படிக்கட்டுகளில் கால் வைக்க ஒரு கணம் கால்களெல்லாம் கூசத்தொடங்கின. மலை ஏறுவதென்றால் மிகக் கஷ்டமான காரியம் தான். ஆயினும் மலை ஏறும் பாதையின் இரு மருங்குகளிலும் காணப்படும் இயற்கை நிழல் தருமரங்கள், குரங்குகள் அவற்றின் குறும்புகள் என்பனவற்றை ரசித்தவாறு சென்றமையால் அக்கஷ்டமானது எமக்கு சுகமாகவே இருந்தது எனலாம். மலையின் உச்சியை சென்றடைந்த நாம் அங்கே உள்ள புத்தரின் புனித சயன நிலைகளை பார்வையிட்டோம். நாம் மட்டுமன்றி அன்னிய நாட்டவரும், தென்பகுதி சிங்கள மக்களும் அங்கே வருகை தந்து சயன சிலைகளை பார்வையிட்டு அதிசயித்தனர். பின்பு நாம் அனைவரும் தம்புள்ள நூதனசாலைக்கு சென்று அங்கு அரும் பெருஞ்செல்வங்களான புராதன காலத்து புத்தரின் புனித சின்னங்களைப் பார்வையிட்டுவிட்டு அங்குள்ள கடைகளுக்கு சென்றோம். அங்குள்ள கடைகள் சிங்கள கடைகள் என்பதனால் எமக்கு அவர்கள் சொன்ன பொருட்களின் விலைகளை சரியாகப் புரிந்து கொள்ள முடியவில்லை. இருப்பினும் நாம் எமது சைகைகளை காட்டி பொருட்களின் விலையை ஓரளவு புரிந்து கொண்டு எமக்கு விரும்பிய பொருட்களை வாங்கினோம். பின் அங்கிருந்து 7.00 மணியளவில் புறப்பட்டு இரவு 9.00 மணியளவில் மாத்தளை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய மண்டபத்தில் தங்கி இராப்போசனத்தை அருந்திவிட்டு பின் 18.08.2003 அன்று அதிகாலை 4.00 மணியளவில் அனைவரும் நீராடி மகிழ்வுற்று காலை கோயில் பூசை பார்த்துவிட்டு 7.00 மணியளவில் அங்கிருந்து புறப்பட்டோம். காலை நேர இளந்தென்றல் தாலாட்ட எமது பயணம் தொடர்ந்தது. மாணவிகள் உற்சாகமான பாடல்களைப் பாடினார்கள். அன்புப் பெற்றோர் ஆக்கித் தந்த சிற்றுண்டிகளைப் பகிர்ந்து உண்டோம். 8.45

மணியளவில் கண்டி தலதா மாளிகையை சென்றடைந்தோம். அங்கு புத்தரின் புனித சிலைகளைப் பார்வையிட்டதன் பிற்பாடு நாம் அனைவரும் தலதா மாளிகை நூதனசாலையை சென்று பார்வையிட்டோம். அங்கே புத்தரின் புனித சின்னமாகிய தலைமயிர் (கேசம்), பல்ஜயக்கலம், நாணயங்கள், ஏடுகள், அணிகலன்கள், கல்லாலான ஆயுதங்கள், வாத்தியக்கருவிகள் போன்ற காட்சிக்கு விருந்தாக வைக்கப்பட்டிருந்தன. அவற்றினை பார்வையிட்டதன் பிற்பாடு தலதாமாளிகைக்கு அருகில் உள்ள அகழியையும் பார்த்துவிட்டு சிறுவயதிலிருந்தே அதாவது 2 வயதிலிருந்து தலதா மாளிகையிலேயே வைத்து வளர்க்கப்பட்ட யானையான ராஜா தனது 88வது வயதிலே நோய் காரணமாக இறந்தது. இதற்கு முந்திய காலப்பகுதியிலே கண்டிப் பெரகரா இவ்யானையின் தலைமையிலேயே நடைபெற்று வந்தது எனவும் அதன் ஞாபகமாக அந்த யானையை கண்ணாடிப் பெட்டியில் வைத்து அதற்கென ஒரு தனிக்கட்டிடம் அமைத்துள்ளார்கள் எனவும் அங்கிருந்தவர்களிடம் கேட்டு அறிந்து கொண்டோம். பின் அங்கிருந்து கண்டி மாணிக்கப்பிள்ளையார் கோயிலுக்கு சென்று இறைவனை வழிபட்டு விட்டு அங்கிருந்து பேராதனை பல்கலைக்கழகத்திற்கு சென்று கண்காட்சியை பார்வையிட்டோம். அங்கே வைக்கப்பட்டுள்ள கண்காட்சிப் பொருள்களிலுள்ள எழுத்துக்கள் யாவும் எமக்கு தெரியாத சிங்கள மொழியிலேயே எழுதப்பட்டுக் காணப்பட்டன. நாம் மொழிகள் புரியாவிடினும், படங்களின் உதவிளைக் கொண்டு அவற்றினைத் தெரிந்து கொண்டோம். அங்கிருந்து 2.30 மணியளவில் புறப்பட்டு பேராதனை பூங்காவைப் சென்றடைந்தோம். அங்கே மகாவலியின் அழகும் மலர்களின் வனப்பும் எம் மனங்களைக் கொள்ளை கொண்டன. செயற்கையாக மெருகூட்டப்பட்டதால் இயற்கை அழகு அங்கு அற்புதக்காட்சியாகப் பொலிந்தது. வெவ்வேறு வகையான நாடுகளுக்குரிய தாவர இனங்களைப் கண்டோம். அவற்றின் தாவரவியற் பெயர்களை ஆசிரியரிடமிருந்து அறிந்து கொண்டோம். பின்பு அங்கே மதிய போசனத்தை அருந்தி விட்டு அங்கிருந்து 5.30 மணியளவில் புறப்பட்டு இரவு 9.00 மணியளவில் வந்து கண்டி Girls High School ல் தங்கினோம். அங்கே இராப்போசனத்தை அருந்தி விட்டு மீண்டும் காலை 19.08.2003 அன்று காலை 5.30 மணியளவல் அங்கிருந்து நுவரேலியாவுக்குப் பயணமானோம். "செழிப்பின் சிகரம்" எனும்படியாகக் கண்ணுக்கெட்டிய தூரம் வரை பசும்புற்றரைகளும், தேயிலைத் தோட்டங்களும் காட்சியளித்தன. அங்கு நிலவிய குளிர் எமக்கு புதுமையாக இருந்தது. குருவிகளும், மலையினின்னும் இறங்கும் அருவிகளும் எமது புகைப்படக் கருவிகளுள் சிறைபிடிக்கப்பட்டன.

"ஹக்கல" பூந்தோட்டத்தை சென்றடைந்த நாம் அனைவரும் பூந்தோட்ட முன்றலில் திரண்டிருந்தோம். அந்த சமயத்தில் எமது பெருமைக்கும் மதிப்பிற்கும் உரிய உபஅதிபர் திருமதி. சண்முகரத்தினம் அவர்களின் தாயார் திடீர் சுகயீனமுற்ற செய்தி எமக்குக் கிடைத்தது. நாம் அனைவரும் ஒரு கணம் துன்பத்தில் ஆழ்ந்து விட்டோம். எனினும் அங்கு நிலவியிருந்த அமைதியான சூழல், இயற்கைகாட்சிகள் என்பன எம் மனதினை மாற்றி எம்மை சந்தோச பாதையில் இட்டுச் சென்றன. எமது உபஅதிபர் சண்முகரத்தினம் குடும்பத்தினரை அங்கிருந்து வழிஅனுப்பிவிட்டு மீண்டும் அவரின் விருப்பின் படியே முன்பு திட்டமிட்டபடி எமது பயணமானது தொடர்ந்தது. "ஹக்கல" பூந்தோட்டமும் நம் கண்களுக்கு விருந்தாகியது. பலதரப்பட்ட பூக்கள் ஒவ்வோர் நிறங்களிலும் காணப்பட்டன. பூக்கள் ஒவ்வொன்றும் செழிப்பும் குளிர்ச்சியும் நிறைந்தனவாகக் காணப்பட்டன. கண்ணாடியால் கட்டப்பட்ட வீடும் எம்மை வியப்புக்குள்ளாக்கியது. கவித்திறமையுடையோர் கருப்பொருளாகப் பல காட்சிகளைக் குறிப்பெடுத்துக் கொண்டனர்.

பின் அங்கிருந்து புறப்பட்டு சீதாகோயிலுக்கு சென்றோம். அங்கே சீதை, இராமர், இலட்சுமணர், அனுமான் போன்றோரை வழிபட்டு விட்டு அனுமான் கால் பதித்த இடத்தையும் பார்த்துவிட்டு லபுக்கலை Tea Factory க்கு சென்றோம். அங்கே தேயிலைத் தோட்டங்கள் பச்சை கம்பளம் விரித்தாற் போல் காட்சிஅளித்தன. அவற்றினை ரசித்தவாறே அங்கே Tea அருந்திவிட்டு கொழுந்து பறிப்போரையும் பார்வையிட்டோம். பின் அங்கு எமக்கு தொழில் புரியும் பெண் ஒருவரால் தேயிலை தயாரிக்கும் முறை பற்றி விளக்கமளிக்கப்பட்டது. தேயிலை தயாரிக்கும் இயந்திரங்களையும் எமக்குக்காட்டி ஒவ்வொரு வகையான தேயிலைகளையும் தரம் பிரித்து காட்டி நல்ல முறையில் எமக்கு விளங்கக்கூடிய வகையில் கூறினார். அவருக்கு நன்றியை நாம் சொல்லிவிட்டு மாலை 4.15 மணியளவில் றம்பொட நீர்வீழ்ச்சியை சென்றடைந்தோம். அங்கே நீர்வீழ்ச்சியின் சலசலப்பும் அதன் இயற்கை வனப்பும் எம்மனதுக்கு மகிழ்ச்சியை அளித்தது. அங்கிருந்து 5.00 மணியளவில் புறப்பட்டு றம்பொட ஆஞ்சநேயர் கோயிலுக்கு சென்று அங்குள்ள பெரிய அனுமான் சிலையையும் வழிபட்டுவிட்டு 5.45 மணியளவல் அங்கிருந்து மீண்டும் மாத்தனை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தை இரவு 8.00 மணியளவில் வந்தடைந்தோம். அங்கே இராப் போசனத்தை அருந்திவிட்டு அடுத்த நாள் 20.08.2003 அன்று காலை 5.30 மணியளவில் கோயிலிருந்து புறப்பட்டு சிகிரியாவை சென்றடைந்தோம். சிகிரியா மலை உச்சியை பார்த்தவுடனேயே நாம் அனைவரும் பயந்துவிட்டோம். அவ்வளவுக்கு அச்சந்தரக்கூடிய வகையில் அது காட்சியளித்தது. இவ்வாறான ஒரு பாதுகாப்பரணை தனது அரச இருக்கையாக காசியப்பன் தேர்ந்தெடுத்தான் என்பதிலிருந்து அவனது புகழை குறைத்து மதிப்பிட முடியாது. சிகிரியாகுகைகளில் வரையப்பட்டுளள அணங்குகளின் (பெண்) உருவங்கள், காசியப்பனின் கலை ஆர்வத்தை எடுத்தியம்புகின்றன. இவை இன்றும் தம்அழகோ, வனப்போ குன்றாது காணப்படுவதற்கு அவை பாறையின் ஒதுக்குப் புறத்தில் வரையப்பட்டமையே ஆகும். இவற்றினைவிட அங்கே கண்ணாடிச்சுவர், குளியல் தடாகம், விநோதப்பூங்கா, அரச இருக்கை, நடன அரங்கு போன்றன காணப்படுகின்றன. சிதைந்த பிரதேசங்களில் புதைந்திருந்த வரலாறுகளை ஆசிரியர் சொல்லக் கேட்டோம். பின் அங்கே விற்பனை ஆகிக் கொண்டிருந்த சிகிரியா ஓவியங்களையும் வாங்கிக்கொண்டு அங்கிருந்து திருகோணமலைக்கு பயணமானோம். அங்கே கந்தளாய் குளத்தின் அழகினை ரசித்தவாறே கன்னியாய் வெந்நீர் ஊற்றைச் சென்றடைந்தோம். அங்கே 7 கிணறுகளின் நீரின் தன்மையை தொட்டுணர்ந்தோம். எம் கைகளினால் அள்ளி விளையாடி மகிழ்ந்தோம். பின் அங்கிருந்து புறப்பட்டு திருக்கோணேஸ்வர ஆலயத்தை சென்றடைந்தோம். அங்கே துள்ளித்திரியும் மான்களையும், குரங்குகளையும் கண்டு மிகவும் பூரிப்படைந்தோம். கோயிலினுள் சென்று இறைவனை வழிபட்டு விட்டு இராவணன் வெட்டை பார்வையிட்டோம். இராவணன் வெட்டானது மிகவும் ஆழமானதாகவும் இருமலைகள் பிளபட்டு காட்சியளிக்கிறது. பின்பு அங்கிருந்து புறப்பட்டு இரவு 7.00 மணியளவில் திருகோணமலைப் பத்ரகாளி அம்மனிடம் சென்று வழிபட்டு விட்டு எமது ஆசிரியர்களின் பொறுப்பில் கடைகளுக்குச் சென்று எமக்கு விரும்பிய பொருட்களை வாங்கிக் கொண்டு இரவு 8.30 மணியளவில் திருகோணமலை சென் மேரிஸ் பாடசாலையில் தங்கி இராப்போசனத்தை அருந்தினோம். 21.08.2003 அன்று அதிகாலை 3.00 மணியளவில் நாம் அனைவரும் எழுந்து எமக்கு ஏற்கனவே ஒழுங்கு செய்து தரப்பட்டகுளியல் அறைகளிலே நீராடி மகிழ்ந்தோம். பின்பு அங்கிருந்து காலை 5.30 மணியளவில் யாழ்ப்பாணத்தை நோக்கி பயணமானோம். எமது பாடசாலையை மாலை 6.30 மணியளவில் வந்தடைந்தோம். எமது இக்கல்விச் சுற்றுலா ஆனது அகத்திற்கு மகிழ்வாகவும், அறிவிற்கு விருந்தாகவும் அமைந்தது.

நன்றி

க. சர்மிலாதேவி
2004 கலைப்பிரிவு

ஜனனி தங்கராசா

12 கலைப்பிரிவு

(2005)

ஸப்த ஜால வயலின் சிறப்பம்சங்கள்

ஸங்கீத்தில், கர்நாடக இசைக்கருவிகளை ஆராயுமிடத்து வயலின் வாத்தியமானது தனக்கென ஒரு தனிச்சிறப்புடன் இன்று மிளிர்கிறது. தன்னிகரற்ற பக்கவாத்தியமாக விளங்கிவரும் இவ்வாத்தியமானது தனி வாத்தியமாகவும் விஷேஷத் தன்மையுடனும் வியாபித்துள்ளது. "இளமையிற் கல்" என்ற ஔவை வாக்கு இந்த வயலின் சாதகத்திற்கு எத்துணைப் பொருத்தம் என்பது எனது சொற்ப அனுபவத்திற்கண்ட மாபெரும் உண்மை.

ரீங்காரம் செய்யும் வண்டின் நாதத்தில் இருந்து எத்தன்மையானாலும் அத்தன்மைக்கேற்ப பற்பல நாத வடிவங்களை மேதாவிகளால் இவ்வாத்தியத்தின் மூலம் வெளிப்படுத்த முடியும். வயலின் வாத்தியத்தின் வடிவமே எழிலார்ந்ததாகவும், எளிமையான சிறிய உருவ அமைப்புக்கொண்டதாகவும் உள்ளது. இவ்வாத்தியத்தில் வில்லானது தந்திகளில் இழையும்போது அதன் சிறிய உடலினின்றும் எழும்பும் இனிமையான நாதம் பேரின்பத்தை ஏற்படுத்துவதில் ஐயமில்லை.

கூர்ச்சியான, இனிமை நிறைந்த நாதச் செறிவுடன் கூடிய இவ்வாத்தியத்தில் எந்தச் சுருதிக்கும் எளிதில், விரைவாகச் சுருதி சேர்த்துக் கொள்ள முடியும். மிகத்தெளிவாக, ஸாஹித்தியங்களை உணர்த்துமளவில் நீளமான வில் அமைப்பால் கார்வைகளை நீடிக்கச் செய்து மிக நுட்பமான சுருதிகள் வலிவு, மெலிவு ஆகிய இசைத்தன்மைகளைத் தெளிவுடனும், சீருடனும் வெளிப்படுத்தும் சிறப்பியல்பைக் கொண்டது இந்த வயலின் வாத்தியம்.

மந்திரஸ்தாயியிலிருந்து தார, அதிதாரஸ்தாயி வரை எளிதான விரலோட்டத்திற் செயற்படும் (fingerings) இயல்பு வாய்ந்தது. மெட்டுக்களற்று, உருவாக்கப்பட்டுச் சரளமாக வாசிக்கக்கூடிய விதத்தில் நான்கு தந்திகளை மட்டும் உடைத்ததாக இருப்பது இவ்வாத்தியத்தின் மற்றுமொரு சிறப்பம்சமாக அமைகிறது.

பலவித இசைக் கருவிகளுடன், அதாவது வீணை, வேணு, மிடற்றோசை போன்றவற்றுடன் ஈடுகொடுத்து இணைந்து நிற்கும் சக்திவாய்ந்த வயலின் வாத்தியமானது சீரிய, துல்லியமான, துடிப்பு மிக்க உயர்ந்த ஒலியை (OUERTONES) அதிகளவு கொண்ட அதிர்வலைகளுடன் (VIBRATIONS) வெளிப்படுத்துவதால், அரங்குகளில் அயனாகவும், துணையாகவும் பிரகாசிப்பதில் வியப்பில்லை.

தனக்கெனச் சிறப்பம்சங்களைக் கொண்டுள்ள வயலின், எங்கும் எளிதில் எடுத்துச் செல்வதற்குரிய உடலமைப்புடன், எல்லாவித இசை முறைகளையும், அவற்றின் நுணுக்கங்களையும் தெளிவாக வெளிப்படுத்தும் தன்மையுள்ள தொன்றாகும். ஐரோப்பியரின் இசைக்கருவியான இவ்வயலின், இந்திய இசையில் முக்கியமாகக் கர்நாடக இசையுலகில் வரவேற்கப்பட்டு இன்றியமையாத வாத்தியமாகவும், தலைசிறந்த வாத்தியமாகவும் போற்றப்பட்டு வருகிறது.

நிறைவான, இணையற்ற தனித்தன்மையைக் கொண்டமைந்து, அனைவராலும் கவரப்பட்ட வயலின் வாத்தியமானது இசை மறுமலர்ச்சிக்குப் பின் தக்க தருணத்தில் நம் கர்நாடக இசையுட் புகுந்ததால், அனைத்து மக்களாலும் மிக விருப்பத்துடன் வரவேற்கப்பட்டு இன்று இசையுலகிற் தனக்கென ஒரு தனி இடத்தைப் பெற்றுள்ளது.

ஸ்வயமான, இசைஞானத்துடன்
நிதானத்தை லயத்தில் ஏற்படுத்தி,
தன்னம்பிக்கையுடனும்,
பக்தி சிரத்தையுடனும், அசுர சாதகம் செய்து,
மனோதர்ம, கல்பித முறைகளைக் கையாண்டு,
கர்நாடக இசையை வளர்க்கும்,
நீதியில்,
ஸப்த ஜால வயலின் விற்பன்னர்கள் தோன்றிய பெருமை.

வயலினை முதன்முதலிற் கையாண்ட புகழ்பெற்ற மும்மூர்த்திகளில் ஒருவராகிய முத்துஸ்வாமி தீஷிதரின் தம்பியாகிய பாலஸ்வாமி தீஷிதரையே சாரும் என்பது பெரும்பாலோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்தாகும்.

அ. கிமாலினி
2003 விஞ்ஞானப் பிரிவு

தமிழ் இலக்கிய வரலாறும் மொழியும்

மொழி என்பது பரம்பரை பரம்பரையாகக் கையளிக்கப்பட்டு வருகின்ற ஒரு பண்பாட்டுக் கையளிப்பாகும். இலக்கியம் மொழியால் கட்டமைக்கப்படுகின்ற சமூகப்பிரதிபலிப்பு எனப்படுகின்றது. அந்த வகையில் ஒரு சமூகத்தின் முக்கிய அம்சங்கள் வரிசையில் மொழி, இலக்கியம் என்பனவும் இணைகின்றன. இலக்கியம் பற்றியும் மொழி பற்றியும் தனித்தனியே பல கட்டுரைகள், ஆய்வுகள் வெளிவருகின்ற போதிலும் இலக்கியமும் மொழியும் என்கின்ற பார்வையிலான ஆய்வுகள் சொற்பமானவையாகவே வெளிவந்துள்ளன. எனவே தமிழ் மொழி, இலக்கியங்களில் பிரயோகிக்கப்பட்டு வந்துள்ள முறை பற்றி நோக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.

தமிழ் இலக்கிய வரலாற்றை ஆராய்கின்ற அறிஞர்கள், இலக்கிய வரலாற்றின் தொடக்க காலமாகச் சங்க காலத்தைக் கொள்வர். கிறிஸ்துவிற்குப் பின் முதலாம் நூற்றாண்டிற்கும் மூன்றாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் தோன்றியவையாகக் கருதப்படுகின்ற எட்டுத் தொகை பத்துப்பாட்டு என்னும் பதினெண் மேற்கணக்கு நூல்களே எமக்குக் கிடைத்த முதல் தம்ழிலக்கியத் தொகுதி ஆகும்.

தமிழ் நாட்டினை சங்க காலத்தில் ஆண்டவர்கள் சேரர், சோழர், பாண்டியர் எனும் மூவேந்தர் ஆவார். தமிழிலும், தமிழ்ப் புலமையும் விதந்து போற்றப்பட்ட காலம் என்பதால் இக்கால இலக்கியங்கள் தூய மொழிநடையில் அமைந்திருந்தன. காலத்திற்கேற்ற மொழி நடை என்கின்ற போதிலும் பிற மொழிச் சொற்கள் பிரவாத தூய தன்மையைச் சங்க இலக்கிய தமிழ் மொழி நடை பெற்றிருந்தது. பிற நாட்டு வணிகம், அரசியல் தொடர்பு என்பனவற்றாலும் சங்ககால இலக்கிய மொழி நடையில் பிற மொழிச் செல்வாக்கை ஏற்படுத்தி விட முடியவில்லை. ஆடை, அணிகள் கூடத் தமிழின் தூய்மையிலேயே அழைக்கப்பட்டன. மேலாடையுடன் வந்த வெளிநாட்டவரான யவனரை "மெய்ப்பை புக்க வெளிவந்தோற்றத்து யவனர்" என்கிறது சங்க இலக்கியம்.

காலமாற்றம் மொழியில் தாக்கத்தை ஏற்படுத்துமெனில் சொற்களின் அர்த்தப்பரிமாணம் காலத்திற்கேற்ப வேறுபடும் என்கின்ற மொழியியல் மரபுக்குத் தமிழ் மொழியும் விலக்கன்று. சங்க இலக்கியங்களில் ஒரு பொருளைச் சுட்டிய சொல் பிற்காலத்தில் பிறிதொரு பொருளைச் சுட்டுகின்றது. 'கறி' என்பது சங்க காலத்தில் மிளகைக் குறிக்கப் பயன்பட்டது பிற்காலத்தில் உணவு வகையைக் குறித்து நிற்கின்றது.

சங்க காலத்திற்குப் பின்னர் தமிழகத்தின் அரசியல், சமயக் கூறுகளின் நிலவரத்திற்கேற்பவே இலக்கியங்களில் மொழி இயங்கலாயிற்று சங்க மருவிய காலத்தில் களப்பிரரின் வருகை, சமண – பௌத்த மதங்களின் மேலாதிக்கம் என்பனவற்றைப் பயன்படுத்திக் கொண்டு வடநாட்டு மொழியாகிய வடமொழி தமிழ் நாட்டினுள் நுழைந்து தன்னை ஸ்திரப்படுத்திக் கொண்டது. தமிழ்மொழி நெகிழ்ச்சியான இலக்கணக் கூறுகளையுடைய மொழியெனும் வகையில் வடமொழியின் செல்வாக்குத் தமிழுக்குள் நுழைவது இலகுவாயிற்று. திருக்குறள், சிலப்பதிகாரம், முத்தொள்ளாயிரம் போன்ற இலக்கியங்களில் வடமொழியின் பாதிப்பு காணப்படுகின்றது.

வடமொழி பக்தியுடன் தொடர்பு கொண்ட மொழி என்பதால் பக்தி இலக்கியங்கள் தோற்றம் பெற்ற பல்லவர் காலத்தில் வட மொழியின் செல்வாக்கு மேலோங்கத் தொடங்கியது. தமிழிலக்கணம் வகுத்த தொல்காப்பியரின் க்,ப் என்னும் இரு மெய்களும் அருகருகே மயங்கமாட்டா என்ற கட்டமைப்பை உடைத்துப் ''பக்தி'' என்னும் சொல் பெருவழக்குப் பெற்றமையே வடமொழி தமிழிலக்கியங்களில் செல்வாக்குச் செலுத்துவதன் தீவிரத்தை உணர்த்தும்.

தமிழகத்தில் வல்லரசு ஒன்றைக் கட்டியாண்ட சோழப் பெருவேந்தர்கள், வேதாகமக் கல்வி வளர்ச்சிக்கும், ஆலயங்களில் வேத, பாராயணங்களுக்கும் உகந்த வகையில் வடமொழிக்குத் தாராள இடம் கொடுத்தார்கள். காஞ்சிபுரம் போன்ற இடங்களில் 'கடிகை' எனப்படும் வடமொழிப் பல்கலைக்கழகங்கள் அமைக்கப்பட்டன. வடமொழி இலக்கண இலக்கியவமைதிகள் தமிழில் புகுந்து கொண்டன. கம்பராமாயணம், கந்த புராணம், நளவெண்பா போன்ற இலக்கியங்கள் வடமொழிச் சொற்களைப் பரக்கக் கொண்டவை. கந்த புராணம் வடமொழிப் புராணமான ''ஸ்கந்த புராணத்தை'த் தழுவி எழுந்ததே.

சோழர்களின் வீழ்ச்சிக்குப் பின்னர் வலிமையான மன்னர்கள் தமிழ்நாட்டில் இல்லாமற் போனமை, வறட்சி, இஸ்லாமியப் படையெடுப்பு, ஓரளவுக்குப் பலமாக இருந்த நாயக்க மன்னர்களும் போர்களில் எழுந்த இலக்கியங்களில் கவித்துவ வளம் என்பது திருப்தியற்றே காணப்பட்டது. வித்துவச் செருக்கு, புலமைப் போட்டி என்பவற்றிற்கே புலவரின் கவனம் செலுத்தப்பட்டது. மயக்கம், திரிபு, மடக்கு எனக் கடுமையான இலக்கியக் கூறுகளைக் கொண்டு தமது கைவரிசையைக் காட்டினர் நாயக்கர் காலப் புலவர்கள். இதனால் கற்றவர்க்கே புரிந்துகொள்ளக் கடினமான தளத்திற்கு நாயக்கர் காலத் தமிழ்மொழி கொண்டு செல்லப்பட்டது. எனினும் பதினேழாம் பதினெட்டாம் நூற்றாண்டுகளில் சித்தர்களின் மேற்கிளம்புகையுடன் தமிழ்மொழி எளிமைப்படத் தொடங்கினர். ''மாங்காய்ப் பாலுண்டு மலை மேல் வாழ்வோர்க்குத் தேங்காய்ப்பால் ஏதுக்கடி குதம்பாய் தேங்காய்ப்பால் ஏதுக்கடி'' எனத் தத்துவத்தை எளிய தமிழில் உரைத்தனர் சித்தர்கள்.

கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆங்கிலேயர் வருகையுடன் தமிழ் நாட்டினுள் நுழைந்த மேல் நாட்டு இலக்கிய வடிவங்களான நாவல், சிறுகதை என்பவற்றில் மொழி பயன்படுத்தப்பட்ட விதம், மொழியின் அடுத்தக் கட்ட பரிணாமத்தைச் சுட்டியது. செய்யுள் நடையிலிருந்த மொழி உரைநடையாக உருவெடுத்துக் கொண்டது. சமகாலத்தில் ஈழத்திலும் இம்மாற்றம் நிகழ்ந்தது. 1950 கள் வரை எழுத்துநடையில் நகர்ந்த நாவல் மொழிநடை என்பது 50களின் பின்னரான அரசியல், சமூக மாற்றங்களாலும் முற்போக்கு இயக்கங்களின் எழுச்சியாலும் சாதாரண மக்களின் அன்றாடப் பேச்சு நடையைக் கொண்டதாக மாற்றமடைந்து இன்று அதுவே நிலைபெற்று விட்டது.

இவ்வகையில் தமிழ்இலக்கிய வரலாற்றில் மொழி என்னும் ஊடகத்தின் நிலை பற்றி அறிந்துகொள்ள முடிந்துள்ளது. அறிவியலும், தொழில்நுட்பமும் உலகத்தைக் கௌவியுள்ள நிகழ்காலத்தில் எமது கலாச்சாரக் கூறுகளான இலக்கியம், மொழி என்பன பற்றிய பார்வை என்பது அவசியமான ஒன்றெனவே அறிதல் வேண்டும்.

ஸ்ரீ.கீதாஞ்சலி
2004 கலைப்பிரிவு

புவிநடுக்கம்

புவியின் இயற்கை அமைப்பிற்கும் அதில் வாழ்கின்ற உயிர்ச்சூழலிற்கும் ஏற்படும் பெரும் அழிவுகளை அனர்த்தங்கள் எனப்படும். அவ்வகையில் புவியில் நிகழ்கின்ற அனர்த்தங்களை மனிதனால் ஏற்படும் அனர்த்தங்கள், இயற்கையால் ஏற்படும் அனர்த்தங்கள் என 2ஆக பாகுபடுத்தலாம். புவிநடுக்கம், எரிமலைத் தாக்கம், வெள்ளப்பெருக்கு, மண்சரிவு, பெருக்கெடுக்கும் அலைகள், சூறாவளி, நெருப்பு, நோய் என்பன இயற்கையால் ஏற்படும் அனர்த்தங்களே ஆகும். அவற்றுள் ஒன்றாக விளங்கும் புவிநடுக்கம் எனும் இயற்கை அனர்த்தத்தை பற்றி நோக்குவோம்.

புவியோட்டின் கீழ்ப்பகுதியிலிருந்து இயற்கையாகவே தோற்றம் பெற்று புவியோட்டில் ஒருவித அசைவை ஏற்படுத்தல் புவிநடுக்கம் ஆகும். இவை அழிவுகளை ஏற்படுத்துவதில்லை. ஆனால் சிலவேளைகளில் மிக்க விசையோடு தொழிற்படும் போதுதான் பேரழிவுகளை ஏற்படுத்துகின்றது. புவியில் தோன்றும் புவிநடுக்கங்கள் முக்கியமாக 3:6 என்ற வீதத்தில் ஏற்படும். இளம் மடிப்புமலைகளின் விளிம்புகளிலும் பசுபிக் தகடும் அமெரிக்கத்தகடும், ஐரோப்பியத்தகடும் ஆசிய தகடும், இந்திய தகடும் ஆபிரிக்க தகடும் இணையும் விளிம்புகளிலும் புவிநடுக்கங்கள் ஏற்படுகின்றன.

புவிநடுக்கத்தை அவை தோற்றம் பெறும் இயல்பை கொண்டும் தோற்றம் பெறும் ஆழத்தைக் கொண்டும் இரண்டாக வகைப்படுத்தலாம். புவிநடுக்கமானது தோற்றம் பெறும் இயல்பை ஆதாரமாகக் கொண்டு எரிமலை, புவிநடுக்கம், புவியோட்டின் விருத்திக்குரிய புவிநடுக்கம், பாதாள புவிநடுக்கம் என மூன்றாக வகைப்படுத்தலாம். எரிமலைகள் தோற்றம் பெறும்போது ஏற்படும் புவிநடுக்கம் எரிமலைப் புவிநடுக்கம் எனப்படும். புவியோட்டில் திடீரென அமுக்க விசை, இழுவிசை காரணமாக ஏற்படும் புவிநடுக்கம் புவியோட்டின் விருத்திக்குரிய புவிநடுக்கம் எனப்படும். மிகவும் ஆழத்தில் ஏற்படும் புவிநடுக்கம் பாதாள புவிநடுக்கம் எனப்படும்.

புவிநடுக்கம் தோற்றம் பெறும் ஆழத்தைக் கொண்டு சாதாரண புவிநடுக்கம், இடைநிலை புவிநடுக்கம், ஆழமான புவிநடுக்கம் என 3 வகைப்படுத்தலாம். புவிமேற்பரப்பில் 0 – 30 மைல் வரை ஏற்படும் புவிநடுக்கம் சாதாரண புவிநடுக்கம் எனவும் 30 – 150 மைல் ஆழத்தில் ஏற்படும் புவிநடுக்கம் இடைநிலை புவிநடுக்கம் எனவும் 150 – 450 மைல் வரையான புவிநடுக்கம் ஆழமான புவிநடுக்கம் எனவும் வரையறுக்கலாம்.

புவிநடுக்கமானது செசமோ கிறாப் எனும் கருவி கொண்டு பதிவு செய்யப்படுகின்றது. புவிநடுக்க அலைகள் ரிச்டர் எனும் அளவுத்திட்டத்தினால் பதிவு செய்யப்படுகின்றது. புவிநடுக்க அலைகளானது 3 வகைப்படும். அவையாவன Pஅலை (முதலலை), S அலை (துணை அலை), L அலை (நெடுங்கோட்டு அலை) போன்றனவாகும். வடதென் அமெரிக்காவின் மேற்கு கரையோரம் (றொக்கி, அந்தீஸ் மலைப்பகுதிகளைச் சார்ந்த வலயம்), பசுபிக் வலயம் (ஜப்பான், பிலிப்பைன்ஸ், கிழக்கிந்திய தீவுகள் போன்றன), மத்தியதரைக் கடலிலிருந்து கிழக்குப் பகுதியான சின்னாசியா (மத்திய கிழக்கு நாடுகள், வடஇந்தியா) போன்றன உலகின் புவிநடுக்க வலயங்களாகும்.

புவிநடுக்கத்தால் அகன்ற வெடிப்புக்கள், நிலச்சரிவுகள் ஏற்படுகின்றன. கட்டடங்களும் உயிர்களும் அழிகின்றன. பாலங்கள், இருப்பிடம், வீதிகள் என்பன சிதைவிற்குள்ளாகின்றன. சமுத்திரத்தின் அடித்தளத்தை புவிநடுக்கம் தாக்கியபொழுது

ரிஸ்னாமி 1896இல் ஜப்பானில் ஏற்பட்டது. 1908இல் இத்தாலியில் ஏற்பட்ட நிலநடுக்கம் 28 விநாடிகள் நிலைத்தது. அங்கே 111000 மக்களை பலியெடுத்தது. சீனாவில் 1920இல் நடைபெற்ற புவிநடுக்கத்தால் 200000 மக்களும் 1917இல் இடம்பெற்ற புவிநடுக்கத்தால் 100000 மக்களும் கொல்லப்பட்டனர். 1923இல் டோக்கியோவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் 2 ½ லட்சம் மக்கள் இறந்தனர். 1993இல் இந்தியாவில் மகாராஷ்ட மாநிலத்தில் ஏற்பட்ட புவிநடுக்கத்தால் 35000 மக்கள் இறந்தனர். 2001ம் ஆண்டு முதலில் ஏற்பட்ட புவிநடுக்கம் 11000 மக்கள் இறந்தனர். 60% ஆன கட்டடங்கள் தகர்ந்து போனது. 2002ம் ஆண்டு அண்மையில் இத்தாலியில் நடைபெற்ற புவிநடுக்கம் பெருந்தொகையான மக்களை பலிகொண்டது. 2003ம் ஆண்டில் ஆஜென்ரினாவினால் பலத்த புவிநடுக்கமானது ஏற்பட்டது. இதே ஆண்டிலேயே வடக்கு ஜப்பானில் ஏற்பட்ட புவிநடுக்கமானது ரிச்டர் அளவுகோலில் 6 – 7 வரை பதிவாகியுள்ளது.

அ.சுகன்ஜா
2005 கலைப்பிரிவு

சிகிரியா

"சிகிரியாவானது பகைவரிடமிருந்து பாதுகாப்புப் பெறுவதற்காக நிருமாணிக்கப்பட்ட கோட்டை அல்ல: அது குபேரனைப் போல வாழ்வதற்காக காசியப்பனால் கட்டப்பட்ட அழகாபுரி போன்ற ஒரு நகரமாகும்". இவ்வாறு பேராசிரியர் பரணவிதான அண்மைக்காலத்தில் எடுத்து இயம்பியுள்ளார்.

ஆம், காசியப்ப மன்னன் கி.பி.5ம் நூற்றாண்டளவில் இலங்கையில் தரைத்தோற்றப் பிரிவில் ஒன்றான அண்சமவெளியின் சிறப்பான எச்சக்குன்றுகளில் ஒன்றான சிகிரியாவை தலைநகரமாக்கினான். சிகிரியாவில் ஒரு கோட்டையை அமைத்து அதிலே குபேரன் அழகாபுரியில் வாழ்ந்ததைப் போல வாழ்ந்துள்ளான். என்பது அண்மைக்காலச் செய்தியாகும். இச்செய்தி வெளியாகும் வரையும் இந்தியாவுக்கு தப்பி ஓடிய முகலனினால் வரும் ஆபத்தில் இருந்து தன்னைப் பாதுகாப்பதற்காக மனிதர்களால் ஏறிக்கொள்ள முடியாத கடினமாக பாறையின் உயரத்தில் தனது மாளிகை அமைத்து வாழ்ந்தான் என இலங்கையின் வரலாற்று நூல்கள் கூறுகின்றன. சிகிரியாக்குன்று பார்ப்பவர்களுக்கு அச்சத்தை ஊட்டும் வகையில் சிங்கம் ஒன்று படுத்திருப்பது போல தன் கால்களை வைத்திருக்கும் பாணியில் குடையப்பட்ட அதேவேளை அதன் வாய் வழியாக உள்ளே போகும் வழி காட்டப்பட்டுள்ளமையும் அச்ச உணர்வை ஏற்படுத்துகின்றது. இவ்வெளிப்பாட்டின் காரணமாகவே சிகிரியாவை சிங்ககிரி என்றும் அழைத்தனர்.

பரணவிதான நிறுவிய புதுக்கொள்கையும் சூளவம்சத்தில் உள்ள அங்கு மற்றோர் அலகமந்தா எனத்தக்க ஓர் அழகான மாளிகையை காட்சிக்கு விருந்தாக அமைந்து குபேரக்கடவுளென அங்கு வாழந்தான்" என்பதை அடிப்படையாகக் கொண்டு அங்கு இருமருங்கும் அமைக்கப்பட்டுள்ள தடாகங்கள், படிக்கற்கள், உச்சிவரையும் அமைந்த மேடைகள், பூங்காக்கள், கண்ணாடிச்சுவர்கள், ஓவியங்கள் என்பன சான்றுபகர்கின்றன.

காசியப்பன் துணிகரமான முறையில் இப்புதுமையைப் படைக்க எண்ணியமை பெருமைக்குரியதாகும். நகரைச் சுற்றி மதிற்சுவர்கள், அகழி என்பன அமைக்கப்பட்டுள்ளன. ஒரு பெரும் பாறையை இதற்காகத் திட்டமிட்டு தனது

திட்டத்திற்கேற்ப வெவ்வேறு பகுதிகளை அப்பாறையிலேயே குடைந்து செதுக்கி முடித்த அசாதாரணத் திறமையையும், கலைநுணுக்கத்தையும் நாம் அங்கு செல்லும் போது அவதானிக்கலாம். உதிரிப்பாறைகளையும் திறமையாகப் பயன்படுத்தியுள்ளார். படிக்கற்கள் மிகவும் அவதானமாகவும் தொழில்நுட்ப ரீரியாக அமைக்கப்பட்டுள்ளன. படிக்கற்கள் உச்சி வரைக்கும் செல்லும் பாதைக்கு அமைக்கப்பட்டாலும் இடைஇடையே அமைக்கப்பட்டுள்ள மேடைகள் சிறப்பானவை. பார்வையாளர்களும் பயன்படுத்தக்கூடிய முறையில் அமைக்கப்பட்டுள்ளன. மேற்குப் புற மாடிப்பூங்கா பற்றி உயர்தரமான தகவல்கள் உள்ளன.

பாறையைக் குடைந்து உள்ளே அமைக்கப்பட்டுள்ள கண்ணாடிச்சுவர் அழுத்தமும், பிரகாசமும் உடையதாகும். இதன் எழிலை இரசிக்க வருவோர் தமது மனங்களில் எழும் உணர்வுகளைக் கவிதைகளாக கண்ணாடிச் சுவர்களில் வடித்துள்ளார்கள் இவற்றைக் குறுட்டுப் பாடல்கள் என வர்ணிப்பர்.

சிகிரிய ஓவியங்களே எமக்கு இன்று கிடைக்கும் பழைய கால ஓவியங்களாகும். இவை பிந்திய அனுராதபுரக் காலத்துக்கு உரியவை. 1ம் காசியப்பன் குன்றினது மேற்குச் சுவர்ப்பாகத்தில் பெரும் பகுதியை அழுத்தமாக்கி அதன் மேல் சுண்ணச் சாற்றினைப் பூசி நூற்றுக்கும் அதிகமாக அணங்குகளின் (பெண்) ஓவியங்களைத் தீட்டுவித்தான். இவற்றுன் 21 ஓவியங்கள் மட்டுமே எமக்குக் கிடைக்கின்றன. இவ்ஓவியங்கள் 1600 ஆண்டுகளுக்கு மேல் இயற்கையால் ஏற்படும் அழிவுகளைத் தாங்கி தம் பொலிவோ, வனப்போ குன்றாது இக்காலம் வரை தப்பி வந்தமைக்கு பாறையின் ஒதுக்குப்புறத்தில் வரையப்பட்டமையே ஆகும். இங்கு காணப்படும் அணங்குகள் சோடிகளாகவும் வேறு சில தனியாகவும், முகில்களில் மிதப்பது போல் உள்ளன. இடுப்புக்கு மேலுள்ள இவர்களின் வண்ண எழில் கொண்ட உருவங்கள் கண்ணைக் கவருகின்றன. இவற்றுள் சில இடுப்புக்கு கீழே துணிகளை அணிந்துள்ளனர். சில தங்க நிறமானவையாகவும் சில நீல நிறமானவையாகவும் உள்ளன. நீலநிற உருவங்கள் மலர்த்தட்டுக்களை ஏந்தி நிற்கின்றன. இவ்ஓவியங்களிலுள்ள பெண்கள் காசியப்பனது அந்தப்புரத்து மகளிர்களென சூளவம்சம் கூறுகிறது. இவ்உருவங்கள் உலகக் கலைஞர்களின் மிகப்பெரிய பாராட்டுக்களை பெற்றுள்ளன. இந்தியாவில் இதையொத்த காலப்பகுதியில் அஜந்தா ஓவியங்கள் காணப்படுகின்றன.

சிகிரிய அரண்மனைக்கு குழாய் வழியாக நீர் வழங்கப்பட்ட தடயங்களை அண்மைக்காலத்தில் ஏற்படுத்தப்பட்ட அகழ்வுகள் மூலம் அறிந்துள்ளோம். இத்தடயங்கள் மூலம் இலங்கையின் நீர்ப்பாசன முறை எவ்வளவு தூரம் உயர்நிலையில் இருந்தது என்பதை எடுத்துக்காட்டுகிறது.

சிகிரியாவின் முக்கியத்துவம் கருதி உலக கலாச்சார நிலையங்களில் ஒன்றாக இதனை யுனஸ்கோ பிரகடனப்படுத்தியுள்ளது. இதன் மூலம் தமது நாட்டிற்கும், காசியப்பனுக்கும் பெருமை கிடைத்துள்ளது. எண்ணிக்கையில்லா உல்லாசப் பிரயாணிகளின் வருகையினால் இலங்கை வருமானத்தைப் பெற்றாலும் இக்கலைப் பொக்கிஷத்தின் தகவல்கள் உலக நாடெங்கும் எடுத்துச் செல்லப்படுகின்றன.

"சிகிரியா ஒரு மகத்தான சாதனை எனவும் ஆதிகால மக்களின் வியத்தகு பொறியியல், வெற்றித்திட்டத்தின் புதுமை, கருத்தில் துணிச்சல், செயலில் தீரம்" எனவும் அது போற்றப்படுகின்றது.

சி.றொபிக்கா
2004 கலைப்பிரிவு

ஐரோப்பிய சங்கீதமும், கர்நாடக சங்கீதமும் ஓர் ஒப்புநோக்கு

தமது நாட்டினுடைய சங்கீத அறிவை விருத்தி செய்து கொள்வதற்குப் பிற தேசத்தில் வழக்கிலிருக்கும் சங்கீதத்தைப் பற்றி ஓரளவு அறிந்து கொள்ளுதல் அவசியமாகும். புதிய ஆக்கங்களை, இசைத்துறையில் விருத்தி செய்து கொள்வதற்கு எமக்கு மிகவும் பரிச்சயமான இசைகளான ஹிந்துஸ்தானி இசை, மேலைத்தேய இசை ஆகியவற்றின் அடிப்படைத் தத்துவங்களை அறிதல் உகந்தது.

சாஸ்தீரிய சங்கீதம் யாவும் ஒரே அடிப்படைத் தத்துவத்திலேயே வளர்ந்துள்ளன. ஸ-ப, ஸ-ம, சம்பந்தமான (வாதி, ஸம்வாதி) தத்துவங்கள் உலகம் அனைத்திலும் ஏற்றுக்கொள்ளப்பட்டவை.

இந்திய சங்கீதத்தில் ஸ,ரி,க,ம,ப,த,நி என அழைக்கப்படும் ஸப்த ஸ்வரங்களும் மேற்கத்திய இசையில் டோ,ரே,மீ,வா,ஸோ,லா,டீ (DOH, RAY, MI, FAH, SOH, LA, TEE) என அழைக்கப்படுகின்றன. இவ்வாறு ஸ்வரங்களை அழைக்கும் முறை இந்தியாவில் மிகப் பழங்காலந்தொட்டே வழக்கிலிருந்து வந்தது. அதாவது நாரதரது பரிவாராஜக உபநிஷதத்தில் 4000 ஆண்டுகளுக்கு முன்பே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்கத்திய SOLFA முறை GUIDOD AREZZO (995-1050 AD) காலத்திலிருந்தே வழக்கிலிருந்தது.

மேற்கத்திய இசையில் அடிப்படையான இராகம் மேஜர் ஸ்கேல் (Major Scale) அதாவது கர்நாடக இசையில் தீரசங்கராபரணத்திற்கும் வட இந்திய இசையில் பிலாவலுக்கும் ஒப்பானதாகும்.

மேஜர் ஸ்கேலில் உள்ள ஸ்வரங்கள் நார்சுரல் (Natural) என அழைக்கப்படும். நார்சுரல் அல்லாத ஸ்வரங்களை எடுத்துக் கொள்ளும் இராகங்களை அவ் ஸ்வரத்திற்கேற்ப ப்ளட் (FLAT), ஸ்ார்ப் (SHARP) என்றும் குறிப்பிடப்படும். உதாரணமாக கல்யாணி இராகத்தில் பிரதிமத்திமமே வருகிறது. அதனை F SHARP என்றும் கரகரப்பிரியாவில் வரும் சாதாரண காந்தாரத்தை E FLAT என்றும் குறிப்பர்.

ஸப்த ஸ்வரங்களும்
C, D, E, F, G, A, B
ஸ, ரி, க, ம, ப, த, நி
என வழங்கப்படும்.

இந்திய சங்கீத லிபி முறையை ஸ்கிரிப்பட் நொடேஷன் (SCRIPT – NOTATION) என்றும் மேற்கத்திய சங்கீத லிபி முறையை (STAFF – NOTATION) ஸ்டாவ் நொடேஷன் என்றும் அழைப்பர்.

இந்திய இசையில் உள்ளது போன்றே மூன்று வித வலய வேறுபாடுகள் மேற்கத்திய இசையிலும் காணப்படுகின்றன.

விளம்பித லயம் - SLOW TEMPO
மத்திம லயம் - MEDIUM TEMPO
துரிய லயம் - FAST TEMPO
துரித விளம்பித - ALLEGRO
துரித மத்திம - ALLEGRO MODERATO
துரித துரித - ALLEGRO ASSAI
என்றும் அழைக்கப்படும்.

இந்திய இசையில் பாடகர் தன் குரல் வளத்திற்கேற்ப சுருதியை தேர்ந்தெடுப்பதற்கு சுதந்திரம் உண்டு. மேற்கத்திய இசையிலே பாடல் எந்த Key (Pitch) இல் எழுதப்பட்டுள்ளதோ அந்த Key யிலேயே பாடவேண்டும். மனோதர்ம சங்கீதம் என்பது இந்திய சங்கீதத்திற்கே உரிய வரப்பிரசாதமாகும். ஆலாபனை, கற்பனாஸ்வரம், நிரவல், பல்லவி, தானம் போன்ற வித்துவான்களின் கற்பனை வளத்தை எடுத்துக்காட்டும் அம்சங்கள் மேலைத்தேய இசையில் இல்லை.

மேற்கத்திய இசையில் இராகத்தை ஸ்கேல் (Scale) என அழைப்பர். ஸ்கேல் என்னும் பதமானது இலத்தீன் மொழியிலுள்ள ஸ்காலா (Scale) என்னும் பதத்திலிருந்து வந்ததாகும். ஸ்காலா என்றால் ஏணி என இலத்தீன் மொழியில் பொருள்படும்.

மேற்கிந்திய இசையில் பிரதான ஸ்கேல்களான மேஜர் (Major) மைனர் (Minor) ஆகிய இரண்டும் 17ம், 18ம் நூற்றாண்டிற்கு இடைப்பட்ட காலத்தில் விருத்தியாயின. Major Scale இலிருந்தே புதிய இராகங்கள் கிரகபேதத்தின் மூலம் உருவாயின.

ஆங்கில இசையில் காணப்படும் பைதகோரியன் (Pythagorianmala) மேளமானது அதன் ஆரோகண ஸ்வரங்கள் வேறுபட்டு இருந்தாலும் ஆரோகண ஸ்வரங்களானவை கர்நாடக சங்கீதத்தில் வழங்கும் தேவகாந்தாரி இராகத்திற்கு ஒப்பானதாகும். வேறு சில இத்தாலியப் பாடல்களும் தமது குறிஞ்சி, ஆரபி நாதநாமக்கிரியா போன்ற இராகங்களுக்கு ஒப்பான மெட்டுக்களில் அமைந்துள்ளன. ஸிம்மேந்திர மத்தியம இராகம் மேலைநாட்டு ஜிப்ஸி சங்கீதத்தில் காணப்படுகின்றன.

ஹார்மானிக் மைனர் ஸ்கேல் தமது கீரவாணி இராகத்திற்கு ஒத்ததாகும். இந்திய சங்கீதத்தில் ஒரு சமயத்தில் ஒரு ஸ்வரத்தையே பாடவோ வாசிக்கவோ முடியும். ஒன்றுடன் ஒன்று சம்பந்தமுள்ள ஸ்வரங்களை ஒரே தருணத்தில் ஒலிக்கச் செய்வது ஹார்மணிக்கல் சங்கீதமாகும். ஐரோப்பிய இசையில் ஸ்வரங்களை நோட் (Note) என்றும் சுருதியை பிச் என்றும் அழைப்பர்.

கர்நாடக சங்கீதத்தில் காணப்படுவது போன்று பெருவாரியான தாளங்களோ, இராகங்களோ மேற்கத்திய இசையில் இல்லை. இந்திய இசை பக்தியை அடிப்படையாகக் கொண்டது. இந்திய இசைக்கச்சேரிகளில் 2 or 3 பக்க வாத்தியக்காரர்களே காணப்படுவர். மேற்கத்திய இசைக் கச்சேரி வாத்தியங்களையே பிரதானமாகக் கொண்டது. மல்லியம் முக்கிய இடம் வகிக்கிறது. மேலைத்தேய இசையில் Conductor முக்கிய இடத்தை வகிக்கிறார்.

இந்திய இசையில் கமகம், மனோதர்ம சங்கீதம் எனப்படுபவை முக்கிய அம்சங்களாகும். ஆனால் மேற்கத்திய இசையில் இசை காணப்படுவதில்லை. மேற்கத்திய இசையில் மனோதர்மம் என்றும் அம்சம் வாக்கே காரிடம் மாத்திரமே எதிர்பார்க்கப்படுகிறது.

ஐரோப்பிய சங்கீதத்தில் பெண்களுக்குரிய குரலை மூன்று விதமாகப் பிரிப்பர்.

1. சொப்ரானோ Treble – உயர்ந்தது.
2. மெஸ்ஸோ – ஸொப்ரானோ – நடுத்தரமானது
3. கொன்டராக்டோ – தாழ்வானது

ஆண்களுக்குரிய குரலை நான்கு விதமாகப் பிரிப்பர்.

1. ஆல்டோ ஆபூர்வமாக உயர்ந்தது.
2. டெனர் – உயர்ந்தது
3. பரிடோன் - நடுத்தரமானது
4. பாஸ் - தாழ்ந்தது.

12 ஸ்வரஸ்தானங்களும் அவற்றிற்கு சமானமான ஹிந்துஸ்தானி இசையில் வழங்கும் பெயர்களும் மேலைத்தேய சங்கீதத்தில் வழங்கும் பெயர்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

மேலைத்தேய சங்கீதம்	கர்நாடக சங்கீதம்	ஹிந்துஸ்தானி சங்கீதம்
1. C	ஸட்ஜம்	ஸட்ஜம்
2. D flat	சுத்தரிஷபம்	கோமள ரிஷபம்
3. D	சதுஸ்ருதி ரிஷபம்	தீவிர ரிஷபம்/சுத்த ரிஷபம்
4. E flat	சாதாரண காந்தாரம்	கோமள காந்தாரம்
5. E	சுந்தர காந்தாரம்	தீவிர காந்தாரம்
6. f	சுத்த மத்திமம்	சுத்த மத்திமம்
7. f sharf	பிரதி மத்திமம்	தீவிர மத்திமம்
8. G	பஞ்சமம்	பஞ்சமம்
9. A flat	சுத்த தைவதம்	கோமள தைவதம்
10. A	சதுஸ்ருதி தைவதம்	தீவிர தைவதம்
11. B flat	கைசிகி நிஷாதம்	கோமள நிஷாதம்
12. B	காகலி நிஷாதம்	தீவிர நிஷாதம்

தரம் 13 (2004 மாணவிகள்)

(நுண்கலை)

புவியியலில் இடவிளக்கப்படத்தின் முக்கியத்துவம்



குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தினை அங்கீகரிக்கப்பட்ட குறியீடுகள், நிறங்கள், அளவுத்திட்டம் என்பவற்றை பயன்படுத்தி தட்டையான தளத்தில் அமைத்துக் காட்டும் ஒரு படவரைகலை முறையே இடவிளக்கப்படம் ஆகும். தேசப்படமானது பரந்த ஒரு பிரதேசத்தை குறுகிய தாளில் குறிக்கப்பட்ட அளவுத்திட்டத்தின் படி வரைவதற்கு உதவும். பௌதீக பண்பாட்டு அம்சங்களுக்கு அமைவாக குறியீட்டு விளக்கங்கள் அமைந்துள்ளன.

ஒரு பிரதேசத்தின் குடியிருப்புப் பாங்கு, வீதி அடர்த்தி, விளைபொருட்களின் பரம்பல், நதிநிலவோட்டம், மலைத்தொடர் மற்றும் கரையோர அம்சங்களை மிகத் தெளிவாகவும் துல்லியமாகவும் அமைத்துக் காட்டலாம்.

இடவிளக்கப்படம் வரையும்போது கவனிக்கப்படவேண்டிய அம்சங்கள்

1. அளவுத்திட்டம்
2. திசை
3. நிலையம்
4. சாய்வுகள்
5. கரையோர அம்சங்கள்

என்பனவாகும். அளவுத்திட்டம் அளவுத்திட்ட கூற்று, வகைக்குறிப்பின்ன அளவுத்திட்டம், நேர்கோட்டு அளவுத்திட்டம் என 3 வகைப்படும். தேசப்படத்தின் வலது பக்க மேல் மூலையில் வடக்குத் திசை காட்டப்படும். இதனைக் கொண்டு ஏனைய திசைகளை அறியலாம். திசைகள் 16 வகையின. நிலையம் சாய்வுகளைப் பொறுத்து அமையும்.

இலங்கையில் 1:50000 என்ற அளவுத்திட்டத்திற்கு அமையவே இடவிளக்கப்படங்கள் அமைக்கப்படுகின்றன. ஆயினும் தேசப்படங்கள் வரையும்போது இடவசதி கருதி அளவுத்திட்டம் கூட்டிக் குறைக்கப்படும். சமவுயரக் கோடுகள், சம ஆழக்கோடுகள் என்பன இதற்கேற்ப கணிக்கப்படும்.

தேசப்படங்களில் பௌதீக உறுப்புக்கள் சமஉயரக் கோடுகள் மூலமே காட்டப்படுகின்றன. வழக்கக் குறியீடுகள், நிறங்கள் அடையாளங்களைக் கொண்டே பண்பாட்டு அம்சங்கள் காட்டப்படுகின்றன. இடவிளக்கப்படமானது விமானப் படங்களில் இருந்து பெறப்பட்ட குறியீடுகள் மூலமே வரையப்படுகின்றது.

ஒரு பிரதேசத்தின் சகல உறுப்புக்களையும் இப்படம் மூலம் காட்டலாம். ஏனைய எறியம், விமானப்படம், நிலஅளவீட்டுப்படம் என்பவற்றில் குறிப்பிட்ட சல அம்சங்களையே சிறப்பாகக் காட்டலாம். இதனாலேயே புவியியல் பாடநெறியில் இடவிளக்கப்படங்கள் முக்கியத்துவம் வாய்ந்தனவாக அமைந்துள்ளன.

டயானா தர்மபுத்திரன்
2003 கலைப்பிரிவு

நன்றி நவில்கின்றோம்

மலருக்கு ஆசிச்செய்தி வழங்கிய மதகுருமாருக்கும், வாழ்த்துச் செய்தியை வழங்கிய வடக்கு கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் திரு. ப. தியாகலிங்கம் அவர்களுக்கும் எங்கள் மனம் கனிந்த நன்றிகள்.

மேலதிக கல்விப் பணிப்பாளர் திருமதி. செ. மகாலிங்கம் அவர்கட்கும், எமது வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி. றெஜீனா இருதயநாதன் அவர்களுக்கும், உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி. எஸ். நாகராசா அவர்களுக்கும், கோட்டக்கல்விப் பணிப்பாளர் திரு. க. தனபாலசிங்கம் அவர்களுக்கும், எமது மனமார்ந்த நன்றிகள்.

மலருக்கு வாழ்த்துரை வழங்கிய யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு. மோகனதாஸ் அவர்களுக்கும், பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களுக்கும், பேராசிரியர் வசந்தி அரசரத்தினம் அவர்களுக்கும், ஏனைய கல்வியியலாளர்களுக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக.

ஆக்கங்களைத் திரட்டித் தந்த பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், அனைவருக்கும் நன்றிகள்.

மலருக்கு ஆசிச் செய்தி வழங்கி முதற்பிரதியையும் பெற்ற பதில் நீதவான் திருவாளர் இ. வசந்தசேனன் அவர்களுக்கும் எமது நன்றிகள்

அவ்வப்போது ஆலோசனைகள் வழங்கி மலர் சிறப்பாக வெளிவர உதவிய அதிபர் திருமதி. வி. பகுபதிப்பிள்ளை அவர்களுக்கும், ஏனைய ஆசிரியர்களுக்கும் எமது நன்றிகள்

மலருக்கு மதிப்பீட்டுரை வழங்கிய கலாநிதி. க. குணராசா அவர்களுக்கும், மலரை வெளியிட்டு உரை வழங்கிய யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை அவர்களுக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகள்.

இளநங்கை II மலரினை வெளியிட பல்வேறு வழிகளிலும் உதவிய அபிவிருத்திச் சங்க உறுப்பினர், பழைய மாணவர் சங்க உறுப்பினர், நலன்விரும்பிகளுக்கும், ஆக்கங்களை தந்துதவிய கல்விசார் உத்தியோகத்தர்கள், மாணவர்களுக்கும் எமது நன்றிகள்.

இம்மலரினை அழகுற கணனியில் அச்சிட்டு உதவிய நவாலி கணனியியல் கல்லூரியினருக்கும், விளம்பரங்களை தந்துதவிய விளம்பரதாரர்களுக்கும் எமது உள்ளம் கனிந்த நன்றிகள்.

மலரின் சிறப்புப் பிரதியைப் பெற்று ஆதரவு வழங்கிய பெற்றோர்கள், நலன்விரும்பிகள், பழைய மாணவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

இறுதியாகச் சகல செயற்பாடுகளும் சீராகவும், செம்மையாகவும், நிறைவு பெறக் கல்லூரி முன்றலில் காவலனாக நின்று அருள் பாலிக்கும் கந்தக் கடவுளுக்கு நன்றி தெரிவித்து நிறைவு செய்கின்றோம்.

நன்றி

மானிப்பாய் மகளிர் கல்லூரி,
மானிப்பாய்.

மலர்க்குழு,
இளநங்கை II

பர்ஜஜர் அரங்கம்



இளநங்கை II மலர் வெளியீட்டுக்கு எமது வாழ்த்துக்கள்

நியூ நிறைஞ்சனாஸ்

நகை மாளிகை

New Niranjanas

Nagai Maligai



அசல் 22 கரட் தங்கத்தில் குறித்த தவணையில் நவீன டிசைன்களில் செய்து பெற்றிட நாட வேண்டிய இடம்,

யாழ் நகரில் சிறந்த ஸ்தாபனம்

நியூ நிறைஞ்சனாஸ்

மீண்டும் மீண்டும் செல்லத்தூண்டும் காண்போர் மயங்கும் காட்சிக் கூடம்.

83/1 செம்மா தெரு, கஸ்தூரியார் வீதி,
E.S பேரம்பலம் முன்பாக,
யாழ்ப்பாணம்.

T.P:- 0712270458; 077 6070679

மலர் வெளியீட்டுக்கு எமது வாழ்த்துக்கள்

ஸ்கைறோல்



ஒளிப்பதிவு கூடம்

இல 01 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

புதிய, பழைய பாடல்கள், பக்திப் பாடல்கள் அனைத்தையும் சிறந்த முறையில் ஒலிப்பதிவு செய்திடவும், ஒளிப்பதிவு செய்த நாடாக்களை பெற்றுக்கொள்ளவும் நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

ஸ்கைறோல் ஒளிப்பதிவு கூடம்

இல 01, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

மலர் வெளியீட்டுக்கு எமது வாழ்த்துக்கள்

SRILANKA BOOK DEPT

234 K.K.S Road, Jaffna.

அனைத்து வகையான புத்தகங்கள்,
அப்பியாசக் கொப்பி வகைகள்,
எழுதுகருவிகள் மற்றும் காகிதாதிகள்
என்பவற்றை மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள யாழ்
நகரில் நாடவேண்டிய ஒரு இடம்



SRILANKA BOOK DEPT

234 K.K.S Road, Jaffna.

வாழ்க - வளர்க இளநங்கை

T.PONNAMMPALAM

Sothivembady Lane,
Manipay
(Canna Mark)



மகாலட்சுமி குளிர் சுவையகம்

131, சந்தையடி,
மானிப்பாய்

செல்வன் வீடியோ & போட்டோ படப்பிடிப்பாளர்கள்

ஆனைக்கோட்டை சந்தி,
ஆனைக்கோட்டை



மானி மகளிர் மலர் வெளியீட்டுக்கு
நல்வாழ்த்துக்கள்

KRISHNA

வைத்தியசாலை

Dr. C. Suntharajan
Moor Street,
Manipay Road,
Jaffna.



MANO AMBIS

STORES

Jaffna Road, Manipay.





Prop:- M.Manogaran

மலர் வெளியீட்டுக்கு வாழ்த்துக்கள்

GOLAMS SILKS

166, New Market, Jaffna

SOWMIA TEX

4, Grand Bazer Rd,
Jaffna

இளநங்கை வாழ்க

SIVAKANESAN TEX

41, Grand Bazer Rd,
Jaffna





மலர் வெளியீட்டுக்கு வாழ்த்துக்கள்

DRESS POINT

23, Grand Bazer Rd,
Jaffna

T.P:- 0777- 745511

மலர் வெளியீட்டுக்கு வாழ்த்துக்கள்

FASHION PARK

22, Grand Bazer Rd,
Jaffna



இளநங்கை வாழ்க

SHANAS TEX

2, Grand Bazer Rd,
Jaffna

இளநங்கை வாழ்க

ELAVARASI TEX

08, New Market,
Jaffna

இளநங்கை வாழ்க

விதுர்சிகா நகைமாடம்

1/53, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.

மலர் வெளியீட்டுக்கு வாழ்த்துக்கள்

Saruga Nagai Madam

172A, Kasthuriar Rd,
Jaffna



New Shobitha Jewellery

74/1, Kasthuriar Rd,
Jaffna
021-2225265

KALAIVANI JEWELLERY

111B, Kasthuriar Rd,
Jaffna

0777- 111128

ASHOKA NAGAI MADAM

111, Kasthuriar Rd,
Jaffna

021- 2226290

மலர் வெளியீட்டுக்கு வாழ்த்துக்கள்



T.KUMARASAMY TEX

42, 44, Grand Bazer Rd,
Jaffna.





YASO MOTORS

No 163, Stanly Rd,
Jaffna.





M.Nagaratnam & Co

62, Stanly Rd,
Jaffna.



LG

HARSONS ELECTRICALS

No 14, Stanly Rd,
Jaffna.

சீறீ மாரீ நகை மாடம்

49 (187), K.K.S. Rd,
Jaffna.

SIVA TEXTILES

27, Grand Bazzar,
Jaffna.

கண்டவுடன் அணிந்து மகிழ ஆடவர், நங்கையர்களுக்கான சேட்டிங், சூட்டிங், ரெடிமேட் உள்நாட்டு, வெளிநாட்டு பஞ்சாபி, ஸ்கேட் & பிளவுஸ் சிறுவருக்கான எழில் கொஞ்சும் பேபி சூட், பேபி புறக் நிகரற்ற புதிய ஆடைகளை உடனுக்குடன் பெற்றுக் கொள்ள

ஆடவர்களுக்கான
சேட்டிங், சூட்டிங்
வகைகளுக்கும்,
பெண்களுக்கான
திருமணப்பட்டுச்
சேலை, பஞ்சாபி,
வகைகளுக்கும்

கிருஸ்ணா ரெக்ஸ்

பிரதான வீதி,
சங்கானை.



பொன்னரசி நகை யகம்

76A, Kasthuriar Rd,
Jaffna.
T.P:- 0777-066427



இளநங்கை வாழ்க

சிவா நறுமணப் பூங்கா

288 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

General Merchants & Commission Agents

All kind of spices, Essence, Chemical, Dye Power, Ayurvedic Drugs, Ayurvedic Medicines, Syrups, Polythene, Food oil, Hair Oil, Talcum Powder, Perfumes, Sub Food and Groceries etc.

Branch:-

Royal Industries,
No: 22 1/1, Adamally Building
Wolfendhal Street,
Colombo - 13.

Tel:- 2326679, 2334603
Fax: 478696
Rest:- 074-712439



ANNAI NAGA FOOD CITY

175, K.K.S. Rd,
Jaffna.



ஏகாம்பரம் புடவை மாளிகை

72(9), Grand Bazaar
Jaffna.

மலர் வெளியீட்டுக்கு வாழ்த்துக்கள்

SNJ

TRAVELS

Colombo - Jaffna
Jaffna - Colombo

A/C, Non A/C Bus, Van Service & Lorry Transport Service

BOOKING CENTRE

Colombo:- 160, Wolfendhal Street, Colombo 13.
Tel:- 2321449, 0777-313018, 0777-735312
Jaffna:- 240, Stantly Rd, Jaffna.
Tel:- 021-2222837.
Chavachcheri:- 154, Kandy Rd,
Tel:- 070-213130

முருகன் கட்டடப் பொருள் விற்பனை நிலையம்

Kandy Rd,
Chavachcheri



Art Enter Prices

150, Stanly Rd,
Jaffna
T.P:- 021- 222 2052

சகல விதமான நீர்பம்புகள், குளியலறை சாதனங்கள், பி.வி.சி தளாய்கள் ஒரே இடத்தில் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்

Krishna Stors

Main Street
Chankanai

மலர் வெளியீட்டுக்கு வாழ்த்துக்கள்

பேரம்பலம் சக நிறுவனம்



T.V, டெக், றேடியோ, வீடியோ, ஒடியோ கருவிகள், கசற் வகைகள், மணிக்கூடுகள், பிலிம்றோல், மிதிவண்டி, மிதிவண்டி உதிரிப்பாகங்கள், போன்ற மற்றும் அழகு சாதனப் பொருட்கள் விறபனையாளர்.

50, 52, 54 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

PC HOUSE

அனைத்து விதமான கணனி வகைகளுக்கும், கணனி உதிரிப்பாகங்களுக்கும் உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்



PC House (Pvt) Ltd.

#1K, Stanly Rd, Jaffna

Tel:- 021-2226671

Fax:- 021-2226672

V VKR R VKRajaratnam



Dealers in :- Radios, Cassettes, T.V, Video Decks, Electric Fans, Computers.

(Repairs a sepecialty)

95, Stenly Rd, Jaffna.

Tel:- 021-2222056

மலர் வெளியீட்டுக்கு எம் நல் வாழ்த்துக்கள்

KUPA VERSATILE TRADES

104, Stanley Road, Jaffna

Tel:- 021-222-2497

இளநங்கை வாழ்க வளர்க

SARANGA

Nagai

Madam

No. 157/1, Kasthuriar Road, Jaffna.

Tel:- 021-222 2480, 021-222 6059

மலர் வெளியீட்டுக்கு வாழ்த்துக்கள்

SKY ELECTRONIC System

சகலவிதமான கொம்பியூட்டர்களும் ஒருவருட உத்தரவாதத்துடனும், டீவி, டெக் அனைத்து மின் உபகரணங்களையும் பெற்றிட நம்பிக்கையான ஸ்தாபனம்.



No. 01C, Stanley Road, Jaffna
Tel:- 021-222 5349

SRI KUMARAN Hardwares

Delears in:- Building Materials (Asbester Sheets, Cements, Round iron, Tore steel, Angle iron, Flat iron, G.I.Pipes, Etc)



No. 83, Stanley Road, Jaffna
Tel:- 021-222 2798

மலர் வெளியீட்டுக்கு வாழ்த்துக்கள்

V.M.K JEWELLERS

119, Kandy Road,
Chavakachcheri

வாழ்க இளநங்கை

KULAM
CREAM HOUSE

ஆலடிச் சந்தி மானிப்பாய்

ANKAVAN
STUDIO & VIDEO
Alady Junction, Manipay





மலர் வெளியீட்டுக்கு வாழ்த்துக்கள்

New College of Higher Studies

உயர்கல்வி, வெளிவாரி கற்கை
நெறிகளுக்கு மிகச்சிறந்த கல்விக் கூடம்



Mrs. S. Arulnangai

வாழ்க இளநங்கை

RAGU
Studio
Manipay





HARI
KRISHNA
TRADER

Main Street,
Manipay.

VIDEO
ANANTH

Jaffna Rd,
Manipay.



Nava Kumaran
Pharmacy







மலர் வெளியீட்டுக்கு வாழ்த்துக்கள்



VANI TEX

81, Grand Bazer, Jaffna

VANI TEX

81, Grand Bazer, Jaffna

T.P. :- 021- 2225578



மலர் வெளியீட்டுக்கு வாழ்த்துக்கள்

பூபாலசிங்கம் புத்தகசாலை

No 4, Hospital Road, Jaffna

பாலர் வகுப்பு முதல் பட்டதாரி வகுப்பு வரையான சகல பாடப்புத்தகங்களுக்கும், மற்றும் பாடசாலை உபகரணங்களுக்கும் யாழ் நகரில் நாடவேண்டிய நல்லதோர் நூலகம்

பூபாலசிங்கம் புத்தகசாலை
இல 4, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்

மலர் வெளியீட்டுக்கு வாழ்த்துக்கள்

Sathees Recording & Studio



No 25, J.M.C Building,
Bus Stand View, Jaffna.

பாடல் ஒலிப்பதிவு, Digital முறையிலும், Video மிக்சிங், T.V டெக் திருத்தவும், நாட வேண்டிய ஒரே ஸ்தாபனம்

Sathees Recording & Studio

மலர் வெளியீட்டுக்கு வாழ்த்துக்கள்

நியூ நகுலா ஜூவல்லரி

74, Kasthuriar Rd, Jaffna, T.P:- 2225511

நியூ லலிதாஸ் ஜூவல்லரி

171, Kasthuriar Rd, Jaffna, T.P:- 2223433

நகுலா நகை மாடம்

74, Kasthuriar Rd, Jaffna.

- காலத்துக்குக் காலம் ஈடு இணையற்ற புத்தம் புது டிசைன்களில் நகைகளை வடிவமைப்பவர்கள்.
- காலத்தால் அழியாத கற்பனைக்கு எட்டாத அற்புத எழில்மிகு படைப்பாளர்கள்.
- தங்க நகையுலகில் மங்காப் புகழுடன், தனக்கெனத் தனியிடம் வகித்து நிற்பவர்கள்.

மலர் வெளியீட்டுக்கு வாழ்த்துக்கள்

Yarl Shopping Centre

Yarl Communication Center

Telephone calls, Photo-copies & Lamination Service

Tel. No:- 021-2222016, 021-2222502, 021-2222192

Fax.No:- 021-2222502

No, 442, Hospital Rd, Jaffna

மலர் வெளியீட்டுக்கு வாழ்த்துக்கள்

EVEREST WATCH WORKS

சகல விதமான

- மணிக்கூடுகள்
- ரேடியோ வகைகள்
- பிலிம்றோல்
- கல்குலேட்டர்
- வீடியோ மற்றும் கசட் வகைகள்

அனைத்து வகையான மணிக்கூடுகளையும் உடனுக்குடன் பெற்றுக் கொள்ளவும்

எவரெஸ்ட் வோச் வேக்ஸ்

60, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

மலர் வெளியீட்டுக்கு வாழ்த்துக்கள்

சந்திரன்
பான்சி பலஸ்

நவாலி றோட்,
ஆனைக்கோட்டை



கணனிகள், கணனி உதிரிப்பாகங்கள், கணனிசார் சேவைகள், **T.V**, டெக் மற்றும் எலக்ரோனிக் பொருட்பளை பெற்றுக் கொள்ள

அபிநயா மல்ரி எலக்ரோனிக்ஸ்

யாழ் வீதி,
மானிப்பாய்



இளநங்கை வாழ்க

RAJAN
Super Market

மானிப்பாய்



V.S.M
STORES

VS Maruthalingam

மலிவுக்குப் பொருட்கள் விற்பனை நிலையம்.

மலர் வெளியீட்டுக்கு வாழ்த்துக்கள்

NEW VIMAKE

Importers & Distributors:-
Ceremic Procelain, & Glass wares.

Head Office:-
51, Dam Street,
Colombo - 12.
Tel:- 01-2423030

27/3 Power House Road,
Jaffna
Tel:- 021-222 6738.

NEW V.M.K JEWELLERS



Model Market,
Kandy Rd, Chavakachcheri

SATHAS

(Motors & Hardwares)



56/2 Stanly Road,
Jaffna.

மல்லிகா மிக்ஷர் மாவிகை

யாழ்ப்பாணக் குடாநாட்டில்

நறு நறு மொறு மொறு காரமான சுவையுடன்
மிக்ஷர் மற்றும் சிற்றுண்டி உணவு வகைகளைத்
தியம்பட தயாரிப்பதில் இன்றைய முன்னோடிகள்

மல்லிகா மிக்ஷர் தொழிலகம்

04ம் கட்டை, கூழாவடி, ஆனைக்கோட்டை, மானிப்பாய்

தயாரித்து சந்தைப்படுத்துவோர்

மல்லிகா மிக்ஷர் இல்லம்

149, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்

(பஸ் நிலையத்துக்கு அருகாமையில்)

வாழ்க இளநங்கை

சுந்தர்சன் ஸ்தாபனத்தினர்

மத்திய சந்தை முன்பாக, மானிப்பாய்

LG

தொலை/ பக்ஸ்:- 021- 222 2751

வடமானிலத்தில் மின்சார உபகரணங்கள், Anton P.V.C குளாய்கள், இணைப்புக்கள், பீலீ வகைகள், PVC கதவுகள், நீர்த்தாங்கிகள், இணைப்புக்கள், ABANS ஸ்தாபனத்தினரின் உற்பத்திப் பொருட்கள், L.G குளிர்சாதனப் பெட்டிகள், சலவை இயந்திரங்கள், Deep Freezer, L.G T.V, வீடியோ டெக் முதலியன.

மின்சாரத்தை குறைந்த செலவில் செலவிடும் மின்குமிழ்கள், புதிய அதிநவீன தயாரிப்புக்களில் அமைந்த தொங்கவிடும் மின்விளக்குகள், அதற்கான சுவர்விளக்குகள், அதி நவீன மின் இணைப்பு உபகரணங்கள், மின்விசிறிகளில் பல்வகைகள், ஒருங்கே விருப்பத்துக்கேற்ப தெரிவு செய்து கொள்ள நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம், நேர்மை, நியாயம், உத்தரவாதத்திற்கு என்றென்றும்!!





சுந்தர்சன் ஸ்தாபனத்தினர்

மத்திய சந்தை முன்பாக,

பிரதான வீதி,

மானிப்பாய்





முக்கிய குறிப்பு:- குறிப்பிட்ட தொகைக்கு மேலதிகமாக பொருட்களை கொள்வனவு செய்பவர்களின் இடத்திற்கு அப்பொருட்கள் எமது வாகனம் மூலம் சேர்க்கப்படும். அத்துடன் தொலைபேசி மூலமாகவும் தேவைப்படும் பொருட்களை பெற்றுக் கொள்ளலாம்.

வாழ்க இளநங்கை

தனில் ரெக்ஸ்

ஆடவர்களுக்கான சேட்டிங், சூட்டிங்
வகைகளுக்கும், பெண்களுக்கான
திருமணப்பட்டுச் சேலை, பஞ்சாபி,
வகைகளுக்கும், பரிசுப் பொருட்களுக்கும்
சிறந்த ஸ்தாபனம்

தனில் ரெக்ஸ்
நவாலி வீதி,
ஆனைக்கோட்டை

K.T.P **K.T.Printers**

கே.ரி.பிறின்டேர்ஸ்

சகல விதமான அச்சு வேலைகளுடன், பாடசாலைக் கழுத்துப் பட்டிகள், துணியிலான பிளாஸ்ரிக் இலட்சினைகள், பதாதைகள், சுவர் ஓவியங்கள், விளம்பரப்பலகைகள் என்பவற்றையும், நவீன முறையில் செய்து கொடுப்பவகள்.

Navalar Road, நாவலர் வீதி,
Manohara Junction மனோகரா சந்தி
Jaffna. யாழ்ப்பாணம்.

T.P. 0776-159131

கணனியியல் கல்லூரி



அனைத்து விதமான கணனிக்கற்கை நெறிக்கும்

சின்னப்பா வீதி,
நவாலி தெற்கு,
மானிப்பாய்

e-mail:- ponkirupaa@yahoo.com
T.P. 0777- 070696

மக்கள் வங்கி

சிசு உதான

எதிர்காலம் எமது பிள்ளைகளுக்கே உரியது

மக்கள் மனமறிந்த வங்கி

மக்கள் வங்கி

சிசு உதான கணக்கின் வரப்பிரசாதங்கள்

கணக்கின் மீதி கீழ்வரும் நிலையை அடையும் போது

1. ரூ 1000.00 - சிசு உதான தொப்பி ஒன்று
2. ரூ 2500.00 - சிசு உதான தொப்பி ஒன்று
3. ரூ 5000.00 - சிசு உதான சிறிய பாடசாலைப் பை
4. ரூ 10000.00 - சிசு உதான பெரிய பாடசாலைப் பை
5. ரூ 25000.00 - அதிகாரி (ஆங்கிலம்/ தமிழ்) ஆகியன வழங்கப்படும்.

மேலும் மீதியானது ரூ 10000.00 ஆனதும் ஜயஸ்ரீ சீட்டிழுப்பில் கலந்து கொள்ளும் வாய்ப்பு.

ஜயஸ்ரீ சீட்டிழுப்புப்பரிசு விபரங்கள் வருமாறு

- மாதாந்தம் ஓர் தங்கப்பவுண் பெறுமதியான பரிசுகள் 326 அதிஸ்டசாலிகளுக்கு
- மாதாந்தம் வலய ரீதியாக ரூ 100000.00 பெறுமதிப் பரிசு ஒன்று
- வருட இறுதி ஜயஸ்ரீ சீட்டிழுப்பு நிகழ்வில்
  - 1ம் பரிசு ரூ 3000000.00
  - 2ம் பரிசு ரூ 2000000.00
  - 3ம் பரிசு ரூ 1000000.00

  க்கும் நீங்கள் அதிஸ்டசாலியாகலாம்.

சிசு உதான கணக்கை ஆரம்பிப்பதால் கிடைக்கும் நன்மைகள்

அதிக நன்மைகள், அதிக வட்டி, சேமிப்பு அதிகரிக்கும், பொழுது பெறுமதி மிக்க பரிசுகள் வழங்கப்படும். இவற்றிற்கு மேலதிகமாக

* காப்புறுதிப்பாதுகாப்பும், புலமைப்பரிசில் கொடுப்பனவும்.
* முதல் முறையில் க.பொ.த சா.த பரீட்சையில் ஒரே அமர்வில் அனைத்துப் பாடங்களிலும் அதிவிசேட சித்தி பெறும் பிள்ளைக்கு ரூபா 1000.00 விசேட போனஸாக வழங்கப்படும்.
* முதன் முறையில் க.பொ.த உ.த பரீட்சையில் ஒரே அமர்வில் அனைத்துப்பாடங்களிலும் அதி விசேட சித்தி பெறும் பிள்ளைகளுக்கு ரூபா 2000.00 விசேட போனஸாக வழங்கப்படும்.

காப்புறுதிப் பாதுகாப்பும் மருத்துவ உதவியும் கிடைக்கும் முறை

3 மாதங்களுக்கு மேல் வைப்பில் ரூபா 5000.00 க்கு மேல் இருக்கும் சிசு உதான கணக்குள்ள பிள்ளையின் தாய்/ தந்தை/ அல்லது பாதுகாவலருக்கு வைப்பிலுள்ள தொகையைப் போல் 10 மடங்கு அதிக பட்சம் ரூபா 500,000.00 ஆயுள் காப்புறுதியும், விபத்தினால் நிரந்தர அங்கவீனமுற்றால் வைப்பிலுள்ள தொகையைப் போல் 5 மடங்கு (அதிகபட்சம் ரூபா 250,000.00) காப்புறுதிப் பாதுகாப்பு கிடைக்கும்.

சிசு உதான கணக்கு வைத்திருக்கும் பிள்ளைகளுக்கு

சிசு உதான கணக்குள்ள பிள்ளைக்கு பாரதூரமான 5 நோய்களுக்கு எதிராக வைப்பிலுள்ள தொகையைப் போல் 5 மடங்கு (அதிகபட்சம் ரூபா 250000) மருத்துவச் செலவாக வழங்கப்படும். இவை தவிர ஏனைய நோய்களுக்கான வைத்திய சாலையில் சிகிச்சை பெறும் சந்தர்ப்பத்தில் முதல் இரு தினங்கள் தவிர அதிக பட்சம் 30 நாட்களுக்கு தினமும் ரூபா 100.00 வீதம் பிள்ளையின் மருத்துவ செலவீனங்களுக்கு வழங்கப்படும். தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெறின் நாளொன்றுக்கு ரூபா 200 வீதம் வழங்கப்படும்.

எனவே பாடசாலை காலந்தொடடே உங்கள் பிள்ளைக்கு உன்னத சேமிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கவும். அவர்களின் எதிர்காலத்தை வளமாக்கவும் இன்றே சிசு உதான கணக்கொன்றை ஆரம்பிக்கவும்.

மக்கள் வங்கி

மக்கள் மனமறிந்த வங்கி

PEOPLE'S BANK

அச்சுப்பதிப்பும், வடிவமைப்பும்
கணனியியல் கல்லூரி
"சின்னப்பா வீதி", நவாலி தெற்கு, மானிப்பாய்.
e-mail:- pankirupaa@yahoo.com; mobile:- 0777-070696